உ

சிவமயம்.

# திருப்புனவாயிற்புராணம்.

திருவாரூர்

**தியாகராஜ கவிராஜ தேசிகர்**

இயற்றியது.

இது,

தேவகோட்டை, மகாவித்வான்,

ஸ்ரீமாந், வீர. லெ. இலக்குமணச்செட்டியாரவர்களாகிய

சிந்நய்யச் செட்டியாரவர்களால்

பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு பரிசோதிக்கப்பெற்றும்,

திருவாவடுதுறை ஆதீன சைவப் பிரசாரகரும்,

தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்துச்

சித்தாந்த சாத்திர போதகருமாகிய

தூத்துக்குடி

**பொ. முத்தையபிள்ளையவர்களால்**

அரும்பதவுரை எழுதப்பெற்றும்,

திருப்புனவாயில் தேவாலய தரும பரிபாலன கர்த்தரும்

தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்து அத்தியக்ஷருமாகிய

தேவகோட்டை

**ஸ்ரீமாந், அழ. சுப. பழ.**

**சுப்பிரமணியச் செட்டியாரவர்களால்**

தேவகோட்டை

வைசியமித்திரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1928. விபவ-வைகாசி.

உ

சிவமயம்.

# சருக்க அட்டவணை


| சருக்கம். | பக்கம். |
|---|---|
| அகத்தியச் சருக்கம். | 111 |
| அங்காரகச் சருக்கம் | 130 |
| ஆமண்டல விநாயகச் சருக்கம். | 173 |
| இந்திரச் சருக்கம் | 29 |
| இயமச் சருக்கம். | 64 |
| உடுபதிச் சருக்கம். | 34 |
| ஐராவதச் சருக்கம். | 95 |
| சதுர்முகச் சருக்கம் | 47 |
| சோமநந்திச் சருக்கம். | 89 |
| சௌந்தரபாண்டியச் சருக்கம். | 162 |
| தலமகிமைச் சருக்கம். | 23 |
| திரிபுரச் சருக்கம். | 135 |
| திரிமூர்த்திச் சருக்கம். | 149 |
| தினபதிச் சருக்கம். | 80 |
| தீர்த்தச் சருக்கம். | 171 |
| நகரச் சருக்கம். | 11 |
| நாகநதிச் சருக்கம். | 157 |
| நாட்டுச் சருக்கம். | 5 |
| நைமிசாரணியச் சருக்கம். | 18 |
| மாருதச் சருக்கம். | 54 |
| வசிட்டாதியர் வந்தனைச் சருக்கம். | 189 |
| விநாயகச் சருக்கம். | 185 |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப் பாயிரம்.

## தேவிகோட்டை வித்துவசிகாமணி
## ஸ்ரீமாந், வெ. ஆ. இ. மா.
## சிதம்பரச் செட்டியாரவர்கள்
## இயற்றியது.

உலகமெலாம் பரவுசிவ மாகமங்கள் பசுபதியென்
றோதுஞ் சீர்வாய்ந்
திலகுசிவ னுமைகுகனென் றிம்மூவ ரிராசாங்க
மியற்றும் பேறே
டலகில்புகழ்ச் சம்பந்தர் நீறிடவா சகாமைச்சா
யமரப் பெற்ற
பலகலையு மெச்சங்க முச்சங்கச் சச்சங்கப்
பாண்டி நாட்டில். (1)

மூர்த்திதலந் தீர்த்தமெனு முச்சீர்பெற் றுற்றோர்க்கு
முன்னிற் றெல்லாம்
பூர்த்திதரும் புனவாயிற் றலமகிமை தனைத்தமிழாற்
புராணஞ் செய்தான்
பார்த்திவக்ஷேத் திரமுமச பாநடனத் தியாகருறை
பதியு மான
சீர்த்திமிகுந் திருவாரூர்த் தியாகரா சப்பெயர்த்தே
சிகன்றன் மன்னே. (2)

---

2. பார்த்திவக்ஷேத்திரம்-பிருதிவிசம்பந்தமான தலம்; அது திருவாரூர்.

பற்பல்சுரா சுரக்குழுவாற கடைபட்ட வமுதுபயப்
        பாரா வாரத்
துற்பவித்த துண்பார்க்கு நரைதிரைமூப் பொழித்துலகின்
        பொன்றே யீயுஞ்
சொற்பொருள்யாப் பெழுத்தணியைந் துந்துறுமிப் புராணகதை
        துய்ப்ப வர்க்குப்
பொற்புவன போகசிவ போகமிரண் டீதலிற்புத்
        தமுதம் போலும். (3)

புத்தமுத மொத்திலங்கும் புனவாயிற் புராணமிதைப்
        புலவ ரோடு
முய்த்துணர்ந்து பூவுலகிற் கச்சிட்டுப் புத்தகமா
        யுபக ரித்த
வித்தகன்யா ரெனிற்றேவி கோட்டையெனு நாட்டமுள
        வியன கர்ப்பால்
வைத்தநிதி மெத்தவுள சுத்ததன வசியர்சைவ
        மரபு தன்னில். (4)

மறையூரு மகத்துவமா மேலற்றாளைஞ் ஞாற்றீசர்
        மாற்றார்க் கோயி
லுமறையூரென் றுரைவகுப்பி னீறுகண்டி சிவாநந்தத்
        துய்ப்ப தென்றே
முறையூரங் கத்தணிந்து புனவாயிற திருப்பணியு
        முற்று வித்துத்
தறையூரும் புகழ்படைத்த சிதம்பரப்பேர் வணிகர்செய்த
        தவத்தி னாலே. (5)

பிறங்கடையா யன்னவர்க்குற் பவித்தோன்சுப் பிரமணியப்
        பேர்பெற் றுள்ளா
னறங்கடையா வையுமகன்றோன் றலையாகுஞ் சைவசம
        யாசா ரத்தின்

---

3. துறுமுதல்-செறிந்திருத்தல்.

பிறங்கடையா மேனைமத மெனத்துணிந்து சிவத்தையன்றிச்
　　　　சிறுதெய் வத்தின்
புறங்கடையாச் சித்தத்தா னெத்தகத்தா ஞரியர்தேர்
　　　　போத முள்ளான். (6)

பகவாசி வசம்போமென் றன்பர்கோ டிக்கவனப்
　　　　பதமுன் றங்கும்
முகவர்சி யாயானுக் காண்டுதொறும் விழாநடத்தி
　　　　மூதக் கார்கள்
சுகவாசி யாகுகெனத் தகவாசி பெற்றுடையோன்
　　　　சுமுக வாசி
சகவாசி நல்லோரை நாவிலுனீரத் துணர்த்தாணித்
　　　　தங்கம் போல்வான். (7)

மன்னவர்க்குச் செங்கோலு மறையவர்க்கு வரைக்கோலும்
　　　　வைசி யர்க்குத்
துன்னுதுலாக் கோலுஞ்சூத் திரர்க்குழவு கோலுமெனத்
　　　　தொழிற்கு ரித்தாச்
சொன்னவற நூலனைவர் நடுநிலைக்குந் துலாவையொப்பாச்
　　　　சொலலாற் றங்கட்
கென்னரினு மிருவகையாத் துலாவுரித்தென் றஃதினொடு
　　　　விசைந்து நிற்போன். (8)

---

6. பிறங்கடை-புத்திரன்; இதனைச் சேது புராணம் துராசாரச் சருக்கம். 25ஆம் செய்யுளில் "பிறங்கடைசேர் கருப்பமெலாம்" என வருமாற்றானுணர்க. 'அறங்கடை-பாவம்; இதனை "அறங்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை நின்றாரிற் பேதையா ரில்" என்னுந் திருக்குறளானுணர்க. தையா-பதியாத.

7. கோஷித்தல்-ஆரவாரித்தல்; இது வடமொழி. வனப்பதமுன் றங்கப்பெற்ற முகம்-வனமுகம்; இது திருப்புனவாயிற் கோர் பெயர். சுமுகஆசி-முகத்தில் நற்சிரிப்புடையோன்; ஆசம்-சிரிப்பு.

8. இருவகை-பொதுவும் சிறப்பும் என்ற இரண்டு வகை.

மங்களமாய்ச் செங்கமலை வாணியொடு முறைதேவை
மாந கர்க்கட்
டிங்களணி சடைப்பெருமான் றிருமுகமைந் தினுமுதித்த
சிவாக மத்தின்
சங்கபரி பாலனஞ்செய் தகவுடையான் றன்சுற்றந்
தழுவு சீரான்
றுங்கவொழுக் குற்றவருங் கற்றவரும் பாராட்டுந்
தூயன் றானே. (9)

---

9. சிவாகமங்கள் சிவானநம் ஐந்தினுந் தோன்றியன வென்பதும் தாற்றுணிபு.

---

உ

கணபதி துணை.

சென்னை பிரசிடென்ஸிகாலேஜ் தலைமைத் தமிழாசிரியர்

பிர்ம்மஸ்ரீ இ. வை.

# அனந்தராம ஐயரவர்கள்

இயற்றியது.

---

திவிராச னேத்தாணுர் புனைவைச் சீரைச்
செந்தமிழிற் றிருவாரூர்த் தியாக ராச
கவிராச குருராசன் செயச்சித் தாந்தக்
கல்விநல முத்தைய பிள்ளை தன்னால்
அவிராச கலவாராய்ந் தனையச் சிட்டான்
அப்புனவை நகர்க்கோவிற் றருமகர்த்தன்
புவிராச னிகர்செல்வன் தேவகோட்டைப்
புகழுறுசுப் பிரமணிய வணிகர் கோவே.

உ

சிவமயம்.

# தேவாரம்.

## திருப்புனவாயில்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்—காந்தாரபஞ்சமம்.

*திருச்சிற்றம்பலம்.*

மின்னியல்செஞ்சடைவெண்பிறையன்விரி நூலினன்
பன்னியநான்மறைபாடியாடிப்பலவூர்கள்போய்
அன்னமன்னந்நடையாளொடும்மமரும்மிடம்
புன்னைநன்மாமலர்பொன்னுதிர்க்கும்புனவாயிலே (1)

விண்டவர்தம்புரமூன்றெரித்துவிடையேறிப்போய்
வண்டமருங்குழன்மங்கையொடும்மகிழ்ந்தானிடம்
கண்டலுஞாழலுநின்றுபெருங்கடற்கானல்வாய்ப்
புண்டரீகம்மலர்ப்பொய்கைசூழ்ந்தபுனவாயிலே. (2)

விடையுடைவெல்கொடியேந்தினானும்விறற்பாரிடம்
புடைபடவாடியவேடத்தானும்புனவாயிலில்
தொடைநவில்கொன்றையந்தாரினானுஞ்சுடர்வெண்மழுப்
படைவலனேந்தியபானெய்யாடும்பரமனன்றே. (3)

சங்கவெண்டோடணிகாதினானுஞ்சடைதாழவே
அங்கையிலங்கழலேந்தினானும்மழகாகவே
பொங்கரவம்மணிமார்பினானும்புனவாயிலில்
பைங்கண்வெள்ளேற்றண்ணலாகிநின்றபரமேட்டியே. (4)

கலிபடுதண்கடனஞ்சமுண்டகறைக்கண்டனும்
புலியதள்பாம்பரைச்சுற்றினானும்புனவாயிலில்

ஒலிதருதண்புனலோடெருக்கும்மதமத்தமும்
மெலிதருவெண்பிறைசூடிநின்றவிடையூர்தியே. (5)

வாருறுமென்முலைமங்கைபாடநடமாடிப்போய்க்
காருறுகொன்றைவெண்டிங்களானுங்கனல்வாயதோர்
போருறுவெண்மழுவேந்தினானும்புனவாயிலில்
சீருறுசெல்வமல்கவிருந்தசிவலோகனே. (6)

பெருங்கடனஞ்சமுதுண்டுகந்துபெருங்காட்டிடைத்
திருந்திளமென்முலைத்தேவிபாடநடமாடிப்போய்ப்
பொருந்தலர்தம்புரமூன்றுமெய்துபுனவாயிலில்
இருந்தவன்றன்கழலேத்துவார்கட்கிடரில்லையே. (7)

மனமிகுவேலனவ்வாளரக்கன்வலியொல்கிட
வனமிகுமால்வரையாலடர்த்தானிடமன்னிய
இனமிகுதொல்புகழ்பாடலாடலெழின்மல்கிய
புனமிகுகொன்றையந்தென்றலார்ந்தபுனவாயிலே. (8)

திருவளர்தாமரைமேவினானுந்திகழ்பாற்கடற்
கருநிறவண்ணனுங்காண்பரியகடவுள்ளிடம்
நரல்சுரிசங்கொடுமிப்பியுந்திந்நலமல்கிய
பொருகடல்வெண்டிரைவந்தெறியும்புனவாயிலே. (9)

போதியெனப்பெயராயினாரும்பொறியில்சமண்
சாதியுரைப்பனகொண்டயர்ந்துதளர்வெய்தன்மின்
போதவிழ்தண்பொழின்மல்குமந்தண்புனவாயிலில்
வேதனைநாடொறுமேத்துவார்மேல்வினைவீடுமே. (10)

பொற்றொடியாளுமைபங்கன்மேவும்புனவாயிலைக்
கற்றவர்தாந்தொழுதேத்தநின்றகடற்காழியான்
நற்றமிழ்ஞானசம்பந்தன் சொன்ன தமிழ்நன்மையால்
அற்றமில்பாடல்பத்தேத்தவல்லாரருள்சேர்வரே. (11)

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்திநாயனார்

## பண்—பழம் பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தநீநினையென்னொடுசூளறும்வைகலும்
மத்தயானையினீருரிபோர்த்தமணாளனூர்
பத்தர்தாம்பலர்பாடிநின்றாடும் பழம்பதி
பொத்திலாந்தைகள்பாட்டறாப்புனவாயிலே. (1)

கருதிநீமனமென்னொடுசூளறும்வைகலும்
எருதுமேற்கொளுமெம்பெருமாற்கிடமாவது
மருதவானவர்வைகும்மிடம்மறவேடுவர்
பொருதுசாத்தொடுபூசலறாப்புனவாயிலே. (2)

தொக்காய்மனமென்னொடுசூளறும்வைகலும்
நக்கானமையாளுடையானவிலும்மிடம்
அக்கோடரவார்த்தபிரானடிக்கன்பராய்ப்
புக்காரவர்போற்றொழியாப்புனவாயிலே. (3)

வற்கென்றிருத்திகண்டாய் மனமென்னொடுசூளறும்வைகலும்
பொற்குன்றஞ்சேர்ந்ததொர்காக்கைபொன்னாமதுவேபுகல்
கற்குன்றுந்தூறுங்கடுவெளியுங்கடற்கானல்வாய்ப்
புற்கென்றுதோன்றிடுமெம்பெருமான்புனவாயிலே. (4)

நில்லாய்மனமென்னொடுசூளறும்வைகலும்
நல்லானமையாளுடையானவிலும்மிடம்
வில்வாய்க்கணைவேட்டுவராட்டவெருண்டுபோய்ப்
புல்வாய்க்கணம்புக்கொளிக்கும்புனவாயிலே. (5)

மறவனீமனமென்னொடுசூளறும்வைகலும்
உறவுமூழியுமாயபெம்மாற்கிடமாவது
பிறவுகள்ளியினீள்கவட்டேறித்தன்பேடையைப்
புறவங்கூப்பிடப்பொன்புனஞ்சூழ்புனவாயிலே. (6)

ஏசற்றுநீநினையென்னெஞ்சேருளாறும்வைகலும்
டாசற்றவர்பாடிநின்றாடும்பழம்பதி
தேசத்தடியவர்வந்திருபோதும்வணங்கிடப்
பூசற்றுடிபூசலறாப்புனவாயிலே. (7)

கொள்ளிவாயினகூரெயிற்றேனங்கிழிக்கவே
தெள்ளிமாமணிதீவிழிக்கும்மிடஞ்செசந்தறை
கள்ளிவற்றிப்புற்றீந்துவெங்கானங்கழிக்கவே
புள்ளிமானினம்புக்கொளிக்கும்புனவாயிலே. (8)

எற்றேநினையென்னெஞ்சேருளாறும்வைகலும்
மற்றேதும்வேண்டாவல்வினையாயினமாய்ந்தறக்
கற்றாறுகார்க்காட்டிடைமேய்ந்தகார்க்கோழிபோய்ப்
புற்றேறிக்கூகூவெனவழைக்கும்புனவாயிலே. (9)

பொடியாடுமேனியன்பொன்புனஞ்சூழ்புனவாயிலை
அடியாரடியனாவலூரனுரைத்தன
மடியாதுகற்றிவையேத்தவல்லார்வினைமாய்ந்துபோய்க்
குடியாகிப்பாடிநின்றாடவல்லார்க்கில்லைகுற்றமே. (11)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்புனவாயிற் றலபுராணம்.

## பாயிரம்.

### ஆகண்டல விநாயகர் துதி.

கார்கொண்ட பைங்குழற் கணைகொண்ட துணைவிழிக்
கமலைபணி விமலை யம்பொன்
வார்கொண்ட கும்பமுலை மலைவல்லி படர்பவள
வரைநந்த தந்தி வதனன்
சீர்கொண்ட தேவர்பணி மூவரும் பணிவிடைகள்
செய்யவரு ளுய்ய புகழ்சேர்
பார்கொண்ட தென்புனவை யாகண்ட லப்பிள்ளை
பாதமுடி மீது புனைவாம். (1)

### ஆண்ட பிள்ளையார் துதி.

மணிநிரைப் புளின வேழு வாரிதி நாப்ப ணம்பொற்
கணிதரு புவிசூழ் செம்பொற் கற்பக வனத்தை நீங்கிப்
பணிமிசை யுலகின் மேலாம் பழம்பதி தழைய வாழு
மணிதிக ழாண்ட பிள்ளை யடியிணை முடிமேற் கொள்வாம். (2)

### பழம்பதி நாதர் துதி.

பூமேவு திருமாலுந் திசைமுகனு மறியாப்
புண்ணியனை யகண்டபரி பூரணசிற் பரனை
மாமேவு மருவாகி யுருவுருவா யுருவாய்
வரத்துதிக்கும் பழவடியார் மனத்துதிக்குஞ் சிவனை

---

2. புளினம்-மணற்குன்று. வாரிதி-கடல். நாப்பண்-நடு. கணிதரு-கணித்தலைத்தரும். நாப்பண் உலகிலெனவும், நீங்கி வாழுமெனவும் இயையும்.

நாமேவுஞ் சுருதிமுறை நடக்குமுயிர் பரமா
னந்தமுற வைந்தொழிலா னடனமிடுந் தேவைப்
பாமேவுந் தமிழ்மணக்க மணக்குமலர்ச் சோலைப்
பழம்பதிநா தனைநினைந்து பணிந்துபுகழ்ந் திடுவோம். (3)

## கச்சணிமுலையம்மை துதி.

அச்சென விருந்த யோக வந்தண ரகத்து திக்குஞ்
சச்சிதா னந்த ரூப தற்பரம் பொருளா லாதி
முச்செயல் புரிந்து பின்னர்த் தகைந்துமேன் முத்தி நல்குங்
கச்சணி களபக் கொங்கைக் கௌரியை வணக்கஞ் செய்வாம். (4)

## விநாயகர் துதி.

பழையவல் வினையா லுண்டாம் பவவன முறிய வன்ப
ருழைபுகுஞ் சிவஞா னங்கி யொளிபெற வளர்த்தி லன்பாற்
குழையுமெய் யடியார் துன்பக் கோடைபோய்க் குளிர வென்றுந்
தழைசெவித் தென்றல் வீசுந் தந்தியைச் சிந்தை செய்வாம். (5)

## முருகக்கடவுள் துதி.

போர கத்திசை முகன்முடி சிவப்பெழப் புடையா
வார கச்சிறை வைத்துல கனைத்தையு மளித்துத்
தார கப்பொரு ளிதுவெனத் தாணுவிற் குரைத்த
சீர கக்குரு தேசிகன் றிருவடி பணிவாம். (6)

## திருஞான சம்பந்தர் துதி.

தையல்வந் தமுத மூட்டத் தண்டமிழ் வளரத் தாளங்
கையுற வமண ரெல்லாங் கழுவுறப் பாண்டித் தேய

---

3. மா-மகிமை.

4. அச்சென-அச்சுப்போலசையாது. ஆதிமுச்செயல்-புதுச்சிருட்டி திதி, சங்காரம். தகைதல்-திரோபவித்தல்.

5. பவம்-பிறவி. உழை-இடம். தழைசெவி.தழைந்த செவி.

6. போர்-கர்வம். அகம்-மனம். திசை முகன்-பிரமன். முடி-சிரசு. புடையா-குட்டி. அளித்து-சிருட்டித்து. தாரகம்-பிரணவம். தாணு-சிவபெருமான்.

மையுமில் சைவ மாக வங்கம்பூம் பாவை யாகச்
செய்யவாய் முலர்ந்த காழிச் செம்மலைச் சேவை செய்வாம். (7)

## திருநாவுக்கரசர் துதி.

தலைமிதிக்க வரும்யானை தாள்வணங்க நீற்றறைபூந் தடம தாகக்
கொலைபழுத்த கொடியவிட மமுதாகச் சூலைநோய் குணமே யாக
வலைமிகுத்த கருங்கடலி லாழும்வகை பிணித்தமுன மமண ரிட்ட
சிலைமிதக்கத் தமிழுரைத்த திருநாவுக் கரையரடி சென்னி சேர்ப்பாம். (8)

## சுந்தரமூர்த்திகள் துதி.

பறவையுஞ் சுரும்புஞ் சூழப் பங்கய மலர்ந்தே தண்ணீர்
நிறைதர வாண்டுப் பெற்ற நெடுந்தடக் கரையி லேறிப்
பிறையெயிற் றிடங்கர் தந்த பிள்ளையைப் பெற்ற காதன்
மறையவர்க் களித்த வெண்ணெய் வள்ளலை வணக்கஞ் செய்வாம் (9)

## திருவாதவூரடிகள் துதி.

சித்திரப் பரிமீ தேறிச் செழியன்முன் வீதி வந்து
தத்துதெண் டிரைநீர் வையை தனக்கணை கோலிக் கையான்
முத்தமிழ்க் கோவை முற்று மெழுதிட மூல மான
வத்தனை யேவல் கொண்ட வண்ணலை யகத்துள் வைப்பாம். (10)

## அறுபத்துமூவர் முதலிய வடியார் துதி.

மேவ லாரிவர் நண்பின ரிவரென வேண்டாப்
பாவ லோர்புகழ் பரன்பணி செயுமறு பத்து
மூவ ரேமுதற் பூதிசா தனம்புனை முதல்வர்
யாவ ராயினு மாவியுந் தேவரு மவரே. (11)

## அவையடக்கம்.

படங்கிளர் சுடிகைத் துத்திப் பாதல வேந்த னவிற்
கடங் கிடாப் புனமு கத்தே யண்ணறன் சரிதை யாவுங்

---

7. செம்மல்-ஆடவரிற் சிறந்தோன்.

8. பழுத்த-மிகுந்த. குணம்-நன்மை. சிலை-கல்.

9. சுரும்பு-வண்டு. பிறையெயிறு-சந்திரன்போலும் பல். இடங்கர்-முதலை. ஆண்டு-வயது. ஆண்டுப்பெற்ற பிள்ளையை யென இயையும்.

10. அணை-கரை. கோலி-வளைத்து. 11. மேவலார்-பகைவர்.

குடங்கையா டியிலு யர்ந்த குலவரை தோன்று மாபோற்
றொடங்குமுள் ளன்பிற் றோன்றத் தொகுத்தினி துரைப்பன் மாதோ.

கட்கமழ் கமலக் கங்கை கருதினோர் காசி மூதூர்
மட்கலத் துற்ற தென்ன மறுத்திடார் மகிழ்வ ராங்கே
புட்குலஞ் செறியும் புன்னைப் புனவையெம் பெருமான் காதை
யுட்கொள்வோ ரென்சொ லெள்ளா துறுதியென் றுணர்வரன்றே. (13)

## நூல் வரலாறு.

மேத கும்புகழ் நைமிசத் தருந்தவர் வினவச்
சூத மாமுனி வடமொழி யாலருள் சுரந்த
காதல் சேர்பழம் பதியுறை கண்ணுதல் சரிதை
பூத லம்புகழ் தமிழினால் வகுத்தனன் புகல்வேன். (14)

## வாழ்த்து.

மன்னவன் செங்கோ லோங்க மாதமும் மாரி பெய்க
தென்னவன் பாண்டி நாட்டுத் திருப்புன வாயில் வாழ்க
கன்னலங் குதலைச் செவ்வாய்க் கச்சணி முலையாள் பாகன்
றன்னருள் படைத்த சைவ சமயமே தழைக்க வென்றும். (15)

## நூல் செய்தற்குக் காரணமும் செய்தவரும்.

தென்னர்புக ழாறுகாற் பீடமேவித்
திருமகுடம் புனைந்துசெங்கோல் செலுத்துங் கச்சி
மன்னவனும் விசயவரு ணைசலேந்த்ரன்
வகுத்துரைக்க வெனச்சூதன் வாக்கா ராய்ந்து
பன்னுதமி ழாற்புனவைப் பெருமான் காதை
பாவலருக் கமுதமெனப் பகர்தல் செய்தான்
நன்னிதிசேர் திருவாரூர் வளர்தியாக
ராசகவி ராசகுரு ராசன்றனே. (16)

பாயிரம் முற்றிற்று.

---

12. சுடிகை-உச்சி. துத்தி-படப்பொறி. பாதலவேந்தன்-ஆதி சேடன். குடங்கை-உள்ளங்கை. ஆடி-கண்ணாடி.

13. கள்-தேன்.

16. தென்னர்-பாண்டியர்.

பன்னகம் புனைந்தோன் பாண்டிப் பதிபதி னொன்றி னுக்குண்
முன்னாக வுயர்ந்த சூத முனிவரன் மொழியா நின்ற
புன்னாக வனஞ்சூழ் விர்த்த புரிக்கதை புகல்வான் றெண்ணீர்
நன்னாக நதிசூழ் செல்வ நாட்டணி நவில்வன் மாதோ. (1)

## வேறு.

புங்கவன்வெண் பொடியணிந்த வடியர்குழா
மெனப்படர்ந்து புகுந்த தூய
மங்குன்மறி திரைக்கரிய கடல்படிந்து
முகந்தெழுந்து வான மேறி
எங்களம்மை கருங்கூந்த லெனவிருண்டு
பரன்வேணி யென்ன மின்னி
யங்கவன்கை யுடுக்கையென வதிர்ந்துநெடு
வரைச்சார லடுத்த தன்றே. (2)

தெரியுநெடுந் திசைநெருங்கி யடியவர்க
ளுடன்பழகாச் சிறியோர் சிந்தைக்
கரியகங்கு லெனவான மிருளவணு
வுடனண்ட கடாக மட்டும்
விரியுமருத் திடைநுழையா வண்ணம்வெள்ளி
வீழெனக்கால் வீழ்த்துப் பெம்மான்
புரியுமரு ளெனவுயர்ந்த வரைமுகடு
கிழியமழை பொழிந்த தம்மா. (3)

அடுமுகிலி னினஞ்சொரிய வடுத்தவெள்ள
மிடையறா தருண னென்னப்
படுமணிகள் பலசுமந்து பாரினுக்கு
மேலுயர்ந்த பருப்ப தத்தி
னெடியகொடு முடிக்குமொன்றாய் நீடருத
லாடல்புரி நிமலன் செங்கை
வடவரைவெஞ் சிலையடுத்த வாசுகிநா
ணெனவுலகின் வயங்கு மாதோ. (4)

---

1. பன்னகம் புனைந்தோன்-பல பாம்புகளையணிந்தசிவபெருமான், புன்னாகம்-புன்னை, விருத்தபுரி-பழம்பதி.

3. மருத்து-காற்று. கால்வீழ்த்து-காலூன்றி.

பொன்னுமா ரமுமணியும் புனைந்துபடர்
 சிலம்பினடி பொருந்தி நான
மன்னுசாந் தமுமகிலுங் குங்குமமு
 நறியபல மலருங் கொண்டு
மின்னுநுரை யுத்தரிய மணிந்துவளைத்
 திரைக்கரங்கள் வீசிச் செல்லுங்
கன்னிமா நதிநீத்தங் கணவன்வா
 ரிதியடுத்துக் கலந்த தன்றே. (5)

திருகிடும்வெஞ் சினத்தறுகட் சிறுகணெடு
 மதயானைத் திரளும் பானு
விருளகல வரியவெயி லெறிக்குமணிப்
 பணித்தொகையும் யானைக் கோடும்
பொருவரிய கவரிகளும் கொடுவருமா
 நதிவெள்ளம் போர்க்கு டைந்த
மருவலர்செல் வங்கவர்ந்து வருஞ்சேனை
 வெள்ளமென வயங்கு மாதோ. (6)

மதிதவழ்தண் டலைதோறும் வாவிதொறு
 மிகவாழ்ந்த மடுக்க டோறும்
புதியமலர்த் தடந்தோறு மிலஞ்சிதொறு
 மேரியெனும் புணரி தோறும்
பதியுமணி முடையுடுத்த குளந்தோறுஞ்
 செந்நெல்விளை பண்ணை தோறுங்
கதிதருதென் னமுதமெனு வெள்ளநதிப்
 புனல்புரந்து கலந்த தன்றே. (7)

குடவளைக டருமுழக்குங் குரம்புகோ
 லினர்முழக்குங் குளிர்நீர் மூழ்கி
முடைகடிறப் பவர்முழக்கும் வரம்புபுரி
 பவர்முழக்கு முடையி லோடிப்

---

5. சிலம்பு-மலை, ஒலி. நானம்-கஸ்தூரி. நீத்தம்-பெருக்கு.

6. தறுகண்-அஞ்சாமை. பானுள்-நடுச்சாமம். பொருவரிய-ஒப்பி லாத. உடைந்த-ஆற்றாத. மருவலர்-பகைவர்.

7. தண்டலை-சோலை. இலஞ்சி-மதில். பதியுமணிமுடை-பருக்கைக் கற்கள் பதிக்கப்பெற்ற மடை. பண்ணை-வயல்.

படலிடுமள் ளர்கண் முழக்கும் பண்ணையுழு
பவர்முழக்கும் பாரைச் சூழ்ந்த
கடன்முழக்கு நெடுஞ்சோனைக் கார்கால
மழைமுழக்குங் காட்டு மன்றே. (8)

சேறுதெளிந் திடவுழுவ ரிந்திரனை
வணங்கிவித் தந் தெளிப்பர் செய்யு
ளுறுபறித் திடுவர்மணிப் பரம்புபோக்
கியகுவளை களினம் வட்டந்
தோறுநிரப் புவர்வேழந் துணித்திடுவ
ரிசைபயிலுஞ் சுரும்பி னங்க
ளேறுமலர்ப் பணையெங்கு மிவையல்லால்
வேறுசெய லில்லை மாதோ. (9)

துடியனைய விடைதுவளப் பசுங்குழவி
நாறுநடச் சூழ்வா ரெங்கு
மடிகள்சிவப் புறநடந்து குரவையிட்டுக்
குயிலைவர வழைப்பா ரெங்குங்
கடியகொலை விழிக்கெதிருங் கருங்குவளை
யெனுங்களைகள் களைவா ரெங்குங்
கொடியமதுக் களிப்பாறக் கொழுநருக்குப்
பாகிலைகள் கொடுப்பா ரெங்கும். (10)

கரும்புகளிப் பவரெங்குங் கதிர்முத்த
முதிரவங்கை கமழக் கூட்டி
விரும்பியெடுப் பவரெங்கும் விரைந்தாலை
மரமேறி மிதிப்பா ரெங்கு
மரும்புகையெண் டிசைகமழப் பதனறிந்து
செழுந்தீஞ்சா றடுவா ரெங்கும்

---

8. குடவளை-குடம்போலும் சங்கு. குரம்பு-செய்கரை. கோலு தல்-கட்டுதல். படலிடும்-முட்டும். பண்ணை-வயல். சோனை-இடைவிடாத மழை.

9. வித்தம்-வித்து. செய்யுள்-நிலம். நாறு-நாற்று. பரம்பு-வயலைச் செப்பஞ்செய்யும் பலகை. வட்டம்-செய்வரம்பு. வேழம்-கரும்பு. சுரும்பு-வண்டு. பணை-வயல்.

10. துடி-உடுக்கு. துவள-அசைய. பசுங்குழவிநாறு-பசுமையான இளமைப்பருவத்தையுடைய நாறு. பாகிலை-பாக்கு வெற்றிலை.

வருந்திவரு வோக்கெல்லா மதுரத்தீம்
பாகளித்து மகிழ்வா ரெங்கும். (11)

அடுத்தவோ தியின்வெரிநொப் பாமிரும்பால்
விளைந்தகதி ரரிவா ரெங்கு
மெடுத்தசுமை கொடுகளத்தி லிமயவரை
யெனக்கதிர்ப்போ ரிடுவா ரெங்குந்
தொடுத்தபக டுகணடத்தி வைநீக்கித்
தூற்றியநெற் றொகுப்பா ரெங்கு
மடுத்தசக டுகடோறும் வாரிநிரப்
பினர்கொண்டு வருவா ரெங்கும். (12)

பொருந்துமர சினுக்குரிய விறையளித்து
மிக்கபல பொருளுங் கொண்டு
திருந்தியதென் புலத்தாரைத் தேவர்தமை
யறிந்தறியாத் திறத்தி லெய்தும்
விருந்தினைமெய்ப் பிறவியா லுரிமையுறு
மொக்கறனை விதியா லோம்பிப்
பரிந்துதமை யும்புரக்குந் தலைவர்மே
வியசெல்வப் பதிக ளெங்கும். (13)

வேறு.

காவெலாங் கமுக வேலி கரும்பெலாஞ் செந்தேன் பைந்தே
மாவெலாங் குயில்கள் செந்தா மரையெலாஞ் சங்கம் புன்னைப்
பூவெலாஞ் சுரும்ப ரோடைப் புறமெலாங் கம்புள் மார
னேவெலாம் பொருக ணல்லா ரிடமெலா மருதஞ் சோலை. (14)

தோடெலாம் பசும்பொன் வாவித் துறையெலா மாலைச் சோலை
காடெலாம் பவளமாற்றங் கரையெலா மகளிர் வண்டல்

---

11. ஆலை-கரும்பு ஆட்டும் யந்திரம்.

12. ஓதி-ஒந்தி. வெரிந்-முதுகு. இரும்பு-அரிவாள். பகடு-எருமைக்கடா. வை-வைக்கோல். சகடு-வண்டி. மடுத்தல்-நிறைத்தல்.

13. மெய்ப்பிறவி-சரீரசம்பந்தமான பிறவி.

14. கா-சோலை. சுரும்பர்-வண்டு. கம்புள்-வானம்பாடி. மாரன்-மன்மகன். ஏ-அம்பு. பொருகணல்லார்-போர்செய்யுங் கண்களையுடைய பெண்

மேடெலாம் பணிலமள்ளர் வீடெலாஞ் செந்நெ லென்ன
நாடெலாம் புகழும் வண்மை நலத்தது பாண்டி நாடே. (15)

சந்தனப் பொதிய வெற்பிற் றக்கவர் தவப்பே றாய
செந்தமி ழுடனே தெய்வத் தென்றல்வந் துதிக்கு நாடு
கந்தர முழவங் காட்டக் களிமயி லாடச் சூழ்ந்து
வந்தளி யிசைகள் பாடும் வளம்பெறு பாண்டி நாடே. (16)

அலகிலா மறைக ளோலிட் டறிவுறு வண்ணல் சங்கப்
பலகையிற் குடியி ருந்து பைந்தமிழ் பயின்ற நன்று
லகமீ ரேழினுக்கு முயர்ந்தன வீரேழ் பாண்டித்
தலமெனப் புகழப் பெற்ற தண்டமிழ் வையை நாடே. (17)

இமையமந் தரம்பொன் மேரு விலங்கிய கைலை வெற்பி
னுமையவள் கேள்வ னாதி யும்பர்க ளொருபா லாகச்
சிமையவான் பொதிய வெற்பிற் செந்தமிழ் முனிவோர் பாலா
வமைவுறப் பெருமையுற்ற வணிநாடு வையை நாடே. (18)

பெருஞ்சினை மருதச் சேக்கை பிரிந்தெழு மன்னப் பேடை
கருங்கழிச் சுறவமாந்திக் கடுவரற் கலுழி நீந்திப்
பொருந்துடி யதிரப்போந்து புயலவழ்ந் தசும்பு மாறு
விருந்தினை யருவிச்சார லின்சிற காற்று மாதோ. (19)

கரைக்கடன் முழவ மார்ப்பக் காஞ்சியங் காவ னத்தி
ணிரைத்தபோ தரும்பு முல்லை நிலவண் டிசைகள் பாட

15. தோடு-பூவிதழ். பொன்-பொன்னிறத்தாது. வாவி-தடாகம். மாலைச்சோலை-வரிசையான சோலை. வண்டல்-விளையாட்டு. பணிலம்-சங்கு. மள்ளர்-பள்ளர்.

16. கந்தரம்-மேகம். முழவம்-முரசு. அளி-வண்டு.

18. சிமையம்-குடுமி.

19. மருதச்சேக்கை-மருத நிலமாகிய வாசஸ்தானம். கருங்கழி-பெரிய கழிநிலம். சுறவம்-சுறுமீன். மாந்தி-உண்டு. கடுவரல்கலுழி-வேகமாய் வரும் முல்லை நிலத்துக் காட்டாறு. பொருந்துடி-அடிக்கின்ற குறிஞ்சிப்பறை. புயல்-மேகம். அசும்புதல்-இடையறுதொழுதல். புயல் தவழ்ந்து அசும்புமாறுத் தினை பருவிச சாரலின் [illegible] முடிக்க. சாரல்-மலைப்பக்கம்.

வுரைத்தபொற் கோங்கு தாள மொத்தறுத் தொருபா னிற்ப
வரைக்கிளி யினங்கொண் டாட மயினட மாடு மன்றே. (20)

அலைகடற் சேறு தோய்மோட் டாமைக ளடுப்ப தாகக்
கொலைதவிர் மருத வேலிக் குடவளைக் குழிசி யேற்றி
நிலைபெறு முல்லைத் தேனீர் நித்தில வரிசி பெய்து
மலைமலர்க் காந்த ளூது மடந்தையர் வண்ட லெங்கும். (21)

மன்னுசெங் கமல பீட மேவிமா லயத் தென்ற
றன்னடி வருட மேல்வெண் டாமரை கவிகை தாங்க
மின்னுபூந் திரைபா வாடை வீசவீற் றிருக்குந் தூவிக்
கன்னிவெள் ளரச வன்னங் கன்னிநா டளிக்கு மன்றே. (22)

புண்ணிய நதியாம் வையைப் புனலினு நெருப்பி னுஞ்சீ
ரெண்ணுபூந் தென்றற் காற்றி னிடத்தினுங் கீர னின்ற
கண்ணினுஞ் சுந்த ரேசன் கதிர்முடி யேறும் வையை
மண்ணினுந் தமிழ்ம ணக்கும் வளநாடு வழுதி நாடே. (23)

வேறு.

வரிசை மாந்தர்பா வாணர் பசுந்தமிழ்ப்
பரிச றிந்து தரும்பரி சன்றியுஞ்
சுருதி வீணைச் சுரும்பினம் பாடத்தேன்
பெருகு கொன்றையும் பொன்மழை பெய்யுமால். (24)

அகம கிழ்ந்த மெய்ஞ் ஞானிக ளன்றியுந்
நகைமை பெற்ற சதுரவெற் பாதியின்
மிகவு யர்ந்த தருநிறை மென்றழை
திகழு நாலிரு சித்தி தருமரோ. (25)

பொங்கு மங்கல வேள்விப் புரவலர்
தங்கண் மும்முர சன்றியுந் தண்டலை

---

20. காஞ்சி-ஓர் மரம்.

21. குடவளை-வளைந்த சங்கு. குழிசி-பானை. நித்திலம்-முத்து. வண்டல்-விளையாடுமிடம்.

23. கண்-இடம்.

24. பாவாணர்-கவிவாணர். பரிசு-தன்மை, நன்கொடை. பரித்தல்-

வெங்க ரித்திரள் வெற்பணி மேடைக
ளெங்கு மேக மிருந்து முழங்குமால். (26)

அருத்தி கூர்தரு மங்கயற் கண்ணுமை
வரித்தி டும்மண வாளன் மணிமுடி
தரித்து நாலு தடம்புய வெற்பினுற்
பரித்த நாடுதென் பாண்டிநன் னாடரோ. (27)

## திருநாட்டுச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 43.

---

## 2-வது திருநகரச் சருக்கம்.

நிலவ ணிந்த நிமலன் பழம்பதித்
தலைவன் மேவிய தண்டமிழ் நாட்டணி
யுலகி லன்பொ டுரைத்தன மோங்கிசை
குலவு நன்னக ரின்வளங் கூறுவாம். (1)

வேறு.

எங்கு மிக்கன பலவள நிறைந்திடு மியல்பாற்
கங்கு லாம்புனல் மிழலைநன் னாடுபொற் கடலாம்
பொங்கு பொற்பதி பலபல போதுகள் பூமான்
பங்க யப்புது மலர்தனித் திருப்பழம் பதியே. (2)

அழகு சேர்தமிழ்ப் பாண்டிநாட் டருள்செய்வே ளாளர்
மிழலை நாடுபொன் மேருவம் மேருவிற் குந்தந்
தழைபெ ருந்துறை முதற்றலங் கோடவை தமக்குட்
பழகு வெள்ளியங் கொடுமுடி திருப்பழம் பதியே. (3)

---

26. தண்டலை-சோலை. கரித்திரள்-யானைக்கூட்டம். வெற்பணி மேடை-மலைபோலும் அழகிய மேடை.

27. அருத்தி-அன்பு. கூர்தரும்-மிகுந்த.

2. கங்கு-கரை. மிழலைநாடு-கன்னிநாடு. பதி-தலம். பூமான்-இலக்குமி. பங்கயம்-தாமரை.

3. குந்தம்-குருந்தமரம்.

சகத்தின் மேம்படு சிருட்டியைச் சிவனரு டன்னு
லகத்தி லெய்திய வரத்தினவ் விதிபடைத் தறிவான்
வருக்கு மாழியங் கிரிபெருங் கடலுக்கு மாறாப்
பகுத்த லொத்தன நொச்சியு மகழியின் பரப்பும். (4)

மருங்கு சூழ்மணி மதிற்புறத் தெண்டிசை வளைந்த
பெரும்பு றக்கட லனையதோ ரகழியிற் பிடியு
நெருங்கு மும்மத யானையும் படிவன நிறைந்த
கருங்க டற்புறந் தவழ்தரு பசும்புயல் கடுக்கும். (5)

பகடு தோய்வன பாதலந் தோய்நதி பசும்பொற்
றகடு தோய்வன தடங்கரை யடங்கலுந் தருவா
னகடு தோய்வன வணிமதிற் புறமுய ரண்ட
முகடு தோய்வன கதலிகைச் சிகரமா முடிகள். (6)

சேரு மேலெழு லோகமுஞ் சிவனரு டிணிப்பா
னேரு நீர்மைய வெழுநிலைக் கோபுர நிரைகண்
மேரு மந்தர மிமயவெற் பாதிகண் மிடைந்த
பாரை யொத்தன மேடைசூழ் வீதியின் பரப்பு. (7)

தொடுத்த மந்திர வேள்விகள் கையறாத் துவக்கான்
மடுத்த யானமுற் றிழிதரப் பொழுதிலா மையினு
லடுத்து வந்துவந் திமையவர் மீள்குவா னயன்முன்
படைத்து வைத்தகண் ணேணியொப் பானசோ பானம். (8)

---

4. விதி-பிரமன். ஆழியங்கிரி-சக்கரவாளகிரி. நொச்சி-மதில்.

5. பிடி-பெண்யானை. மும்மதயானை-ஆண்யானை. பசும்புயல்-கரிய மேகம். கடுக்கும்-ஒக்கும்.

6. பகடு-யானை. தரு-கற்பகதரு. வானகடு-மேகமண்டலத்தின் வயிறு. கதலிகை-துகிற்கொடி. தோய்தல்-கலத்தல்.

7. திணிப்பால்-சேர்த்தலால். நேரும் நீர்மைய-பொருந்தும் தன்மையுடையன. நிரை-வரிசை. மிடைந்த-நெருங்கிய. பார்-பூமி.

8. கையறா-இடையறாத. துவக்கால்-தொடங்குதலால். மடுத்த-நிறைத்த. யானம்-வாகனம். இழிதரா-இறங்க. கண்-மூங்கில். அஃ[illegible] மூங்கிலைவெட்டுங்காலத்து ஒவ்வொரு கணுவையும் வெட்டிப்படி [illegible]பெயர் சோபானம்-படி.

ஆர ணம்பெறு மறையவர் வீதியு மரசர்
வார ணம்பொரு வீதியும் வணிகரெவ் வளமும்
பூர ணந்தரு வீதியுங் கங்கையின் புதல்வர்
தோர ணந்திகழ் வீதியு மெண்டிசை சூழும். (9)

மறைமு ழக்கொலி யல்லன தெவ்வர்கள் வருக்குந்
திறைமு ழககொலி யல்லன சீர்பெறு துலையி
னிறைமு ழக்கொலி யல்லன பலவள நிறைக்கு
முறைமு ழக்கொலி யல்லன வவண்டமிழ் முழக்கம். (10)

கார்மு ழங்குவ கூடகோ புரநிரைக் களத்திற்
றேர்மு ழங்குவ நல்விழா வீதியிற் சினவெம்
போர்மு ழங்குவ தகர்பொரு முன்றிலிற் புனவை
யூர்மு ழஙகுவ வரகர வெனுங்கட லொலியே. (11)

நகைசி றந்தன நளினவாண் முகத்திடை நவவிப்
பகைசி றந்தன பங்கய விழிகளிற் பைந்தார்த்
தொகைசி றந்தன தனங்களிற் காரகிற் றூபப்
புகைசி றந்தன பூவையர் கருங்குழற் புயலின். (12)

மல்ல லம்பரி யல்லன மருவலர்ச் சினந்து
கொல்லு மும்மத யானைக ளல்லன குமுறும்
பல்வி யம்பல வல்லன பாவையர் வளர்க்கு
முல்லை யங்கொடி கமழ்வன வவரவர் முன்றில். (13)

கூட மெங்கணு மல்லன நவமணி குயின்ற
மாட மெங்கணு மல்லன மரகத மயில்க

9. ஆரணம்-வேதம். வாரணம்-யானை. பொரு-போர்செய்யும். கங்கையின் புதல்வர்-வேளாளர்.

10. தெவ்வர்-பகைவர். திறை-கப்பம். துலை-தராசு.

11. கார்-மேகம். நிரை-வரிசை. களம்-இடம். தகர்-ஆட்டுக் கடா. முன்றில்-முற்றம்.

12. நகை-மகிழ்ச்சி. நளினம்-தாமரை. வாள்-பிரகாசம். நவவி-மான். பங்கயவிழிகள்-தாமரைபோலுங் கண்கள். பைந்தார்-பொற்காசுமாலை. தொகை-கூட்டம். காரகில்-கரியஅகிற்கட்டை. புயல்-மேகம்.

13. மல்லல்-வளமை. மருவலர்-பகைவர்

ளாடு ரங்குக ளல்லன விநதிர னமைத்த
சேடு யர்ந்தது ணம்பல செறிந்தபூந் தெற்றி. (14)

## வேறு.

கதநெடுஞ் சிலைவாழ் சூலங் கப்பணந் திகிரி வைவேற்
பதமுறை யறிந்து மன்னர் படைக்கலன் பயிலு மோதை
மதகரி யனைய தத்த மார்புதோண் முகத்தி னங்கை
புதைவபோற் பழகு மல்லுப் போர்முழக் கடக்கு மன்றே. (15)

காலினு மனத்தி னும்பாய் கணையினுங் கடிய வேக
நாலடு தேரின் வேந்தர் நடைபகுத் திடுமா வேலை
யாலமும் யமனு மூழி யங்கியு மனைய வேழ
மேலெழும் பரிமு ழக்கம் விண்ணொலிக் குயர்ந்த தன்றே. (16)

மலைமகண் மகிணன் வீதி வருமென மறுகு தோறுங்
கலைநுதன் மகளிர் வீசுங் கடிகமழ் கலவைச் சேறும்
புலவியாற் கணவர் தம்மே லெறியும்பூம் பந்தும் மாடங்
குலவுமா வணங்க டோறுங் குவிந்திடு குவாலா மன்றே. (17)

ஆடியிற் றமைக்கண் டேடி யம்புயப் பாதப் பஞ்சி
சூடிய கணவர் தோளிற் ரேகைய ரெறியு மாலை
நீடுலா வீதி புக்க நிருபர்தோட் சூழ்தன் மேடை
மாடுநின் றரம்பை மாதர் மணமாலை யிடுதல் போலும். (18)

---

14. சேடு-திரட்சி. தூணம்-தூண். தெற்றி-திண்ணை.

15. கதம்-வலிமை. கப்பணம்-இருப்பு நெருஞ்சின் முள். வைவேல்-கூர்மையுடையவேல். ஓதை-ஓசை.

16. நாற்றேராவன-அதிரதம், சமரதம், அர்த்தரதம், மஹா ரத மென்பன. மா,பரி, இருபதத்தின்பொருளும் குதிரை என்பதே. விண்-மேகம்.

17. மலைமகள்-பார்வதி. மறுகு-சிறுதெரு. கலைநுதல்-பிறைபோலும்நெற்றி. கலை ஈண்டு ஆகுபெயர். புலவி-ஊடல். ஆவணம்-கடைத்தெரு. குவால்-மேடு.

18. ஆடி-கண்ணாடி, ஊடி-வெறுத்து. பஞ்சி-செம்பஞ்சிக்குழம்பு.

ஞானபோ னகரின் மேலா நன்மொழிக் கிள்ளை யாழின்
கானவர் தம்மின் மேலாங் கருங்குயிற் காமன் சின்னம்
வானிர வியினு மேலா மதிலணி மணிக டந்தித்
தானவெள் ளத்தின் வேந்தர் தருந்தான வெள்ள மேலாம். (19)

கள்ளவிழ் கூந்தற் செவ்வாய்க் கன்னியர் பளிக்கு மாடத்
துள்ளுற வாயில் காணு ரொதுங்கினர் நிற்ப ரோர்பா
னள்ளுறு சாள ரத்தி னுண்மதி நிலவு கால
வெள்ளியந் தூண மென்ன விலகினர் வருவ ரோர் பால். (20)

அஞ்சுகம் பகர்வ தெல்லா மரம்பையர் பகரக் கேளாப்
பஞ்சுதோய் கமல பாதப் பாவையர் மருண்டு நோக்கி
நெஞ்சிலை யுறுவ ரெங்கு நேடினர் காணார் மேடை
விஞ்செதிர் கூவ லென்றே விரும்பினர் மகிழ்வர் மாதோ. (21)

அரம்பையர் தருவி னீள லாடுதல் கண்கண் டன்ன
சுரும்பணி கோதை மாதர் தோழியர் செங்கை பற்றி
நெருங்குசோ பான மேறி நின்றனர் காணார் மற்றோர்
வரம்பெறு மாடத் தாடு மயில்கண்டு மகிழ்வர் மன்றோ. (22)

சுருதியந் தணர்கள் வேள்வித் தூமமுந் தூப தீபந்
தருமணப் புகையும் பாக சாலையி னறிய நெய்பெய்
தரிவையர் பிறவு மட்டி யடுத்தகுய்ப் புகையு நானம்
பொருமகிற் புகையு மேடைப் புயலொடு மயங்கு மன்றே. (23)

---

19. ஞானபோனகர்-சம்பந்தர். கானவர்-கானத்தை யுடையவர். சின்னம்-காளம். தந்தித்தானம்-யானைமதம். தானவெள்ளம்-தானஞ் செய்வதாலுண்டாம் நீர்ப்பெருக்கு.

20. கள்ளவிழ்-தேன்சொரியுமலர். பளிக்கு-பளிங்கு. நிலவுகால-கிரணத்தைவீச. தூணம்-தூண்.

21. சுகம்-கிளி. நேடினர்-தேடினர். மேடைவிஞ்செதிர்கூவல்-மேடைமேலுள்ள எதிரொலி.

22. சோபானம்-படி. வரம்-மேன்மை.

23. நறியநெய்-பசுவின்நெய். அட்டி-சொரிந்து. குய்-தாளிதம். நானம்-கஸ்தூரி. பொரு-ஒப்பு.

கோதையர் மகிழ்ந்து வீசுங் குங்குமப் புனலு மேடைத்
தீதக லிந்து காந்தச் சிலைதரு புனலு மண்ட
மோதிய கொடிவான் கங்கை முகநதெறி புனலும் புன்னைப்
போதவிழ் புளின வேலைப் புணரியை நிறைக்கு மன்றே. (24)

சேலன மறிந்து நீண்டு செவவரி பாந்த வுண்கட்
பாலெனு மின்சொ னல்லார் பரிந்துபூ மானைக் காட்ட
மேலெழு மதியம் வெய்யோன் வெள்வளை திகிரி காட்ட
மாலென மருண்டு தோற்று மழைமுகி றவழு மாடம். (25)

வாரணி களபக் கொங்கை மங்கைய ரிசைகள் பாடப்
போர்மலி குவவுத் திண்டோட் புரவலர் மகிழ்ந்து வாழு
மேர்பெறுஞ் சிகர கூடக் கியக்கற நிலைக்க ணின்ற
தேர்மணி மகுட முற்ற திங்கள்வெண் கவிகை செய்யும். (26)

கலைகளென் றென்றுந் தேறுங் கருத்திலா ரில்லை தெவ்வர்
சிலைமுனைப் பகழி தோயுந் திரள்புய மில்லா ரில்லை
குலமயிற் பாதப் பஞ்சி கோட்டுமார் பில்லா ரில்லை
இலையெ றளிக்குஞ் செங்கை யிருநிதி யில்லா ரில்லை. (27)

புரந்திடு மன்பி லன்ன பூரணிக் கெளியா ரில்லை
வரம்பெறு முருவிற் செந்தா மரைமகட் கெளியா ரில்லை
இருங்கல வியினின் மார னிரதிக்கு மெளியா ரில்லை
அருந்ததிக் கற்பின் மாத ரருந்ததிக் கெளியா ரில்லை. (28)

---

24. கோதையர்-பெண்கள். இந்துகாந்தச்சிலை-சந்திரகாந்தக்கல். புளினம்-மணற்குன்று. வேலை-கரை. புணரி-கடல்.

25. சேல்-மீன். உண்கண்-மையுண்டகண். நல்லார்-பெண்கள். மதியம்வெள்வளைகாட்டவெய்யோன் திகிரிகாட்டவென இயையும். மதியம்-சந்திரன். வளை-சங்கு. வெய்யோன்-சூரியன். திகிரி-சக்கரம். மால்-விட்டுணு. முகில்-மேகம். பூமான்-இலக்குமி. தோற்றும்-முற்று.

26. வார்-கச்சு. குவவு-திரட்சி. புரவலர்-அரசர். கூடக்கு-கூடத்திற்கு. கவிகை-குடை.

27. கலை-நூல். தெவவர்-பகைவர். சிலை-வில். பகழி-அம்பு. கோட்டுமார்பு-தோய்ந்தமார்பு.

28. வரம்-பெருமை. செந்தாமரைமகள்-இலக்குமி. மாரன்-மன்

துடியிடை பாக மேவுஞ் சோதியிற் கலந்து தூங்கு
மொடி தரா யோகி கட்கோ ருகங்கண மாமற் றோர்க்கும்
படிபுகழ் தமிழ்தேர் பண்பாற் கலவியாற் பகலி ராவாங்
கடிகையோ ராறு பத்துங் கணமெனக் காட்டு மன்றே. (29)

பரிர்தடி பாரிற் றோயா படைவிழி யிமையா பண்ணின்
சுரும்புறு மாலை வாடா சுதைமணி மேடைப் பாவை
இரும்புன வையிலெம் மானை யிறைஞ்சுவா னவண்வந் தெய்து
மரமபையர் தமைவே றெண்ணி யறிகுவ தரிதா மன்றே. (30)

வேறு.

பாத பஞ்சி மலர்ந்த பளிக்கணி
நீத மேடை நிலாமணி முன்றிலைப்
போத ரும்புசெங் தாமரைப் பொய்கையென்
றூத ரத்தெய்து வார்பண் ணரம்பையர். (31)

சோலை யெங்குஞ் சொரிமலர் மாமலர்
மாலை யெங்கு மதுமண மாமணச்
சாலை யெஙகு மனமனந் தானெழுந்
காலை யெங்குங் கமழ்புன லாட்டரோ. (32)

அரிய மாமணி யாவணந் தோறுால்
வரிசை யோடு முலாவரு வோர்கள்வா
ஞரிய மானத் துறம்புல வோரலாற்
பரிசு பெற்ற பசுந்தமிழ்ப் பாவலர். (33)

அங்க ணயக ஞலயங் கூட்டுத
லெங்கும் வாரல கிட்டு மெழுகுதல்

29. துடி-உடுக்கு. இடை-இடையினையுடையஉமாதேவியார். சோதி-சிவபெருமான். ஒடிதரா-பிளவுபடாத.

30. படை-வேல். சுரும்பு-வண்டு. சுதை-வெண்மை. பண்ணின ரம்பையரெனக்கூட்டுக.

31. பளிக்கு-பளிங்கு. நீதம்-நீதி.

32. அனம்-அன்னம். அனம்-அன்னப்பக்ஷி. காலை-இடம்.

33. ஆவணம்-வீதி. மானம்-விமானம் புலவோர்-தேவர்.

பொங்கு தீபமிட் டேத்துதல் புண்ணியர்
தங்க ளேவல்செய் வோர்பலர் தாமரோ. (34)

சீத வார்புனன் மூழ்கித் திகழ்மனு
வாதி யைவகைச் சுத்திசெய் தணைலைப்
போத பூசை புரிந்து புராந்தகன்
நீதி போகு நெறியினர் யாவரும். (35)

மால டுத்த விருநெறி மாற்றிவான்
மூல மான சுழுமுனை யூடுபோ
யால முண்ட வரனருண் மேனியைக்
கால மூன்றினுங் காண்பவ ரெங்களும். (36)

கற்ற நாளின் கலக்கற் றிருவகைப்
பற்று நீக்கியிப் பாரிற் பகலிரா
வற்ற பூமிகண் டானந்த வாரிதி
யுற்ற ஞானிகள் யாவரு முண்மையால். (37)

திருநகரச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 80.

## 3-வது நைமிசாரணியச் சருக்கம்.

கைமி னெல்லிக் கனியிற் கதிதரு
மைய னம்பிகை பாக னமர்ந்தருள்
செய்ய மானக ரின்வளஞ் செப்பினந்
துய்ய நைமிசத் தின்வளஞ் சொல்லுவாம். (1)

---

34. வாரலகு-நீண்ட துடைப்பம்.

35. மநு-மந்திரம். ஐவகைச்சுத்தி-மந்திரசுத்தி, திரவிய சுத்தி, லிங்க சுத்தி, பூதசுத்தி, ஆன்மசுத்தி என்பன. போதபூசை-ஞானபூசை. புராந்தகன்-திரிபுரத்தைச்சங்கரித்த சிவபெருமான். நீதிபோகும்-நீதியிற் செல்லும்.

36. மாலடுத்த இருநெறி-மயக்கத்தைத்தரும் இடைகலை பிங்கலை களிற்செல்லும் பிராணவாயுவின் நெறி.

37. கற்றநாள்-கல்வி பயின்ற நாள். இருவகைப்பற்று-யான் எனதென்னும் பற்று. பகல்-சகலம். இரா-கேவலம்.

வேறு.

வாத ராயணன் கௌசிகன் பாரத்து வாசன்
கோத மன்மிரு கண்டுவா ருணிவர குணஞேர்
பாத னத்திரி சத்தியன் பார்க்கவன் சனகன்
மூது ரைப்புலத் தியனித்தி யானந்தன் முதலாய். (2)

திருந்து மாலிமை யாசல முதலிய சிலம்பில்
வருந்தி ரைச்சுர நதிமுத லாநதி மருங்கிற்
பரந்த தொன்மர முதலிய வனங்களிற் பன்ஞெ
ளிருந்து மெய்த்தவ மியற்றிய முனிவர ரெவரும். (3)

விழுமி தாமொரு தவவினைப் பயத்தினல் விரைவி
னெழுமு கிற்குலந் தவழ்வட வரையிடத் தெய்தித்
தொழுது தத்தமக் குரியன முகமனுஞ் சொல்லிக்
குழுமி யாங்கொரு சாரலி னிருந்துளங் குறித்தார். (4)

கலியி ஞற்கரு முகிலுறை மறந்திடுங் கால
வலியி ஞற்பொரு மரக்கராற் கொடியமன் னவராற்
பலிகொள் பூதவே தாளத்தால் விலங்குகள் பலவா
னலிவு றுதஹோ ரிடம்பெற வேண்டினர் நல்லோர். (5)

வேண்டு மத்தல மலர்குசை யாதிகள் விரவிப்
பூண்ட வேள்விமெய்த் தவஞ்செபம் வந்தனம் பூசை
யாண்டி யற்றிடி னென்றுநூ றுயிர மனந்த
மீண்டு நீரதா வெய்திட வெண்ணின ரெழுந்தார். (6)

அண்ட மேலுயர் சத்திய லோகத்தை யடைந்து
பண்டு தொட்டுல குயிரனைத் தையுமுறை படையா

---

2. வாதராயணன்-வேதவியாசர்.

3. மால்-பெரிய. அசலம்-மலை. சிலம்பு-மலை. சுரநதி-கங்கை. மருங்கு-பக்கம். தொன்மரம்-ஆலமரம்.

4. விழுமிதாம்-மேலாகிய. முகில்-மேகம். குலம்-கூட்டம். வட வரை-மகமேரு. சாரல்-மலைப்பக்கம்.

5. முகில்-மேகம். உறை-மழை. நலிவு-கெடுதல்.

6. குசை-தருப்பை. ஆண்டு-அவ்விடத்து. ஈண்டும்-பெருகும். நீரதா-தன்மையாக.

முண்ட கத்துறை சதுர்முகன் சன்னிதி முதலாகக்
கண்டு கைமுடி மேற்குவித் திருகணுங் களித்தார். (7)

களித்த மாதவ ருடன்மயிர் பொடித்திடக் கண்ணீர்
துளிப்ப நின்றனர் பற்பல விதத்தினுந் றுதிப்பத்
தெளித்த நான்மறைக் கடவுளு மகிழ்ந்துதன் றிருக்கண
ணளித்து மென்னகை புரிந்திவண் வருகவென் றருளி. (8)

முனிவர் காளிவ ணெய்திய காரண மொழிமின்
கனிவி னேடென நான்முகன் பகர்தலுங் கமலப்
புனித நாயக செயுந்தவ மழிவுறாப் பூமி
இனிது வேண்டிநின் பாலுற வந்தன மென்றார். (9)

ஆங்கு வேண்டிய வரந்தரு வானணி மகுடந்
தாங்கு சென்னியங் கசைத்தயன் பரிந்தொரு தருப்பை
வாங்கி நேமியின் முடிந்தெறிந் தனதுபோய் வதிய
வோங்கு பூமியுற் றிருந்தவம் புரிமினென் றுரைத்தான். (10)

அயன்சொல் வாசகங் கேட்டலு மருந்தவ ரவன்றாள்
வியந்து போற்றினர் விடைகொடு மீண்டனர் தொடர்ந்தா
ருயர்ந்து வான்வரும் புற்றிகி ரியையஃ தூலகி
னயந்து வீழ்ந்தது யமுனைகங் காநதி நாப்பண். (11)

கருது மிவ்வன நேமிசம் பந்தமா கையினுன்
மருவு நாமமு நைமிச வனமென வருத்தாங்
கிருநி திக்குல மெய்திய வறியவ னென்னப்
பொருவி லாவுவ கையினருந் தவர்குடி புகுந்தார். (12)

பன்ன சாலைக ளெங்கணும் பருத்தினி தளிக்கு
மன்ன சாலைக ளெங்கணு மங்கினூன் றமைக்கச்

---

7. படையா-படைத்து. முண்டகம்-தாமரை. சதுர்முகன்-பிரமன்.

8. தெளித்த-சொன்ன. நான்மறைக்கடவுள்-பிரமன்:

10. வாங்கி-வளைத்து. நேமியின்-சக்கரம்போல். அனது-அன்னது. வதிய-தங்க.

11. புற்றிகிரி-தருப்பையாலான சக்கரம். புற்றிகிரியைத் தொடர்ந்தாரெனக் கூட்டுக. நாப்பண்-நடு.

12. நேமி-சக்கரம். பொருவிலாவுவகை-ஒப்பிலாத மகிழ்ச்சி.

சொன்ன சாலைக ளெங்கணுந் திசைதொறுந் தோன்று
மென்ன சாலையுஞ் சந்நுசந் தானமற் றிலஞ்சி. (13)

மடங்க ளெங்கணும் புன்னைசெண் பகமிரு மருங்கா
மிடங்க ளெங்கணு மிஞ்சியு மேரியுந் தடமுந்
தடங்க ளெங்கணுந் தாமரை தாமரைச் சமுக
மடங்க லுஞ்சிறை வண்டின மரியசூட் டன்னம். (14)

கலந்த குங்குமஞ் செருந்திமல் லிகைகர வீர
மலர்ந் திடுந்தள வம்வலம் புரிதுள வன்றி
நலந்த ருந்தளிர்க் கூவிள மிதழிசேர் நலத்தான்
மலர்ந்த நைமிச வனமெலா நந்தன வனமே. (15)

தெருண்ட கல்வியா லுளத்தெழு சோதியின் றிறத்தான்
மருண்ட வாளரா மணியினுற் றீபமா மாத்தா
லரண்ட ருந்தவ முனிவரர் தமதகம் புறமா
மிரண்டி னும்மிர வில்லைநை மிசவன மெங்கும். (16)

கூட மீள்வன கிரிவை வாளராக் குலமான்
கூட வந்துநீர் பருகுவ கொடுவரி யரியின்
கூட வாழ்வன குஞ்சரங் குலவுமான் கன்றின்
கூட நின்றுபா லுண்பன வுழுவையின் குருளை. (17)

ஏத மின்றிய விருடிக ளின்புறுங் கற்பின்
மாதர் தம்முடன் வனத்துணை புகுவன மஞ்ஞை
காத லாலவ ரருளிளங் கன்னிய ருடன்பூம்
பாத மன்சிவப் புறநடப் பனவனப் பார்ப்பு. (18)

---

13. பகுத்து-வருணமுறைப்படி பிரித்துவைத்து. சொன்ன சாலை-நூல்களிற் கூறப்பட்ட சாலை. இலஞ்சி-கொல்லை.

14. இஞ்சி-சிறிய குளம். ஏரி-பெரிய குளம். தடம்-தடாகம். சூட்டு-உச்சிச் சூட்டு.

15. கரவீரம்-அலரிச்செடி. தளவம்-முல்லை. வலம்புரி-நந்தியாவட்டம். துளவு-துளசி. இதழி-கொன்றை.

16. தெருண்ட-அறிவினையுடைய.

17. கொடுவரி-புலி. அரி-சிங்கம். குஞ்சரம்-யானை. உழுவையின் குருளை-புலிக்குட்டி.

18. மஞ்ஞை-மயில். அனப்பார்ப்பு-இள அன்னம்.

இன்னா தன்மைய நைமிச வனத்தினி தமர்ந்து
பன்னி மாருட னருந்தவம் புரிந்துபற் பலரு,
முன்னு மாரண விதிமுறை யொருமக முடித்தோர்
புன்னை நீழலுற் றிருந்தனர் முனிவரப் பொழுதில். (19)

ஆதி நாயக னருளொரு வடிவெடுத் தனைய
சூத மாமுனி வருதல்கேட் டருளிய சுருதித்
தாதை யன்னவ ரெழுந்தனர் சென்றனர் தத்த
நீதி யிற்பணிந் தழைத்துவந் தனர்களந் நீழல். (20)

வந்த சூதனை யாசனத் திருத்தினர் வாழ்த்தி
முந்து மன்பொடு முகமனன் கியம்பியம் முனிவர்
நந்தி யெம்பெரு மானென வந்தனை நாங்க
ளிந்த வேள்விசெய் திடும்பல னீதென விசைத்தார். (21)

அகம கிழ்ந்தவர்க் கெதிர்மொழி கொடுத்துளத் தன்பால்
முகம லர்ந்தருள் சூதனு முனிவிர்கா ணீவிர்
மகமி யற்றிய தறிந்துமைக் காண்குவான் வந்தேன்
புகலும் வேண்டுவ தென்றலு முனிவரர் புகல்வார். (22)

வேறு.

வரம்புரி தெய்வ வசத்தினால் வந்த
மாதவச் சூதநீ முன்னந
திரம்பெறு சைவ புராணத்தி லேகா
தசவுருத் திரநற்சங் கிதையி
லுரந்திகழ் பெம்மான் கேத்திர மகிமை
யுரைத்தவத் தியாயத்தி லுண்மைப்
பரந்தரு பாண்டிப் பழம்பதிக் காதை
பரிவொடுந் தொகுத்தனை பகர்ந்தாய். (23)

வேண்டுமிப் பொழுது விரித்துநீ பகர
விரும்பின மெனத்தக விளம்ப
வீண்டுநீர் வினவுங் காதைமெய்க் கதைக
ளெவற்றினுஞ் சிறந்ததா மிதனை

20. சுருதித்தாதை-பிரமன்.
21. ஈது-உம்முடைய வருகை.
23. கேத்திரம்-க்ஷேத்திரம். உரம்-ஞானம். பரிவு-அன்பு.

மூண்டபே ரன்பா லொருப்படு சிந்தை
  முனிவிர்காள் கேளுமி னென்றுப்
பூண்டசீர்ச் சூதன் நந்தியை வணங்கிப்
  புகலரும் கதைவரல் புகலும். (24)

வாய்த்தவிக் காதை தன்னைமுன் சனற்கு
  மாரமா முனிகட கயிலை
சாத்தரு டைவை மாலயன் முதலாங்
  கடவுளர் முடிகெடுப் படிச்ராம்
வேத்திரத் தடக்கை நந்தி யெம்மானை
  விருப்பொடு பணிந்துபன் முறையாற்
றோத்திரஞ் செய்து சிவனுணக் கந்நாட்
  சொன்னவா றருளெனத் தொழுதான். (25)

அத்திற நந்தி புகலவம் முனிவ
  னடிதொழு மெனக்கருள் புரிந்த
மெய்த்தவக் காதை நினைப்பவ ருளதநில்
  வேண்டிய விகபரம் விளைக்கும்
தத்துநீர்த் தரங்கப் பவக்கட றொலையத்
  தாவரு மருட்கரை தந்து
முத்தியுங் கொடுக்கு மென்றனன் விரிச்சு
  முனிவரர் மொழிமென மொழிவான். (26)

3-வது நைமிசாரணியச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 103.

---

## 4-வது தல மகிமைச் சருக்கம்.

பருத்தசீர்த் தலமிந் திரன்விதி வாயுப்
  பகட்டர சருக்கன்வெண் மதிவெண்
ணகத்ததாட் பருவா யுழுவையாஞ் சோம
  னந்திவெள் ளானைநற் றமிழ்தே

---

24. தக-தகுதியாக. மூண்ட-நிறைந்த வரல்-வந்த முறை.
25. கடவுளர்-தேவர். வேத்திரம்-பிரம்பு.
26. தத்தும்-தாவும். தரங்கம்-அலை. பவம்-பிறவி. தாவரும்-கெடாத. மொழிமென-மொழியுமென.

"ரகத்தியன் செவ்வாய் முப்புர மூவ
ராதிய ரருச்சனை யாதி
வகுக்குமிக் கதையின் முதன்முதற் றலத்தின்
மகிமையைச் சூதன்வாய் மலரும். (1)

## வேறு.

அண்ணல்வா ழ் பதியெ வைக்கு மாதியா யளவி லாத
புண்ணிய வடிவாய்ச் சிவன் முத்தர்வாழ் புவன மான
பண்ணிசைத் தமிழ்ம ணக்கும் பழம்பதிப் பரிசின் வாய்மை
எண்ணரு முலகின் மேலா மித்தல மெவண தென்றல். (2)

ஆதிமா மதுரை மூதூர்க் காறியோ சனைக்குக் கீழ்பாற்
பாதயோ சனைக்கு வேலைப் பரவைக்கு மேல்பா லாதி
சேதுவுக் கிரண்டு பாதஞ் சேர்ந்தமூன் றியோச னைக்கு
மேதகு வடபா லாங்கே மேவும்வச் சிரப்பூங் கானம். (3)

பிறையெயிற் றரிமா வெங்கும் பிடித்துடி யடிக ளெங்குங்
கறையடி வேழ மெங்குங் கனைகுர லுளிய மெங்கும்
பொறிவிழிக் கேழ லெங்கும் புலவுநா றுழுவை யெங்கு
மறிகதிப் பிணைமா னெங்கு மரைகமழ் நரந்த மெங்கும். (4)

விண்பயில் சகோர மெங்கும் விரிசிறை யன்றி லெங்குங்
மண்பயில் புறவ மெங்கும் வாரணத் தொகுதி யெங்கும்

---

1. பகட்டாசு-எருமைக்கடாவை வாகனமாகவுடைய யமன். வெண் ணகத்ததாள்-வெள்ளிய நகத்தினையுடைய கால். பகுவாய்-பிளந்தவாய். உழுவை புலி.

2. பழம்பதி-திருப்புனவாயில்.

3. பாதயோசனை-கால்யோசனை. வேலைப்பரவைக்குப் பாத யோசனைக்கு மேல்பாலென மாறுக. இரண்டு பாதஞ்சேர்ந்த மூன்று யோசனை-மூன்றரை யோசனை. வேலைப் பரவையென்பவற்றுள், வேலை கடலையும், பரவை நீர்ப்பரப்பையுங் குறிக்கும். வச்சிரம்-சதுரக்கள்ளி.

4. பிறையெயிற்று அரிமா-பிறைபோலும் பற்களை யுடைய சிங்கம். பிடி-பெண்யானை. துடியடி-யானைக்கன்று. கறையடி வேழம்-ஆண்யானை. உளியம்-கரடி. கேழல்-பன்றி. உழுவை-புலி. பிணை-பெண்மான். மான்-ஆண்மான். மரை-ஓர்வகை மிருகம். கமழ்நரந்தம்-வாசனையுடைய கஸ்தூரி மிருகம்.

கண்பயி ரோங்கு மெங்குங் கான்கின் னீரங் ளெங்கும்
பண்பயி லசுண மெங்கும் பறவைகள் பலவு மெங்கும். (5)

யானள விடுதற் கெட்டா வாசினி யசோகந் தேக்குக்
கானள வான சூதங் கடுமுதற் றருக்க ளீண்டித்
தேனள வலங்க லந்தோர்த் தினகரன் முதலோர் செல்லும்
வானள வுயர்ந்த விந்த வச்சிர வனத்தி னுப்பண். (6)

சத்தியுஞ் சிவமு மாய தற்பொரு ளிகப ராதி
முத்தியுங் கொடுத்தெ வைக்கு மூலமாய்க் கால மூன்றி
னித்திய மாகி யாரு நிருமியாச் சுயம்பு வாய்வா
ழெத்திசை யோரும் போற்று மிலிங்கமொன் றுளதா மன்றே. (7)

முடிபுனை புனித னந்த மூர்த்திக்கு முமைக்குந் தூல
வடிவினு னிவந்த கொங்கை வனப்பினுன் மாவி லிங்கங்
கடிகமழ் களபச் செம்பொற் கச்சணி முலையா ளென்றே
படிபுகழ் கரும்பேர் சாத்திப் பண்ணவ ருலகு பெற்றுன். (8)

விண்ணவர் தலைவன் மற்றும் விதிமுறை பூசித் தோர்க
ளெண்ணில ராகை யாலிவ் விலிங்கத்திற் கிணையே யில்லை
பண்ணவர் பரவு மந்தப் பதியுள தீர்த்தம் பத்து
முண்ணயந் துருகு மன்பி னுருப்படு முனிவர் கேண்மின். (9)

## வேறு.

ஆர்புனையு மெம்பெருமான் றனக்குக் கீழ்பா
லடும்பகழி யெல்லையொன்றி லண்டர் கோமான்
சீர்பெறுமிந் தீரதீர்த்தஞ் சிவனுக் கங்கித்
திசையிலந்த வெல்லையிற்செஞ் சடைமேல் வைகு
மோர்பரவு கங்கைதனை யெந்தை யெம்மா
னிந்திரற்கா வைத்தசிவ கங்கை யாமிப்

5. அன்றில்-ஓர்பறவை. புறவம்-புரு. வாரணம்-கோழி. தோகை-மயில். அசுணம்-இசையறியும்மான்.

6. சூதம்-மாமரம். கடு-கடுக்காய் மரம். ஈண்டி-நெருங்கி. தேனளவு-தேன்கலந்த. அலங்கல்-மாலை. தினகரன்-தினத்தைச்செய்யுஞ்சூரியன். நாப்பண்-நடு.

8. புனிதன்-இந்திரன். நிவந்த-உயர்ந்த. வனப்பு-அழகு. பண்ணவர்-தேவர்.

பேர்பெறுநற் றீர்த்தத்தின் பெருமை நம்மாற்
பேசரிதா மிதுபெறும்பேர் பேசுங் காலே. (10)

தாக்குதிரைச் சிவதீர்த்தஞ் சருவ தீர்த்தஞ்
சத்ருபலா யனதீர்த்தஞ் சருவ ரோக
நீக்கியரு டீர்த்தமொடு சருவ பாவ
நிவாரணதீர்த் தம்பாரி னினைத்த வெல்லாப்
பாக்கியமுந் தருந்தீர்த்தஞ் சருவ தீர்த்தம்
பணிந்தருளுத் தமபரமா னந்த தீர்த்தந்
தேக்கமுத தீர்த்தமுதற் பலபேர் பெற்ற
சிவகங்கை மகிமையெம்மாற் செப்ப லாமே. (11)

சீதமதி புனையமலன் கருணை யான
சிவகங்கை தனிற்படிந்தாற் பிரம கத்தி
யாதிபா வங்கள்போம் பகைபோம் நோய்க
ளனைத்தும்போம் நினைத்தசித்தி யனைத்து முண்டாஞ்
சோதியழ றனையறியா தடுத்த போதுஞ்
சுடுமாறு போலிதன்றன் சொரூப மோராப்
பேதையர்வே றேதுவாற் படிந்த போதும்
பேசரிய கதிபலவும் பெறுவ ரன்றே. (12)

புவனங்க ளவைக்குமுப கார மாகப்
பொருந்துமீ ரேழுலகும் புகழ்ந்து போற்றச்
சிவகங்கை யிந்திரதீர்த் தத்தி னுப்பண்
டிசைமுகனார் செய்தருளும் பிரம தீர்த்தந்
தவமொன்று முனிவர்தொழும் பிரம தீர்த்தந்
தனக்குப்பூ ருவதிசையிற் சசிதன் மேனி
கவர்கின்ற கயரோகநி வார ணத்திற்
கற்பித்த சந்திரபுட் கரணி யன்றே. (13)

எம்பெருமான் புனவாயி லண்ண லாருக்
கிந்திரதிக் கினிற்சற்றீ சான மாகச்

---

10. ஆர்-ஆத்தி. அடும்பகழி-கொல்லும் அம்பு.

11. திரை-அலை. பலாயனம்-நிலைகுலைதல். ஆமே-ஆமோ.

13. தவமொன்று-தவம்பொருந்திய. பூருவம்-கிழக்கு. சசி-சந்திரன். கயரோய்-காசநோய்.

செம்பதுமப் போதிலுறை திருவான் மிக்க
செல்வமுறச் செய்தருளுந் திருவின் றீர்த்தம்
பம்புதிரை யிலக்குமிதீர்த் தத்தின் கீழ்பாற்
பலவகையா கியசிவத்து ரோக நீங்க
வம்புயமா லிகையணிந்த விரவி தன்று
லமைத்தருளுஞ் சூரியபுட் கரணி யாமால். (14)

மைப்போது மாலகண்டர் வடிவ தான
மாவிலிங்கந் தனக்கினிய நிருதி திக்கில்
முப்போது முலகளிக்கு மதிகா ரத்தை
முன்னியருந் தவமுயல்வான் முளரி யன்ன
கைப்போதி லணிதிகிரி நெடுமான் முன்னங்
கண்டருள்சக் கரதீர்த்த மத்தீர்த் தத்தி
லெப்போதும் புயல்வண்ண னகலா வண்ண
மெம்பெருமான் றிருவருள்பெற் றிருக்கு மன்றே. (15)

அண்டர்பிரான் கோயிலுக்குத் தென்பா லாக
வரவநதி யொன்றுளதா மதனை யன்பாற்
கண்டவுடன் கொடுங்கலிபோ மொருகான் மூழ்கக்
கருதருமுன் பாவம்போங் கையா லள்ளிக்
கொண்டவுட னினைத்ததுகை கூடுங் கற்றோர்
கூறுமுறை மூழ்கிலொரு குடைக்கீ ழாள
மண்டலமும் வருமேலை வீடு பேறும்
வருமென்று லதன்பெருமை வகுக்கற் பாற்றே. (16)

வரியுமுலை யதளணிந்த வள்ள லார்க்கு
வாயுதிக்கி லேந்துகுரோ சத்தில் வள்ள
லரியதிரு மணக்கோலங் காண்பான் மூழ்க
வகத்தியன்கற் பித்தகலி யாண தீர்த்த
முரியபரம் பொருளுக்குக் கீழ்பாற் பாத
யோசனையில் வருணனன்பா லுவந்து தொட்ட

---

14. இந்திரதிக்கு-கீழ்திக்கு. திரு-இலக்குமி. பம்புதிரை-ஆரவாரிக்கும் அலை. அம்புயம்-தாமரை.

15. நிருதிதிக்கு-தென்மேற்றிசை. முன்னி-கருதி. முளரி-தாமரை. திகிரி-சக்கரம், நெடுமால்-விட்டுணு, புயல்வண்ணன்-விட்டுணு.

தெரிவரிய வமுதகிறை கருண தீர்த்தந்
திசைபாவு மிவைகடச தீர்த்த மன்றே. (17)

எவனொருவன் றீர்த்தமிவற் றொன்றின் மூழ்கி
யெம்பெருமான் சந்நிதிகண் டிறைஞ்சு கிற்பா
னவன்சுருதி யாகபல னனைத்து மெய்து
மருந்தான பலன்முழுது மவனே யெய்தும்
புவனமுறு தீர்த்தமெலாம் விதியாற் றோய்ந்த
புண்ணியமெல் லாமவனே பொருந்தும் பாரி
லுவமையிலாத் தவமுனிவீ ருகங்க டோறு
முண்மையுண்மை சிவனாணை யுண்மை யாமால். (18)

யாதொருநா ளொருபொழுதி லொருகா லுற்றோ
ரியாதொன்றாற் றீர்த்தமிவை பத்தின் மூழ்கிற்
சீதரனு மவன்றிருமா லுந்தி பூத்த
திசைமுகனு மவனிருவர் செங்கை கூப்பு
மாதொருபா கனுமவனே யவன்மே லெய்தும்
வரத்தினுக்கும் வரம்புளதோ வரிநாண் பூட்டிப்
பூதரம்வாங் கியசிவனே யல்லா லன்னோன்
புகழளவிட் டெவராலும் புகலொ ணாதே. (19)

வேறு.

இன்ன வச்சிர வனத்திடை யாலயத் தென்றுந்
தன்னி கர்த்தவீ சானதிக் குளதொரு சபையின்
முன்னு மன்புறு பதஞ்சலி தொழத்தமிழ் முனிக்காப்
பொன்னின் வார்கழ லெம்பிரான் றிருநடம் புரியும். (20)

அருத்தி கூருமத் தலமுல கேழினு மதிகம்
பொருத்த மாமுக நான்கினு முறைமுறை பொதிய
மருத்து வாவும யேந்திர புரமயன் புரமாம்
விருத்த காசிதென் பழம்பதி யெனப்பெயர் மேவும். (21)

17. வரியுழுவையதள்-வரிபொருந்திய புலித்தோல். குரோசம்-கூப்பிடுதூரம். பாதயோசனை-கால்யோசனை. தொட்ட-தோண்டிய.

19. சீதரன்-விட்டுணு. திசைமுகன்-பிரமன். பூதரம்-பொன்மலை. வாங்கிய-வளைத்த.

20. தமிழ்முனி-அகத்தியமுனி.

21. அருத்தி-அன்பு. கூரும்-மிகும். உகம்-யுகம். மருத்து-காற்று. வாவு-தாவும்.

வனமு கம்மகிழ் வனமெனப் பலபெயர் வாய்ந்த
வினிய புண்ணிய வடிவமாம் பழம்பதி யெய்தி
மனத நிந்தறி யாதொரு கணமயண் வதிந்தா
லனக னுங்கவன் வேண்டிய வரமெலா மளிக்கும். (22)

ஆவின் மேல்வருஞ் சிவனல தனந்தனு மனந்த
நாவி னுலுமிவ் வணமென விதன்வள நவிலன்
மேவு மாயிர முகத்தினு மரிதருள் விளைத்த
சீவன் முத்தர்வா ழுப்பதி திருப்பழம் பதியே. (23)

## தலமகிமைச் சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 129.

---

## 5-வது இந்திரச் சருக்கம்.

அரந்தை கூர்விட யங்களிற் றம்புல னடுத்துப்
பரந்த நெஞ்சற வொருப்படும் பண்ணவ முனிவீர்
வரந்த ருந்தல மகிமையீ தெனமதிச் சூதன்
புரந்த ரன்றுறி சறப்பணி திருக்கதை புகலும். (1)

தலத்தின் வாய்மைகேட் டுளமகிழ் நைமிசத் தவத்தோர்
புலத்தி னுலுயர் சூதனை வாழ்த்தினர் புகல்வார்
மலைத்த சாபமு மேதுவுந் துரிசற வணங்கி
நலத்தை இந்திரன் பெற்றதும் புகல்கென நவின்றார். (2)

குவல யத்தெவர் கேட்பினு மரியமுக் குறும்பி
னவல நீக்கிமெய்ஞ் ஞானவீ டருள்கதை யீதாற்
சுவலு றும்படர் சடைத்தவ முனிவிர்கா டொழுது
கவலு றுவகை கேண்மினென் றம்முனி கழறும். (3)

---

22. அநகன்-கடவுள்.

23. ஆ-இடபம். அனந்தன்-ஆதிசேடன். ஆயிரமுகம்-பலதுறை.

1. அரந்தை-துன்பம். புலன்-அறிவுடைய இந்திரியம். அஃதாவது மெய் வாய் கண் மூக்கு செவியென்பன. ஒருப்படுதல்-ஒருவழிப்படுதல், புண்ணவமுனிவர்-தெய்வமுனிவர். புரந்தரன்-இந்திரன். துரிசு-குற்றம்,

2. புலம்-அறிவு. மலைத்த-மலையச்செய்த.

3. முக்குறும்பு-காமம் வெகுளி மயக்கம், அவலம்-துன்பம், சுவல்-பிடர், கழறும்-கூறுவான்.

அரம்பை மங்கையர் நடித்திட விருபுறத் தமரர்
நெருங்கி வந்தடி பணிந்தெழூஉ தேத்தினர் நிற்பக்
குரும்பை மென்முலைச் சசியுடன் குருமணித் தவிசி
னிருந்து வானுல களித்தரு ளிந்திர னென்பான். (4)

பண்டு தொல்வினை வசத்தினுற் சுரிமுகப் பணிலத்
தெண்டி ரைப்புவி வளமறி குவனெனச் சிந்தித்
தண்டர் யாவருஞ் சூழ்தர வாடக வயிர
வண்டி ருங்கிய கொடிஞ்சியந் தேர்மிசை வந்தான் (5)

மங்கு றங்கிய மேருமந் தரமுதல் வரையுங்
கங்கை காளிந்தி முதலிய திருநதிக் கரையுங்
கொங்க லர்ந்தபல் சோலையும் வனங்களுங் குறுகி
யங்க ணுள்ளன வளந்தெரிந் தருந்தவர்ப் பணிந்தான். (6)

புனித முத்தமு மம்பொனு மன்றிவான் பொதும்பர்க்
கனிமு கந்தெறி வெண்டிரைக் கௌதமைக் கரையின்
முனிவர் வாழ்ந்திடக் கௌதம னருந்தவ முயனு
மினிய வாச்சிர மந்தனைக் கண்டவ ணிறுத்தான். (7)

அலைநெ டுங்கடற் றிருவுடன் வருமக லியையைக்
கலைபி ரிந்தெழும் பிணையென வெதிர்வரக் கண்டான்
சிலைநெ டுங்கணை வேடன தாணையாற் செறிமால்
வலைபு குந்தன னிந்திர னெமொரு மடங்கல். (8)

4. குரு-நிறம்.

5. சுரிமுகம்-சங்கு. பணிலம்-வலம்புரிச்சங்கு. தெண்டிரை-சமுத்திரம். ஆடகம்-பொன். வண்டில்-உருளை. ஆடகவயிரவண்டில் தாங்கிய கொடிஞ்சியந்தேர்-பொன்னினுலும் வயிரத்தினுலும் உருளோடு பொதியப்பெற்ற மேன்மொட்டையுடைய அழகியதேர்.

6. மங்குல்-மேகம். கொங்கு-வாசனை.

7. பொதும்பர்-சோலை. கௌதமை-கோதாவரி. இறுத்தான்-தங்கினுன்.

8. அலைநெடுங்கடற்றிரு-இலக்குமி. இது இலக்குமி போலும் அழகைக்குறித்தது. கலை-ஆண்மான். பிணை-பெண்மான். வேடனது என்பதை வேள்தனது எனப்பிரித்துக்கொள்க. வேள்-மன்மதன். மால்-மயக்கம். மடங்கல்-சிம்மம்.

ஆங்க ணுயிர மிருடிபன் னியருட னவளும்
பாங்க ரோங்கிய நதிபுகுந் தினியநீர் படிந்து
வாங்கு சிற்றிடைத் துகில்புனைந் தணிபல மருவுங்
கோங்க ரும்பன குவிமுலைக் குங்குமங் கோட்டி. (9)

செம்பொன் வல்லியு மன்னமுங் கற்பகச் செழும்பூங்
கொம்ப ரும்மென வவனுறு மளவுநேர் குறியா
விம்பர் நின்றிடு மிந்திரன் பரிசன விமையோர்
வெம்பு வாம்பரித் தேரெலாம் வான்புக விடுத்தான் (10)

வரவ றிந்திவண் செயுஞ்செய லறிந்திலன் வரம்பில்
பரவை யன்னதோர் மோகவா ரிதியிடைப் படிந்தான்
விரகி ஞலக வியைநலந் தோய்தர விடியா
விரவை வேண்டியிந் திரனுருக் கரந்தன னிருந்தான். (11)

இறுத்த வன்கொடுங் கருத்தினைக் கதிரவ னெண்ணி
மறுத்து வேலையிற் புகுதர வந்தநள் ளிருள்வாய்க்
குறுத்த முட்கருங் காற்கருஞ் சிறையுளிக் கொடுவாய்
கறுத்த வன்கொடி வடிவெடுத் தனன்சசி கணவன். (12)

கொடிய தாகிய கொடியவன் கோதமன் றுயில்கூர்
நெடிய பன்னசா லையின்மருங் கடுத்திழி நினைவாற்
கடிய வன்குரற் காட்டலுங் கண்மலர் விழியா
விடியும் வைகறை யென்றெழுந் தனன்முனி வேந்தன். (13)

எழுந்த மாதவன் பரம்பொரு டனையுளத் தெண்ணி
யழுந்து மஞ்செழுத் தோதினன் கோதமை யருகிற்

---

9. வாங்கு-வளைதல். கோட்டி-பூசி.

10. வல்லி-கொடி. கொம்பர்-கொம்பு. இம்பர்-இவ்வுலகம். வெம்பு வாம்பரி-கோபத்தோடுதாவுங்குதிரை. வான்-தேவவுலகம்.

11. பரவை-சமுத்திரம்.

12. மறுத்து-வெட்கி. நள்-நடு. குறுத்த-குறுகிய. கொடி- காக்கை சசிகணவன்-இந்திரன்.

13. கொடியதாகிய கொடியவன்-காக்கையாகியகொடியவன். அது பகுதிப்பொருள்விகுதி. கோதமன்-கௌதமன். விழியா-விழித்து.

செழுந்த னிக்குசை தண்டுகுண் டிகைகொடு செல்ல
விழிந்த விந்திரன் கோதமன் றிருவுரு வெடுத்தான். (14)

புனித னாங்ககல் பன்னசா லையினகம் புகுந்து
தனியி ருந்தரு ளகலியை தனதடந் தழுவி
யினிய தெள்ளமு தூற்றிருந் தொழுகிய விதழ்ச்செங்
கனிய ருந்தினன் றொடுத்தனன் பலபல கரணம். (15)

கைத்த லங்கொடு புடைப்பன வருடுவ கனிவாய்
வைத்த ருந்துவ மணிவிரல் சுழல்வன வுகிர்க
டைத்தி டும்படி யழுத்துவ முதலிய சரச
வித்தை செய்திடு மன்னவன் பலநலம் விளைத்தே. (16)

வந்திட வாயிதழ் வெளுத்திட விரக
மொழித ளர்ந்திடக் கருங்குழ லவிழ்ந்திட முலைகள்
குழிப டும்படி வரையகங் குளித்திடக் குறுவேர்
பொழித ரக்கொடி யிடையொடு சுகநடம் புரிந்தான். (17)

அன்ன லீலைசெய் விரகினாற் கற்புறு மறிவா
லின்ன னிந்திர னென்றறிந் திடுமக லியையுங்
கன்ன லஞ்சிலை வேள்கல வியிலுளங் களித்து
மன்னு மெண்புளு முழங்கிடப் பரவச மானாள். (18)

ஏல மாநிதி வேண்டினோர் புதையல்கண் டெடுத்தாற்
போல வெய்திய புணர்ச்சியி லிருவரும் பூமான்
பால னாகம முறைவிளை யாடினர் பரிவாற்
கூல வார்புன லாடுவான் கோதமை குறித்தே. (19)

வேறு.

அரையிருள் யாமத் தகன்றகோ தமனு
மரும்புன றுயிலுவ தறிந்து

---

14. கோதமை-கோதாவிரி. குசை-தெற்பை.
15. இதழ்-உதடு. கரணம்-கலவித்தொழில்.
16. புடைத்தல்-ஒற்றுதல். வருடுதல்-தடவல். உகிர்-நகம்.
17. வரை-விரலிறை. அகம்-உள். குளித்திட-பதிய.
18. முழங்கிட-ஒலிக்க.
19. ஏல-பொருந்த. பூமான்பாலன்-இலக்குமி மகனாகிய மன்மதன். பரிவு-அன்பு. கூலம்-கரை. கூலவார்புனல்-கரையினையுடையநதி.

கரைமிசைப் படர்வா னெண்ணினன் ஞானக்
கண்ணினு லிந்திரற் கண்டா
னிரைவளை மகவா னிவனென வறிந்து
நீத்தில னென்பது நினைந்தான்
விரைவினிற் பன்ன சாலைபுக் கமளி
மேலிரு வோரையும் வெகுண்டான். (20)

கொடுஞ்சிலைப் புருவ நுதலுறச் சிவந்த
கோதமன் யோனியொன் றினுக்கா
யடங்கிடா வாசை யாழியி லழுந்தி
யழிவுறுப் பெரும்பழி விளைத்தா
யிடம்பெறும் யோனி யாயிரம் பெறுக
வெனக்கடி திட்டசா பத்தா
லுடம்பெலாம் யோனி யானவிந் திரனு
முவரியில் வெள்கின னொளித்தான். (21)

புரந்தரன் கடலின் மறைந்திட வானம்
புரந்திடு மரசிலா மையினல்
வரம்பெறு மசுரேந் திரனெனுங் கொடிய
மன்னவ னாணையின் வசத்தாற்
பரந்தெழுங் கிரணம் பரப்பிய பரிதி
பாய்திரைப் பரவையிற் படிய
நிரந்தர மாய்வந் திருண்டகங் குலைப்போ
னிசிசர ருலகெலா நிறைந்தார். (22)

தானவ ரரசன் வானவர் தம்மைத்
தனித்தனி துரந்துமூ வுலகுங்
கோனிலை திரிந்து கொடுங்கோலை புரியுங்
குறும்பினற் கருங்கட லுடுத்த

---

20. படர்தல்-செல்லுதல். நிரை-வரிசை. நிரைவளை யென்பது அன்மொழித் தொகையாய் அகலியையைக்குறித்தது. அமளி-படுக்கை.

21. கொடுஞ்சிலைப் புருவம்-கொடிய வில்லுப்போலும் புருவம். நுதல்-நெற்றி. உவரி-கடல். வெள்கினன்-நாணமுடையவனாகி.

22. புரந்தரன்-இந்திரன். புரந்திடும்-காத்திடும். பாய்திரைப் பரவை-வீசுகின்ற அலையினையுடைய கடல். படிய-மறைய. நிரந்தரம்-இடைவெளியில்லாமை. கங்குல்-இருள். நிசிசரர்-அசுரர்.

நானில முழுது மகந்தவம் பூசை
நல்லறந் துறத்தலிற் றுறக்க
வானவ ரிரங்கி யொருவழிக் குழுமி
வந்துதங் குருமருங் கடைந்தார். (23)

மற்றுள வுலக பாலர்த முடனே
வானவர் தேசிக னெய்தி
எற்றுதெண் டிரைநீர்ப் புளினவே லையினின்
றிந்திரா வருகவென் றழைப்ப
வுற்றிடும் யோனி வடிவினல் வெள்கி
யுடலெலாந் துகில்கொடு பொதிந்து
கொற்றவன் மகவான் பரவைவிட் டெழுந்து
குருசரண் சரணெனக் குறுகும். (24)

கட்புனல் பெருக்கித் திருவடி கழுவிக்
கரகம லந்தலை குவித்திட்
டெட்படு நாணுற் பணிந்துப சார
முரைத்திடு மும்பர்தங் கோவைத்
தட்பமென் கமலத் தார்புனை குருவுந்
தடங்கையாற் றழுவின னெடுத்தே
யெட்பக வன்ன துன்புறு வண்ண
மெண்ணுவ னஞ்சனீ யென்றான். (25)

குருவுமெய்ஞ் ஞானக் கண்கொடு நெடிய
கோதமன் கொடுத்ததென் றெண்ணி
யருமறை முனிவர் சாபவெந் தீயை
யாற்றுவ தரிதரி தந்தோ
கருதரு மாசு கழுவுமா றிந்தக்
கண்ணுதற் பூசனை யென்னு
மொருநெறி யல்லால் வேறிலை யென்று
னும்பர்கோன் வணங்கமே லுரைப்பான். (26)

---

23. தானவர்அரசன்-அசுரேந்திரன். துரந்து-துரத்தி. கருங்கடலுடுத்தநானிலம்-கடல்சூழ்ந்த பூமி. ஒருவழிக்குழுமி-ஓரிடத்திற்கூடி.

24. வானவர்தேசிகன்-வியாழகுரு. எற்றுதல்-எறிதல். புளினம்-மணற்குன்று. சரண்இரண்டனுள்முன்னையது பாதம், பின்னையதுபுகலிடம். குறுகுதல்-சேர்தல். எட்பகவன்னதுன் புறுவண்ணம்-எள்ளின்பிளவுபோன்ற துன்புமுறுதபடி.

அங்கணன் பூசை புரிவதெங் ஙனமென்
றுய்ந்திடிற் காலங்கண் மூன்றுஞ்
சங்கரன் வாழு நித்திய மான
தலத்தினிற் புரிகவத் தலமு
மெங்குள தென்னி லியம்புவன் கேண்மோ
வெவ்வுல கினுமிணை யில்லாத்
துங்கமாய் ஞான பூமியாய் வேத
சொரூபமா யநாதியாய்த் தோன்றும். (27)

எழுதருந் தலத்தி னியற்றினர்க் கல்லா
லெய்துதற் கரிதரி ததுநம்
வழுதிதன் பாண்டி நாட்டிடைச் சிறந்த
வச்சிர வனமத னுப்பண்
முழுதுல கினுக்கு மூலமாய் வேத
முடிவதாய் மாலயன் முதலோர்
தொழுவதற் கெட்டாச் சுயம்புவாய் விளங்குஞ்
சோதிமா லிங்கமொன் றுளதால். (28)

சுந்தர விலிங்கந் தனைநினைந் தாலுந்
தொலைவரும் பாதகந் தொலையுஞ்
சிந்தையி லெண்ணும் வரமெலா மெய்துந்
திகழ்பரா பரையெனுஞ் சிவையு
மெந்தைதன் னிடப்பால் வீற்றிருந் தருளு
மித்தலத் தெய்துவ மென்று
நந்துறு மன்பாற் புகன்றவன் றதிப்பப்
புனிதன்மற் றவனொடு நடந்தான். (29)

தேசிக னுரைத்த வாசகம் வினவிச்
சிவத்தினை யுளத்திடை யிருத்தும்
வாசவ னுயர்ந்த சுரகுரு வோடும்
வச்சிர வனத்தினுள் வருவா

---

27. துங்கம்-உயர்வு.

28. எழுதரல்-உயர்தல். இது ஓர் சொல். வழுதி-பாண்டியன். வச்சிரம்-சதுரக்கள்ளி. நாப்பண்-நடு.

29. சிவை-அம்பிகை. நந்துதல்-வளர்தல். புனிதன்-இந்திரன்.

ஞசிலாக் கங்கை யாதிய நதிக
ளாடினன் ருனங்க ளாற்றி
வீசுபூங் கைலை முதலிய தலங்கள்
விதிமுறை பணிந்திவண் மீண்டான். (30)

மீண்டவிந் திரனும் போகமுத் திகளில்
விரும்பிய தரும்பழம் பதியைக்
காண்டலுங் களித்துப் பாருற வணங்கிக்
கைகளுஞ் சென்னிமேற் கூப்பி
யாண்டநா யகன்வா ழாலயத் தெய்த
வாங்குறு மகத்திய முனிவ
னீண்டிய விமையோர் வாசவ ஞசா
னிவர்வர மகிழ்ந்தன னிதயம். (31)

தண்டமிழ் முனிவன் பீதகன் முகமன்
சாற்றிடச் சாற்றின னிமையோ
ரண்டர்கோன் வணங்க வாசிகள் புரிந்தா
னப்பதி யடைந்திடு மளவின்
மண்டுமா நந்த முற்றவா சவனு
மலயமா தவவுன மலர்த்தாட்
புண்டரீ கத்தைத் தொழப்பெறும் பேறென்
புண்ணிய மெனமுனி புகலும். (32)

கள்ளவிழ் புதுப்பூங் கற்பக நீழற்
காவல கேட்கவிவ் வனத்தி
னுள்ளுறை சிவனை நினைக்குமு னினைத்த
வுறுதிக ளனைத்தையு முதவும்
வள்ளலை யிந்நா ளருச்சனை புரிந்து
வரம்பல பெற்றன னதன்பின்
புள்ளொடு விலங்கு பலவுமிவ் வனத்துப்
பூசனை புரிந்தவின் றளவும்- (33)

---

30. வினவி-கேட்டு. வாசவன்-இந்திரன். இவண்மீண்டான்-இவ்விடத்திற்குத்திரும்பினன்.

31. பழம்பதி-திருப்புனவாயில். ஈண்டிய-நெருங்கிய.

32. பீதகன்-வியாழன். மண்டுதல்-நிறைதல். மலயமாதவ-பொதியமலைக்குரியமாதவனே. உன-உன்னுடைய.

மதிதவழ் கனக மந்திர மியற்றி
வாதனை யருச்சனை புரிந்து
துதிசெயி னினைத்த சித்திக ளுண்டாந்
தொலைக்கரும் பாதகந் தொலையும்
விதிமுறை யாசா னருளிய வண்ணம்
விரும்புக வென்றிவை விளம்பி
யதிர்விடைப் பாகன் றனையுளத் திருத்தி
யருந்தமிழ் முனிவனுங் கமர்ந்தான். (34)

வேறு.

கும்ப மாமுனி கூறிய வாறருஞ்
செம்பொ னம்புயச் சேவடி போற்றிநின்
றிம்பர் யானுய்யு மாறுரை யென்னலு
மும்பர் நாயகற் கந்தண னோதுவான். (35)

மூத்தொ ழிற்புரி காலங்கண் மூன்றினு
நித்தி யப்பொரு ளாகி நினையுமுன்
பத்தர் கோடி பவந்தொலைத் தெண்ணிய
சித்தி நல்கு சிவலிங்க மீதரோ. (36)

சீரு றும்பணி செய்திந் நகர்க்குநின்
பேர ணிந்தொரு தீர்த்தநின் பேரினு
லாருஞ் சன்னிதி முன்னமைத் தாடுவாய்
நேரு மன்பர்க் கருளு நிமலனே. (37)

வேய்ந்த முல்லை விமலைக்கு மெந்தைக்கு
மாய்ந்த பொற்கச் சணிமுலை யாளென்றும்
வாய்ந்த மாலிங்க மென்றும் பெயர்வகுத்
தேய்ந்த பூசை விழாவு மியற்றுவாய். (38)

எனவு ரைத்த குருவை யிறைஞ்சியே
நினையு மிந்திர னைந்தரு நீழல்வா

34. மந்திரம்-ஆலயம்.
35. இம்பர்-இவ்விடத்து. பொன், அந்தணன் இரண்டும்-வியாழகுரு.
36. அரோ-அசை.
38. வேய்ந்த-அணிந்த. விமலை-அம்பிகை. எந்தை-சிவபெருமான்.

முனகன் முன்வர் தடிதொழு தாங்கவன்
மனத றிந்தனன் வானவக் கம்மியன். (39)

ஆழ்ந்த வாரி யகழியு மந்நகர்ச்
சூழ்ந்த மேரு மதிலும்வெஞ் சூரியன்
வாய்ந்த மாமணி வீதியும் வான்வழீஇ
வீழ்ந்த வன்ன விதுமணி வீதியும். (40)

மாட வீதியு மாதொரு பாகன்றே
ரோடும் வீதியு மற்று முலாவரு
மேடை வீதியு வீடுந் துகிற்கொடி
யாடு காவணம் யாவு மமைத்தனன். (41)

போற்று மாமதி லேந்தும் பொருப்பெனத்
தோற்று கோபுர வாயிலுந் தூயபொன்
னூற்றுக் காலணி மண்டப மும்நுவ
லாற்றல் சேரரி யாறுகாற் பீடமும். (42)

உவமை யின்றி யுயர்ந்த வுமையவள்
சிவனு மன்னுஞ் சினகர மாதியுந்
திவள் பசும்பொன் குழைத்தணி சித்திர
மவைய னைத்து மமைத்தபி னண்டர்கோன். (43)

ஏவ லாற்பொற் குடங்கல சம்மிசை
மேவு மாமணி தூபம் விரிசுடர்
தாவி றீபமுந் தட்டஞ் சமைந்தபா
லாவி யுன்ன துகிலணி யாதியும். (44)

சிந்தை கூரச் சிறந்த விழாவயர்
நந்தி நாயக னூலேந்தொ டைந்தெனு

---

39. ஐந்தரு-அரிச்சந்தனம், கற்பகதரு, சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன. வானவக்கம்மியன்-தேவதச்சன்.

40. விது-சந்திரன்.

41. துகிற்கொடி-சீலைக்கொடி.

42. நுவலாற்றல்-சொல்லும்வலிமை.

43. சினகரம்-கோவில். திவள்-விளங்குகின்ற.

44. மிசை-உயர்ச்சி. தாவில்-கெடாத. பாலாவி-பாலாடை

மொர்தை லீலைத் திருவுரு யாவையுந்
தந்து போற்றிய வானவர் தச்சனே. (45)

உள்ளத் தன்பொடு நோக்கிய வும்பர்கோன்
வள்ளற் காங்கொரு வார்கணை யெல்லையிற்
றுள்ளிச் சேலுக ளுர்த்தமுந் தொட்டதற்
கெள்ளற் பாடிறன் பேருமிட் டானரோ. (46)

தண்மை யாமத் தடம்புனல் மூழ்கிமேல்
வெண்மை நேத்திரஞ் சூழ்ந்தனன் வெண்பொடி
வண்மை கூரக்க மாலை தரித்துளத்
துண்மை யஞ்செழுத் தோதின னும்பர்கோன். (47)

அருள்சு ரந்தக ணம்பிகை நாயகன்
பொருவில் பூசைக்கு வேண்டும் பொருளெலாந்
தருவி னீழ லிமையவர் தாமெடுத்
திரும ருங்குற வாலயத் தெய்தினன். (48)

## வேறு.

ஆலய மமைத்த தபதியர்க் கினிய
வருள்புரிந் தண்டர்கள் பெருமான்
மேலைநூ லாய்ந்து பீதக னுரைத்த
வேலையின் விதிமுறை புரிந்தான்
மாலய னறியாக் கடவுளம் பிகைக்கு
மற்றுள தேவர்க டமக்கும்
கோலமந் திரத்தாற் றாபித மாம்பொற்
குலவிய கும்பாபி டேகம். (49)

---

45. கூர-அன்புமிக. விழாவயர்-திருவிழாக்கொள்கின்ற. நந்திநாய கன்-சிவபெருமான்.

46. வார்கணை-நீண்டஅம்பு. சேல்-மீன், உகள் தீர்த்தம்-வினைத் தொகை. தொட்டு-தோண்டி. எள்ளல்-இகழல். எள்ளற்பாடுஇல்தன் எனப்பிரிக்க.

47. வண்மைகூர்அக்கமாலை-வளப்பமிக்கஉருத்திராக்கமாலை. நேத் திரம்-பட்டாடை.

48. தருவினீழல்இமையவர்-தேவலோகத்துத்தேவர்கள்.

49. தபதியர்-தச்சர். பீதகன்-வியாழன். கோலம்-அழகு. அபிடே கம் புரிந்தான் என இயையும்.

மருவுமா பூசை புரிகுவான் மகவான்
வள்ளலுக் கெண்ணெய்மாக் காப்போ
டிருமைகூர் மஞ்ச ணெல்லிபா றயிர்நெய்
யிளநீர் சருக்கரை நறுந்தேன்
கருதுமஞ் சமிர்த மாங்கனி வாழைக்
கனிபலாக் கனியெலு மிச்சை
தருங்கனி நன்மா துளங்கனி தமரத்
தங்கனி யொடுகழைச் சாறு. (50)

தக்கவா றுதவுங் கவ்வியங் நபனஞ்
சகத்திர தாரைசந் தனத்தின்
மிக்கபூங் குழம்பு விரைக்கருப் பூரம்
விரவுசுத் தோதகம் பதங்க
டொக்கமந் திரச்சங் கருக்கிய மாட்டித்
துகில்புனைந் தினியசாந் தணிந்தே
யக்கணி யார நவமணி மாலை
யணிமணி மகுடமு மணிந்து. (51)

மல்லிகை முல்லை சம்பகஞ் செருந்தி
மயிலைபைங் குவளைவா ரீச
மல்லியங் கழுநீ ரலரிபுன் னாக
மாத்திவில் லுவமலர் கொன்றை
புல்லிய தோடு மாலிகை யிண்டை
புனைந்துதீங் கருனையாற் பொலிந்த
நல்லமு தடைக்கா யிவைநிவே தித்து
நறைகமழ் தூபமு நல்கி. (52)

திருவளர் பெரிய தீபமு நாக தீபமும் விடபதீ பமுஞ்சீர்
தருமடற் புருட தீபமுந் தகழிச் சகத்திர தீபமு மேந்தி

50. இருமைகூர்-பெருமை மிக்க. கழை-கரும்பு.

51. ஆறுதவுங்கவ்வியம்-பஞ்சகவ்வியம். விரை-வாசனை. உதகம்-தண்ணீர். பதங்கள்தொக்கமந்திரச்சங்கு-பதங்களின் கூட்டத்தாலாகிய மந்திர செபஞ்செய்யப்பட்ட சங்கு.

52. மயிலை இருவாட்சி. வாரீசம்-தாமரை. தீங்கருனை-இனிய பொரிக்கறி. அடைக்காய்-தாம்பூலம். நறை-வாசனை.

யரியகண் ணாடி குடைமற்றை விசிறி யாலவட் டம்பணி மாறி
யிருமைகூர் பூதி புனைந்துகர்ப் பூர மெரிகதிர்த் தீபமுங்காட்டி. (53)

மும்முறை சூழ்ந்து நிலனுற வணங்கி
முடிமிசை யிருகரங் கூப்பி
யெம்மையா ளிறைவன் றிருவுள மகிழ
விருக்கொடா கமபுரா ணத்தாற்
செம்மையிற் போற்றி யாதியாஞ் சைவச்
செழுமறை யந்தணர்க் காங்கே
பொம்மென வாடை யணிநிதி சுரபி
புவிமுதற் றானமும் புரிந்தான். (54)

புரிந்தபி னுமையாள் கணபதி குகனைப்
பூசைசெய் தாலயத் தாங்காங்
கிருந்தவே வரையும் விதிமுறை யருச்சித்
தினியநல் லன்புடன் வணங்கி
யுரம்பெறு நந்தி பின்னிருந் துள்ளத்
தூயவெழுத் தைந்தினை யுன்னி
வரந்தருஞ் சோதி லிங்கத்தின் முன்னர்
வந்தனன் சசிமண வாளன். (55)

மனாதிகட் கெட்டாப் பொருளெதிர் காண
வளர்ந்திடுந் திறத்தினால் வடிவா
லனாதியா லுயர்மா விலிங்கமென் றொருபே
ராவலோ டணிந்தன னகிலந்
தனாத ரத்திற் றரித்தினி தீன்றுஞ்
சாய்தராத் தடமுலை யுமையாட்
கெனாதுயிர் தழையக் கச்சணி முலையா
ளெனப்பெய ரிசைத்தன னிறைஞ்சும். (56)

வாசவன் கரங்கண் மௌலிமேன் முகிழ்ப்ப
மலர்க்கணீர் சொரிதர மனதி

---

53. பணிமாறி-இரட்டித்து. இருமைகூர்பூதி-இம்மை மறுமைப் பயனிரண்டையுந்தரும் விபூதி.

54. இருக்கு-வேதம். பொம்மென-விரைவுக்குறிப்புச்சொல். சுரபி-காராம்பசு.

லீசனை யெண்ணி யெழுந்த வானந்த
    வேலையிற் படிந்திடு மெல்லைப்
பூசனைக் கிரங்கும் புண்ணிய னெருநற்
    புனிற்றிளங் கன்றினை யுன்னி
நேசமோ டெய்துஞ் சுரபியி னிமைய
    நேரிழை யொடுமெதிர் நின்றான். (57)

ஐந்தெழுத் துருவா யனுதியாய்ச் சுருதி
    யரியய னறிவதற் கரியோன்
சந்திர கலையுந் ததும்புவா னதியுந்
    தவழ்சடை முடியெதிர் தோன்றச்
சுந்தர வரையா மீரிரு புயமுந்
    தோன்றமால் விடைமிசைத் தோன்றி
யிந்திரற் கினிய வமுதவாக் களித்தா
    னிமையவர் கணம்புகழ்ந் தேத்த. (58)

யாவரு முன்னை யாயிரங் கண்ண
    னெனவழைத் திடுகவென் றருள்சொற்
றேவர்கள் கோமான் செவியகம் புகுந்து
    தெள்ளமு தெனவுளந் திளைப்பத்
தாவினன் குதித்தான் மதுரவாய் மொழியுந்
    தளர்ந்தன னடித்தனன் சரித்தான்
பாவையோர் பாக னருட்கடற் படிந்தான்
    பாருறப் பன்முறை பணிந்தான். (59)

விண்கதி ரவரோ ராயிர ரென்ன
    விளங்கிய மேனியின் வனப்பைக்
கண்கொடு முகந்தா னறிந்துள முகந்தான்
    கடவுள்பொற் பாதபங் கயத்திற்
றெண்கட லென்ன விருகணீர் சொரிந்தான்
    சிர்மயிர் சிலிர்த்துடல் பனைத்தான்

57. வாசவன்-இந்திரன். மௌலி-முடி. வேலை-சமுத்திரம். நெருநல்-நேற்று. புனிற்று-இளமை. சுரபியின்-பசுப்போல. இமையநேரிழை-உமாதேவியார்.

58. மால்-பெரிய. திளைப்ப-அனுபவிக்க.

பண்கவர் மொழியாற் சச்சிதா னந்த
பரவச மானவன் பரசும். (60)

அத்தனே போற்றி யகில காரணமா
மம்பிகை பாகனே போற்றி
முத்தனே போற்றி யைந்தொழி வினையு
முடித்திடு மூலமே போற்றி
நித்தனே போற்றி யறிவினுக் கறிவாய்
நிறைந்தரு ணிமலனே போற்றி
மத்தனே போற்றி வச்சிர வனத்தின்
வாழுமா விலிங்கமே போற்றி. (61)

பிள்ளைவெண் மதியுங் கங்கையும் புனைந்த
பிஞ்ஞகா போற்றிமா மறைக்கு
நள்ளுமாய் முதலா யந்தமாய் நிறைந்த
நாதனே போற்றியெவ் வுயிர்க்கு
முள்ளுறை யுயிராய் நின்றினி தளிக்கு
மொருவனே போற்றிநற் கருணை
வள்ளலே போற்றி வச்சிர வனத்தில்
வாழுமா விலிங்கமே போற்றி. (62)

கரதலத் தமர்ந்த நெல்லியங் கனியிற்
கதிதருங் கடவுளே போற்றி
புரமொரு மூன்றும் பொடிபட நகைத்த
புண்ணிய முதல்வனே போற்றி
சரதமா யெண்ணு மெண்ணெயு மென்னச்
சராசர மனைத்தினு நிறைந்த
வரதனே போற்றி வச்சிர வனத்தில்
வாழுமா விலிங்கமே போற்றி. (63)

கருத்தனே போற்றி பிறவிநோய் மருந்தாங்
கடவுளே போற்றியா னந்த

---

60. பனைத்தான்-பூரித்தான். பண்கவர்மொழியால் பரசும் என இயையும்.

61. மத்தம்-ஊமத்தைமலர்.

62. நள்-நடு.

63. கனியின்-கனிபோல. எண்-எள்.

திருத்தனே போற்றி யேனமா யனமாய்
நின்றவ ரிருவரு மறியா
வொருத்தனே போற்றி புவிபுன லனல்வா
னுருவமா யருவமா யுரையு
மருத்தனே போற்றி வச்சிர வனத்தில்
வாழுமா விலிங்கமே போற்றி. (64)

சங்கரா போற்றி தற்பரா போற்றி
தாணுவே போற்றிசாட் சியதா
மங்கணா போற்றி யாலமுண் டெலகை
யளித்தரு ளையனே போற்றி
யிங்குவந் தாள வெண்விழிக் கெதிரா
வெழுந்தரு ளீசனே போற்றி
மங்கள நிறைந்த வச்சிர வனத்தில்
வாழ்மகா லிங்கமே போற்றி. (65)

வேறு.

என்றுபல முறைபோற்றி யடிபணிந்த
விந்திரனை யிலங்கு வெள்ளிக்
குன்றனைய விடையுகைத்துக் கோதையுட
னெழுந்தருளுங் கோமா னேரே
சென்றுதிரு முடிதுளக்கிச் செழுமறையா
யிரமலர்ந்த செய்ய வாக்கா
னன்றுநனி நீபுரிந்த வருச்சனைதோத்
திரமெமக்கெந் நாளு மென்றான். (66)

மன்பதைவா னவரேனோர் யாரொருவ
ரித்துதியால் வாழ்த்தி லன்னோர்
துன்பமுழு வதுமகற்றி நினைத்தவரங்
களுங்கொடுப்பன் றொழுது போற்றி
யன்பொடுநீ யிவண்வேண்டும் வரங்கேட்பா
யெனப்பணிந்தவ் வண்டர் கோமான்

---

64. பிறவிநோய்-பிறவிநோய்க்கு. ஏனம்-பன்றி. அன்னம் அனமென இடைக்குறைந்தது. மருத்து-காற்று. அது கண்ணுக்குப்புலப்படாமையால் அருவும், பரிசிக்கப்படுதலால் உருவுமாயவாறுகாண்க.

66. விடையுகைத்து-இடபத்தில் ஏறி. துளக்கி-அசைத்து.

நின்பதமூ சனைவேண்டும் வேண்டுங்கினை
மறவாத நேய மென்றான் (67)

தந்தனமிவ் வரமின்னு மியாதுவேண்
டியதென்னத் தடங்கை கூப்பி
யிந்திரன்செஞ் சடைமோலிப் புனலாடுந்
திறம்வேண்ட வெம்மா னங்கிப்
புந்திமகிழ் திசையிலொரு பகழியெல்லை
தனிற்கமலப் பொய்கை மேவி
நந்துபுன லுருவாகி வாழ்கென்றான்
பணிந்துகங்கை நங்கை சொல்லும். (68)

அண்ணலே யுனதருளின் வபூ
மென்பாங்க ரடுத்தோர் தோய்ந்தோ
ரெண்ணரிய துயர்நீங்கி மறலிவத
னமுங்காணு திதயத் தெண்ணும்
வண்ணமெலா மெய்தவரு ளெனவேண்டி
வானதியவ் வாவி யெய்தக்
கண்ணுதலும் புரந்தரனைக் கமலவிழி
கொடுநோக்கிக் கருணை செய்வான். (69)

வம்பவிழ்கற் பகநீழன் மகபதியிச்
சிவகங்கை வாரி மூழ்கிப்
பைம்பொன்முத லியவாக வந்தணர்வேண்
டியதானம் பலவு மாற்றி
யம்புவியி னமக்குவிழா வியற்றியம
ருலகெய்தி யமர்வா யென்னச்
செம்பவள வாய்மலர்ந்த சிவபெருமா
னிலிங்கத்தே திரோத மானான். (70)

---

67. மன்பதை-மக்கட்கூட்டம். நேயம்-அன்பு.

68. சடைமோலி-சடைமுடி. புனல்-சடையிலுள்ளகங்கை. பகழி-அம்பு. நந்துபுனல்-ஆக்கந்தரும் நீர்.

69. பாங்கர்-இடம். மறலிவதனம்-யமனுடையமுகம். வானதி-கங்கை.

70. வம்பு-வாசனை அவிழ்தல்-விரிதல். திரோதம்-மறைகல்.

கண்களிக்க வெம்மானைக் காணநெடுந்
　　தவம்புரிந்த கடவுள் கோமான்
பண்களிக்கும் வண்டினஞ்சூழ் பைங்கமலச்
　　சிவகங்கை படிந்து வேத
னெண்களிக்குஞ் சுருதிமுதற் பலகலையுந்
　　தருமநெறி யெவையு மோங்க
மண்களிக்கு மனுமுறையி லெண்ணறுதா
　　னம்புரிந்தான் மறைவ லோர்க்கே. (71)

நித்தியபூ சையினூன மகலவருஞ்
　　சிறப்பியற்றி நிரம்பு முள்ளப்
பத்தியிலார் விருத்தர்பிணி யாளரா
　　லயமெய்தாப் பான்மை யோரு
முத்திபெறக் காட்சிதரு மெந்தைவிழா
　　வியற்றுதற்கு முன்னி முன்ன
மெத்திசையுங் கோடிப்பா னேவலரைக்
　　கடைக்கணித்தா னிமையோர் வேந்தன். (72)

வெங்கதிரோ னிடபமெய்தும் புனர்வசுவில்
　　வெண்மதிய மேவு நாளிற்
செங்கண்விடைக் கொடியேற்றி நாடோறு
　　மிருபோதுந் திருவீ திக்கே
மங்கையிடத் தானுரிய வாகனத்தி
　　லெழுந்தருளி மரகதப் பொற்
றுங்கமணித் தேரேறி வீதிவந்து
　　வந்தபினைத் தொக்கோ ரெல்லாம். (73)

சென்றுபடிந் தரியகதி பெறக்கொடுக்குஞ்
　　சிவதீர்த்தத் திருவி ழாவு
மொன்றியசை வாகமறை லோதுமா
　　புளிநடத்தி யும்பர் கோமா

---

71. வேதன்-பிரமன். எண்களிக்கும்-எண்ணமகிழ்ச்சியடைகின்ற. மண்-உலகம். மறைவலோர்-பிராமணர்.

72. நூனம்-குறை. சிறப்பு-திருவிழா. முன்னி-கருதி. கோடிப்பான்-அலங்கரித்தற்பொருட்டு.

73. வெங்கதிரோன்இடபம் எய்துதல்-வைகாசிமாசம். புனர்வசு-புனர்பூச நக்ஷத்திரம். தொக்கோர்-கூட்டத்தார்.

னென்றுமிறை வினையருச்சித் திடுமாதி
    சைவர்தமை யிருத்தி யாங்கே
குன்றிலுயர் பொதியமுனி குருவிவரைப்
    பணிந்துவிடை கொண்டான் மன்னோ. (74)

சிற்பரனைச் சூழ்ந்திறைஞ்சி விடைகொண்டு
    வானுலகிற் சென்று வெய்ய
மற்புரியு மசுரர்தமைச் சிவனருளாற்
    பொருதுவென்று வயிர பாணி
விற்புருவத் தரம்பையர்க ணடனமிட
    வரியணையின் மீதி லேறிக்
கற்பகநீ ழலிற்சசியோ டினிதமர்ந்து
    பொன்னுலகங் காக்கு மன்னோ. (75)

## இந்திரச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 204.

---

## 6-வது சதுர்முகச் சருக்கம்.

புந்தியுற நினைப்பவர்கேட் பவராங்க
    ணுவந்துகணப் பொழுது வாழ்வோர்
வந்தனைசெய் வாரரிய பவமகற்றும்
    வச்சிரக்கான் வளர்பெம் மானை
யிந்திரன்பூ சனைபுரிந்த திருக்கதைசொற்
    றிடுஞ்சூத னெம்பி ரானைக்
கந்தமல ரயன்சிருட்டி வினைப்பொருட்டா
    லருச்சித்த காதை கூறும். (1)

### வேறு.

ஈண்டு நைமிசத் திருந்தவ முனிவர்கா ளின்னும்
வேண்டும் வச்சிர வனத்திலோ ரருங்கதை வினவின்
மூண்ட பல்லுயிர்த் தாதையாம் வானவர் முதுவன்
பூண்ட தன்றொழில் மறந்தனன் பாற்கடல் புகுந்தான் (2)

---

74. மரபுளி-முறைப்படி.

75. பொருது-யுத்தஞ்செய்து. வயிரபாணி-வச்சிராயுதத்தைக்கை யிலுடைய இந்திரன்.

2. வானவர்முதுவன்-பிரமன்.

ஏய காலையிற் சயனடல் விசயனு மிருவர்
வாயில் காவல ராகமா மகள்புவி மகளுந்
தூய சேவடி வருடமுன் படுத்தறி துயில்கூர்
மேய மாறனைக் கண்டனன் பாப்பணை மீதில் (3)

பணிந்து வீழ்ந்தன னெழுந்தன னுளம்பதை பதைத்தான்
றணிந்த மெய்ப்புள கரும்பின னுளந்தழு தழுத்தா
னணிந்த தாமரைக் காடலர் கருங்கட லதுபோற்
றுணிந்த வெண்டிரை முகட்டுறை கடவுளைத் துதிக்கும். (4)

ஆதி நாயக போற்றிபல் லுயிரையு மளிக்கு
நீதி நாயக போற்றிநீ ணிறமலர்ப் பூவைச்
சோதி நாயக போற்றியென் றேத்தியச் சுருதிப்
போதி னாயகன் றுணைதாள் பணிந்துபின் புகலும். (5)

அந்த நாண்முதற் பழகிய சிருட்டியா னயர்ப்ப
வந்த காரண மியாதஃ தகற்றிடும் வகையென்
னெந்தை யென்றலு நகைத்தருள் விழியினா லெண்ணி
முந்தை நின்றநான் முகன்முகம் பார்த்தரி மொழியும். (6)

தேனு மாமறை தெளிந்திடுஞ் சதுர்முக செகத்தின்
மாறி லாக்கலை வாணிதன் கலவியின் மயக்கா
லாற ணிந்தரு ளண்ணலை யருச்சனை யாற்றும்
பேறி ழந்தனை சிவத்துரோ கத்தைநீ பெற்றாய். (7)

பரனை யர்ச்சனை புரிதிற மறந்தபா வத்தாற்
பிரம நின்றொழி லயர்த்தனை யிப்பெரும் பிழையவ்
வரனை யொத்தவ ரையும்விடா தரத்துரோ கத்தால்
விரகின் மூகையாய் மெலிந்தனன் வேற்படை விமலன். (8)

---

3. ஏய-புகுந்த. மாமகள்-ஸ்ரீதேவி. புவிமகள்-பூதேவி. அறிதுயில்-யோகநித்திரை. மாறனையென்பது மால்தனையெனப்பிரிக்கப்படும். மால்-விட்டுணு. பாப்பணை-சர்ப்ப சயனம்.

4. தாமரைக்காடு-ஆதிசேடனுடைய ஆயிரம்பணாமுடியைக் குறித்தது. கருங்கடலதுபோல் உறை கடவுள்-விட்டுணு. துணிந்த-தெளிந்த. வெண்டிரை-பாற்கடல்.

5. பூவை-காயாம்பூ. சுருதிப்போதநாயகன்-பிரமன்.

7. கலைவாணி-சரஸ்வதி. ஆறு-கங்கை.

8. விரகு-சமர்த்து. மூகை-ஊமை.

தூண்ட ருஞ்சுடர் மணிவிளக் காமுமை தூயோர்
தீண்ட ரும்புலைக் குலமக ளுருக்கொடு திகைத்தாள்
வேண்ட ருங்கொடுஞ் சிவத்துரோ கத்தினால் விண்பா
ராண்ட தக்கனுங் குலத்துட னிறுதியை யடைந்தான். (9)

உரிய தன்னுயிர்க் குயிரதாஞ் சிவத்தையுள் ளூன்று
வரிய பாதகத் தான்முடி வடைந்தவ ரநேகர்
கரிய விக்கடுந் துரிசினைக் கழுவிமேற் சருணை
புரிய வல்லவர் சிவனல திலையெனப் புகல்வான். (10)

வேத நாயக கேண்மதி மதிபுனை விமலன்
பாத பங்கய மீதுநா ளுபிரம் பதுமங்
கோத னுந்தினந் தோறனந் தொடர்மலர் குறைய
மாத வம்பெற வணிந்தன னென்விழி வனசம். (11)

வீழி மாநகர் தனில்விழி புனைந்திட வெள்ளைப்
பூழி யெம்பெரு மான்றகு வருண்மழை பொழியாப்
பாழி யம்புய வரைதவழ் பரிதியிற் பரிக்கு
மாழி தந்தனன் வேண்டிய வரம்பல வளித்தான். (12)

ஆற்று மெய்த்தவ மண்ணற னருச்சனை யதனாற்
றோற்றும் வானதி முதலிய புனல்களிற் றோயா
வேற்று டைப்பான் கைலையா தியதலத் தெய்திப்
போற்றி லெத்தலத் தெம்பிரா னுனக்கெதிர் புகுந்தான். (13)

ஆங்கு நின்பெய ரானொரு தீர்த்தமுண் டாக்கிப்
பாங்க ரோங்கிய திருப்பணி புரிந்துபற் பலவு
மோங்கு மாகம விதிப்படி பூசனை யுஞற்றி
வாங்கு சிற்றிடைப் பாகனை வாழ்த்தினை வருவாய் (14)

---

10. துரிசு-குற்றம்.

1.1 வனசம்-தாமரை.

12. வீழி-திருவீழிமிழலை. பூழி-புழுதி. வெள்ளைப்புழுதி-திருநீறு திருமேனியாதலைக்குறிக்கும். பொழியா-பொழிந்து. பாழி-கடல். பரிதியின்-சூரியன்போல. பரிக்கும்-தாங்கும். ஆழி-சக்கரம்.

13. வானதி-கங்கை. தோயா-தோய்ந்து. ஏற்றுடைப்பான்-இடபத்தையுடைய சிவன்.

14. உஞற்றி-செய்து. வாங்கு-வளைந்த.

என்று கூறிய திருநெடு மாறனை யிறைஞ்சி
யொன்று மன்பொடு விடைகொளு நான்முகத் தொருவன்
றன்றி ருக்கண மெவற்றொடும் வெள்ளியஞ் சாரற்
குன்ற மெய்துவா னடைந்தனன் கண்டுகை குவித்தான். (15)

காத மாயிர மாயிரங் கழித்தனன் கலந்தான்
பாத மாயிர மாயிரங் கையுடைப் பழைய
பூத மாயிர மாயிரம் போற்றிடும் பொருப்பில்
வேத மாயிர மாயிர மோதிய வேதன். (16)

கலந்து கண்ணுத லருச்சனைக் குரியன கைக்கொண்
டலர்ந்த சண்பக வனம்புடை சூழ்கயி லாயப்
பொலந்த ருஞ்சின கரம்புகுந் தாலமெப் பொழுது
மிலைந்த கண்டனைப் பூசனை புரிந்தனன் மீண்டான். (17)

பாரி லெய்திய நான்முகன் பரனுரை யிமகே
தார மேமுதற் சேதுவந் தத்துறு தலம்புக்
கார வெண்டிரைச் சுரநதி முதற்புன லாடி
ஈர நெஞ்சொடு மிறையருச் சனைபுரிந் தெழுந்தான். (18)

இவ்வ ணஞ்சிவ தலந்தொறும் விதிமுறை யிறைஞ்சி
மைவ ணக்களத் தெம்பிரான் வச்சிர வனத்தி
லைவ ணம்பெற வானவர் கம்மிய னமைத்த
கைவ ணங்கடிந் தெழுநிலைக் கோபுரங் கண்டான். (19)

எல்லை காண்டலுந் தண்டென வீழ்ந்தன னிறைஞ்சி
யொல்லை நான்முகன் கடந்தொரு கணமவ னுற்றோ
ரல்ல னீக்கிடும் வனமுக மெய்தின னங்கே
வல்லை யிற்சிவ கங்கையந் தடங்கரை வந்தான். (20)

கருது மன்பர்கள் பவந்தொலைத் திடுஞ்சிவ கங்கைப்
பெருகு தண்புனல் விதிமுறை யாடிய பிரம

17. பொலம்-பொன். சினகரம்-கோயில். மிலைந்த-அணிந்த.
18. சுரநதி-கங்கை. ஈரம் அன்பு.
19. ஐவணம்-பஞ்சவன்னம். கடிந்து-மேலோங்கி.
20. ஒல்லை-விரைவாக. வல்லையில்-விரைவாக.

னருட ருந்திரு நீறணிந் தருமறை யவர்பாற்
றிருவி னீடிய பற்பல தானமுஞ் செய்தான். (21)

வேத நூன்முறை செயுங்கட னாற்றியே தாந்த
வாதி யஞ்செழுத் தோதியாங் கமர்ந்தநான் முகன்முன்
மாத வம்புரி பலத்தினு லந்தர வாணி
பூத னாயக னருள்வழி யெழுந்திவை புகலும். (22)

வேறு.

மலரயன்வருக விந்த வனத்தொரு மாவி லிங்க
மலகிலா வுயிர்கட் கெல்லா மாவியா யனாதி யாகி
நிலவிய கால மூன்றி னித்திய மாப நேக
புலவரு முனிவர் யாரும் பூசனை புரிவ தாகும். (23)

மற்றுமே தியநீ கேட்க வாசவன் முதலு கத்தி
லுற்றதன் பெயரா லிங்கே யொருபுன ருட்டு வேண்டு
நற்றிருப் பணிக ளாற்றி நாதனைப் பூசித் தேத்திக்
கற்றவ ரெவரும் போற்றக் கற்பக நாடு கண்டான். (24)

வேறு.

மகபதி புரிந்த திருப்பணிக் கிலத்தை மாற்றிநீ வரம்பல பெறுவை
யகமகிழ் திருமால் சிவதரு மங்க ளனைத்தையு மாற்றியம் பிகைபாற்
புகவனைப் பூசை புரிகவென் றுரைத்த பதியிதிப் பதியையிவ் விரண்டா
முகமதிற் பிரம புரமெனப் பகர்க வோங்குமீ ரேழுல கோரும். (25)

இத்திற மருளும் வான்மொழி செவிநா விரண்டினு மமுதெனத் தேக்கச்
சித்தமுள் ளுருகி மெய்ம்மயிர் முகிழ்ப்பச் சிவானந்த வாரிதி திளையாக்
கைத்தலங் கூப்பி யெழுந்துகோ புரம்பூங் காவன மண்டபஞ் சிகர
மத்தலத் தெம்மா னாலய முழுது மம்பொனு லமைத்தபி னயனும். (26)

அம்பிகை பாகன் சன்னிதிக் கிதுசற் றங்கியந் திசைத்தென வமுதம்
பம்புறப் பிரம தீர்த்தமுண் டாக்கிப் படிந்தெழும் பண்ணவர் முதுவன்

---

22. அந்தரவாணி-ஆகாயவாக்கு.

24. கிலம்-அழிவு.

25 இரண்டாம் உகம்-திரேதாயுகம். ஈரேழுலகோரும் பகர்கவெ ன இயையும்.

26. வான்மொழி-ஆகாயவாக்கு. திளையா-மூழ்கி.

வெம்பிய வினைதீர் பூதிசா தனமும் விதிமுறை புனைந்துநற் சாந்தம்
வம்பறு மலர்மஞ் சனமுத லேந்தி மந்திரத் தெந்தைமுன் வந்தான். (27)

ஓதுமறைக் கெட்டா துயர்ந்தமா விலிங்க மூர்த்தியை யாகம விதியாற்
கதுமென வபிடே கித்திடை யிடையே கமழ்புகை தீபமுங் காட்டி
விதுநிகர் வெள்ளை நேத்திரஞ் சாத்தி விரிசுடர் மணிக்கல னணிந்து
மதுமல ரிண்டை தொடுத்ததே மாலை வாசிகை சரம்புனைஇ மலரோன்.

வேண்டுநெய் விரவு மன்னம்பா னீயம் வெள்ளடைக் காய்நிவே தித்தாங்
கீண்டிய தூப தீபமே முதலீ ரெண்வகைப் பூசனை யியற்றி
யாண்டகை தனையும் முறைவலம் வந்தட் டாங்கமு நிலத்துறப் பணிந்து
பூண்டவஞ் சலிதோய் சென்னியன் விழிநீர் பொழிதரத் தோத்திரம் புரி
[வான். (29)

வேறு.

சங்கரா தையல் பாகா தாணுவே சம்பு நாதா
வங்கணா வகண்டா னந்தா வமலனே யநாதி யான
வெங்களுக் கிறைவா வீசா விமையவர் தலைவா வென்றும்
பொங்கரா வணியு மாதிப் புனைவநா யகனே போற்றி. (30)

அண்ணலே யருண வெற்பே யையனே செய்ய நெற்றிக்
கண்ணனே கைலை வாழ்வே கருணையங் கடலே கண்ணி
னுண்ணிறை யொளியே யுண்மைக் குண்மையே யுலகோர் செய்யும்
புண்ணிய வடிவே யாதிப் புனைவநா யகனே போற்றி. (31)

நிதிதரு மணியே சங்க நிதியமே தாளக் குன்றே
கதிர்விடும் பசிய பொன்னே கற்பக வனமே கட்டி
மதுநிறை கரும்பே வாழை வருக்கைமாங் கனியே பாலே
புதியதெள் ளமுதே யாதிப் புனைவநா யகனே போற்றி. (32)

ஏதமு நலனு மெண்ணு மெண்ணில வெண்ணு நூலும்
வேதமு மங்கம் யாவும் விளம்பிய சமய பேத

---

27, அங்கி-அக்கினி. பம்புதல்-பரவுதல். பம்பு வினைத்தொகை. பண்ணவர்முதுவன்-பிரமன். பூதி-விபூதி. சாதனம்-உருத்திராக்கம். வம்பு-வாசனை. மஞ்சனம்-அபிடேகத்திற்குரிய நீர். மந்திரம்-ஆலயம்.

28. விது-சந்திரன். கதுமென-விரைவாக. வெள்ளைநேத்திரம்-வெண்பட்டாடை. மணிக்கலன்-இரத்தினாபரணம்.

29, பானீயம்-பருகுவன. ஈரெண்-பதினாறு.

வாதமு மாயை மூன்று மதிக்குநா தாதி யந்த
பூதமுங் கடந்த வாதிப் புனவைநா யகனே போற்றி. (33)

சிவசிவ கால கால முக்கண சிற்ச பேச
பவகர காள கண்ட பானுகோ டிப்ர காச
தவபல தத்வா தீத சராசர விசுவ ரூப
புவனகல் யாண வாதிப் புனவைநா யகனே போற்றி. (34)

வேறு.

என்று கூப்பிய கையின னேத்துலு மிரங்கி
நின்ற செங்கதிர் பாற்கடன் மீதெழு னேராய்க்
குன்று காட்டிய வெள்ளைமால் விடைமிசைக் குலவி
யன்று காட்சிதந் தனனுமை யவளொடு மமலன். (35)

கருணை மூர்த்தியைக் கண்டன னுலிரு கண்ணூற்
பருகு வானெனப் பதைத்தனன் றுள்ளினன் பணிந்தா
னுருகு மன்புட னோடினன் மீண்டன னுளத்திற்
பெருகு மானந்த வாரியின் மூழ்கினன் பின்னும். (36)

கைகள் கொட்டிநின் ருடிய விதிதனைக் கயிலை
யைய னோக்குபு செங்கனி வாய்மலர்ந் தருள்வா
னுய்யு மன்பொடு நீபுரி பூசைகண் டுவந்தோஞ்
செய்யு நல்வர மளித்தன மெனத்திரோ தித்தான். (37)

தேசு டைப்பர னருளினுற் சிவத்துரோ கத்தி
னாச கற்றினன் சிருட்டியின் வான்முறை யறிந்தான்
பேசு மப்பதி யகன்றுதன் பதிவிதி பெற்றுன்
வாச வன்முத லிமையவர் யாவரும் வணங்க. (38)

---

33. எண்ணிலர்-விசாரமில்லாதவர். எண்ணும்-மதிக்கும். நூல்-சிவாகமம். மாயைமூன்று-சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை. நாதாதியந்தபூதம்-நாதமுதல் மண்ணந்தமான தத்துவங்கள்.

34. பவகர-பிறப்பைக்கெடுப்பவனே. ஹரவென்னும் வடமொழி கரவெனவந்தது.

37, விதி-பிரமன். நோக்குபு-நோக்கி. கண்டுவந்தோமென்பது, கண்டுமகிழ்ந்தோம், கண்டு வெளிப்பட்டுவந்தோம் என இருள் பொருள் குறித்தது. திரோதித்தான்-மறைந்தான்.

38. விதி-பிரமன்.

அலகில் கன்னிதா னப்பலன் வேள்விக ளவற்றிற்
றிலத மாம்பிரா சாபத்ய முற்கிருச் சிரமெய்ப்
பலனை யிக்கதை கேட்பவர் பெறுவரே பதிக்குத்
தனிமை யித்தலஞ் சத்தியஞ் சத்தியர் தவத்தீர். (39)

சதுர்முகச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 245.

## 7-வது மாருதச் சருக்கம்.

அருத்தி யோடிவை நைமிச முனிவர்கேட் டாங்கே
கருத்து றத்தொழச் சூதனுஞ் சதுர்முகக் கடவு
ளிருத்த குங்கதை யுரைத்தன மருத்தருச் சித்த
விருத்த மாநகர் மகிமையொன் றுளதெனை விளம்பும். (1)

வேதை கூர்பவக் கருங்கடற் கயன்கதை வேலைப்
பாதை யாமெனை வினவிய மாதவர் பலரு
மூதை நாயகன் றிறத்துமுன் னருத்தனை யுரைத்த
காதை யைப்பகுத் தருளெனச் சூதனுங் கழறும். (2)

உள்ள மன்புறு முனிவிர்காண் முன்னமோ ருகத்தில்
வெள்ள நீர்ச்சடைச் சிவதரி சனஞ்செய வேண்டிப்
பள்ள மேற்படர் பயமெனப் பாவகன் பாங்கன்
வள்ளல் வாழ்திருக் கைலையை நோக்கினன் வந்தான். (3)

வருஞ் சுரத்திடை யிருண்டபூஞ் சோலையின் மருங்கே
குரும்பை யாங்கிரண் டேந்திய மரகதக் கொடிபோ
லரம்பை நின்றது கண்டனன் கொடித்தடை யாலே
விரும்பி யப்புறஞ் சேறல னிறுத்தனன் விளம்பும். (4)

---

39. பிராசாபத்திய முதற்கிருச்சிரம்-ஓர் விரதம்

1. மருத்து-மாருதம். விருத்தமாநகர்-பழம்பதியென்னும் திருப்புனவாயில்.

2, வேதைகூர்-துன்பம்மிக்க. பாதை-மரக்கலம். வினவிய-கேட்ட.

3. படர்தல்-செல்லுதல். பயம்-நீர். பாவகன் பாங்கன்-அக்கினி நண்பனாகிய காற்று.

4. சுரம்-வழி. இறுத்தனன்-தங்கினன்.

பண்டை நங்குல மியற்றிய பெருந்தவப் பலனோ
மண்டு காதல்கூ ரகத்துறை யாவியின் வடிவோ
விண்ட லம்விளங் குதம்பயன் றருமணி விளக்கோ
கொண்ட லைப்பிரிந் தனநடை பயிலுமின் கொடியோ. (5)

கனக வல்லியோ கற்பகக் கொம்பரோ காமன்
றனம ருச்சனை சேவைசெய் தெய்வமோ திருவோ
வெனம யங்கினன் றெளிந்தன னரம்பைகண் ணிணையான்
மனன றிந்தனன் கணைமழை சொரிந்தனன் மாரன். (6)

எண்ணு மாசையுண் மூழ்கின னெட்டுயிர்ப் பெறிந்தான்
வண்ண மேனியும் வாடின னவனையம் மடந்தை
தண்ணந் தாரணி முருகனென் றெண்ணின ளார்ந்தாள்
கண்ணி மைக்குமுன் கணைகளூ றுகுத்தனன் காமன். (7)

காட்சி யேமுத லையிரு பத்துநாற் காத
லாட்சி கூர்தரு புகுமுகம் புரிதலா தியவா
மாட்சி யாமிரு வருமொரு வானவ ரேனோர்
சாட்சி யின்றியோர் மாதவி மண்டபஞ் சார்ந்தார். (8)

உரக பந்தமொத் தணைந்தன ரம்பையு முபரிப்
பாத நாடக மடவின் பக்கடல் படிந்தான்
சுரத முற்றபின் மாருதன் மலரடி தொழப்போம்
விரத மற்றது விளைந்தது பவமென வெருண்டான். (9)

---

5. ஆவி-உயிர். கொண்டல்-மேகம். அனம்-அன்னம். மின்கொடி-மின்னற்கொடி.

6. கனகவல்லி-பொற்கொடி. கொம்பர்-கொம்பு. காமன்-மன்மதன். இவ்விடத்து ஐயுருபுவிரிக்க. தெய்வம்-இவ்விடத்து ரதியைக்குறித்தது. திரு-இலக்குமி. இணை-இரண்டு. மனன்-மனம். கணை-அம்பு. மாரன்-மன்மதன்.

7. நெட்டுயிர்ப்பெறிந்தான்-பெருமூச்சுவிட்டான். தண்ணந்தார்-குளிர்ச்சிபொருந்திய அழகிய மாலை. உகுத்தனன்-சொரிந்தனன்.

8. காட்சியே முதல் ஐயிருபத்துநாற்காதல்-காட்சிமுதல் நானூறுதுறைகள் புரிதல்-விரும்புதல். மாதவிமண்டபம்-வசந்தகாலத்து முல்லைச் செடிகளோடுகூடிய மண்டபம்.

9. உரகபந்தம்-பாம்பின்சேர்க்கை. அஃதாவது பின்னியசேர்க்கை. உபரி-மிகுதி. சுரதம்-புணர்ச்சி. பவம்-பாவம்.

பவத்தை நீத்தருள் சிவதரி சனஞ்செய்வான் படர
வவத்த வல்வினை யாற்சுரத் திவணமன் றடுத்த
சிவத்து ரோகத்தாற் றனதுடல் பதைத்தனன் றிகைத்தோர்
தவத்தி னற்றெளிந் திவைசொலு மாருதத் தலைவன். (10)

இனைய புத்தியா லபுத்தியாற் புரிபவ மெவையுங்
கனமெ னக்கடிந் தாள்பவ ருனையலாற் காணேன்
றினக ரன்சசி யங்கியங் கண்ணுடைச் சிவனே
யனக னேயம லாவெனப் போற்றிய வனிலன். (11)

ஈங்கி யானறி யாமையாற் செய்பவ மிதனை
நீங்கு மாறருள் புரியெனத் தொழுதவ ணின்ற
வீங்கு பூம்பணைத் தோட்சதா கதியடல் வேந்தற்
காங்கெ ழுந்ததோ ரந்தர வாணியீ தருளும். (12)

வேறு.

மாருதத் தலைவ கேட்க மனமறி யாமை வந்து
நேருமிப் பவத்தை நீக்க நீனிறப் பரவை சூழ்ந்த
பாருல கதனிற் கன்ம பூமியிற் பழமைத் தான
சீருறு மாட கூடச் செழும்பதி யொன்றுண் டாமால். (13)

சிறந்தவப் பதியைச் சிந்தை செய்திடிற் சித்தி யெட்டும்
பிறந்திடுங் காணப் பெற்றாற் பிரமகத் தியைமுன் னான
மறந்திகழ் பாவம் போமவ் வளம்பதி யெவண தென்று
லறந்தரு மதுரைக் கீழ்பா லாழியின் கரைய தாமால். (14)

---

10. படர-செல்ல. அவத்த-அவமுடைய. அவம்-வீண். சுரம்-வழி. இவண்-இவ்விடத்து. அமன்று-நெருங்கி.

11. பவம்-பாவம். தினகரன்-தினத்தைச்செய்யுஞ் சூரியன். சசி-சந்திரன். அங்கி-அக்கினி சூரியன் சந்திரன் அக்கினி யென்னும் மூன்றையும் மூன்று கண்ணாகவுடையவனென்பதாம். அனகனே-கடவுளே. அனிலன்-வாயுபகவான்.

12. வீங்குபூம்பணைத்தோட்சதாகதியடல்வேந்தற்கு-மிகவும்அழகாகப் பூரித்த தோளையும், நீங்காத இயக்கத்தையும், வெற்றியையும் உடையவாயுதேவனுக்கு. அந்தரவாணி-ஆகாசவாக்கு.

13. நீல்நிறப்பரவை-கருங்கடல். பாருலகு-மண்ணுலகு. கன்மபூமி-தென்தேசம்.

14. மறம்-கொடுமை எவணது-எவ்விடத்துள்ளது. ஆழி-சமுத்திரம்.

ஆனதொல் பதிக்குப் பல்பே ருண்டவை யாவை யென்றாற்
பானலங் கமழு மோடைப் பழம்பதி நித்யா னந்த
மானகர் விருத்த காசி மகபதி புரங்கை வல்ய
ஞானமா நகரம் புண்ய நகர்முத லனேக நாமம். (15)

இப்பெய ருரைத்தோ னுள்ளத் தெண்ணிய வரங்க ளெய்து
மப்பதி புகுந்தைம் பாவ மகற்றிடும் பிரம தீர்த்த
மொப்பில்சா ரூப நல்கு முயர்சிவ கங்கை யாடிச்
செப்பருஞ் செல்வ நல்குந் திருப்புனல் படிந்த பின்னர். (16)

இருமையின் புதவுதிங்க ளீர்ம்புன லாடி வேறு
பருவமங் கையரைத் தொட்ட பவந்தெறு முரக தீர்த்தந்
தருநிழன் மகவான் றீர்த்தஞ் சக்கர தீர்த்தம் வாய்மை
கருதிய வருண தீர்த்தங் கல்யாண தீர்த்த மூழ்கி. (17)

சம்புவை யுமையை மைந்தர் தம்முட னருச்சித் தேத்தில்
வெம்புமிச் சிவத்து ரோக விமோசன னாகி வேண்டு
மும்பர்மெய் வரமும் பெற்றுங் குனதுல கடைவா யென்ன
வம்பர வாணி கூறக் கேட்டன னனில வேந்தன். (18)

அண்ணறன் வாக்கா மிந்த வமுதிரு செவிவா யாக
வுண்ணிறைந் துடல்பூ ரிப்ப வுலப்பரும் பரமா னந்த
வண்ணமா யுளந்தள் ளாட வச்சிர வனத்தை நோக்கி
யெண்ணறுங் கணங்கள் சூழ வேகுவான் சுரத்தி லீசன். (19)

---

15. தொல்பதி-பழம்பதி. பானலங்கமழுமோடை-பாலின் மணம் வீசுகின்ற நீரோடையினையுடைய. விருத்தகாசி-பழையகாசி. மகபதி புரம்-இந்திர புரம்.

16. ஐம்பாவம்-கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், குருத்துரோகம் என்பன. திருப்புனல்-இலக்குமி தீர்த்தம்.

17. இருமை-இம்மை மறுமை. திங்களீர்ம்புனல்-சந்திரபுட்கரணி. புட்கரணி-தாமரைக்குளம். தெறும்-கெடுக்கும். உரகதீர்த்தம்-அரவநதி. தருநிழல்-கற்பகநிழல், மகவான்-இந்திரன்.

18. மைந்தர்-விநாயகர் சுப்பிரமணியர். வெம்பும்-துன்பஞ்செய்யும். விமோசனம்-நீங்குதல். உம்பர்-மேலான. அம்பரவாணி-ஆகாய வாக்கு.

19. உலப்பரும்-கெடுதலில்லாத. வச்சிரவனம்-திருப்புனவாயில். சுரத்தில்-வழியில்.

அருட்பதி காணுந் தோறு மறற்படிந் தண்ண ரன்னை
விருப்பொடும் பூசித் தேத்தி விரதங்க ளாற்றிச் செல்வான்
மருப்பினு லேன மான மால்புவி யிடந்துங் காணுத்
திருப்பதந் தோய்ந்த வீதிச் செழியன்மா மதுரை புக்கான். (20)

## வேறு.

மதுரை புக்கனன் மகிழ்ந்துபொற் றாமரை வாவி
விதியின் மூழ்குபு செயுங்கடன் புரிந்துமெய்த் தானம்
முதிரு மன்புட னாற்றின னாலய முன்னி
யெதிர்ந டந்துமுன் சித்திவே ழத்தடி யிறைஞ்சி (21)

வான மாதிய பூதமுஞ் சராசர வடிவ
மான பல்லுயி ரனைத்தையும் பெற்றிடு மம்மை
தான வன்குலத் தொருமக வாயவ தரித்த
மீன மால்விழி விமலையைப் பணிந்தனன் மீண்டான். (22)

கந்த வேளடி பணிந்துபோய்க் கடம்பணி நீழற்
சுந்த ரேசனைக் கண்டுவீழ்ந் தெழுந்தடி தொழுது
மந்தி ராகம மாபுளி வழாதபி டேக
முந்து றப்புரிந் தருச்சனை யாவையு முடித்தான். (23)

## வேறு.

மருவலர் கடப்பஞ் சோலை வள்ளலே போற்றி யெண்ணெண்
டிருவிளை யாட லாடுஞ் சிவபெரு மானே போற்றி
பொருவரும் பரனே போற்றி போற்றியென் றேத்தும் போழ்தி
லருணிதி திருவாக் கென்னு மந்தரவாணி சொல்லும். (24)

20. அறல்-தீர்த்தம். அண்ணல்-சிவபெருமான். இடந்தும்-தோண்டியும். செழியன்-பாண்டியன். புக்கான்-புகுந்தான்.

21. வாவி-தடாகம். மூழ்குபு-மூழ்கி. முதிருமன்பு-மிகுந்தஅன்பு. ஆற்றினன்-செய்தனன். முன்னி-கருதி. சித்திவேழம்-சித்திவிநாயகர்.

22. தானவன்-சந்திரன். மீனமால்விழிவிமலை-பெருமை வாய்ந்த மீனாக்ஷியம்மை.

23. அணி-அழகு. மந்திரம்-வேதம். மாபுளி-முறையின்.

24. மரு-வாசனை. அலர்-புட்பம். பொருவரும்-ஒப்பில்லாத. அந்தரவாணி-ஆகாயவாக்கு.

வனமுக மதனி னம்பால் வருகவென் றருள மன்னுந்
தனதுட னுறைய வாயுத் தலைவனுஞ் சங்க மேவு
மனகனை வலங்கொண் டேத்தி யற்புறும் விடைகொண் டாங்கே
தினகர திசைமேற் சென்று திருப்பழம் பதியைச் சேர்ந்தான். (25)

புண்ணிய வடிவார் தெய்வப் புனவைவந் தெய்து முன்னை
மெண்ணிய தவப்பே றெல்லா மெய்தினு னெனச்செம் மாந்தான்
கண்ணிய வுள்ளத் தன்பு கதிதெழக் கனக வெற்பிற்
றிண்ணிய தோளான் றூய சிவகங்கா தீர்த்தங் கண்டான். (26)

வேறு.

ஏறு கல்வியுஞ் செல்வமுந் தருமமு மிதுமெய்ப்
பேற ளித்திடும் பெருக்கிது சஞ்சிதம் பிணித்த
வாற றத்தடிந் தருளும்வா ரியுமிதா ணவத்தின்
சேறு தீர்த்திடுந் தீர்த்தமு மிதுசிவ கங்கை. (27)

அவமி ருந்துவை யகற்றிடு மமுதமீ தகிலத்
தவமி யற்றிய தவமிஃ திஃதரு ளுருவம்
பவம னைத்தையு மாற்றுவ திதுபவ மணுகாச்
சிவனு ருத்தருந் தீர்த்தமு மிதுசிவ கங்கை. (28)

என்று வாழ்த்தின னிருஞ்சிவ கங்கையி லிறங்கித்
துன்று மந்திர விதிமுறை மூழ்கினன் றுளங்கா
தொன்று மன்பினிற் பூதிசா தனமணிந் தொருபாற்
சென்றி ருந்துபஞ் சாக்கரம் பலவுருச் செபித்தான். (29)

25. வனமுகம்-திருப்புனவாயில். தழைய-பூரிப்ப. சங்கமேவும்அனகன்-தமிழ்ச்சங்கத்தில் புலவருள்வீற்றிருந்தசோமசுந்தரக்கடவுள். அற்பு-அன்பு. தினகரதிசை-கீழ்த்திசை.

26. செம்மாந்தான்-இறுமாந்தான். கண்ணிய-கருதிய. கனகவெற்பின்-பொன்மலைபோலும்.

27. சஞ்சிதம்பிணித்த ஆறு-சஞ்சிதமாய்க்கட்டுப்பட்டிருக்கும்பிறப்பின் பெருக்கு. அறத்தடிதல்-முற்றுங்கெடுத்தல். பிறப்பைத்தொடர்ச்சியாய்த் தருதல்பற்றிச் சஞ்சிதத்தை நதியாகவும்,பிறப்பிலமிழ்த்துதல்பற்றி ஆணவத்தைச்சேறாகவும் உருவகஞ்செய்தனர்.

29. துன்றுமந்திரம்- நெருங்கிய மந்திரம். அதாவது இடைவிடாத மந்திர உச்சரிப்புடன். துளங்காது-கலங்காது. ஒன்றும்-ஒருவழிப்பட்ட.

அரிய மாநதி முதலன தீர்த்தமுற் றாடி
வரமு றம்புது மலர்நறுஞ் சாந்துமஞ் சனமும்
விரவு தன்கணஞ் சுமந்திரு பாலினு மேவப்
பிரம னாலய மெய்தின னங்கிதன் பாங்கன். (30)

தூல லிங்கமாங் கோபுரங் கண்டுமுன் றொழுதான்
மால யன்றிரு மணிமுடி நவமணி வயங்குங்
கோல முன்றிலிற் பன்முறை பணிந்துகை கூப்பி
யால கண்டனை வலங்கொடு வந்துமுன் னடுத்தான். (31)

அருக்க னாதிசண் டாந்தமா வமைவுறு பூசை
யுருக்கு மன்புட னாகம விதிமுறை யுஞற்றி
மருக்கு லாந்திரு விருப்பினைச் சூழ்வந்து வணங்கி
யிருக்கு நாதனை யுளத்திடை யிருத்தின னேத்தும். (32)

வேறு.

தடமதின் மதுரைக் கரசே சரணஞ்
சங்கப் பலகைத் தலைவா சரணம்
விடமினி துண்டருள் கண்டா சரணம்
விண்ணவர் பணிமுக் கண்ணா சரணம்
நடமிடு பரமா னந்தா சரணம்
நதிபுனை பவளச் சடையாய் சரணம்
மடலவி ழிதழித் தொடையாய் சரணம்
வணமுக நாதா சரணஞ் சரணம். (33)

திரிதரு சூலப் படையாய் சரணம்
திரிபுர தகனா சரணஞ் சரண

---

30. வரம்-மேன்மை. நறுஞ்சாந்து-வாசனையுடைய சந்தனம். மஞ்சனம்-நீர். அங்கிபாங்கன்-வாயு.

31. மாலயன்றிருமணிமுடி நவமணிவயங்குங்கோலமுன்றில்-பிரமவிட்டுணுக்கள் வணங்குதலால் அழகிய இரத்தினகிரீடத்திலுள்ள நவரத்தினங்கள் சிந்திப்பிரகாசிக்கின்ற அழகியமுற்றம்.

32. அருக்கனாதிசண்டாந்தம்-சூரியன்முதல் சண்டேசர் வரை. உஞற்றி-செய்து. மருக்குலாந்திரு இருப்பு-வாசனையாலழகுபெற்ற ஆலயம். இருக்கு-வேதம்.

33. இதழித்தொடை-கொன்றைமாலை.

கரியுரி யுடையாய் சரணஞ் சரணங்
    கருணை கரனே சரணஞ் சரணம்
மரியய னறியா வமலா சரண
    மன்பர்க் கெளியாய் சரணஞ் சரணம்
வரியர வணிசீர்ப் பரனே சரணம்
    வனமுக நாதா சரணஞ் சரணம். (34)

கலைமதி யணிசங் கரனே சரணங்
    கற்பக தருவே சரணஞ் சரணம்
அலைகட லமுதே சரணஞ் சரண
    மம்பல வாணா சரணஞ் சரணம்
தலைவரை மேருச் சிலையாய் சரணந்
    தத்துவ முதலே சரணஞ் சரண
மலைமகள் பாகா சரணஞ் சரணம்
    வனமுக நாதா சரணஞ் சரணம். (35)

வேதமு மறியா விமலா சரணம்
    விண்ணவ ரரசே சரணஞ் சரணந்
தாதவிழ் கமலச் சரணா சரணந்
    தற்பர வடிவே சரணஞ் சரணஞ்
சீதள மதிதோய் முடியாய் சரணஞ்
    சிவபெரு மானே சரணஞ் சரண
மாதவர் பரவும் வாழ்வே சரணம்
    வனமுக நாதா சரணஞ் சரணம். (36)

கங்கை மணாளா சரணஞ் சரணங்
    கண்ணுத லுடையாய் சரணஞ் சரணம்
பொங்கர வணிகங் கணனே சரணம்
    புண்ணிய முதலே சரணஞ் சரணம்
வெங்கன லனையாய் சரணஞ் சரணம்
    வெள்விடை யவனே சரணஞ் சரண
மங்கள தரனே சரணஞ் சரணம்
    வனமுக நாதா சரணஞ் சரணம். (37)

---

35. தலைவரைமேரு-தலையின்கண்ணே பாரதகதையைக் கணபதியால் வரையப்பெற்றுள்ள மேருமலை. சிலை-வில். தத்துவமுதல்-பதிபசுபாசமென்னும் நித்தப்பொருள்களுள் முதன்மையானவன்.

37. வெங்கனல்-அக்கினி. வெள்விடை-வெள்ளிய ரிஷபம். மங்களதரன்-மங்களத்தைத் தரித்தவன்.

### வேறு.

தஞ்சமென் றிறைஞ்சு மங்கி தலைவ னண்ப னிவ்வண
நெஞ்சகங் குழைந்து முன்பு நின்று போற்று மெல்லையின்
விஞ்சுமன் பிறலி லிங்கம் விட்டு விண்ணு தித்தன
னஞ்சலஞ் சலஞ்ச லென்ற வபய பாணி முர்தவே. (38)

வெள்ளி வெற்பை யன்ன வெள்ளை விடையின்மே லெழுந்தருள்
பிள்ளை மாம திச்சடைப் பிரானை முன்பு காண்டலும்
பள்ள மெய்து நீரினின்று பாய்ந்து செங்கை கொட்டுவான்
றுள்ளு மோடி யாடிநீடு தூண மன்ன தோளினன். (39)

வணங்கு கொந்த ளஞ்சி லிர்ப்ப மண்ணுறப் பணிந்தெழுங்
குணங்கண் மூன்று மொன்ற தாய்க்கு டந்தமிட் டிறைஞ்சிடு
மணங்க டுத்த மைந்தரென்ன வார்த்து வாய்பு டைத்திடு
மிணங்கு முள்ளு வந்துகண் ணிமைத்தி டாது நோக்கிடும். (40)

விழிசொ ரிந்த சோணமாரி வெள்ள மூழ்கும் வேற்றிசை
மொழித ளர்ந்தி சைக்குஞான முத்தி வீடி தென்றுவான்
சுழித ணந்த வின்பவாரி தோயு நேய மாயநெஞ்
சழியு நெக்கு நெக்கன லடுத்த வெண்ணெ யாமரோ. (41)

விண்ணு மண்ணு மெம்மருங்கு மேவு தன்க ணங்களுங்
கண்ணி னுங்க ருத்தினென்று கண்டி லானி தன்றியே

---

38. அங்கிதலைவனண்பன்-அக்கினியாகிய தலைவனுக்கு நண்பனாகிய வாயு. விஞ்சும்-மேலான. அபயபாணி-அபயமுத்திரையுடையகை.

39. பிள்ளை-இளமை. நீரின்-நீர்போல. தூணம்-தூண்.

40. வணங்கு-படிந்த. கொந்தளம்-மயிர்க்குழற்சி. அதாவது குழைந்தமயிர். குணங்கள் மூன்று-சாத்துவிகம், இராசதம், தாமதம் என்பன. குணமொரு மூன்றுந்திருந்து சாத்துவிகமேயாக என்னும் பெரிய புராணம் இங்கே கவனிக்கத்தக்கது. குடந்தம்-நான்கு விரல்களையும் முடக்கிப் பெருவிரலை நெஞ்சில் நிறுத்திக்கொண்டு நிற்றல். அணங்கு-பெண்பேய். ஆர்த்து-சத்தித்து. புடைத்திடும்-அடித்திடும். இணங்கும்உள்-கசிந்தமனம்.

41. சோணமாரி-விடாதமழை. வேற்றிசை-வேறுபட்டுச்சொல்லும். வீடிதென்று-வீடு இது என்று. வான்-மேலான. சுழிதணந்த-நீர்க்கடலின்மையாற் சுழியில்லாத. நேயம் ஆய-அன்புருவாய. அரோ-அசை.

யண்ணல் வண்ண மும்மவண்ண லருளும் வண்ண முற்றதன்
வண்ண முந்தெ ரிந்திடாம னேல யத்த னையின். (42)

வேறு.

இவ்வண நின்ற வூதைக் கிறைவனை யிறைவ னோக்கிச்
செவ்வணக் கமலப் பைம்பூஞ் செழுந்திரு வாய்ம லர்ந்தே
யுய்வண மெமைப்பூ சிப்பா னுற்றநின் னுளத்தி லன்பின்
மெய்வண மறிந்தோங் கேண்மோ வேண்டிய வரங்க ளென்றான். (43)

அத்தன தமுத வாணி யஞ்செவி புகுத லோடுஞ்
சித்திர மென்ன நின்ற மருத்துவுந் திருவோ ரெட்டு
முத்தியும் வேண்டே னெந்தாய் முளரிப்போ தன்ன நின்றாட்
பத்தியே வேண்டு மென்றான் பாலித்தான் பரம நாதன். (44)

விரும்பிய வரங்க ணல்கும் விமலனும் விடைமே னின்றுங்
கரும்பன மொழியா ளோடுங் கரந்தன னிலிங்கந் தன்னி
லரும்பவ மகற்றி யீச னருள்பெறு மனில வேந்தும்
பொரும்பரை யாதி மற்றோர் பூசையும் புரிந்து மீள்வான். (45)

விடைகொண்ட பரனைச் சூழ்ந்து விடைகொண்டு வீதி காறு
நடைகொண்டு மான மேறி நாந்தக மயில்வே லாழிப்

42. கண்ணினும்-நினைப்பினும். கருத்தின்-தன் கருத்தின் கண். கண்டிலான்-கருதியவற்றைத் தானே பரஸ்பரமறியத்தக்க தெய்வத்தன்மையோடிருந்தும் சித்த மிறந்தமையால் இங்கே யறியாதவனானான். இஃதன்றியே-இவ்வாறு அயற்பிரவிர்த்திக்கருத்திழந்தமையுமல்லாமல்.

43. ஊதை-காற்று

44. வாணி-வாக்கு. திருவோரெட்டு-அட்டலட்சுமி. அதாவது இராச்சியலட்சுமி, கீர்த்திலட்சுமி, சௌரியலட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, தைரியலட்சுமி, விசயலட்சுமி வித்தியாலட்சுமி என்பவர். முளரிப்போது-தாமரை மலர். பாலித்தான்-அருளினான்.

45. கரும்பனமொழியாள்-உமாதேவி. கரந்தனன்-மறைந்தனன். பொரும்-உயிர்களுக்கு வினைப்பயனையும் உயிர்களைச்சிவனிடத்தும்சேர்க்கும். பொருத்துமென்பது பொருமெனவிகாரமாயிற்று. பரை-உமாதேவி.

படைகொண்ட கணங்கள் போற்றப் பவனனும் பாரி சாத
மடைகொண்ட செந்தேன் வாயு மண்டல மடைந்தான் மன்னோ. (46)

மாருதச் சருக்கம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 289.

## 8-வது இயமச் சருக்கம்.

ஒருகணப் போதாங் குற்றோர் தரிசித்தோ ருலப்பில் பாவ
விருளினுக் கிரவி யென்ன வெழும்பழம் பதியில் வாத
நிருபன்வந் திறைஞ்சிப் பெற்ற நிலைமையை நிகழ்த்திப் பின்னர்
செருபலி மறலி பூசை செப்புவன் சூத மேலோன். (1)

வேறு.

அகத்தி லன்புறு நைமிச முனிவர்க ளந்நாட்
டொருகுத்து ரைத்திடு மறலிதன் பூசையைத் தூயோய்
வகுத்தி யம்பெனச் சூதனும் புகன்றிடு மகிழ்ந்தோ
ருகத்தில் வெண்டிரைக் கருங்கட லுடுத்தபா ருலகில். (2)

பண்டை மாநிலம் விளங்கவாழ் பரிதிதன் மருமான்
வண்டை மானிள மறியினை வென்றகண் மதுரக்
கண்டை மானும்வாய்க் கௌரிகோன் கழலிணைக் கன்பன்
றொண்டை மானர சாட்சிசெய் தொண்டைநன் னாடு. (3)

மண்ணி டந்துமா றேடியுங் காணுறு மலர்த்தாட்
பெண்ணி டந்திகழ் பிஞ்ஞகன் விழிகளிற் பிறங்கும்
விண்ணி டந்தரு வனத்திடை மெய்த்தவ வேடர்
கண்ணி டந்துசாத் தியதிருக் காளத்தி கவினும். (4)

---

46. விடை-ரிஷபம். விடை-உத்தரவு. மாணம்-விமானம். நாந்தகம்-வாள். அயில்வேல்-கூர்மைபொருந்திய வேல். ஆழி-சக்கரம். பவனன்-வாயு செந்தேன்மடையெனமாறுக. மடை-வாய்க்கால். மன்னோ-அசை.

1. உலப்பில்-கெடாத. வாதநிருபன்-வாயுவேந்தன். செரு-போர். மறலி-யமன்.

2. உகம்-யுகம். உடுத்த-சூழ்ந்த.

3. பரிதிதன் மருமான்-சூரியன் வழித்தோன்றலாகிய சோழன். கண்டை-கற்கண்டை மானும்-ஒக்கும். கௌரிகோன்-சிவபெருமான்

4. மண்ணிடந்து-பூமியைப் பிளந்து. பெண்ணிடந்திகழ்-உமாதேவியார் இடப்பாகத்தில் விளங்குகின்ற. பிஞ்ஞகன்-சிவன். கவினும்-அழகுசெய்யும். விண்ணிடம்-ஆகாயப் பிரதேசத்தைஅளாவிய. தரு-விருக்ஷம்.

பனைக்கை மும்மத யானைசூழ் வனத்தினும் பதும
நனைக்க ருந்தடங் கரையினும் வரையினு நாளும்
வினைக்க டுந்தவம் புரிந்துடல் வருத்திடார் விள்ள
நினைக்க வீடுதந் தருளரு ளைசல நிலாவும் (5)

மெய்ய னாடக மலைச்சிலை வாங்கிய விறற்பூங்
கைய னாடகங் கலங்கிட வருங்கடுக் கரந்த
வைய னாடகங் குளிர்தமிழ்க் காரைக்கா லம்மை
யுய்ய நாடகம் புரிதிருப் பழுவண மோங்கும். (6)

அங்க மாறுநான் மறைகளு மோதினை ரறிந்த
புங்க மாதவ ரிவரென வுணர்கெனப் புணரும்
துங்க மாநிலங் கைதொழு தெழுந் தினம்வலஞ் சூழுங்
கங்க மால்வரை யங்கமா யுயர்ந்தணி காட்டும். (7)

தார ணித்தலை வாழ்விழக் காத்திரந் தடுத்த
வோர ணித்தள வடியிலெம் யானைதி ருதிப்ப
வார ணப்பிடர் வரும்வணங காமுடி வணங்குங்
கார ணத்திரு முல்லைவா யிலுமவண் கதிக்கும். (8)

---

5. பனைக்கை-பனைபோலுங்கை. பதுமம்நனைக்கருந்தடம-தாமரை யரும்பையுடைய பெரியதடாகம். கருமை-பெருமை. வினைக்குஅடுந்த வம்-வினையைக் கெடுக்குந்தவம். வருத்திடார்-வருத்திடாராகியென்னும் பொருள்குறித்த முற்றெச்சம். விள்ள-சொல்ல நிலாவும்-விளங்கும்.

6. மெய்யன்-பரமசிவன். ஆடகம்-பொன். சிலை-வில். வாங்கிய-வளைத்த. விறற் பூஙகையன்-வெற்றிபொருந்திய அழகிய கையையுடைய வன். நாடகம்-நாட்டிலுள்ளார். கடு-நஞ்சு. கரந்த-ஒழித்த. நாடுஅகம்-ஆராய்கின்றமனதின்கண். நாடகம்-நடனம். பழுவணம்-திருவாலங்காடு. பழு-ஆலமரம்

7. புங்கம்-உயர்வு. உணர்கென-உணர்க என்று. துங்கம்-பரிசுத் தம். கங்கமால்வரை-கழுக்குன்றம். அணிகாட்டும்-அழகுசெய்யும்.

8. தாரணி-பூமி. தலை-இடம் வாள்-கீர்த்தி. காத்திரம்-யானை யின் முன்கால். பூமியிடத்தில் கீர்த்திகெடும்படி யானையின்முன்காலைத் தடுத்த முல்லைக்கொடிக்குச் சமீபமாக ஒரு அடியளவில் சிவலிங்கம் விளங் கித்தோன்ற யானையின்மேல்வரும் வணங்காமுடிமன்னன் வணங்குங்கா ரணத்தால் பெயர் பெற்ற திருமுல்லைவாயிலும் அத்தொண்டைநாட்டில் சிறந்து விளங்குமென்பது இச்செய்யுளின் பொருளாகும்.

ஊதை பார்ப்பு கறங்கென விளமக வுருவாய்த்
தீதை யாயனே யாய்ப்பிறந் திறந்திடுஞ் சனன
வேதை நீக்கிமெய்ப் பேரின்ப மளித்திட வேண்டிப்
பேதை பாகன்வாழ் மாதைமா நகரவண் பிறங்கும். (9)

சம்பு வாழுமித் தன்மைய தலம்பல தயங்கப்
பம்பை யாறுசே யாறுபொன் முகலிபா லாறு
மம்பி கைக்குமுன் னம்பென வெள்ளம்வந் தலைப்ப
நம்ப ளூர்மகிழ் கம்பையு முற்றதந் நாடு. (10)

புளின வேலைநுண் டுகிலெனப் புதுமணப் போதி
லளியி னம்பயில் சோலைகள் கூந்தலொப் பாக
வொளிந யந்தபூந் தண்டக நாடெனு மொருபெண்
ணளின வாண்முக மொத்தது காஞ்சிமா நகரம். (11)

உவமை யின்றிய சச்சிதா நந்தவா னுருவாஞ்
சிவனே யுன்னிமேற் றனுகர ணுதியுந் திருத்தி
யவன் மணந்திட வகிலகோ டிகளரு ளம்மை
தவமி யற்றுமே லதற்கிணை யொருதலந் தகுமோ. (12)

அருமை யுற்றசீர் வடிவெவற் றினுந்தனே யகலா
நிரும லன்றனேப் பூசனே புரிந்துநா னிலத்தி
லிருமை வேண்டிய வுயிரெனக் கௌரியெண் ணன்கு
தரும மாற்றவுந் தவஞ்செயுந் தலமுமத் தலமே. (13)

அனந்த நண்ணிய பரிதிபோ லகத்திரு ளகல
வனந்த வாரண மோதிய சதுர்முக னங்கே

---

9. ஊதை-காற்று. பால்-இடம். கறங்கு-காற்றாடி. பேதைபாகன்-சிவபெருமான். மாதைமாநகர்-திருவாமாத்தூர்.

10. அம்பு-கணை. கம்பை-ஓர் நதி.

11. புளினம்-மணற்குன்று. வேலை-கடற்கரை. போதில்-மலரில். அளி-வண்டு. பூந்தண்டகநாடு-அழகிய தொண்டைநாடு. நளினவாள்முகம்-தாமரைபோலும் விளங்குகின்ற முகம்.

13. அருமையுற்றசீர்வடிவு-சிவபெருமான் கொண்டருளும் அருட்டிருமேனி. தனே-சத்தியை. நானிலம்-மருதம் முல்லை குறிஞ்சி நெய்தலென்னும் நான்கு நிலங்களையுடைய உலகம். இருமை-இம்மை மறுமை.

யனந்தன் மீதுவந் தருமக மியற்றலா லதன்சீ
ரனந்த னுயிர முகத்தினு மியம்புதற் கரிதே. (14)

மாலை யொத்தெழு மேடையெத் திசையுநன் மணஞ்சேர்
மாலை சூடிய மடந்தையர் நடமெங்கு மகிணர்
மாலை யெய்திய வனிதையர் மேற்சிலை வாங்கி
மாலை சூழ்வரு மதனவேள் சமரமெம் மருங்கும். (15)

வந்து வண்டணை வாதமா லிகையுற மனது
வந்து வண்டனக் கம்பையா டியமட வார்நி
வந்து வண்டனங் குலுங்கநுண் மருங்குல்வாங் குதள
வந்து வண்டன மெனப்புகு துவர்மணி மாடம். (16)

மந்தி ரம்பொரு மறைக்கிடை யெங்குமெம் மரனு
மந்தி ரம்புக லடியவ ரெங்குமா மதமா
மந்தி ரந்தரு பரிநடை யெங்குமே மஞ்சு
மந்தி ரந்தவர்க் களிப்பவ ரோதையெம் மருங்கும். (17)

அங்க ணன்பதம் பூசனை புரிபவ ரநேக
ரங்க ணங்கணேர்ந் தரன்விழாக் காண்பவ ரனந்த

14. அனந்தம்-ஆகாயம். அனந்தஆரணம்-அளவில்லாத வேதம். சதுர்முகன்-பிரமன். அனந்தன்மீது-அன்னத்தின்மீது. அனந்தன்-ஆதிசேடன்.

15. மாலை-உலகளந்தநெடுமாலை. மாலை-பூமாலை. மகிணர்-கணவர். மாலை-ஆசையை. வாங்கி-வளைத்து. மாலை-முறை.

16. வண்டு அணைவாத மாலிகையுற-வண்டு விழாத சண்கப்பூ மாலை பொருந்த. மனதுவந்து-மனம்மகிழ்ந்து. வண்தனம்-வளப்பத்தைத்தரும் பொன். கம்பை-கம்பாநதி. நிவந்து-உயர்ந்து. வண்தனம்-வளப்பம் பொருந்திய கொங்கை. மருங்குல்-இடை. வாங்கு-வளைந்து. தளவந்து வண்டு-முல்லைக்கொடிபோலசைந்து. அனம்-அன்னம். புகுதுவர்-புகுவர்.

17. மந்திரம்பொருமறைக்கிடை-இரகசியத்தையொத்தவேத பாடசாலை. அரனுமம்-சிவநாமம். திரம்-திடம். மாமதமா-மிகுந்தமதத்தையுடைய யானை. மந்திரம்-குதிரைப்பந்தி. பரி-குதிரை. ஏமஞ்சுமந்து-பொன்னைத்தூக்கிக்கொண்டுபோய். ஓதை-பேரொலி. எம்மருங்கும்-எவ்விடத்தும்.

ரங்க ணங்குமை மந்திரந் தேர்பவ ரன்ன
ரங்க ணங்தொறு மருவெணறி கேட்பவ ரனையர். (18)

நீடு காவெலா நிறைமலர் பொழிமது நித்த
மோடு தேரெலாந் தேர்சிலை மன்னவ ரும்பர்
மேடை மாடெலா மாடக யாழிசை மின்னார்
நாடு மூரெலா நளிர்மதிக் குடைமத ராசன். (19)

இயலு நூபுரப் புலம்பலாற் புலம்பிலை யிருண்ட
புயலை நேர்குழற் கறுப்பலாற் கறுப்பிலை புதிய
வயலை யாமிடை மெலிவலான் மெலிவிலை மடவார்
நயன வேலையின் சுழல்வலாற் சுழல்விலை நாளும். (20)

மகர கேதனன் சமரலாற் சமரிலை மாடச்
சிகர மாமதி மறுவலான் மறுவிலை சிறுகண்
விகட யானையின் மயக்கலான் மயக்கிலை வீணை
யிகலு மாடகத் திருக்கலாற் றிருக்கிலை யென்றும். (21)

உற்ற வண்டுறுஞ் சிறையலாற் சிறையிலை யுலக்கை
சுற்றி யோச்சிடுங் கறையலாற் கறையிலை துணிப்ப
வற்ற சந்தனக் குறையலாற் குறையிலை யவல
மெற்று மாகம முறையலா விலைமுறை யீடே. (22)

---

18 அங்கணன்-சிவபெருமான். அங்கணங்களேோர்ந்து-அந்தஅந்த இடங்களில் தரிசித்து. அங்கு அணங்கு உமை மந்திரம்-அவ்விடத்துத் தெய்வமாகிய உமாதேவியார் மந்திரம். அன்னர்-மேற்கூறியவாறு அநேகர். அங்கணம்-முற்றம். அனையர்-மேற்கூறியவாறு அநேகர்.

19. கா-சோலை. தேர்சிலை-தேர்ந்தவில்லு. உம்பர்-மேல். மாடு-பக்கம். மாடகயாழ்-முறுக்காணியையுடைய வீணை. மின்னார்-பெண்கள். நளிர்மதிக்குடை-குளிர்ந்த சந்திரனாகிய குடை. மதராசன்-மன்மதன்.

20. இயலும்-நடக்கும். நூபுரம்-காற்சிலம்பணி. புலம்பு-ஒலி. புயல்-மேகம். வயலை-ஒருகொடி. வேலை-கடல்.

21. மகரகேதனன்-மன்மதன். விகடம்-உன்மத்தம். இகல்-வலிமை. மாடகம்-முறுக்காணி. திருக்கிலை-வஞ்சமில்லை.

22. சிறை-இறகு. சிறை-சிறைச்சாலை. கறை-உரல். கறை-குற்றம். துணிப்ப-வெட்ட. அற்ற-அறுபட்ட. சந்தனக்குறை-சந்தனக்கட்டையின் சேடம். குறை-தரித்திரம். அவலம்-பிறவிநோய். எற்றும்-நீக்கும். ஆகமமுறை-ஆகமப் புத்தகம். முறையீடு-முறைப்பாடு. அதாவது நியாயம்பெற வேண்டியவன் கூற்று.

நாட்ட ரம்பையின் காடலார் காயிலை நறும்பூந்
தோட்ட கண்ணியிற் கள்ளலாக் கள்ளிலை துதிக்கை
காட்ட வல்லமல் விலங்கலால் விலங்கிலை காமக்
கோட்ட மின்றியே நிலையடி யவர்மனக் கோட்டம். (23)

தான மெங்கணுந் தானமால் யானைகள் தளிர்ப்பூங்
கான மெங்கணுங் கானபாட் குயில்புலர் காலை
நான மெங்கணு நானமே கமழ்வன மலர்த்தார
பான மெங்கணும் வண்டுகள் செயுமது பானம். (24)

மறைக ளோதுமா மறையவர் மனைதொறும் வயங்கும்
பிறைய ணிந்தரு ளீசனைப் பேணுபு சனைக
ணிறையு நன்மறைச் சாலைக ணீடன சாலை
யிறைதி யானமேன் மனமகிழ் வானவ ரியானம். (25)

மன்னு தொண்டையர் மன்னவன் வீதியில் வயங்குஞ்
சென்னி யாரணி சென்னியர் கோன்றரு செழும்பொன்
பன்னு கோதையிற் பனைபுனை கோதைதன் பகடு
கன்னி நாட்டர சளந்திடுங் கன்னியந் தரளம். (26)

அணிபெ ருந்திரு வணிகர்தங் காவண மனைத்துங்
கணித மைந்தர்காட் டியநகிர் பசியபொற் சட்டி

---

23. அரம்பை-வாழை. காய்-வாழைக்காய் காய்-இதுகாய்தலென்னும் பொருள் குறித்த முதனிலைத்தொழிற்பெயர். காய்தல்-மெலிதல். நறும்பூந்தோட்டகண்ணி-வாசனைபொருந்திய அழகிய இதழ்களையுடைய மாலை. கள்-தேன். கள்-களவு. விலங்கு-மிருகம். விலங்கு-தளை. காமக்கோட்டம்-ஓர் பீடம். மனக்கோட்டம்-மனக்கோணல்.

24. தானம்-இடம். தானம்-மதம். மால்-பெரிய. கானம்-சோலை. கானம்-இசை. புலர்காலை-விடியுங்காலம். நானம்-ஸ்நானம். நானம்-கஸ்தூரி. மலர்ச்சோபானம்-மலராகிய வசதியான இடம். பானம்-பருகுதல்.

25. வயங்கும்-பிரகாசிக்கும். மறைச்சாலை-வேதபாடசாலை. நீடன சாலை-மிகுந்த அன்னசத்திரம். யானம்-வாகனம்.

26. தொண்டையர்-தொண்டைநாட்டில் வாழ்பவர். சென்னியார்-சோழநாட்டில் வாழ்பவர். சென்னியர்கோன்-சோழ அரசன். பனைகோதையிற்புனை-பனைமாலையினால் அலங்கரிக்கப்பெற்ற. கோதை-சேர அரசன். பகடு-யானை. கன்னிநாடு-பாண்டிநாடு. கன்னியந்தரளம்-அழியாத அழகியமுத்து.

பணியி னங்களின் மணிநவ மணிச்சரப் பணிகள்
குணித நீத்திடு மேலமோ டினியதக் கோலம். (27)

கங்கை யுற்றநீர்க் கங்கைதன் புதல்வரங் கணங்க
ளெங்க ணும்பொருந் துவரையோ டெதிர்த்தசெந் துவரை
துங்க வெண்மணற் கரைகள்போற் றொடுத்தசற் கரைகள்
பொங்கு பண்டியி னென்னல்வந் திறங்குபொற் செந்நெல். (28)

புவிபெ றுந்தவப் பேறதாய்ப் புத்தமு தூட்டுஞ்
செவிலி கம்பையாய்த் தொட்டில்சே டன்மணிச் சிகையா
யவிரு மாமணி முடிபுனை தொண்டைமா னம்பொற்
கவிகை நீழலிற் கண்வளர் குழவியாங் காஞ்சி. (29)

ஆதி யாமைதன் கிழங்கதா மீதுநா லைந்து
வாத வெம்பகை வேந்தர்பொன் னுளமா மருங்கே
காத லெண்டிசைப் பதிதளி ராநடுக் கமலப்
போது போன்றது தொண்டைமான் காஞ்சியம் புரமே. (30)

வட்ட மாநிலம் பாற்கட லாமக மேரு
நட்ட மத்ததா வீர்த்திட நன்குமுன் னுக

27. கணிதம்-எண்ணுதல். துகிர்-பவளம். பணி-ஆபரணம். குணி தம்-பெருக்கிக்கண்ட தொகை.

28. கம்-ஆகாயம். கை-இடம். கங்கைதன்புதல்வர்-வேளாளர். அங்கணம்-முற்றம் துங்க-உயர்ந்த. பொங்கு-மிகுந்த. பண்டி-வண்டி நென்னல்-முன்னைநாள்.

29. புவி-பூமிதேவி. புத்தமுது-புதியஅமுது. செவிலி-வளர்ப்புத் தாய். சேடன்-ஆதிசேடன். அவிரும்-பிரகாசிக்கும். கவிகை-குடை. கண்வளர்-நித்திரைசெய்யும். குழவி-குழந்தை.

30. ஆமை-கூர்மமாகப்பூமியைத்தாங்கியிருப்பது. மீது-மேல். வாதம்-காற்று. வெம்பகைநாலைந்துவேந்தர்-காற்றின்பகையாய் ஒன்பதாவதாகிய ஆதிசேடனென்னும் அரசர். அட்டநாகங்களுக்குந் தலைமையாதலின் அரசெனப்பட்டது. மருங்கு-பக்கம். பதி-தலங்கள். கமலப்போது-தாமரைமலர்.

ரிட்ட பாசமு மிருசுட ராக்கடைந் திடமேற்
பட்ட தென்னமு தாயது காஞ்சியம் பதியே. (31)

ஏம மால்வரை முதலிய வரைகடூ ணிருக்கின்
கோம கன்புரி காவணை மேயண்ட கூடஞ்
சோம சூரிய ரிருவருந் தூக்கணி விளக்கங்
காமன் மெய்க்கவி யாணமா மணவறை காஞ்சி. (32)

அருண மாமணிச் சுடிகையோ ரெண்மரு மரிக்கால்
பெருமை மாநில மரித்தலைச் சுமைமணிப் பீட
மிருமை தந்தரு ளம்மைகா மாட்சிபொன் னிமையக்
கருணை வல்லிவாழ் மலர்த்தவி சாயது காஞ்சி (33)

மனிதர் தேவரா யெளியவர் வலியராய் வறியோர்
தனிக ராயறி வில்லவர் விபுதராய்த் தளர்ந்தோ
ரனிக மாதர்வே ளனையராய்த் தோன்றுமற் புதங்கூ
ரினிய நீழலும் பாணியு முண்டவ ணிடையே. (34)

வேறு.

இன்னன வளம்பெற் றோங்க வென்றுமே கம்ப வாணன்
றன்னருள் மலிந்த காஞ்சித் தலந்தொழ வாழுந் தக்கோன்
பன்னுமா மறையா றங்கம் பழையநூல் பலவுந் தேர்ந்த
வன்னவூர் தியையொப் பான வந்தணன் சுசீல னென்பான். (35)

---

31. வட்டம்-விரிந்த. ஈர்த்திட-இழுக்க. நாகர்-தேவர். பாசம்-கயிறு. இருசுடர்-சூரியன் சந்திரன். மேல்-முன்னர். பட்ட-தோன்றிய. பூமியின் நடுவாயிருக்கும் மகமேருவைமத்தெனவும், அதனைச்சுற்றிவருஞ் சூரிய சந்திரர்களைக் கயிறெனவும் உருவகஞ்செய்து அதற் கேற்பப்பூமியைப் பாற்கடலாகவும், காஞ்சிநகரை யமுதாகவும், உருவகஞ்செய்தார்.

32. ஏமம்-இமயம். வரைகள்தூண்-மலைகள்தூண். இருக்கின்கோமகன்-வேதத்திற்குத்தலைவனுகிய பிரமன். தூக்கணிவிளக்கம்-தூக்குகின்ற அழகாகிய விளக்கு. காமன்-மன்மதன்.

33. அருணம்-செம்மை. சுடிகை-உச்சி. எண்மர்-எட்டுநாகங்கள். அரி-சிங்கம். மணி-அழகிய. இருமை-இம்மை மறுமை. இமையம்-இமயமலை அரசன். தவிசு-ஆசனம்.

34. விபுதர்-அறிஞர். அனிகமாதர்-மாதர்களாகியசேனையையுடைய. வேள்-மன்மதன். நீழல்-நிழல். பாணி-நீர்.

சிந்தையால் வாக்கான் மற்றைச் செயல்களாற் றிங்கள் வேணி
யெந்தையார் பணிக ளல்லா லியாதொன்று மியற்று கில்லா
னந்தணர் தமக்கு நேர்ந்த வாதுலர் தமக்கு மன்னஞ்
சந்தத மளிப்போன் மேன்மைத் தவமொரு தனுவாய் நின்றான். (36)

விண்ணவர் முனிவர் வேலை மேதினி யவரும் போற்றும்
பண்ணவ னவற்கு வாய்த்த பன்னிசுந் தரியாங் கன்னி
பெண்ணலங் கனிந்த தீஞ்சொற் பிணைவிழிக் குவளைச் செவ்வாய்
வண்ணமென் கரிய கூந்தன் மங்கையாம் பருவஞ் சேர்ந்தாள். (37)

மங்கையம் பருவஞ் சேர்ந்த மடந்தைசுந் தரியு மாரன்
கங்குன்மால் யானை தாக்கக் கற்புவீ டழிய நின்ற
துங்கநா ணுதி யாய தோழியர்த் துரந்து சொல்லு
மங்கணே தூதாய் வெவ்வே றுடவர்க் கூடி வாழும். (38)

அணங்கனு ணிலைமை யாவு மறிந்தருள் சுசில னென்பான்
றணந்திடத் துரப்பக் கட்டுந் தளைவிடு கரேணு வென்ன
வணங்கிடை துவள மாடே வலித்தெவர் தமையும் புல்லி
யிணங்கரும் யவனன் பாங்க ரெய்தினள் கைத வத்தாள். (39)

அலைகடற் புவியி னீச ரகத்திடை யருந்தி யாவின்
றுலைபடு மிறைச்சி யாதி துய்த்தடு சுரைகண் மாந்திக்
கொலைகள வாதி செய்து குத்தனுங் குணித்தற் கெட்டாப்
புலைதனக் கெல்லை யானுள் புண்ணியத் தொல்லை யானுள். (40)

36. ஆதுலர்-தரித்திரர்.

37. வேலைமேதினி-கடலால் சூழப்பட்ட உலகம். பண்ணவன்-தேவன். பன்னி-மனைவி கன்னி-தெய்வப்பெண். பிணை-மான். வண்ணம்-அழகு. மங்கைப்பருவம்-பெண்தன்மையடைந்த பருவம்.

38. கங்குல்மால்யானை-இருண்ட பெரிய யானை. கற்புவீடு-கற்பாகிய உள்ளீடென்னும்வலிமை. நாணுதி-நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. துரந்து-நீங்கி.

39. அணங்கனுள்-தெய்வப் பெண்ணை யொத்தவள். தணந்திட-மனம்போல்போகும்படி. துரப்ப-செலுத்த. கரேணு-பெண் யானை. வணங்கு-வளைந்த. மாடு-பக்கம். வலித்து-வலுவில். புல்லி-அணைந்து. யவனன்-துலுக்கன். கைதவம்-வஞ்சனை.

40. துலைபடு-நிறைந்த. சுரை-கள். மாந்தி-குடித்து. குத்தன்-நல்வினை தீவினைகளைக் கணக்கெழுதி யமனுக்குக் காட்டுங்குத்தன். குணித்தற்கு-கணக்கிடுதற்கு. புலை-பொல்லாங்கு. தொல்லை-தூரம்.

ஆசுறு நர்கிற் கர்ளா மாங்கிரு வோரு மெண்ணேழ்
தேசமுந் திரிந்து மீள்வார் சிந்தையின் வசத்தா லன்றிப்
பேசரு மனந்த் கோடி பிறப்பிலோர் பிறப்பிற் செய்த
மாசறுந் தவத்தா லீசன் வச்சிர வனம்வந் துற்றார். (41)

வழிவருந் துயரீ மாற்றூர் மலரயன் புனலுேய்ந் தீங்கே
யிழிதரு மனத்தோர் வாளா விறுத்திடு மூன்றும் வைகற்
பிழிபடு கங்குற் போழ்திற் பிரமதீர்த் தத்தின் மாடே
விழிதுயில் புரியு மெல்லை வெவ்வரா வெழுந்த தன்றே. (42)

பத்திகூ ரகட்டு வட்டப் பணுமணி மகுடத் துச்சி
துத்திய கவைநாக் கூர்முட் டுளையெயிற் றழல்வாய்ப் பாந்தள்
கொத்தலும் விடமீக் கொண்டு குறுந்துயி லுணரா முன்னந்
தத்துவந் தளர்ந்து மீளாத் தடந்துயில் புரித லுற்றார். (43)

துஞ்சிய விருவ ராவி துண்ணெனப் பதைத்துத் துள்ளி
யஞ்சுறச் சீறிச் சூழ்ந்த வந்தகன் றூத ராழி
நஞ்செனக் கறுத்த மெய்யர் நாண்மதி யெயிற்றுப் பேழ்வாய்
விஞ்சழ லனைய பங்கி வெடிகுரல் வெறித்த கண்ணர். (44)

கதைகொடு புடைப்பர் வீக்கிக் கட்டுவர் கவுளி லங்கை
புதைதர விடிப்பர் வீழ்ந்து பொடிபட விடக்கா றாக்கி

---

41. ஆசு-குற்றம். எண்ணேழ்தேசம்-ஐம்பத்தாறுதேசம். சிந்தையின்வசம்-மனத்தாலெண்ணுதல். மாசு-குற்றம்.

42. மலரயன்புனல்-பிரமதீர்த்தம். இழிதரு-குற்றம்பொருந்திய. வாளா-சும்மா. இறுத்திடும்-இருந்திடும். வைகல்-நாள். பிழி-கள். அது மயக்கத்தைக் குறித்தது. கங்குல்-இரா. மாடு-பக்கம். வெவ்வரா-கொடிய பாம்பு.

43. பத்தி-வரிசை. அகடு-வயிறு. வட்டப்பணுமணிமகுடத்துச்சி-விரிந்த படத்தில் இரத்தினத்தையுடைய தாயும் மகுடமாகிய உச்சியில். துத்திய-படப்பொறியையுடையதாயும். கவை-பிளவு. எயிறு-பல். பாந்தள்-பாம்பு. குறுந்துயில்-நாள்தோறுங்கொள்ளும் நித்திரை. உணரா முன்னம்-விழிக்குமுன். தடம் துயில்-பெரியதுயிலாகிய மரணம்.

44. துஞ்சிய-மரணமடைந்த. துண்ணென-விரைவாக. அந்தகன்-இயமன். ஆழி-கடல். மெய்-சரீரம். நாள்மதி-இளஞ்சந்திரன். எயிறு-பல். பேழ்வாய்-பிளந்தவாய். விஞ்சழல்-மிகுந்த அக்கினி. பங்கி-புறமயிர். குரல்-சத்தம்.

யுஞ்தகுவ ரசனி வாய்விட் டுறுக்குவர் ஞாளி யென்னப்
பதைபதைத் தெழுந்து பேழ்வாய்ப் பற்கொடு கறிப்பச் செல்வார். (45)

சூழுமித் தண்டமாதி சொல்லருந் துன்ப மென்னு
மாழியி லாழும் வண்ண மலைத்தலைத் திருவர்ப் பற்றிப்
பாழுறு கான யாறுப் படர்குவார் படரு மெல்லை
யேழைபங் காள ஞன வெம்பிரா னருளிச் செய்யும். (46)

நந்திநீ வருதி யென்று நாம்பிரி யாது வாழு
மிந்தவச் சிரவ னத்தி லெய்தியிப் பிரம தீர்த்தத்
துந்தியந் புனறோய்ந் தன்ன வுறுபுனற் கரையின் முன்னுச்
சிந்தையுற் றமர்ந்து மூன்றுந் தினத்திராத் திரியில் வீயும். (47)

யவனசுந் தரியார் தம்மை யீர்த்திடு மியம தூதர்த்
தவனன்முன் னிருளி னீக்கித் தருதிநீ விரைவி னென்னச்
சிவனரு டலைமேற் கொண்டு சினந்தெழு நந்தி மேருப்
பவனவே கத்திற் சென்று பகட்டிறை படையைக் கண்டான். (48)

எதிர்த்தவன் படையி னீக்கி யவனசுந் தரியார் தம்மை
விதித்தபொன் மானத் தேற்றும் வேலையிற் சூலம் வாள
மதித்தவச் சிரமு லக்கை வாங்கிவெம் மறலி தானை
கதித்தசீர் நந்தி யெந்தை கணத்தினை வளைந்த தன்றே. (49)

45. கதை-தண்டாயுதம். புடைப்பர்-அடிப்பர். வீக்கி-நெருக்கி. கவுள்-கன்னம். இடக்கால்-இடதுகால். அசனி-இடி. ஞாளி-நாய். கறிப்ப-கடிக்க.

46. இருவர்ப்பற்றி-இருவரைப்பற்றி. கானயாறு-காட்டாறுபோலாக. படர்குவார்-செல்லுவார். ஏழைபங்காளன்-சிவபெருமான்.

47. உந்தி-நீர்ச்சுழி. தோய்ந்து-முழுகி. முன்னு-இது பிரமதீர்த்தமென்று கருதாத.

48. யவனசுந்தரியார்-யவனனுகிய துலுக்கனும் சுந்தரியுமாகியஇருவரை. தவனன்-சூரியன். இருளின்-இருள்போல. மேருப்பவனவேகத்தின்-மேருமலையினின்று வருங்காற்றின் வேகம்போல். பகட்டிறை-இயமன்.

49. மானம்-விமானம். வாள-வாள். மறலிதானை-யமன்படை. கதித்த-செல்லுகின்ற.

## வேறு.

கந்த ரம்பல வுருக்கொடு வருவபோற் கறுவு
சிந்தை யார்கணந் தேவர்தங் கணத்தின்மேற் சீறி
வந்த வேல்லையின் மழுப்படை யொடுசடை மௌலி
நந்தி நாயகன் கூற்றுவர் கணத்தின்மே னடந்தான். (50)

மழவி டைப்பா னருள்பெறுங் கணம்வருந் தாமற்
பழவி னைக்கொடுங் கொலைபுரிந் துயிரெலாம் பருகு
மழல்வி ழிக்கடுந் தூதுவ ரதிரவிண் ணதிரச்
சுழலு மாருத மெனத்திசை முகந்தொறுஞ் சுழன்றான். (51)

கொட்ட மிட்டவர் தலையினை யடியரைக் குறுகித்
தொட்ட கையினைத் தோளினை நாவினைத் துணியா
வட்ட திக்கினுந் துரந்தனன் யவனசுந் தரியை
யிட்ட மானமே லேற்றிய நந்தியா மெம்மான். (52)

ஆல மார்ந்திடு மண்ணலே யடியனின் னருளாற்
கால தூதரைத் துரந்தன தன்பரைக் கனங்கொள்
கோல மானமேல் வைத்திவண் கொணர்ந்தன னென்னப்
பால லோசனன் றிருமுடி துளக்கினன் பகரும். (53)

ஆரி யன்னெம தருவொடுஞ் சுந்தரி யமலைக்
காரி கைக்குள வடிவொடுங் கையிலையிற் கலந்திச்
சீரின் வாழ்கென விடுத்தன னிருவருஞ் சென்றார்
போரில் வெந்நிடுந் தூதுவர் மறலிபாற் புகுந்தார். (54)

---

50. கந்தரம்-மேகம். கறுவு-சினம். வேல்லை-பொழுது. நந்திநாயகன்-நந்தியாகிய நாயகன்.

51. மழவிடை-இழமையான ரிஷபம். விண்-ஆகாயம். மாருதம்-காற்று. சுழன்றான்-திரிந்தான்.

52. கொட்டம்-பொல்லாங்கு. குறுகி-நெருங்கி. துணியா-வெட்டி. துரந்தனன்-ஓட்டினன். எம்மான்-எமது தெய்வம்.

53. துரந்து-துரத்தி. கனம்-பெருமை. கோலம்-அழகு. மானம்-விமானம். பாலலோசனன்-நெற்றிக்கண்ணனாகிய சிவபெருமான். பாலம்-நெற்றி. லோசனம்-கண். துளக்கினன்-அசைத்தவனாகி.

54. ஆரியன்-மிலேச்சன். அமலைக்காரிகை-மலமில்லாதவளாகிய உமாதேவியார். வெந்நிடும்-முதுகுகாட்டி ஓடிய. மறலி-யமன்.

கால நாதனைக் கைதொழு திறைஞ்சினர் கடவுள்
சூல நாயக வின்றனை வுனதடித் தொழும்பு
ஞால மீதியா மாற்றுவா னொருவழி நண்ண
வூல கண்டார்தங் கணங்கள்வந் தெமையெதிர்த் தலைத்தார். (55)

வாளி ழுந்தனங் கப்பண மிழந்தனம் வயிரத்
தோளி ழுந்தன நாவொடு பற்களுந் துணிந்தோங்
கேளி ழுந்தன மென்றழு திரங்குதல் கேளா
நாளு ணர்ந்தநா யகனுள விழிகொடு நாடும். (56)

நாடி யோர்ந்திடு மறலியும் வனமுக நகர்வாழ்
கேடி லாப்பரன் றிருவருள் பிழைத்தனன் கெட்டேன்
வாடி னேனென மருண்டனன் மேலுய்யு மாறு
நேடி னன்றன தய்யன் றடிபுக நினைந்தான். (57)

கோதி லாத்தரு மன்னெழுந் தந்தரங் குறுகி
யாத பன்றனை யடுத்துநின் றெனையரு ளய்யா
சீத மாமதி வேணியன் றிருவருள் பிழைத்த
பாத கந்தனை நீக்குமா றருளெனப் பணிந்தான். (58)

பணிந்த மைந்தனை நோக்கிய பரிதியும் பரிவா
லணிந்த வெண்புனற் சடையினன் றலத்தடி யவர்பாற்
றணிந்து போற்றுத லன்றியுன் சண்டரு நீயுந்
துணிந்து செய்வதென் னென்றவர் பெருமையைச் சொல்லும். (59)

கண்ண னுன்முகன் றேடியுங் காணுறாக் கருணை
வண்ண மேனியைத் தமதுளத் தடக்கிய மாண்பா

---

55. காலநாதன்-யமன். அலைத்தார்-வருத்தினார்.

56. கப்பணம்-கைவேல். வயிரத்தோள்-பிறரால்பேதிக்கப்படாத தோள். கேள்-மதிப்பு. கேளா-கேட்டு. நாள்-குறித்துவரையறுக்கப்பட்ட நாள்.

57. நேடினன்-விரும்பினன். அய்யன்-தந்தையாகிய சூரியன்.

58. தருமன்-யமன். அந்தரங்குறுகி-ஆகாயவழியாகச் சென்று. ஆதபன்-சூரியன். எனையருளய்யா-என்னைப்பெற்ற தந்தையே. வேணி-சடை.

59. பரிதி-சூரியன். பரிவால்-அன்பால். சண்டர்-காலதூதர். அவர்-அடியார்.

லண்ண றன்னடி யவர்மகி மையையளந் தனந்த
னெண்ணு மாயினு மிலக்கிலை யென்றரு ளென்று. (60)

இன்னு மந்தக கேண்மதி யியம்புகேன் புராணந்
தன்னி லோதிய வெம்பிரான் றலந்தனி லெய்தி
முன்னு மோர்தின மோர்பக லிராவொரு முகூர்த்தங்
கன்ன லொன்றனைக் கணம்வதிந் தவரையுங் கவரேல். (61)

அவர்த மான்மிய மறிகில னீயுமஃ தறியாய்
சிவனை யன்பரை வேறெனக் கோடலை செல்வ
புவன மீதுன தடியரா லுனக்குமுன் பொருட்டித்
தவறு வுந்ததின் றெனக்குமென் றாதவன் சாற்றும். (62)

அரிய தாகுமிச் சிவத்துரோ கத்தினை யகற்றற்
குரிய நன்னெறி புகலுவ னியாதெனி னுரகன்
விரித லைச்சுமை மேதினி போற்றிய விருத்த
புரியி லெய்திநீர் படிந்தியற் றுகசிவ பூசை. (63)

தோம டுத்திடும் யானுமிப் பாதகந் தொலைப்பா
னேம வத்தலம் புகுந்திறை யவனுக்கீ சான
மாமி லக்குமி தீர்த்தமுன் னென்பெய ராலோர்
வாம தீர்த்தமுண் டாக்கிமூழ் கியபினூன் மரபால். (64)

விரிந்த செஞ்சடைச் சங்கரன் பாதமெய்ப் பூசை
புரிந்து போற்றியிச் சிவத்துரோ கத்தினைப் போக்கித்
தெரிந்து நல்வரம் பெற்றுமீள் குவன்றனிச் செல்வ
பரிந்து முன்னரெய் துகவெனக் கதிரவன் பணித்தான். (65)

---

60. கண்ணன்-விட்டுணு. நான்முகன்-பிரமன். அனந்தன்-ஆதி சேடன். இலக்கு-அளவு. என்று-சூரியன்.

61. அந்தக-யமனே. மதி-முன்னிலையசைச்சொல். முன்னும்-கருதும், கன்னல்-நாழிகை. வதிந்தவர்-வசித்தவர்.

62. அடியர்-வேலைக்காரர். ஆதவன்-சூரியன்.

63. உரகன்-ஆதிசேடன். விருத்தபுரி-பழம்பதியென்னுந் திருப் புனவாயில்.

64. தோம்-குற்றம், ஏமம்-காப்பு. வாமம்-அழகு. நூன்மரபு-நூலின்முறை.

தந்தை வாய்மொழி மந்திர மென்றடி தாழ்ந்த
வந்த கன்விடை கொண்டுநம் வணமுக மடுத்தான்
முந்து றுஞ்சிவ கங்கையா டியபுனன் மூழ்கி
யெந்தை யார்திரு நீறுகண் டிகையணிந் திருந்தான். (66

இருந்து நாடொறுஞ் செய்கட னூற்றியஞ் செழுத்தை
வருந்து மன்பொடு பல்லுருச் செபித்திடு மறலி
பொருந்து பூசனைக் குரியன கைக்கொடு புகுந்தா
னருந்து மால்விட முண்டருள் கண்டனா லயமே. (67)

நந்தி சங்கரன் முன்பணிந் தெழுந்துபோய் நால்வாய்த்
தந்தி கந்தனை வணங்கிவச் சிரவனந் தழையு
மெந்தை நாதனைப் பூசனை புரிந்துபோந் திசைகூர்
சிந்தை யோடுகச் சணிமூலை யவளையர்ச் சித்தான். (68)

ஆங்கு நின்றுவந் தெந்தையை வணங்கின னருவி
தூங்கு கண்ணினன் முகிழ்த்திடு பங்கியன் றுளங்கி
வாங்கு மெய்யின னுனந்த பாவச மனத்தன்
வீங்கு தோளினன் குவித்தசெங் கையினன் விளம்பும். (69)

நித்த மாலயன் பணிதரு நிமலனே யபயம்
மூத்த னேயுல குயிர்க்கெலா மூலமே யபயம்
பத்த ரெண்ணிய படியருள் பரமனே யபயம்
அத்த னேதிருப் பழம்பதி நாதனே யபயம். (70)

வண்ண மால்விடை மேல்வரும் வள்ளலே யபயம்
பண்ணு றுங்கனி வாயுமை பாகனே யபயங்

67. அருந்து என்பதை, துஅரும் என அன்வயப்படுத்தி எவரு மூண்ணுதற்கரிய எனப் பொருள்கொள்க. மால்-மயக்கம்.

68. நந்திசங்கரன்-நந்தியாகிய சங்கரன். அதாவது சாரூபம்பெற்ற நந்தி. நால்வாய்-தொங்குகின்ற வாய். தந்தி-யானைமுகத்தையுடைய விநாயகர். இசைகூர்-இன்பமிகுந்த.

69. எந்தை-சிவபெருமான். அருவி-நீர். தூங்கு-சொரியும். முகிழ்த்தல்-சிலிர்த்தல். பங்கி-உரோமம். துளங்கிவாங்கு-நடுங்கிவளைந்த. வீங்கு-பூரித்த.

கண்ணு மாநிலத் தேரொழுங் கடவுளே யபய
மண்ண லேதிருப் பழம்பதி நாதனே யபயம். (71)

வேண்டு மித்திறம் வேண்டிய கூற்றுவன் விமலா
வேண்டு மன்பினை வேண்டியென் பிழைபொறுத் தருள்
வேண்டு மேலுன தடியவர் பெருமையை விளம்ப
வேண்டு மென்றலு மெழுந்தனன் சிவன்மழ விடைமேல். (72

பிழைபொ றுத்தனந் தென்றிசை வருஞ்சிறு பிள்ளாய்
குழைம னத்துநம் மடியர்தம் பெருமைகூ றுவங்கேள்
தழைய முத்தியும் புத்தியுங் கணத்திடைத் தாநாம்
விழையு மித்தல மென்றுநங் கைலையின் மேலாம். (73

கேத்தி ரத்தின்மிக் கானவிப் பழம்பதி கெழுமி
மாத்தி ரைப்பொழு தோரரை மாத்திரை வதிந்தோ
ரேத்து சீர்ப்பழம் பதிசிவ கங்கையென் றெவருந்
தோத்தி ரஞ்செயும் வைகறைப் பொழுதினிற் சொன்னோர். (74)

மன்னு பாதகப் பஞ்சினுக் கழற்பொறி வடிவென்
றுன்னு நம்பெய ராயமா விலிங்கமென் றுரைப்போர்
பன்னு மங்கையைக் கச்சணி முலையெனப் பகர்வோர்
பின்னு நெஞ்சிடை நினைகுவோ ரவர்த்தொழும் பெரியோர். (75)

எங்க ணெய்தினு மவரிடத் தெய்தலை யியமா
துங்க மாளிகை சூழுமிப் பழம்பதி சூழ்ந்து
தங்கு மையிரு கடிகையெல் லையிற்சரா சரங்கள்
பொங்கு மாருயி ரவியினு மவற்றகம் புகுதேல். (76)

---

71. கண்ணுமாநிலம்-கருதப்படும் பெரிய பூமி.

72. வேண்டுமித்திறம்வேண்டிய-விருப்பத்துடன் இவ்வாறுபிரார்த்தித்த.

73. விழையும்-விரும்பும்.

74. கேத்திரம்-க்ஷேத்திரம். கெழுமி-கூடி. வைகறைப்பொழுது-விடியுங்காலம்.

75. பின்னுநெஞ்சு-கலந்தமனம். அவர்த்தொழும்-அவரைத்தொழும்.

76. எய்தலை-செல்லாதே. இயமா-யமனே, துங்க-உயர்ந்த. கடிகை-நாளிகை. அவியினும்-மரணமடையினும். அவற்றகம்-அவ்வுயிர்களினிடத்து.

ஓதுமித்திற மயர்ந்துநீ யாயினு முனது
தூத ராயினு நமதன்பர் மருங்குறச் சூழ்ந்தாற்
காது நம்பெருங் கணங்கடண் டித்திடக் கலங்கிப்
பாத லம்புகு வதுதிண மென்றருள் பரமன். (77)

குறையி லுன்பதி யெய்துவை கூற்றுநீ நம்பா
னிறையு மன்பொடு வாழ்கென வருளிய நிமலன்
முறையிற் றோன்றிய வானவின் மீண்டுகொண் மூவின்
மறையு மாறென மாவிலிங் கத்திடை மறைந்தான். (78)

வரந்த ரப்பெறுந் தருமனு மும்முறை வணங்கிப்
புரந்த ரன்புரி கோயிலை வலங்கொடு போநதான்
பரந்த தன்பெருங கணம்புடை சூழத்தன் பதியி
லரந்தை யற்றிருந் தனனிஃ தாதப னறிந்தான். (79)

சாற்று மிச்சுதை படிப்பவர் கேட்பவர் தமக்கும்
போற்றி யன்புட னெழுதுவோர் தமக்குமெப் பொழுதுந்
தூற்றி டும்பழி யிலைபவ மிலையெம தூத
ராற்றும் வேதனை யிலையிலை யிதுசிவ ஞணை. (80)

இயமச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 369.

---

## 9-வது தினபதிச் சருக்கம்.

சிந்தை யற்புறு நைமிச முனிவர்க்குச் சிவனை
யந்த கன்பா சியகதை யுரைத்தரு ளறிஞன்
மைந்த ஞல்வருஞ் சிவத்துரோ கத்தினை மாற்ற
வெந்தை பூசனை செயமிர வியின்செய லியம்பும். (1)

---

77. அயர்ந்து-மறந்து. மருங்கு-பக்கம். காதும்-கொலைசெய்யும். பாதலம்-நரகம்.

78. வானவில்-வானத்திற்றோன்றியவில். கொண்மூ-மேகம்.

79. தருமன்-யமன். புரந்தரன்-இந்திரன். அரந்தை-துன்பம். ஆதபன்-சூரியன்.

80. வேதனை-துன்பம்.

1. அற்பு-அன்பு. அந்தகன்-யமன். பாசிய-பூசித்த. அறிஞன்-சூதன். மைந்தன்-யமன்.

வேறு.

பாசமுந் தண்டுஞ் சூலப் படையுமேந் தியதன் பாலன்
காசினி தழைய வாழுங் கச்சணி முலையாள் பாகன்
பூசனை புரிந்து தூய புண்ணியர்க் கிடுக்கண் செய்த
மாசகற் றியசீர் கேளா மகிழ்ந்துதன் மாசு தீர்ப்பான். (2)

மூச்சகம் விளங்க வான் முகட்டெழு மொற்றை யாழிப்
பச்சையம் புரவித் திண்டேர்ப் பரிதிவா னவனிப் பாரிற்
கச்சணி களபக் கொங்கைக் கௌரிதன் கணவன் வாழும்
வச்சிர வனம்வந் துற்றான் மன்னுயி ரெவையும் வாழ. (3)

கனகநா டளிக்கும் வெற்றிக் கற்பக நீழற் கோமா
னனகனைப் பூசித் தெய்து மரியதொல் வரங்க ளெல்லாம்
வனமுகத் தென்று மன்னு மாதவர் முகத்திற் கேட்டுத்
தினபதி தானவ் வாறு செய்குவான் சிந்தித் தானல். (4)

எண்ணிய வடிக்கீ சான விலக்குமி தீர்த்த முன்னர்த்
திண்ணிய தன்பே ரிட்டோர் தீர்த்தமுண் டாக்கி மூழ்கிக்
கண்ணிய கருணை யீசன் கங்கையே முதல வாய
புண்ணியப் புனல்ப டிந்து பூதிசா தனம்பு னைந்தான். (5)

நெஞ்சிலஞ் செழுத்தை யோதி நிறைந்ததன் கணங்கள் சாந்த
மஞ்சன மாதி யேந்தி மருங்குறக் கோயி லெய்தி
யஞ்சலி செய்து வீழ்ந்தட் டாங்கபஞ் சாங்க மாகப்
பஞ்சடி பாகன் முன்றிற் பணிந்துவெய் யவனுட் புக்கான். (6)

---

2. கேளா-கேட்டு. தீர்ப்பான்-தீர்த்தற்கு.

3. மூச்சகம்-மூன்றுலோகம். ஒற்றையாழி-ஒரு சக்கரம். புரவி-குதிரை. பரிதிவானவன்-சூரியதேவன். அல்லது சூரியனாகிய வானலோகத்திலுள்ளவன்.

4. கனகநாடு-பொன்னுடாகிய தேவலோகம். கற்பகநீழற்கோமான்-இந்திரன். அனகன்-சிவபெருமான். வனமுகம்-திருப்புனவாயில். தினபதி-சூரியன்.

5. கண்ணிய-பெரிய. பூதி-விபூதி-சாதனம்-உருத்திராக்கம். புனைந்தான்-அணிந்தான்.

6. சாந்தம்-சந்தனம். மஞ்சனம்-நீர். பஞ்சடி-பஞ்சுபோலுமிருதுவானபாதத்தையுடைய உமாதேவியார். முன்றில்-சந்நிதியில். வெய்யவன்-சூரியன்.

வாயில்கா வலரைப் போற்றி வாத்துவா திபனை வாழ்த்தித்
தீயினுற் பூத சுத்தி செய்துதன் சிந்தை யுள்ளே
நேயக்கற் பூசித் தாங்கே நல்லருள் பெற்றுத் தானந்
தூயவாந் திரவி யத்தின் சுத்தியும் புரிந்த பின்னர். (7)

மந்திர சுத்தி செய்து மாவிலிங் கத்தி லாவி
னைந்தவை முதல வாக வபிடேக மெவையு மாற்றித்
தந்திர நூலிற் சொன்ன சத்தியா திசத்தி யந்தத்
தெந்தையா சனமும் பூசித் திறைவனை யாவா கித்தான். (8)

பொருந்தில யாங்க மாதி பூசனை புரிந்து வெவ்வே
றருந்துதற் கினிய வன்ன மடைக்காய்நி வேதித் தாங்கே
பரிந்திடு தூப மாதி பணிமாறிப் போற்றி யம்மை
விரிந்தசெங் கமலத் தாளை விதியினர்ச் சித்து வெய்யோன். (9)

அம்மையோ டப்ப னுய வண்ணலைச் சூழ்வோன் றன்றாட்
செம்மல ரொன்றே டொன்று நீண்டுமா றங்கை கூப்பி
மும்முறை சூழ்ந்து சிவன் முத்திசேர் பேரா னந்த
விம்மித னுன வெய்யோன் விமலனைப் போற்ற லுற்றான். (10)

---

7. வாயில் காவலர்-துவாரபாலர். வாத்துவாதிபன்-வாஸ்த்து புருஷன்.

8. ஆவினைந்து-பசுவின் பால், தயிர், நெய், சாணம், நீர் என்பன. ஆற்றி-செய்து. தந்திரம்-ஆகமம். சத்தியாதி சத்தியந்தத் தெந்தையாசனம்-ஆதாரசத்திமுதல் சிவசத்தி முடிவான சிவாசனம்.

9. இலயாங்கமாதி-இலயாங்கம் போகாங்கம். லயாங்கமாவது அங்கப்பிரத்தியங்கபாவனையின்றிப் பூசிப்பது. போகாங்கமாவது அங்கப் பிரத்தியங்க பாவனையோடு பூசிப்பது. அடைக்காய்-வெற்றிலை பாக்கு. வெய்யோன்-சூரியன்.

10. தன் தாள் செம்மலர் ஒன்றேடொன்று நீண்டுமாறு அங்கை கூப்பி-தனது கையின் கண்ணதாகிய நாளத்தோடு கூடிய தாமரை மலர்களொன்றேடொன்று உரிஞும்படி கைகளைக் கூப்பி என்க; சூரியனுடைய கைகளிரண்டினும் இரண்டு தாமரைமலர்களெப்பொழுதுந் தரித்திருக்கப்பெற்றன ; இதனைச் சிவபூஜாவிதி சௌர பூஜாத்தியானச் செய்யுளிற் காணலாம்.

## வேறு.

ஆணு மாகிப்பெண் ணுருவமா யிவையலா வலியாய்க்
காணும் வேற்றுரு வாயரு வாயிவை யகலப்
பூணு நல்லுற வாய்ப்பகை யாயொரு பொதுவாய்த்
தாணு வாகிய பழம்பதி நாதனே சரணம். (11)

அந்த மாயுல காதியாய் நடுவுமா யகத்தி
லுந்து மொன்றதா யிரண்டுரு வாயிரண் டொன்றாய்
விந்து மேலதாய்க் கீழதா யெங்கணும் விபுவாய்த்
தந்தை யாகிய பழம்பதி நாதனே சரணம். (12)

இனைய பன்முறை போற்றிய வேல்லையி னெழுந்த
வனகன் மெய்த்திரு வாக்கெனு மந்தர வாணி
யுனது சிந்தையின் வேண்டிய தெவையென வுவந்து
வினவும் வாசகங் கேட்டலும் பணிந்தெழும் வெய்யோன். (13)

அத்த னேயுன தடியிணைக் கசஞ்சல மான
பத்தி வேண்டுவன் வேண்டிய விப்பழம் பதியிற்
புத்தி கூர்தரத் தொட்டடி யேன்பெயர் புனைந்த
தத்து தெண்டிரை வாவியிற் படிந்தெழுந் தவத்தோர். (14)

யாவ ரேனுமுப் பலனொடு மூன்றியா கத்தின்
மேவ ரும்பல னெய்தவும் வேண்டுவன் மேலுந்
தாவி லாதசா ரூபமு மவர்பெறத் தமியேன்
பூவில் வேண்டுவ னென்றலு மிறையருள் புரிந்தான். (15)

---

11. தாணு-நிலைபேறுடையது.

12. உந்தும்-செலுத்தும். இரண்டுருவாய்-சிவம் சத்தி யென இரண்டு தன்மையாய். யிரண்டொன்றாய்-சிவம் சத்தி யென இரண்டாய் நின்றும் பிரிக்கப்படாது ஒன்றாய். விந்து-சுத்தமாயை. விபு-வியாபகம்.

13. இனைய-இத்தன்மையவாய். எல்லை-சமயம். அனகன்-சிவபெருமான். அந்தரவாணி-ஆகாயவாக்கு.

14. அசஞ்சலம்-உறுதி. புத்தி கூர்தர-அறிவுமிக. தொட்டு-தோண்டி. தத்து-தாவுகின்ற. திரை-அலை. வாவி-தடாகம்.

15. முப்பலன்-இம்மை மறுமை வீடு. தாவு-கேடு, பூவில் அவர் பெற எனக்கூட்டுக. பூவில்-பூமியில்.

அருளு நல்வரம் பெற்றரு ளிரவியு மமலன்
றிருவ டித்துணை பணிந்தனன் விடைகொடு சென்றான்
வருண மாமணித் தேரின்மீ தேறிவான் வழியா
லிருளு றுதகன் மண்டல மெய்தின னிருந்தான். (16)

திணபதிச் சருக்கம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 385.

## 10-வது உடுபதிச் சருக்கம்.

ஐய மாசறு திரிபறச் சுருதிநூ லறிந்த
தூய்ய மாதவர் பணிந்தனர் வினவலுஞ் சூதன்
வெய்ய வன்கதை யுரைத்தபி னுரோகணி மீது
மைய லாகிய வுடுபதி பெருஞ்செயல் வகுக்கும். (1)

ஆர ணந்தவ முனிவர்க ளிமையவ ரனந்தா
னா ரணன்றொழத் திரிபுரம் பொடிபட நகைத்த
பூர ணன்றனை யுடுபதி பூசனை புரிந்த
கார ணந்தெரிந் துரைத்திடுங் காதலிற் சூதன். (2)

ஆதி நாளையி லாதித னுந்திவந் தடுத்த
வேத நான்முகன் பயந்தரு டக்கன்விண் ணுலக
மூது ரைப்படி புரக்குநா ளசுவதி முதலாம்
பேதை மாதர்மூ வொன்பதின் மரைமுறை பெற்றான். (3)

பெற்ற பெண்களோன் பானுறழ் மூவரைப் பிறங்க
முற்று ணர்ந்திடு முனிவரர் பாவகன் முன்னர்க்
கற்றை வெண்மதிக் கடவுள்கைக் கொடுத்திடக் களிப்பின்
முற்ற வன்னிரு பானெழு வோரையு மணந்தான். (4)

16. துணை-இரண்டு.

1. ஐயம்-சந்தேகம். திரிபு-விபரீதம். உடுபதி-நக்ஷத்திரங்களுக்குத் தலைவனாகிய சந்திரன்.

2. ஆரணம்-வேதம். அனந்தான்-பிரமன். நாரணன்-விட்டுணு.

3. ஆதி-விட்டுணு. வேதநான்முகன்-பிரமன். பயந்தருள்-பெற்ற. மூதுரை-சிவபெருமான் திருவாக்கு. புரக்குநாள் காக்குநாளில்.

4. ஒன்பானுறழ்மூவர்-இருபத்தேழுபேர். பிறங்க-விளங்க. பாவகன்-அக்கினிதேவன். கற்றை-கிரணக்கூட்டம்.

வேட்ட மங்கையர் தம்மொடு தன்னக மேவி
யீட்டு மன்புறச் சசிநனி கலந்திடு மெல்லைக்
கோட்டு குங்குமக் கும்பமொத் திலங்கிய கொங்கை
வாட்டு நுண்ணிடை யுரோகணி மேன்மனம் வைத்தான். (5)

சகட மேன்மயல் கூர்மதி மேற்சக டத்தால்
விகட மாமிரு பானறு வோர்களும் விண்ணின்
முகடு காத்தரு டாதைபா லடுத்துடன் முற்றுந்
துகட ருங்கலை மதிக்கண வன்செயல் சொன்னார். (6)

அளந்தி டாவனப் பரிவையர் துயரறிந் தைய
னுளந்த ணந்திடுங் கோபவெந் தீயெழ வொருத்தி
வளர்ந்த காதலான் மதிமயங் கியமதி மருகன்
றளர்ந்தி டுங்கய ரோகமெய் துகவெனச் சபித்தான். (7)

மாம னிட்டவெஞ் சாபத்தாற் றிருவுரு மாழ்குஞ்
சோம னான்முக னவைக்களம் புகுந்தனன் றொழுதான்
றேம னம்புயத் தாமனே மாறிரு வுந்திப்
பூம னேயெனப் புகழ்ந்தபி னிவையிவை புகன்றான். (8)

கயத்தி னாலுடல் வருந்தியுந் திருந்துரோ கணிதன்
மயத்த னாகிய மதிதனை நோக்கிய வனசப்
புயத்தி னான்முகன் புகன்றிடுங் கருமபூ மியினன்
னயத்த நான்மறை முனிவர்சூழ் விருத்தமா நகரம். (9)

---

5. வேட்ட-கலியாணஞ்செய்யப் பெற்ற. சசி-சந்திரன். நனி-மிக. கோட்டு குங்குமக்கும்பம்-எழுதிய குங்குமக்கலயம். வாட்டு நுண்ணிடை-மெலியும்படியான நுண்ணிய இடை.

6. சகடம்-உரோகணி. மதி-சந்திரன். விகடம்-வேறுபாடு. துகள்-குற்றம்.

7. வனப்பு அரிவையர்-அழகிய பெண்கள். தணந்து-வருந்தி. மதிமயங்கியமதி-அறிவு மயங்கிய சந்திரன்.

8. சோமன்-சந்திரன். நான்முகன்-பிரமன். தேமன் அம்புயம்-தேன் பொருந்திய தாமரை. தாமம்-இடம். பூமன்-பிரமன்.

9. கயத்தினால்-கயரோகத்தினால். விருத்தமாநகரம்-பழம்பதி யென்னுந் திருப்புனவாயில்.

ஆய தொல்பதி யொன்றுள தகத்தெமை யளித்த
மாய ஞருகத் தினுமழி யாதருள் வயத்தாற
பாய பல்லுயிர்க் கிருமையும் பரிந்துபா லிக்குந்
தாய ஞரென்றும் வாழ்வுறப் பெற்றதத் தலத்தில். (10)

இன்று புக்குநீ பிரமதீர்த் தத்தினுக் கெதிரே
துன்று முன்பெய ராலொரு பெரும்புன றொட்டு
நின்று மஞ்சனம் படிந்திறை பூசனை நிகழ்த்திற்
குன்று மிப்பிணி தீருமென் றயன்விடை கொடுத்தான். (11)

விதியை யன்பொடு வலங்கொடு பணிந்துடன் மீண்ட
மதியும் வச்சிர வனம்புகுந் தயன்முன்பு வகுத்த
துதிபெ றும்புனல் படிந்துடற் சோகமுந் தொலைத்தான்
றிதிய தாகுமத் தடத்தினுக் கிந்திர திசையில். (12)

அலங்க லம்புயத் தருச்சிகன் தீர்த்தமுண் டாக்கி
யிலங்கு சந்திர புட்கர ணிப்பெய ரிட்டுப்
புலங்கொ ளூரன்முறை படிந்துவெண் பொடியையெண் ணிரண்டு
தலங்க ளும்புனைந் தக்கமா லிகைபல தரித்தான். (13)

சிருட்டி யாதியைந் தொழில்புரி சிவன்றிருப் பூசைப்
பொருட்டெ டுந்தனன் மஞ்சனஞ் சாந்துகர்ப் பூர
முருட்டு மாழியந் தேரவ னுதிக்குமு னுணரா
விருட்டி லங்கையாற் றெரிந்துகொய் திடுமல ரேந்தி. (14)

---

10. அகம்-உந்தி. மாயஞருகம்-விட்டுணுப்பிரளயம். பாய-பரவிய. இருமை-இம்மை மறுமை. தாயஞர்-தாயையொத்தசிவபெருமான்.

11. தொட்டு-தோண்டி. மஞ்சனம்-நீர்.

12. விதி-பிரமன். மதி-சந்திரன். சோகம்-துன்பம். திதியது-நிலைபேறுடையது.

13. அலங்கல்-மாலை. அம்புயம்-அழகியபுயம். அருச்சிகன்-சந்திரன். புலம்-அறிவு. எண்ணிரண்டுதலம்-உச்சி, நெற்றி, மார்பு, கொப்புள், முழங்காலிரண்டு, புயம் இரண்டு, முழங்கை யிரண்டு, மணிக்கட்டு இரண்டு, கழுத்து, விலாப்புக்கம் இரண்டு, முதுகுக்குக்கீழ்நடு ஒன்றுமாம். அக்கமாலிகை-உருத்திராக்கமாலை.

14. உருட்டுமாழியந்தேரவன்-சூரியன். உணராவிருட்டில்-புஷ்பங்கண்ணுக்குப் புலப்படாத இருட்டில். அங்கை-அழகியகை.

ஆல யம்புகுந் தாகம விதிமுறை யால
நீல கண்டனை யருச்சனை புரிந்தய னின்ற
வேல வார்குழற் கன்னியா ராதனை யியற்றிப்
பால லோசனன் றனைவலஞ் சூழ்ந்துமுன் பணிந்தான். (15)

பத்தி மேற்கொள விருகணீர் சொரிதரப் பலவின்
மொய்த்த முள்ளென மெய்ம்மயிர் முகிழ்ப்ப முப்பொழுது
நித்த னாகிய நிமலமூர்த் தியைத்தியா னித்த
சித்த னாகம விதிமுறை தோத்திரஞ் செய்வான். (16)

வேறு.

ஆரண நார ணன்கண் ணருச்சனை புரிந்த பொற்றாட்
காரண கால கால கலையைந்துங் கடந்து நின்ற
பூரண விடபா ரூட புராந்தக புவன கோடி
பாரண நீல கண்ட பழம்பதிப் பரம தேவ. (17)

சங்கர வநாதி முத்த சச்சிதா னந்த ரூப
பொங்கர வணியும் வேணிப் புண்ணிய பூத நாத
கங்கைதன் கணவ ஞான கனகமன் றிடைந டித்த
பங்கய வரத வாழிப் பழம்பதிப் பரம தேவ (18)

சீதர பாண நாணுச் சேடனைச் செறிந்த வில்லுப்
பூதர தரநா தாந்த புங்கவர் தலைவ நீண்ட
காதல வான வுண்கட் கௌரிதன் கணவ வம்பொற்
பாதவா ரிசவ நாதிப் பழம்பதிப் பரமதேவ. (19)

---

15. ஆலம்-விடம். வார்குழல்-நீண்டகூந்தல். பாலம்-நெற்றி. லோசனம்.-கண்

16. பலவின்-பலாவின். மொய்த்த-நெருங்கிய. சித்தன்-சித்தத்தையுடையன்.

17. ஆரண-வேதசொரூபனே. காரண-மூவருக்கும்முதல்வனே. காலகால-யமனையுதைத்த காலையுடையவனே. கலையைந்து-நிவிருத்தி,பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதையென்பன. புராந்தக-திரிபுரதகனஞ்செய்தவனே. பாரணம்-உண்டல். இது சங்கரித்தன்மேற்று.

18. வேணி-சடை. வரத-வரந்தரத்தக்கவனே. ஆழி-கடல்.

19. சீதரபாண-விட்டுணுவைப் பாணமாகவுடையவனே. சேடனைநாணுச்செறிந்த-ஆதிசேடனைநாணாகவுடைய பூதரம்-பொன்மலை. தர-தரித்தவனே. நாதாந்த-நாதமுடிவானவனே. புங்கவர்-தேவர். உண்கண்-மைதீட்டியகண். வாரிச-தாமரையையுடையவனே.

என் றுவெண் மதியோன் போற்ற வெம்பிரா னென்ன லீன்ற
கன்றினுக் கிரங்கு மாப்போற் கௌரியுங் கலந்து தோன்ற
மின்றிகழ் பதினு ராட்டை மேனியுந் தோன்றத் தோன்றி
நின்றனன் விடைமே லஞ்ச லீயென்றான் மதுர வாக்கால். (20)

மழவிளங் குழவி தன்னை மார்பினுந் தோளின் மீதும்
விழைவுற வேந்து மாபோல் விதுவிலோர் கலையை வாங்கித்
தழனிறச் சடில மீது தரித்தனன் றாணு வாங்கே
பொழிமழைக் குலம்போல் வானோர் பொழிந்தனர் புதுப்பூமாரி. (21)

வேறு.

நின்றமதி கேட்கவெமை நீபூசித்த நெறிகேட்போர்
சாலோகம் பெறுக நின்சொற்
றுன்றியதோத் திரம்புகல்வோர் பெறுக வென்றுந்
தூயசா மீபநீ தொட்ட தீர்த்தத்
தொன்றியவன் பொடுபடிந்தோர் பெறுக யார்க்கு
முயர்ந்தசா ரூபமே மூலகுள் ளோரு
மின்றுமுதற் சந்திரசே கரனென் றெம்மை
யேத்திடுகென் றான்மறைக ளேத்த நின்றான். (22)

ஓதருமெய் வரம்பலவு முதவி யெம்மா
னுமையினொடு மாவிலிங்கத் துட்பு குந்தான்
சீதமதிக்க கடவுளுமெய்ம் மகிழ்ச்சி கூர்ந்து
சிவனைவலம் வந்திறைஞ்சிச் செங்கை கூப்பிக்
காதலொடு விடைகொண்டு மான மேறிக்
கணங்கள்புடை சூழநெடுங் ககன மாறா
மாதருறை வீடெய்தி யிருபா னேழு
மங்கையரின் புற்றுமணந் திருந்தான் மன்னோ. (23)

உடுபதிச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 408.

---

20. னென்னல்-நேற்று. ஆட்டை-ஆண்டு.

21. மழவிளம்-மிக இளமை. விழைவுற-விருப்பமுற. விது-சந்திரன். சடிலம்-சடை. தாணு-சிவபெருமான். மழைக்குலம்-மேகக்கூட்டம்.

22. துன்றிய-நெருங்கிய. ஒன்றிய-ஒருவழிப்பட்ட.

23. மானம்-விமானம் ககனம்-ஆகாயம், ஆறா-வழியாக. மணந்திருந்தான்-கூடியிருந்தான்.

## 11-வது சோமநந்திச் சருக்கம்.

இயலுமனத் தன்பினுடன் படிப்போர் கேட்போ
ரெழுதுவோர் வறுமைநோ யெவையு மற்றைக்
கயமுதலா கியபிணியு நீக்குந் திங்கள்
கண்ணுதலைப் பூசித்த காதை போற்றிக்
குயவரிச்செந் தீபவிழி வேங்கை கோமான்
குரைகழல்பூ சித்தகதை கூறக் கேண்மின்
றுயல்வருமுந் நூல்முனிவீ ரென்னச் சூதன்
றோகைபா கனைவணங்கிச் சொல்லு மன்றே. (1)

### வேறு.

நெடுங்கட லுடுத்த பார்முழு தய்ய நீடவம் புரிந்துமுக் கூறு
படுங்கன லோம்பு நைமிச முனிவீர் பகருவன் கேட்கவோ ருகத்தி
லொடுங்கவைம் புலனு மனந்தடு மாற வுயிரெலா மலமாச சீறி
யடுங்கொலை முதலாம் பாதக மியற்று மாக்கர்தங் குலத்திலோ
[ராக்கன். (2)

வாய்வினைக் கொடுவா ளெயிற்றினாற் கதையால்
வதைத்தபல் லுயிர்களின் குருதி
பாய்வினைத் தசைக ளயின்றுவெம் மதுக்கள்
பருகியும் பண்ணவர் முனிவர்
தாய்வினை முதியோர் மதலையர் மடவார்
தம்முகத் தினுஞ்சினந் தணியான்
தீவினைச் சேடத் தாற்புவி யுலகிற்
சினவரி யுழுவையாய்ச் செனித்தான். (3)

தோய்ந்திடு மருவிச் சாரலின் வனத்திற்
சுரத்தினிற் குவலையி னவலின்

1. திங்கள்-சந்திரன். காதை-கதை. குயவரி-வளைந்தகம். வேங்கை-பெரும்புலி. கோமான்-பரமசிவன். தோகைபாகன்-சிவபெருமான். துயல்வரல்-அசைதல். முந்நூல்-பூணூல்.

2 முக்கூறு-ஆகவனீயம், காருகபத்தியம், தக்கணாக்கினி என்பன. அலமர-வருந்த.

3. வாய்வினை-வாயின்றொழில். எயிறு-பல். கதை-தண்டாயுதம். அயின்று-உண்டு. பண்ணவர்-தேவர். வினைமுதியோர்-செயலிற் பெரியோர். புவியுலகு-மண்ணுலகு. சினம்-கோபம். உழுவை-புலி.

வாய்ந்திடும் விடரிற் பதுங்கிவால் புடைத்து
வாயினைப் பெரிதுமங் காந்தே
யேய்ந்தவன் குறுங்கைப் பிறையுகிர் விதிரா
விடியெனக் குமுறிமே லெழுந்து
பாய்ந்துயிர் பதைப்ப வறைந்துநித் தலுமன்
பதையொடு மாவெலாம் படுக்கும். (4)

செடிபடு பிணத்தின் றசைபிரித் துண்டுஞ்
சிவந்தவெங் குருதிநீர் மடுத்து
நெடிபடு கானிற் பஃற்குடி யிருந்து
நீணில முழுவதுஞ் சுழலா
முடிபடு மெழுத்தி னல்லெழுத் தீர்ப்ப
மூங்கில்வெண் முத்துடன் முதிர்ந்து
வெடிபடு மெழில்சேர் வச்சிர வனத்தின்
மேவிய தவ்வடல் வேங்கை. (5)

மேவுமுன் னந்த வனமுகக் கைலை
வேந்தனோர் திருவிளை யாட்டாற்
காவிநன் ஞணிற் கட்டிய சுருட்டுக்
கரியபொற் குஞ்சியுந் தொடுதோற்
றாவருங் கமல பாதமு முழுவை
தனதுரி யுடையுமுன் றோன்ற
வேவுடன் குனித்த வார்சிலை யேந்தி
யெழுந்தனன் வேட்டுவ னெனவே. (6)

எம்மையா ளுமையு மாவுட னசோகி
னிளந்தளிர் செருகிய குழலுங்

---

4. காரல்-மலைப்பக்கம். சுரம்-வழி. கவலை-தினைப்புனம். அவல்-பள்ளம். விடர்-மலைப்பிளவு. புடைத்து-அடித்து. உகிர்-நகம். விதிரா-அசைத்து. மன்பதை-மக்கட்டொகுதி. மா-மிருகம். படுக்கும்-கொல்லும்.

5. செடி-துர்நாற்றம். சுழலா-திரிந்து. முடிபடுமெழுத்து-சிரசிலெழுதப்பட்ட நல்லவை தீயவைகள். நல்லெழுத்து-நல்விதி. ஈர்ப்ப-இழுக்க. அடல்-வலிமை.

6. கைலைவேந்தன்-சிவபெருமான். காவி-கருங்குவளை. நாண்-கயிறு. குஞ்சி-குடுமி. தொடுதோல்-செருப்பு. தாவரும்-கெடாத. உழுவை-புலி. உரி-தோல். ஏ-அம்பு. குனித்த-வளைத்த. வார்சிலை-நீண்டவில்.

கொம்மைமா முலைமே லணிந்தவேய் முத்தின்
கோவையும் விடவரா வுயிர்த்த
செம்மணி செறிந்த தாலியு முடுக்க
சேலையுந் தானையுந் திகழப்
பொம்மெனக் கொடிப்பூங் கூடையு மேந்திப்
புளிஞர்தஞ் சிறுமியிற் புகுந்தாள். (7)

மாலய னறியா விருவருங் கிராத
வடிவெடுத் தணிமணி குயின்ற
மேலமா ளிகையிற் கோபுர சிகர
மீதினிற் சூழிகைப் புறத்தி
லாலயஞ் சூழ்ந்த நந்தன வனத்தி
லம்புயத் தடத்திரு மருங்கிற்
சாலையிற் புதுப்பூஞ் சோலையில் வேண்டத்
தகுமொழி யுரைத்தனர் சரித்தார். (8)

மூளுமெய் யன்பர் மும்மல மென்னு
முப்புர முதலற முடிப்பான்
வாளிகை யேந்தும் வள்ளல்சல் லாப
மகிழ்ச்சியாற் பவளவாய் மலர்ந்து
கேளுறு மனத்திற் கறுப்பிலா வுமையாள்
கிளர்மணி மேனியின் கறுப்பாற்
காளியென் றழைத்து நகைத்திட நாணிக்
காதலி திருவுளங் கலங்கி. (9)

எம்பிரா னகைப்பத் தலைகுனிந் திறைஞ்சு
மிறைவியு மிறைவனைத் தணந்து
பம்புதெண் டிரைநீர்க் கட்செவி நதியின்
பாங்கரோர் தேம்பொழி சோலை

---

7. குழல்-கூந்தல். கொம்மை-திரட்சி வேய்-மூங்கில். உயிர்த்த-விடுத்த. தானை-முந்தானை. பொம்மென-ஒலிக்குறிப்பு. கொடிப்பூ-கொடியிலுள்ளபூ. புளிஞர்-வேடர். சிறுமியின்-சிறுமிபோல.

8. கிராதர்-வேடர். சூளிகை-மேல்வெளி. அம்புயத்தடம்-தாமரைத்தடாகம். சாலை-வெளிமண்டபம்.

9. வாளி-அம்பு. கேள்-அன்பு.

வம்புலாம் புன்னை சண்பகஞ் செருந்தி
வகுளமல் லிகைபடர் பூக
மம்புய றவழு மாசினி யசோக
மடர்ந்தபூ நீழல்போ யடைந்தாள், (10)

அரவமா நதியின் விதிமுறை மூழ்கி
யஞ்செழுத் தோதிவெண் பொடியும்
பரிவுகண் டிகையும் புனைந்துமெய்த் தவநூல்
பகரும்யோ காசன மேவி
யிரவொடு பகலு மறிதரா வுமையா
ளிறைவனோ டிரண்டறக் கலந்து
விரதமார் முனிவர் தொழுந்தவ மாற்றும்
வேலையிற் புகுந்ததவ் வேங்கை. (11)

மெய்த்தவம் புரியு மெல்லைகண் டுருத்த
வேங்கையா மாக்கள்வெம் பசியா
லெத்திசை யுலகு முயிர்த்தொகை யெவையு
மீன்றுபி னெடுத்தணி வயிற்றில்
வைத்தருள் கிளியைத் தன்சுடு வயிற்றின்
வைத்திட வேண்டிமே லெழுந்து
கைத்தலம் விதிர்த்துப் பாய்தர வணுகுங்
காலையிற் கௌரிதன் வடிவை. (12)

இணைவிழி யாரக் கண்டபாக் கியத்தா
லெய்தரு ஞானம்வந் தெய்தத்
துணையடி தொழுது போற்றியீங் கெளியேன்
சூழ்வினைக் கொடியவா ரிதிக்கோர்
புணையெனத் தோன்று மன்னையே யிமையப்
பூவையே புராந்தகற் புணரும்
பணைமுலைக் கரும்பே யானுயு மாறு
பகரெனப் பன்முறை பணிந்தான். (13)

---

10. தணந்து-நீங்கி. பம்பு-ஆரவாரிக்கும். கட்செவி-அரவம். வம்பு-வாசனை. வகுளம்-மகிழமரம். பூகம்-கமுகு. புயல்-மேகம்.

12. உருத்த-கோபித்த. விதிர்த்து-அசைத்து.

13. இணை-இரண்டு. துணையடி-இரண்டுதிருவடி, துணையாகிய திருவடியெனினுமாம். வாரிதி-கடல். புணை-கப்பல். புராந்தகன்-சிவன். பணை-பருத்த.

வெம்புலி யரக்கன் பணிமொழிக் கிரங்கி
விமலையு மருளுமிவ் வுரகப்
பைம்புனல் மூழ்கி யாலயம் புகுந்து
பணிந்திருந் துள்ளப்பா வனையாற்
சம்புவின் பூசை யாற்றிட வரங்க
டருமென விடைதருந் தையய
லம்புய மலர்த்தாள் வணங்கிமீண் டரக்க
னரவமா நதிபடிந் தகன்றான். (14)

மந்திரம் புகுந்து நந்திசங் கரன்முன்
வணங்கிய வரக்கனு மொற்றைத்
தந்தனை யேத்தி யாகம முறையாற்
றற்பரன் பூசனை புரிந்து
கந்தர மனைய கருங்குழற் செவ்வாய்க்
கச்சணி முலையயை டனையு
மந்தமி லன்பிற் பூசனை யாற்றி
வண்ணறன் சந்நிதி யடுத்தான். (15)

முறைவலஞ் சூழ்ந்து வணங்குபு போற்றி
முகிழ்த்தகை யரக்கனின் றுளத்தி
லிறைவனை யேத்து மேல்வையின் விடைமே
லிலிங்கம்விட் டெழுந்தரு ளெம்மான்
குறைவற வரக்கன் றன்னைநேர் நோக்கிக்
கூறுக வேண்டுவ வென்ன
விறைவவென் கொடிய வினைகெட வேண்டு
மென்னலு மின்னருள் புரிந்து. (16)

வேறு.

தாமமேபுனை சாரூப நல்கியுந்
தாம மாருமை தன்வச னத்தினுற்
சோம நாதன் றனைத்துதி செய்தலிற்
சோம நந்தி யெனப்பெயர் சூட்டினன். (17)

---

14. உரகம்-அரவம்.

15. மந்திரம்-கோயில். ஒற்றைத்தந்தன்-கணபதி. கந்தரம்-மேகம்.

16. வணங்குபு-வணங்கி. முகிழ்த்த-குவித்த. எல்வை-சமயம்.

17. தாமம்-கொன்றைமாலை. தாமம்-மலை. சோமநாதன்-உமையோடுகூடியநாதன்.

துதித்தி றைஞ்சி யெழுஞ்சோம நந்திமேற்
குதித்து வண்கரங் கூப்பிமுன் செல்லவே
யதிக்கண் மங்கை யருந்தவ மாற்றுமா
நதித்த டங்கரை யெய்தினு னைகன். (18)

புடையின் மெய்த்தவத் தான்மெலி பூவையை
விடையி னின்றிழி வான்கண்டு மேவிமார்
பிடையி னூரத் தழீஇயெடுத் தெந்தைதன்
றுடையின் வைத்திருந் தானிவை சொல்லுவான்: (19)

விரியு ஞானம் புகழ்செல்வம் வீரிய
மரிய சத்தி யொழிவிவை யாறினுக்
குரிய ணீயன்றி வீட்டுல கிற்கருள்
புரித ருஞ்சிவ சத்திநீ பூவையே. (20)

இன்ன ளாயநீ யெவ்வரம் வேண்டியீங்
குன்ன ருந்தவ மாற்றினை யோவென
வன்ன மென்ன வெழுந்துமை யண்ணறன்
பொன்னின் வார்கழல் போற்றிப் புகலுமால். (21)

திதலை மாமுலைத் தேமொழித் தேனுஞ்ச
ததள மாமுக நோக்குபு தாணுவே
கதலி சூழ்வனத் தேகண்டு காளிநீ
குதலை யென்றொரு நாண்கை கொண்டனே. (22)

கரிய ளென்றலி னூனிக் கலங்கினே
னுரிய மாமழை மின்னி னுருவெனப்
பரியு மேனிக் கவுரியென் றேபகர்
புரியு நல்வர மீகெனப் போற்றினுள். (23)

---

18. அதி-வர்ளரியுதம்.
19. புடையின்-கணியின் பக்கத்தில். இழிவான்-இறங்கினவனுகி.
20 ஒழிவு-வைராக்கியம்.
22. திதலை-தேமல், தேனும்-உமாதேவியாரும். சதம்-நூறு. நோக்குபு-நோக்கி. கதலி-வாழை. குதலை-குதலைச்சொல்லையுடையாய்.
23. மழை-மேகம். பரியும்-தாங்கும். பகர்-சொல்லுகின்ற. புரியும்-விரும்புகின்ற.

நேரு மிவ்வர நல்கியந் நித்தனும்
யாரு மின்னுங் கவுரியென் ருேதுக
வார ணிந்த வனமுலை வல்லிகேள்
கூரு நன்மொழி யொன்றெனக் கூறுவான். (24)

உறைத்த நந்திரு வாயிலி னந்திபோ
ணிறைத்த மாமணி சேரு நிகேதனம்
புரத்த லைச்சோம நந்தி புரிகவென்
றுரைத்த ருட்குறி யூடு கரந்தனன். (25)

ஆங்கு நின்ற கவுரி யருள்செயத்
தாங்கு மம்மை கணத்தின் றலைமைசேர்
பாங்கு றுஞ்சோம நந்தி பணியப்போ
யோங்கு தன்மணி மந்திர முற்றனள். (26)

சோம நந்திச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 434.

## 12-வது ஐராவதச் சருக்கம்.

நம்மையாள் சோம நந்தி திருக்கதை
யும்மை யன்பொ டுரைத்தருள் சூதன்மேன்
மும்ம தத்தயி ராவத முன்னவர்
தம்மை யர்ச்சித்த மெய்க்கதை சாற்றுவான். (1)

வேறு.

கள்ளவிழ் கடுக்கை வேணிக் கண்ணுத லுருவ நல்குந்
தெள்ளுசீர்ச் சோம நந்தி செழுங்கதை யருளிச் செய்த

24. வார்-கச்சு.

25. நிறைத்த-வரிசையாகவைத்த. நிகேதனம்-கோயில். புரத்தல்-காத்தல். சோமநந்தி-புலியாயிருந்து சோமநந்தியென வரம் பெற்றவன். அருட்குறி-சிவலிங்கம்.

26. மந்திரம்-கோயில்.

1. உம்மை-உண்மையென்பதன் றிரிபு. முன்னவர்-சிவபெருமான்.

வள்ளனீ யென்ன வாழ்த்து மாதவர் பரவச் சூதன்
வெள்ளைவா ரணமர்ச் சித்த சரிதையை விளம்பு மன்றே. (2)

கடிதரு தவங்க ளாற்று முனிவிரோர் கற்பக் தந்தி
மதியெயிற் றரக்க ராய மைந்தரைப் பெறுவான் வானத்
திதியெனு மடந்தை காம வுருக்கொடு சென்றீ ரைந்து
விதிகளி னொருவ னாய காசிப முனியை மேவும். (3)

அளிப்புது நறும்பூங் கூந்தற் றிதிதனை யடையச் செவ்வாய்த்
துளிப்புறு மமுத மாந்திக் காசிபன் சுரதஞ் செய்தான்
களிப்பொடு மதவேள் மூட்டக் கனன்றுமே லெழுங்கா மாங்கி
வெளிப்படி னிற்கு மோமெய்த் தவமெனும் வெண்ணெய்க் குன்றம். (4)

தாமவே ளாணை தப்பா திருவருங் கலந்த காலை
நாமநீ ருலக மஞ்சப் பிறந்தன னமுசி யன்னோன்
வாமமார் சட்ட கத்தின் வெயர்வுறு மயிர்க்கா றூறுந்
தோமரம் வில்வா ளேந்தித் தோன்றிய தசுர வெள்ளம். (5)

வெந்தொழிற் கொலைக்கோர் வித்தாய் வெளிப்படு நமுசி யன்னை
சிந்தையின் வண்ணம் வெய்ய சேனையோ டெழுந்து போற்றித்
தந்தையை விடைகொண் டேகிச் சத்திய லோக மேவு
மந்தணர் முதியோற் காண்பா னருந்தவ மாற்று மெல்லை. (6)

தானவர் திலக னாய நமுசிமெய்த் தவந்தொட் டீர்ப்ப
வானம ரகிலத் தேரின் வந்தெதிர் காட்சி நல்கி

2. கள்ளவிழ்-தேன்சொரியும். கடுக்கை-கொன்றை. வேணி-சடை. வாழ்த்து-வாழ்த்தை. இது இங்கேயெயர். பரவ-துதிக்க. வாரணம்-யானை.

3. அந்திமதி-மாலைக்காலத்துச் சந்திரன். எயிறு-பல். ஈரைந்து விதிகள்-பத்துப் பிரமபுத்திரர்கள்.

4. அளி-வண்டு. துளிப்புறும்-துளியாகவொழுகுகின்ற. மாந்தி-பருகி. சுரதம்-புணர்ச்சி. வேள்-மன்மதன். காமாங்கி-காமாக்கினி.

5. நாமநீர்-அச்சத்தைத்தருங் கடல். வாமம்-தீமை. சட்டகம்-உடல். தோமரம்-இருப்புலக்கை.

6. அந்தணர்முதியோர்-பிராமணருக்குப் பெரியோராகிய பிரமன்.

பூணமி லன்பால் வேண்டும் வரம்புக லென்ற வோர்நான்
கானன மறைவல் லோனை யடிதொழு தேத்து கின்றான். (7)

மூத்தனே போற்றி யுந்தி மூளரியம் பொருட்டில் வாழு
நித்தனே போற்றி யீரே ழுலகமு நெறியிற் பெற்ற
வத்தனே போற்றி வெண்டா மரைமகட் கன்பு கூருஞ்
சித்தனே போற்றி யென்ற நமுசிபின் பிதனைச் செப்பும். (8)

ஒருமையி லெளியேன் புன்மைத் தவத்தினுக் குளமகிழ்ந்த
வருமறைத் தேவே வேண்டும் வரமவை யசனி தம்மாற்
பரிதிவெள் வேல்க ளாதிப் படைகளாற் பகலி ராவின்
மரணமில் லாமை வேண்டும் தேவரின் வலிமை வேண்டும். (9)

இத்திற நமுசி வேண்டும் வரமெலா மினிதி னல்கிச்
சத்திய லோக முற்றான் றிசைமுகன் றவத்தி னாலே
கைத்தலத் துற்ற நெல்லிக் கனியென வரங்கள் பெற்ற
சித்திரச் சிலைய ரக்க னெழுந்தனன் சேனை சூழ. (10)

இந்திரற் பொருவான் வெய்ய நமுசியாங் கெழுந்த காலை
துந்துமி படகம் பேரி துடிபறை தடாரி தக்கை
நந்தின முதல வாய பல்லிய நான்கு திக்கு
மந்தமி லண்ட பித்தி வெடிபட வார்த்த வன்றே. (11)

வேறு.

அவிர்சுடர் மரகத மணிகளும் வயிரமு மணிதரு முடியன வருணப்
பவளமு மிரசித கனகமு நிறுவிய புலபல பலகைய படரும்

---

7. ஈர்ப்ப-இழுப்ப. எகினத்தேர்-அன்னவாகனம். நான்குவத னம்-நான்கு முகம்.

8. மூளரி-தாமரை. வெண்டாமரைமகள்-சரசுவதி.

9. ஒருமை-ஏகாக்ரசித்தம். ஒரு பிறப்புஎனினுமாம். அசனி-வச்சிராயுதம். வெள்வேல்-மாமிசம்பொருந்திய வேல்.

10. திசைமுகன்-பிரமன். சித்திரச்சிலை-அழகுவாய்ந்த வில்.

11. பொருவான்-போர்செய்தற்கு. படகம்-தம்பட்டம். துடி-உடுக்கை. தடாரி-பம்பை. தக்கை-பலவகைப்பறை. நந்தினம்-நந்தினம். இயம்-வாச்சியம். பித்தி-சுவர்.

திகழொளி யிரவியு மதியமு மெனவுயர் திகிரிக ளுடையன திசைசூ
ழிவுளியி னிரைபுனை குலவரை யிவையென வெழுவன பலபல விரதம். (12)

எழுகடல் குறைபட நிறைபுனல் பருகிவி
ணெழுமுகில் வடிவின விமையோர்
தொழவுயர் வடவரை யருவியி னிகலொடு
சொரிமத நதியன துகடீர்
முழுதுல கமுமிடி படவிழு மிடியென
முறைமுறை குமுறுவ முரணும்
வழுவுடை மறலியி னடுகொலை புரிவன
வருவன பலபல மதமா. (13)

முனைபடு கணைமயில் கவியொடு பொருதுமல்
முயறரு கதியன முடுகித்
திகிரியின் வருவன திரையின்
கனைகட லொடுகுட வளையின மெனவதிர்
கவினுறு குரலன கலினப்
புனைமணி யணிவன வமர்செய வெதிரெதிர்
புகுவன பலபல புரவி. (14)

கனலியொ டிகல்புரி சிகையினர் சுடரெதிர்
கடுகிய விழியினர் கலையி
னினமென நிலவிய வெயிறுடை யவர்பல
விடியென வதிர்கர விசையா

12. அவிர்-பிரகாசம். முடியன-முடியையுடையன. பலகைய-கேடகத்தையுடையன. திவள்-அசைதல். திகிரி-உருளை. இவுளி-குதிரை. நிரை-வரிசை. புனை-பொலிவு. குலவரை-மலை

13. இகல்-வலிமை. துகள்-குற்றம். முரணும்-மாறுபடும். மறலி-யமன். உடை-உடைக்கின்ற. மதமா-மதம்பொருந்திய யானைகள்.

14. கணை-கணைபோலும் நடை. மயில்-மயில்போலும்நடை. கவி-குரங்குபோலும் நடை. மல்-மல்லநடை. முயல்-முயல்நடை. திகிரியின்-சக்கரம்போல. குடவளை-குடம்போலுஞ்சங்கு. அதிர்-ஒலி. கவின்-அழகு. குரலன-சத்தத்தையுடையன. கலினம்-கடிவாளம். புனை-அலங்கரித்தல். அமர்-போர். புரவி-குதிரை.

முனமெழு கடல்விட மெனவுயர் வடிவினர்
முறையறு சினம்வரின் முனியா
வினையையு மடுகுவ மெனவரு மதிர்கழ
லடியின ரனவில ரசுரர். (15)

அறைதரு மினையன வடுபடை புடைவர
வசுரன்விண் ணணுகிய தறியா
வுறைதரு நிழல்வளர் மகபதி வரையென
வுயர்மத வருவிக ளுறுவான்
கறையடி மிசைவர முனையெதிர் படவரு
கடவுளர் படைகளு மவுணர்
நிறைதரு பகுதியு மமுதவு ததியுமு
னிருபர்தொ டுகடலு நிகரும். (16)

வேறு.

தாம வஞ்சி சூடி வந்த தான வன்ற ளஞ்சினந்
தேம வெண்டி சாமு கத்து மெய்தி டாதி கன்றிடத்
தோமி றன்ப டைக்க ணந்தொ குத்தணிவ குத்தனன்
வாம மேவு காஞ்சி மாலை மார்ப ணிந்த மன்னவன். (17)

பகலு டன்ப கைத்து மேற்ப ரந்த நள்ளி ராவென
விகலு றும்ம ரக்கர் தானை யிலேகர் சேனை மேற்செலத்

---

15. கனலி-அக்கினி. இகல்-பகை. கடுகிய-விரைந்துசெல்லும். கலை-சந்திரன். எயிறு-பல். முனியா-கோபிக்கப்படாத அடுகுவம்-கொல்லுவோம்.

16. அடுபடை-கொல்படை. புடை-பக்கம். விண்-தேவலோகம். அறியா-அறிந்து. தரு-கற்பகம். மகபதி-இந்திரன். வான்-தேவலோகம். கறையடி-யானை. முனை-போர்முனை. கடவுளர்-தேவர். அமுதவுததி-பாற்கடல். நிருபர் தொடுகடல்-பகீரத அரசனால் தோண்டப்பட்ட உப்புக்கருங்கடல்.

17. தாமவஞ்சி-பூமாலையும் போர்க்குரிய மாலையும். தானவன்-அசுரன். தளம்-படை. ஏமம்-காப்பு. எண்டிசாமுகத்தும்-எட்டுத்திக்கினிடத்தும். தோம்-குற்றம். வாமம்-அழகு. காஞ்சிமாலை-போர்க்குரிய வஞ்சிக்குமாறானமாலை. மன்னவன்-இந்திரன். இகன்றிட-போர்செய்ய.

துகளில் சங்கு மெண்ணி றந்து மிகளு மூன்று வைத்தன
வகில மேற்ப டர்ந்த வோதை யண்ட கோள மண்டவே. (18)

சினந்தெ ழுந்தெ திர்ந்த வெய்ய தேரி னோடு தேருளங்
கனன்று வந்த டுத்த வெங்க ளிற்று டன்க ளிற்றினம்
மனம்பு கைந்தெ ழுந்த துங்க வாசி யோடு வாசிபோர்
முனைந்தெ திர்த்த கோப வாளி மொய்ம்ப ரோடு மொய்ம்பரே. (19)

போரில் வஞ்சி னந்த மிற்பு கன்ற வாய்நெ ருப்பெழச்
சூரர் நெஞ்ச கங்கு ளிப்பச் சூல மோடு சூலநேர்
வீர வண்பு யந்து ளைப்ப வேலி னோடு வேறலை
வாரி விண்ட லம்ப ரப்பும் வாளி யோடு வாளியே. (20)

கைக லந்த வெங்கொ லைக்க ருங்க ளஞ்சி வப்பவு
மொய்க லந்த பல்பி ணப்பி றங்கல் வான முட்டநேர்
நெய்க லந்த வேற்ற டக்கை நிருதர் தானை மேற்செல
மெய்க லந்த வும்பர் தானை வென்கொ டுத்த கன்றதே. (21)

கடலு டைந்த தெனமு ரிந்து கடவுள் சேனை வருதல்கண்
டடல ழன்று விழிசி வந்து ருத்தெ ழுந்த வும்பர்கோன்
மிடல்செ றிந்த தனது செங்கை வில்வ ளைத்து மேவலார்
குடர்ம னம்பு குந்தன் வாழி கோடி கோடி வாங்கினான். (22)

கரியின் மேல னந்த கோடி கவன வாசி பூண்டதேர்க்
கிரியின் மேல னந்த கோடி கிட்டி வந்து சூழ்ந்தவாம்

உ

---

18. இகல்-பகை. இலேகர்-தேவர். துவைத்தன-ஒலித்தன. அகிலம்-மண்ணுலகு. ஓதை-ஒலி.

19. கனன்று-கோபித்து. துங்க-உயர்ந்த. வாசி-குதிரை. வாளி-அம்பு. மொய்ம்பர்-வலிமையுடையவீரர்.

20. வஞ்சினம்-சபதம். நெஞ்சகம்-மார்பினிடம். குளிப்ப-பதிய. விண்டலம்-ஆகாயத்தினிடம்.

21. கருங்களம்-பெரிய யுத்தகளம். மொய்-கூட்டம். பிறங்கல்-மலை. நெய்கலந்த-நெய்பூசிய. நிருதர்-அசுரர். உம்பர்-தேவர். வென்-முதுகு.

22. உருத்து-கோபித்து. மிடல்-வலி. மேவலார்-பகைவர். குடர்-குடல். மனம்-நெஞ்சு.

பரியின் மேல னந்த கோடி பகைஞர் தம்ப தாதியிற்
றெரியின் வேற னந்த கோடி தீய வாளி சிந்தினான். (23)

அகங்க டோறும் விற்பி டித்த வங்கை தோறு மரியதோ
ணகங்க டோறும் வஞ்சி னம்ந வின்ற வாய்க டோறும்வண்
முகங்க டோறு மவுணர்தங்கண் முடிக டோறு முடிவுகூ
ருகங்க டோறெ ழுந்த மாரி யொப்ப வாளி யெய்தனன். (24)

நெரிந்த தேர்க ளெண்ணில் கோடி நெட்டு யிர்ப்பெ றிந்துவீழ்ந்
திரிந்த வேழ மெண்ணில் கோடி யெங்க ணுஞ்சு ழன்றுயிர்
பிரிந்த வாசி யெண்ணில் கோடி பேரு டற்ற ணந்துதீ
யருந்து கூற்று வப்ப ணிந்த வசுரர் கோடி யரரரோ. (25)

வரைகள் காட்டு மச்சொ டிந்த வையம் வெய்ய குருதிநீர்
திரைகள் காட்டு மேன்மி தந்த திங்கள் வட்ட வெண்குடை
நுரைகள் காட்டு மன்ன மூளை நொய்ய சேறு காட்டும்வான்
கரைகள் காட்டு மற்று வீழ்ந்த கரிக ளோடு பரிகளே. (26)

பாடு மெங்க ணுஞ்செ லும்ப சாசி னோடு பூதநின்
றாடு மெங்க ணுங்க லக்கு மள்ளி யூன ருந்தநேர்
கூடு மெங்க ணும்ப ரந்த கூளி காளி நகைசெய
வோடு மெங்க ணும்ப யந்தொ ழிந்த தெவ்வர் சேனையே. (27)

வேறு.

தனித்தெழும் பரிதி முன்னர்ச் சகதலம் போர்த்து நின்ற
பனித்துளி காட்டி மீண்ட பதாதியின் பரிசு நோக்கிச்

---

23. கரி-யானை. வாசி-குதிரை. கிரி-மலை. வாம்-தாவுகின்ற. பரி-குதிரை. பதாதி-காலாள்.

24. அகங்கள்-நெஞ்சுகள். தோணகம்-தோள்நகம். வஞ்சினம்-சபதம்.

25. நெரிந்த-உடைந்த. நெட்டுயிர்ப்பு-பெருமூச்சு. இரிந்த-கெட்ட. தணந்து-நீங்கி. அரோ-அசை.

26. வையம்-தேர். குருதி-இரத்தம். திரை-அலை. அன்ன-இது சுட்டுச்சொல். நொய்ய-சிறிய. வான்-பெரிய.

27. தெவ்வர்-பகைவராகிய அசுரர்.

செனித்திடும் வடவைத் தீயிற் சினந்தெழு நமுசி செங்கை
குனித்தவி னிமிரா வண்ணங் கொட்டின னப்பு மாரி. (28)

இடங்குடி லளவுற் றோங்கு மிந்தனம் புகுந்த தீயி
னடங்கரு மும்பர் தானை யனைத்தையு நீற தாக்கிக்
கடம்படும் வெள்ளை யானைக் கைலைவெற் பேறி நின்ற
மடங்கலே றனையான் முன்போர் மாத்திரைப் போதின் வந்தான். (29)

வந்திளம் பிறையெ யிற்றால் வாயித ழதுக்கி வெங்கண்
செந்தழல் கொழிப்ப நின்ற நமுசியுந் தேவர் போற்று
மிந்திர வரசு நேர்ந்தா ரெதிர்த்துவில் லிட்டு நின்ற
கந்தர மிரண்டை யொத்தார் கடுஞ்சினங் கருத்துள் வைப்பார். (30)

தானவர் கோவுந் தானத் தலைவனுந் தமது சேம
மானவெஞ் சிலைகை வாங்கி வளைத்துநா ணெறியு மெல்லை
ஞானில முழுதும் வெற்பு நடுக்குற நதியு நீலக்
கானலம் புன்னை வேலைக் கடலுமுன் கலங்கிற் றன்றே. (31)

கைப்படை புனைந்த விற்கைக் கடுங்கொலை மறலி யன்ன
வெப்புறு நமுசி சீறி விரைந்திரண் டம்பு வாங்கி
மைப்புய லனைய மேனி வாசவன் மார்பி லேவ
மெய்ப்படு மளவி லன்னோன் விலக்கினன் வாளி யொன்றால். (32)

விலக்கிய வாளி வீழ்முன் மீட்டுநான் கம்பு வாங்கிப்
பொலக்கிரி யனைய தோளு நெற்றியும் புனைபூண் மார்பு

---

28. பரிதி-சூரியன். சகதலம்-பூமி. பதாதி-காலாள். குனித்த-வளைத்த. அப்பு-அம்பு.

29. குடிலிடமெனமாறுக. குடில்-சிறுவீடு. இந்தனம்-விறகு. தீயின்-தீப்போல. கடம்-மதம். மடங்கலேறு-ஆண்சிங்கம்.

30. எயிறு-பல். இதழ்-உதடு. கந்தரம்-மேகம். அசுரனுக்கும் இந்திரனுக்கும் வடிவங்கருமையாதலின் மேகமிரண்டையொத்தா ரென்றார்.

31. தானவர்-அசுரர். தானம்-தேவலோகம். சேமம்-காவல். சிலை-வில். நீலக்கடலெனக் கூட்டுக. கானல்-உப்பளம். அம்புன்னை-அழகிய புன்னை. எல்லை-சமயம்.

32. மறலி-யமன். வெப்பு-மனத்துயர். புயல்-மேகம். வாசவன்-இந்திரன். மெய்-உடல்.

மிலக்கெனத் தொடுக்கு முன்ன மிந்திரன் கணைநான் கேவ
வலக்கணுற் றவையோ ரெட்டு மந்தரத் தெழுந்த வன்றே. (33)

வாணிதன் கேள்வ னல்கும் வரம்பெறு நமுசி சம்ப
பாணிதன் மார்பி லேந்து பகழிதொட் டழுத்த வேதக்
கோணிலை மகவா னுன்கு கோரொடு டவசுரன் கொண்ட
தூணியுஞ் சிலையு நாணுங் கவசமுந் துணிந்த வன்றே. (34)

முற்றிய கனலி தோன்று முகம்படு மாக்க ளுங்கே
மற்றொரு சிலைகை யேந்தி வளைத்துமூன் றம்பு வாங்கி
நெற்றியின் மகவான் றேளி னிறுவிநே ரலர்தஞ் சேனை
சுற்றும்வெள் ளானைக் குன்றிற் சுடுசர மைந்து தொட்டான். (35)

மத்தகங் குளித்த வாளி வாரணம் வயிரத் தண்டங்
கைத்தலங் கொண்டு வீச விரதமுங் கவன மாவு
மொய்த்திடு மசுரர் தானை வெள்ளமு முறிய வேறோர்
இத்திரத் தேர்மீ தேறி மேல்வரு நமுசி செப்பும். (36)

வடிகணை மகவான் கேட்க மற்றனை வார ணத்தை
யடிபெய ராது கட்டி யடுவனோர் கணத்தி லென்னத்
தொடுகட லுலகும் விண்ணுந் திசைகளுந் தோன்று வண்ணஞ்
செடிபடு குஞ்சி வெய்யோன் நீங்கணைக் கூடஞ் செய்தான். (37)

வச்சிர பாணி நூறு மந்திர பாணம் வாங்கி
நச்சுடை வாளிக் கூடந் தகர்த்துமே னடந்து பைம்பொற்

---

33. பொலம்-பொன். பூண்-ஆபரணம். அலக்கண்-இடுக்கண். எட்டும்-நமுசிவிட்ட அம்புநான்கும் இந்திரன்விட்ட அம்புநான்கும். அந்தரம்-ஆகாயம்.

34. வாணிகேள்வன் பிரமன். சம்பம்-வச்சிராயுதம். பாணி-கை. சம்பபாணி-இந்திரன். பகழி-அம்பு. ஏதக்கோணிலை-துன்பங்கொண்ட. மகவான்-இந்திரன். தூணி-அம்புக்கூடு. சிலை-வில். கவசம்-இரும்புச் சட்டை.

35. கனலி-நெருப்பு. நிறுவி-பதித்து. நேரலர்-பகைவர்.

36. குளித்த-தைத்த. வாரணம்-வெள்ளையானை.

37. வடி-கூர்மை. அடுவன்-கொல்லுவன். தொடுகடல்-தோண்டப்பட்ட கடல். செடி-துர்நாற்றம். குஞ்சி-குடுமி. கூடம்-கூடு.

கச்சுறு பரியுந் தேரு மரக்கனுங் கால்கள் பேரா
தச்செனு நிற்பா னப்புப் பஞ்சர மாக்கி னனே. (38)

மறம்படு மரக்கன் வாளி யொன்றினால் வாளிக் கூடந்
திறந்தன விருவ ரேறும் வேழமுந் தேருங் கோடைக்
கறங்கெனச் சுழல வந்தார் கடுங்கணை கோடி கோடி
பறந்தலை நிறையத் தூர்த்தார் புகுந்தனர் திசைகள் பத்தும். (39)

குரைகடற் புவியு மண்ட கோளமும் வாள மாதி
வரைகளும் வரைப்புஞ் சூழும் வனங்களுஞ் சேடன் முன்னு
மரவுறை யுலகு முன்ன மறிதராப் புவனம் யாவு
மொருகணத் தெய்தி மீண்டா ரரக்கனு மும்பர் கோவும். (40)

சீறினா ரிதழ துக்கிச் சிரித்தனர் புரூர நெற்றி
யேறினர் புயங்கள் கொட்டி யிடித்தன ராகம் விம்மி
மீறின ரனல்ப றப்ப விழித்தனர் சபதம் யாவுங்
கூறினர் பூசித் தேத்திக் கோத்தனர் தேவ பாணம். (41)

அடுத்தவர்க் கிடுக்கண் செய்யு மரக்கனோ ரங்கி பாணந்
தொடுத்தனன் மண்ணும் விண்ணுஞ் சுடுதழற் படல மாகி
மடுத்தலும் வயிர பாணி வருணசா யகங்கை வாங்கி
விடுத்தன னுகாந்தத் துச்சி விண்ணெனப் பொழிந்த தன்றே. (42)

வருணவா ளியினு லங்கி மடிதலும் வல்ல ரக்க
னிருளுறு மாயா பாண மேவின னிமையோர் கோமான்
றெருளுறு ஞானச் சோதித் திவாகர பாணந் தொட்டா
னொருகணத் தொழிந்த தீரே ழுலகமும் போர்த்த கங்குல். (43)

---

38. நச்சு-நஞ்சு. கச்சு-இடைக்கட்டு அச்சு-தேரச்சு. இது அசை யாமைக்குவமை. அப்பு-அம்பு. பஞ்சரம்-கூடு.

39. மறம்-வீரம். கோடை-மேல்காற்று. கறங்கு-காற்றாடி. பறந்தலை-போர்க்களம்.

40. வாளம்-சக்கரவாளமலை. வரைப்பு-எல்லை. சேடன்முன்னும் அரவுறையுலகு-ஆதிசேடன்முதலிய பாம்பு வசிக்குங் கீழுலகு.

41. இதழ்-உதடு. அதுக்கி-துவைத்து. புரூரம்-புருவம். கோத்தனர்-போக்கினர்.

42. வயிரபாணி-இந்திரன். சாயகம்-பாணம். உகாந்தத்துச்சி-யுக முடிவில் ஆகாயமத்தியில். விண்-மழை.

43. திவாகரன்-சூரியன்.

அயன்றரு பகழி வாங்கி யரும்புகை தீப நல்கி
யியன்றன பாசி விட்டா னிந்திரற் கிறுதி யென்னச்
சயந்தனை யளித்த தந்தை சங்கர சாய கத்தை
நயந்தினி திறைஞ்சி யேத்தித் தொடுப்பமே னடந்த தம்மா. (44)

எம்பிரான் கணையு மன்னத் தெழுபவ னளித்த வம்பு
மம்பரத் தேறி யண்ட மழிந்திடு மன்றுட் கொண்மூ
வெம்பிய விடியே றென்ன முழக்குற வெருவி யுள்ளங்
கம்பமாய்ச் செவிடு பட்டா ரரக்கருங் கடவு ளோரும். (45)

கப்பண முசலங் குந்தங் கட்கம்வேல் சுரிகை யாழி
வெப்புறு வயிரஞ் சூல முட்படை வில்விட் டேறு
மப்பின மனந்த கோடி யன்றியு மனேக மாயா
திப்பியந் தோன்ற வெம்போர் செய்தன சிலீமுகங்கள். (46)

நிருதன்கைப் பிரம பாணம் புரகர னிமலன் வாளி
பொருதுவென் றும்பர் கோமான் றாணியிற் புகுதல் கண்டா
னரிதிவற் கோற லென்ன வரக்கனோர் தண்டம் வாங்கி
யுருள்படு மணித்தேர் நின்றுங் குதித்தன னோடி வந்தான். (47)

வந்தவ னிடியே றென்ன மத்தகத் தடிப்ப வீறிட்
டிந்திர வாசு வாவீழ்ந் தியக்கறத் தியங்கு மெல்லைக்
கந்தர வூர்தி காது வச்சிரங் கைக்கொண் டந்த
மந்தர மனையான் சென்னி புடைத்தனன் மௌலி சிந்த. (48)

44. பாசி-துதித்து. சயந்தனைப்பெற்ற தந்தை-இந்திரன்.

45. கொண்மூ-மேகம். வெம்புதல்-சினத்தல். வெருவி-அஞ்சி. கம்பம்-நடுக்கம். கடவுளர்-தேவர்.

46. கப்பணம்-இருப்புநெரிஞ்சிமுள். முசலம்-இருப்புலக்கை. குந்தம்-ஈட்டி. கட்கம்-வாள். சுரிகை-கத்தி. வெப்பு-வெம்மை. ஏறும்-செல்லும். அப்பு-அம்பு. திப்பியம்-மேன்மை. சிலீமுகம்-அம்பு.

47. நிருதன்-அரக்கன். பிரமபாணமென்ற விடத்து ஐயுருபு விரித்துரைக்க. புரகரன்-திரிபுரத்தை எரித்த சிவபெருமான்.

48. உவா-யானை. கந்தரவூர்தி-மேகவாகனனாகிய இந்திரன். காது-கொல்கின்ற. மந்தரமனையான்-மந்தரமலையையொத்தஅரக்கன். மௌலி-முடி.

மட்டவிழ் கற்பத் தாரார் மார்பினன் வயிரம் வெற்பி
லிட்டபூ மாலை யென்ன விரிதலு நமுசி யெட்டித்
தொட்டிழுத் தடும்பா சத்தாற் சுரர்பதி புயங்க ளாரக்
கட்டினன் கொடுபோய்த் தாளிற் றளையிட்டுக் காவல் செய்தான். (49)

தன்பகை வென்று வாகை தாங்கினோன் சுவர்க்க லோக
மென்பதை யினிது கோடித் திடுகெனக் கடைக்க ணேவ
வன்புறு கோடி தூத ரரக்கரைப் பணித்துத் தானு
மின்பயில் கலைக ளாதி வேண்டிய பணிகள் பூண்டான். (50)

கழுவிய நவம ணிப்புட் கவிகைமே னிழற்றப் பாங்கர்ச்
செழுமதிக் கிரண மென்னச் சிறந்தசா மரையி ரட்ட
மழைமதக் கரட கும்ப வாரணப் பிடர்மீ தேறி
யெழுகட லனைய தானை யீரிரு மருங்குஞ் சூழ. (51)

நரப்புறு மொலியுங் கஞ்ச நாதமு நல்லார் கண்ட
நிரப்புதே னிசையும் பண்ணு நீடுளைக் கருவி யார்ப்பும்
பரப்பிய முகத்தோற் போர்வைப் பல்லியத் தொலியு மண்டும்
புரப்பவர் வண்மை பாடும் பூகத ரொலியும் பொங்க. (52)

படர்மணிக் கும்ப வேதிப் பாலிகைத் தூப தீபச்
சுடர்நறுங் கதலி பூகத் தோரண வீதி சூழ்வந்
தடல்கெழு புரிசை வான மடுத்தன னசுர ரேத்தக்
குடதிசை வாயி லாகக் குருமணிக் கோயில் புக்கான். (53)

---

49. மட்டு-தேன். தாரின்-மாலையினையுடைய. மார்பினன்-மார்பை யுடைய இந்திரன் வயிரம்-வச்சிராயுதம். வெற்பு-மலை. இரிதல்-கெடுதல். அடும்பாசம்-கொல்லுங்கயிறு. தாள்-கால். தளை-விலங்கு. காவல் செய்தான்-சிறையில்வைத்தான்.

50. வாகை-வெற்றி. கோடித்தல்-அலங்கரித்தல். பணித்து-கட்டளையிட்டு. மின்பயில்கலை-பட்டாடை. பணி-ஆபரணம்.

51. கழுவிய-சுத்திபண்ணப்பட்ட. கவிகை-குடை. நிழற்ற-நிழலைச்செய்ய. கரடம்-மதம்பாய்சுவடு. கும்பம்-மத்தகம்.

52. நரப்பு-வீணைமுதலியன. கஞ்சம்-கைத்தாளம். நல்லார்-பெண்கள். துளைக்கருவி-மூங்கிற்குழல் முதலியன. முகத்தோல் போர்வை-மத்தளம் முதலியன. பல்லியம்-பலவாச்சியம். புரப்பவர்-காப்பவர். வண்மை-வள்ளற்றன்மை. பூகதர்-புகழ்பவர்.

53. பூகம்-கமுகு. அடல்கெழு-வலிமைமிக்க. புரிசை-மதில். வானம்-தேவலோகம். குடதிசை-மேல்திசை. குரு-நிறம். கோயில்-அரண்மனை.

கடுந்திற லரக்கர் போற்றக் கற்பக் நீழ லிட்ட
மடங்கலங் தவிசி னேற்றி வைகலும் வளரா நின்ற
விடும்பையெவ் வுலகு மெய்த வெமதிசை நீத்து வந்த
வடுங்கொலை மறலி யென்ன வரசுசெய் திருந்தா னன்றே. (54)

வேறு.

காருக்கெதிர் மேனிப்பல காலாக்கினி மனனூர்
சோரத்தனி நேடத்தெரி யாமற்செலு மிமையோர்
சூரற்பணை வேழத்தணி சூழ்பொற்புறு சாரன்
மேருக்கயி லாயக்கிரி மேவிக்குடி கொண்டார். (55)

வாடிக்கன மார்மத்தக வானத்தனி வேழ
மோடிப்புவி மீதிற்பழ வூழிற்றவ வலியாற்
றேடக்கிடை யாவற்புறு சேதுக்கரை மேவிக்
கோடிப்புன லாடித்தனி கோயிற்புகு மந்நாள். (56)

முதிருஞ்சிவ மருவுந்தவ முயலுங்கவு தமனை
யெதிர்கண்டடி தொழுகின்றகை யினையன்பொடு தூக்கி
யதிருங்குர லுறநின்றினி தழுகின்றுகண் ணருகே
யுதிரும்புனல் பெருகுந்துய ருயரந்தன னுணர்வான். (57)

ஞானத்திரு விழிகொண்டிவண் நண்ணுந்திற நோக்கி
வானக்களி யானைக்கிலை வாரத்தொடு பகர்வான்
தானத்ததி பதிகூர்துயர் தள்ளிக்கமழ் தாருக்
கானப்புது நீழற்பெறு காதற்செயல் கேண்மோ. (58)

54. மடங்கல்-சிம்மம். வைகல்-தினம். அடுங்கொலை-மேற்சென்று செய்யுங் கொலை. மறலி-யமன்.

55. கார்-மேகம். மனனூர்-மனதையுடைய அசுரர். சோர-அலைவரும் ஒருசோர. தனி-தனித்தனி. நேட-தேட. சூரல்பணை-பிரம்பு. வேழத்தணி-மூங்கிற்றெகுதி. பொற்பு-அழகு. சாரல்-மலைப்பக்கம்.

56. கனம்-வட்டம். வானத்தனிவேழம்-ஐராவதம். அற்பு-அருமை. கோடிப்புனல்-கோடிக்கரைத் தீர்த்தம்.

57. முதிருஞ்சிவம்-பூரணவியாபகமாகிய சிவம்.

58. வானம்-தேவலோகம். களி-மதம். வாரம்-அன்பு. தானம்-மதம். அதிபதி-அதிபதியினது. கூர்-மிகுதி. புதுக்கானம் கமழ்தாரு நீழலெனக்கூட்டுக. கானம்-வாசனை. தாருநீழல்-கற்பகதருவின் நிழல்.

வேலைக்கடல் சூழிப்புவி மீதிற்பர மாய்முக்
காலத்துள தாய்மெய்ப்பொருள் காணற்கெளி தாகிச்
சீலத்தடி யாரற்பொடு சேவித்திடி னவையும்
பாலித்திடு மாதிப்புன வாயிற்பழ நகரம். (59

என்றோர்தல் முண்டாமஃ திச்சேதுவின் வடபா
லென்றேபுகல் வாரேழுரை யாம்யோசனை யெல்லை
நன்றேதரு முமையாளொடு நாளும்பிறை மோலிப்
பின்றாழ்தரு சடைவானவர் பெருமானவண் வைகும். (60)

மாசற்றவி லிங்கத்திரு வடிவாய்வளர் வாய்மை
யாசிற்பல வேதத்தினு மறிதற்கள வின்றால்
வாசத்துள வணிமால்விதி முதலோர்தொழ வாழு
மீசற்கிணை யிலைமேலிலை யெவ்வெவ்வுல கினுமே. (61)

அங்கிதிசைக்கேசிவ னருளுஞ்சிவ கங்கை
விரவும்புன லவையாவினு மேலாகிய தீர்த்தம்
பரவும்புன லாடிச்சிவ பாதந்தொழ வெல்லா
வரமுந்தரு மதனுலினி வாடாதொழி வழுவாய். (62)

சங்காதியி ராமன்பணி யெம்மானை யிறைஞ்சித்
தேங்காதர வோடப்பதி செல்வாயென வருளும்
பாங்காமுனி வோனைத்தொழு திறைபூசனை பண்ணி
வீங்காழிம ருங்கேவர விடைகொண்டது வேழம். (63)

முனியுத்தர முனியாதுள முனியுத்தர முகமாத்
தனியிற்படர் மதவாரண சயிலம்புறத் தளர்வுந்

59. அர்பு-அன்பு. பாலித்திடும்-தந்திடும். மோலி-மௌலி. அதாவது முடி. தாழ்தரு-தாழ்கின்ற.

61. இருவடிவாய்-பெரியவடிவாய். துளவு-துளசி. விதி-பிரமன். ஆ-ஆச்சரியக்குறிப்பு-சிற்பலம்-ஞானமாகிய பயன்; சித்பலம் என்னும் வடமொழிகள் இவ்வாறு புணர்ந்தன.

62. அங்கிதிசை-அக்கினிதிசை. வழுவாய்-யானையே; இது வழுவை என்னும் யானைக்குரிய பெயர் விளியுருபேற்றிவ்வாறு வந்தது.

63. தேங்காதரவு-நிறைந்த அன்பு. வீங்காழி-பெரியகடல். வேழம்-அயிராவதம்.

துனிமற்றவை யெவையும்புலி தொழுசூரியன் முன்னர்ப்
பனியிற்கெட வுயரிந்திர பதிகண்டெடிர் பணியும். (64)

நவகண்டமு முலகெங்கணு நண்ணும்பல வுயிரைக்
கவர்கண்டகர் பணியப்பெறு காலன்புரி துயரும்
பவகங்குலு மகலும்படி படியும்பொழு தருளுஞ்
சிவகங்கையி னருகுற்றது தெய்வக்களி யானை. (65)

வேறு.

மங்கையோர் பாகன் பூசை புரிகுவான் மதமா வீசன்
கங்கையிற் படிந்து வேண்டுங் கண்டிகை பூதி சாத்தி
யங்கையிற் பாணியேந்தி யாலயம் புகுந்து ளன்பாற்
சங்கர னந்தி முன்னர்த் தாழ்ந்துசன் னிதிபுக் கன்றே. (66)

மன்னுமா லிங்கத் துச்சி வர்ன்முறை யபிடே கித்துப்
பொன்னிறுட் யெர்சந் தானப் பூவினாற் பூசித் தாலைக்
கன்னல்வெண் பாலோ டன்னங் கமழடைக் காய்நி வேதித்
தின்னெழிற் றீப மேந்தி யிறைஞ்சிவீழ்ந் தெழுந்து போற்றும். (67)

பிறையணி சடையாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யென்று
நிறையருட் கடலே போற்றி நிமலனே போற்றி நீலக்
கறைகெழு மிடற்றாய் போற்றி கண்ணுதற் பரனே போற்றி
மறைமுதற் பொருளே போற்றி வன்முக நாதாபோற்றி. (68)

64. முனி-கவுதமமுனி. உத்தரம்-கட்டளை. முனியாது-தவறாது. முனி-சிந்தித்து. இதுஇடைக்குறை. உத்தரம்-வடக்கு. படர்-செல்லும். துனி-துன்பம். பனியின்-பனிபோல.

65. கண்டகர்-துட்டர். பவகங்குல்-பிறவியாகிய இருள். படியும் பொழுது-முழுகும்பொழுது.

66. மதமா-ஐராவதமாகிய யானை. பாணி-நீர். சங்கரநந்தி-சோமநந்தி.

67. சந்தானம்-தேவலோகத்துள்ள ஐந்துதருவினொன்று. ஆலை-கரும்பு. கன்னல்-சர்க்கரை. அடைக்காய்-வெற்றிலைபாக்கு. இன்னெழில்-இனிய அழகிய

68. பிஞ்ஞகா-தலைக்கோலமுடையவனே. நீல-கரிய. கறை-நஞ்சு. கெழு-விளங்குகின்ற. மிடறு-கண்டம்.

நித்தனே போற்றி போற்றி நீடியே சௌவயு நல்கு
மத்தனே போற்றி போற்றி யுறுதியா யமல மானி
முத்தனே போற்றி போற்றி முத்தரா வணிந்த வேணி
மத்தனே போற்றி போற்றி வனமுக நாதா போற்றி. (69)

என்றிவை பலவும்போற்றி யிறைஞ்சிமேற் றுதிக்கைதூக்கி
நின்றுமெய்க் களிப்பி னோடு நிருத்தமா டியவப் போழ்தின்
மன்றலங் கூந்தற் செவ்வாய் மாதொரு பாகந் தோன்றக்
குன்றன விடைமேல் வந்தான் கூறருங் காட்சி தந்தான். (70)

அந்திபோன் மேனி யான்வெள் ளானையை யழைத்துச் சொல்வான்
புந்திக்க ணன்பா னீசெய் பூசைகண் டகம கிழ்ந்தேஞ்
சிந்தித்த வரங்கள் யாவுந் தருகுவஞ் சிலநா ளிங்கே
வந்தித்து வாழ்க வென்று ணடந்தனன் வான வாறு. (71)

பொருந்தனி விடைமேற் சென்ற புண்ணியன் புனிதன் வாழு
மருஞ்சிறைக் கூட மேவி யாங்கவற் கபய நல்கி
வருந்தனி மகவான் வெம்போர் மருவலற் கோறல் செய்யத்
திருந்திய வுபாயஞ் சொல்வே மெவையெனிற் செப்பக் கேண்மோ. (72)

அறிபக லிரவுங் கூடு மந்தியம் போழ்தி லன்னீர்
மறிதிரை நுரையாற் கொன்று வருகவென் றருள் வாழ்த்தி
நறியதார் மகவான் நட்பாய் நமுசிதன் பாங்க ரெய்தித்
குறிதவ றுத வாறு கோறல்செய் தரன்பால் வந்தான். (73)

---

69. அறுதி-முடிவு. அதாவது எல்லாமொடுங்கியகாலத்து மிருப்பவனென்பதாம். முத்தரா-முத்துக்களையுடைய பாம்பு. வேணி-சடை மத்தன்-ஊமத்தை மலரையணிந்தவன்.

70. மன்றல்-வாசனை. குன்றன-மலையையொத்த.

71. வான ஆறு-ஆகாயவழி

72. பொரும்-போர்செய்யும். தனி-ஒப்பற்ற. புண்ணியன்-சிவபெருமான். புனிதன்-இந்திரன். மருவலன்-பகைவன். கோறல்-கொல்லுதல்.

73. அன்னீர்என்பது அல்நீரெனப் பிரிக்கப்பட்டுக் கருங்கடலென்னும் பொருள் குறித்தது. நுரையாலென்பதற்கு வச்சிராயுதத்தை நுரையில் மறைத்து என்று கொள்க. பகலினும் இரவினும் வச்சிர முதலிய ஆயுதங்களாலும் மரணமாகாத வரம்பெற்றவனாதலின், பகலுமிரவுங் கூடும் பொழுதில் நுரையால் வச்சிரத்தை மறைத்துக்கொல்லச்செய்தவாறும். இதனை மிருகேந்திர விருத்தி உபோத்காதப்பிரகரணத்துட் காண்க. நறியதார்-வாசனையுடைய மாலை.

வாகைமா லிகைத ரித்த மகபதி தனைவெள் ளேற்றுப்
பாகனு முடன்கொண் டாதிப் பழம்பதி மேவி யுள்ளத்
தோகையேர் மெய்பர் கோவே யுணதிப மிதன்மே லேறி
யேகென வருளிப் புக்கா னிலிங்கத்தி லெம்பி ரானே. (74)

வரம்பெற வருளிச் செய்த மாவிலிங் கத்தை வானோர்
புரந்தரன் பூசித் தேத்திப் போதக முகைத்துச் சென்று
விரைந்தம ராவதிக்கண் மேவினின் னவர்கள் போற்ற
வரம்பையர் நடிக்கச் சிங்கா தனத்துவீற் றிருந்தா னன்றே. (75)

ஐராவதச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 509.

---

## 13-வது அகத்தியச் சருக்கம்.

இத்திற மிமையோர் வாழ விபமினி திறைஞ்சுங் காதை
சித்திக ளெவையு மெய்துங் கேட்குமுன் சிவஞா னத்தான்
முத்தியு முண்டா மென்ன வுரைத்ததொன் முனிவன் சீர
கத்திய முனிவன் போற்றுங் காதையைக் கழறு மன்றே. (1)

வேறு.

அம்புயத் தயனேர் சூதமா தவவெள்
ளானைபெற் றிடும்பரி சறைந்தாய்
சம்புவைப் போற்றுந் தமிழ்முனி காதை
சாற்றென வருந்தவர் போற்றக்
கும்பமா முனிவன் திருமண வாளக்
கோலமுன் னெழுதுபூ சித்த
திம்பர்நீர் வினவப் புகர்தலா லிவ்லாம்
மிருதிறத் தவருக்கு மினையே. (2)

---

74 வாகை-வெற்றி. வெள்ளேற்றுப்பாகன்-வெள்ளிய ரிஷபத்தின்மீது ஆரோகணிக்குஞ் சிவபெருமான். ஓகை-உவகை. இபம்-யானை.

75. வானோர் புரந்தரன்-தேவேந்திரன். போதகம்-யானை. உகைத்து-ஏறி நடாத்தி. அமராவதி-தேவலோகம்.

1. இபம்-அயிராவதம்.

2. அம்புயத்தயன்-தாமரையில் வசிக்கும் பிரமன். தமிழ்முனி-அகத்தியமுனி. கும்பமாமுனிவன்-அகத்தியமுனிவன். இம்பர்-இவ்வுலகம்.

வீங்குதெண் டிரைநீர்ப் புவியின்முன் னியற்று
மெய்த்தவம் பலத்தினால் விரைப்பூ
மாங்குயி லனைய விமலையைப் பெற்ற
மலையிறை மணவினைப் பொருட்டா
லோங்குதெள் ளருவிப் பனிவரைச் சார
லோடதிப் பிரத்தமா நகரைப்
பாங்குறக் கோடித் தனன்பரை செங்கை
பற்றுவான் புகுந்தனன் பரமன். (3)

எம்பிரான் வரைவிற் கெழுந்தருள் இன்று
னென்றலு மாலய னிமையோர்
தம்பிரா னங்கி யாதியாங் கடவு
டண்மதி யருக்கர்வெள் விடையோர்
கம்பமில் வசுக்கள் மருத்துவ ரியக்கர்
கருடர்கந் திருவர்கிம் புருடர்
'தும்புரு நார தாதியர் சூழத்
துதிக்கையோன் கணத்தொடுஞ் சூழ்ந்தான் (4)

வண்டிமிர் காந்தட் கண்ணியோ னும்பர் வணங்குறத் தோகைமேல் வந்
துண்டலம் புரக்கு வாமுசு குந்த னாதிய மன்னவர் வந்தா [தான்
ரெண்டிசை வரையு மெழுகடல் வரைப்பு மீரெழு லோகமுமெய்து
முண்டமற் றெவற்றின் வாழுருத் திரர்மற் றவர்கடங் கணத்தொடும்
[வந்தார். (5)

3. திரை-அலை. நீர்-கடல். விரைப்பூமாங்குயில்-வாசனையுள்ள பூவினையுடைய மாவிதளைக்கொத்தித்தின்னுங்குயில். மலை-இமயமலை. மணவினை-கலியாணம். பனிவரைச்சாரல்-இமயமலைப்பக்கம். ஓடதி-மரங்கொடி முதலிய மருந்து. பிரத்தம்-மலைமேற்பக்கத்தலம். நகர்-இராசமாநகரை. பாங்கு-அழகு. கோடித்தனன்-அலங்கரித்தனன். பற்றுவான்-பற்றுதற்கு.

4. வரைவு-கலியாணம். இமையோர் தம்பிரான்-தேவேந்திரன். மதி-சந்திரன். அருக்கர்-பன்னிருசூரியர். வெள்விடையோர்-அபாமுத்த சிவன்கள். கம்பம்-அசைவு. துதிக்கையோன்-கணபதி.

5. இமிர்-ஒலிக்கின்ற. காந்தட்கண்ணியோன்-சுப்பிரமணியர். தோகை-மயில். வரை-மலை.

மந்தர மேரு முதலிய வரையும் வாசுகி முதலிய வரவுஞ்
சிந்தைகூர் வசிட்ட னுதிமா தவருஞ் சித்தர்கள் யாவருஞ் செறிய
வுந்தியான் வீருத்த நேமியம் பூமி யுத்தரந் தாழ்ந்துதென் றிசைமே
லந்தரத் துயர யாவரு மஞ்சி யபயமென் றரனடி யடைந்தார். (6)

அஞ்சலென் றவரை யங்கையா லமைத்தீங்
கனைவரு மொருங்குவந் திருப்ப
விஞ்சிய கனத்தாற் றாழ்ந்ததென் றெண்ணி,
மெய்த்தமிழ் முனிதனை நோக்கி
தஞ்சமெவ் வுயிர்க்கு நீயலா தெமக்குஞ்
சமதயா மாதலிற் சாந்த
மஞ்சிவர் பொதியத் தெய்துக வெனவே
வள்ளறன் பவளவாய் மலர்ந்தான். (7)

சிவனிவை யருள வெழுந்தடி பணிந்து
செங்கையால் வாய்புதைத் தடியேன்
புவனிகா ரணநின் றிருமணங் காண்பான்
புகுந்தவிக் கணத்தினர் புரிந்த
தவமிலேன் கொல்லோ வென்றுளந் தளர்ந்து
சாற்றிட முனிதனைக் கைலைக்
குவடுறை கடவுள் கடைக்கணித் தருளிக்
குறுநகை புரிந்தனன் கூறும். (8)

வேதியர் திலக வுனதிக ரன்பர் வேறிலை நமக்குள மெலியேல்
கோதிலா நமது திருமண வாளக் கோலமுங் காட்சிதந் தருள்வே
மேதமி றென்பாற் பாண்டிநன் னாட்டி லிலங்கிய பழம்பதி யென்னு
மாதிமா நகரி லுனக்கெதிர் தோன்றி யருளுவ மெனவிறை யருள. (9)

---

6. அரவு-சர்ப்பம். செறிய-நெருங்க. உந்தியான்-பிரமன். நேமியம்பூமி-வட்டமான அழகிய பூமி. உத்தரம்-வடதிசை. அந்தரம்-ஆகாயம்.

7. விஞ்சிய-மிகுந்த. சாந்த மஞ்சிவர்-சந்தனமரத்தின்கண் மேகம் தவழ்கின்ற. பொதியம்-பொதியமலை.

8. குவடு-மலையுச்சி. கடைக்கணித்து-கடைக்கண்ணால்பார்த்து. குறுநகை-புன்சிரிப்பு.

9. உளம்மெலியேல்-மனம் வருந்தாதே. கோது-குற்றம். ஏதம்-குற்றம்.

இறையரு டலைமேற் கொண்டுகை கூப்பி
யிணையடி தொழுதுநின் ருடி
நிறைகரு ணையினு லெத்தலத் தேனு
நின்மணக் காட்சிதந் தனையேற்
சிறியனே னுய்ந்தே னுய்ந்தன னென்னுச்
சிந்தையிற் றெவிட்டுரு தெழுந்த
குறைவிலா நந்த வாரிதி படிந்த
கும்பமா தவனிவை கூறும். (10)

செந்தமிழ் நாட்டி லேகுக வென்னத்
திருவருள் புரிந்தனை யெளியே
னைந்தமி ழியலுந் தேறுவா னினிதி
னருளென வத்தனுங களிப்ப
வந்தனை புரிந்து சந்தனப் பொதிய
வரைப்பெரு மாநில மங்கை
மூந்துறு தவத்தா லகத்திய னுலோபா
முத்திரை யுடன்விடை கொண்டான். (11)

கேடிறென் முகமாய் வருபவன் றேவ
கிரிபுகுந் தாங்குறை குருவை
வாடிய மருங்குற் குவிமுலைக் கனிவாய்
வள்ளிதன் கேள்வனை வணங்கி
நீடிய வருளா லோதிமுற் றுணர்ந்த
நிறைதமி ழகத்திய னிருவர்
தேடிய பரமன் மருவுகே தாரச்
சிவன்கிரி யதனிடைச் சேர்ந்தான். (12)

மின்னுசெஞ் சடிலப் பரமனைப் பரசி
விடைகொடு மீண்டுமை பாகன்
மன்னுமெப் பதிக்குஞ் சிகாமணி யான
வாரணு சியிலுற வந்தான்

---

10. தெவிட்டுறுது-அமையுமென்னுது. வாரிதி-கடல்.
11. ஐந்தமிழ் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் ஐந்து. அத்தன்-சிவபெருமான். உலோபாமுத்திரை-அகத்தியர்மனைவி.
12. தேவகிரி-சுப்பிரமணியர் வசிக்கும் மலை. வாடியமருங்குல்-துணுகிய இடை. கேள்வன்-கணவன்.

பன்னுசீர்க் கங்கை நதிக்கொரு துறையாப்
பகர்மணி கன்னிகை படியா
நன்னெறி விசுவ நாதனைப் போற்றி
நடந்தனை னந்தமிழ் நாதன். (13)

விண்ணகத் துயர்ந்து பரிதியைத் தகைந்த
விந்தவெற் பினைப்பதத் தடக்கி
மண்ணிடைச் சிறந்த முதுகிரி மேவி
வள்ளலை வணங்கினன் மீண்டு
புண்ணிய னரசு புரிந்ததென் கூடற்
புகுந்துபொற் றாமரை யாடி
யண்ணலங் களிற்றைக் கயற்கணி பாகத்
தமலனை யருச்சனை யாற்றி. (14)

உறுவகை யேத்தி மீண்டுமுன் னெம்மா
னுரைத்தருள் பரிசிலை யுன்னித்
தெறுமழற் சுரமும் வனங்களு நீத்துத்
திருநக ரெல்லைசே ரெல்லை
மறுமையும் வீடு மடியவர்க் குதவி
வச்சிர வனத்துவாழ் வள்ளல்
குறுமுனி வருத றெரிந்தவ னெதிரே
குறுகுவான் றிருவுளங் குறித்தான். (15)

வேறு.

அறுதி யாய்மறை முதனடு வீறுமா யறிஞர்
மறுதி யிற்றனி யிலிங்கத்தி னின்றருள் வடிவாய்

13. சடிலம்-சடை. வாரணசி-காசி. ஒருதுறை-அறுபத்துநான்கு துறையிலொன்று. படியா-முழுகி.

14. பரிதி-சூரியன். தகைந்த-தடுத்த. பதம்-வழி. முதுகிரி-விருத்தாசலம். புண்ணியன்-சிவபெருமான். கூடல்-மதுரை. களிறு-சித்திவிநாயகர். கயற்கணி-மீனாக்ஷியம்மை.

15. தெறுமழற்சுரம்-வருத்துகின்ற கொதிப்பினையுடைய பாலை நிலம். திருநகர்-திருப்புனவாயில். எல்லை-அளவு. எல்லை-சமயம். குறுமுனி-அகத்தியமுனி. குறுகுவான்-செல்லுதற்கு.

தந்த ருட்பரை யாயகச் சணிமுலை தன்னோ
டெனுது ளத்தில்வாழ் நந்திமால் விடையுகைத் தெழுந்தான். (16)

பிரம ஞதியைப் பணித்தரு ணந்தியெம் பெருமா
னொருகை யெற்றிடுஞ் சூரலோ டொருகைவா னூக்கி
யரிய சந்திர சேகர சங்கர வமலா
சுருதி நாயக சயசய வென்றுகை தொழுதான். (17)

எழுத லுற்றன பலபல பூதங்க ளெங்கு
மெழுத லுற்றன துந்துமி பல்லிய மெங்கு
மெழுத லுற்றன கவரியும் பீலியு மெங்கு
மெழுத லுற்றன தூபமுந் தீபமு மெங்கும். (18)

நெருங்கு கின்றன வெங்கணுந் தோரண நிரைக
ணெருங்கு கின்றன வெங்கணுங் கவிகையி னீழ
னெருங்கு கின்றன வெங்கணுஞ் சிவிறிதூ நீத்த
நெருங்கு கின்றன வெங்கணுங் கதலிகை நிபிடம். (19)

இசைக்க லுற்றனர் தும்புரு நாரத ரிருபா
லிசைக்க லுற்றனர் யாழ்கொடு கின்னர ரெவரு
மிசைக்க லுற்றனர் கந்தரு வத்தினர் யாரு
மிசைக்க லுற்றனர் சுருதிவீ ணைகள்பெறு மியக்கர். (20)

சிலம்பு கின்றன பற்பல சுரிமுகந் திசையிற்
சிலம்பு கின்றன பற்பல கோடுக டிரைபோற்
சிலம்பு கின்றன பற்பல காகளந் திருகிச்
சிலம்பு கின்றன பற்பல வாஞ்சிறு சின்னம். (21)

---

16. நந்தி-சிவபெருமான். மால்விடையுகைத்து-பெரிய ரிஷபத்தின்மீது ஆரோகணித்து.

17. பணித்தல் ஏவுதல். நந்தியெம்பெருமான்-நந்திதேவர். எற்றிடும்-அடிக்கும். சூரல்-பிரம்பு. வான்ஊக்கி-மேலேதூக்கி.

18. எழுதல்-எழும்புதல். பீலி-மயிற்றோகை.

19. நிரை-வரிசை. கவிகை-குடை. சிவிறி-விசிறி. தூநீத்தம்-பரிசுத்தவெள்ளம். கதலிகை-கொடி. நிபிடம்-நெருக்கம்.

21. சிலம்புதல்-சத்தித்தல். சுரிமுகம்-சங்கு. கோடு-ஊதுகொம்பு. திரை-கடல். காகளம்-எக்காளம். திருகி-முறுக்கி.

முழங்க லுற்றன வெங்கணும் பேரிகை முகில்போன்
முழங்க லுற்றன வெங்கணுந் தண்ணுமை முடுகி
முழங்க லுற்றன வெங்கணும் படகம்வின் மூடி
முழங்க லுற்றன வெங்கணும் பலகுட முழவம். (22)

மருங்கி சைப்பன வந்தண ரெழுதிடா மறைகண்
மருங்கி சைப்பன வாயிர நாமமா மனுக்கண்
மருங்கி சைப்பன வடியவர் துதித்தசொன் மாலை
மருங்கி சைப்பன மங்கையர் மங்கல வாழ்த்து. (23)

ஆட லுற்றன பற்பல வேழிசை யாழிற்
பாட லுற்றன பற்பல பழம்பதிப் பான்மு
ஞேட லுற்றன பற்பல பல்லியத் தொலிகள்
சாட லுற்றன பற்பல சாரத நடப்ப. (24)

தெரித லுற்றன நவமணி சிந்துவ திரள்காம்
பரித லுற்றன நாண்மலர் வீசுவ வருணம்
விரித லுற்றன பசியபொன் பொழிவன விரைநீர்
சொரித லுற்றன வமரரிற் சிற்சில தொகுதி. (25)

ஆவ ணந்தொறுந் துகளற வீசுவ வறல்செந்
தீவ ணந்திகழ் மின்கொடி யெடுப்பவிந் திரவிற்
பூவ ணந்தரு தோரண நிரைப்பவிட் புலவர்
காவ ணம்பொரு நீழல்செய் வனபல கணமே. (26)

மீனு லாமணி காட்டுவ பற்பல விளக்கம்
தான வன்கதிர் காட்டுவ விரசித தபனம்

---

22. முகில்-மேகம். தண்ணுமை-மத்தளம். படகம்-தம்பட்டம். குடமுழவம்-ஒருவகைமுரசு.

23. மருங்கு-பக்கம். மனு-மந்திரம்.

24. ஆடல் பாடல் ஓடல் சாடலென்பன வற்றிற்கு பூதங்களை யெழுவாயாகக் கொண்டு இவ்வாறு முன் நடப்ப என முடித்துக்கொள்க.

25. தெரிதலுற்றன, அரிதலுற்றன இவை முற்றுக்கள். அருணம்-செம்மை. விரை-வாசனை.

26. ஆவணம்-வீதி. அறல்-கருமணல். மின்கொடி-மின்னற்கொடி. இந்திரவில்-வானவில். பூவணம்-பூமாலையாலுற்ற அழகு. புலவர்-தேவர். பொரு-ஒத்த.

பானு வின்சுடர் காட்டுவ பசியபொற் பந்தம்
வான மாரிடங் காட்டுவ திருவலா மறுகு. (27)

வேறு.

எழுந்தனன் பெருமா னென்றலு மூடிக மேறி
யெழுந்த னன்பூத கணந்தொழக் கணபதி யிளையோ
னெழுந்தனன் பச்சை மயிலின்மீ தாரண னெகினத்
தெழுந்தனன் கமலக் கணன்கலு ழன்மே லெழுந்தான். (28)

வந்தனன் வெள்ளை யானையிற் புரந்தரன் மறிமேல்
வந்தன னங்கி மறலியும் பகட்டின்மேல் வந்தான்
வந்தன னிருதி பூதமேல் மகரத்து வருணன்
வந்தன னனிலன் றனதன்மான் சிவிகையின் வந்தான். (29)

சூழ்ந்தனர் நெடிய விடையின்மே லுருத்திரர் தொழுது
சூழ்ந்தன ராழித் தேரின்மே லருக்கர்விண் சுடரச்
சூழ்ந்தனர் தேவ மானமேல் வசுக்கண்முன் றுதித்துச்
சூழ்ந்தனர் தங்கண் யானமேன் மருத்துவர் தொல்லோர். (30)

தூண்டிய பரித்தே ரேறியு மும்மதஞ் சொரிய
வேண்டிய கரிக ணடத்தியு மண்ணொடு விண்ணுந்
தாண்டுவாம் பரிகள் செலுத்தியும் யாவருந் தமைச்சூழ்ந்
தீண்டிய கணங்க ளொடுமனை வியரொடு மெழுந்தார். (31)

27. மீன்-நக்ஷத்திரம். அணி-வரிசை. விளக்கம்-விளக்கு. தானவன்-சந்திரன். கதிர்-கிரணம். இரசிததபகம்-வெள்ளிக்குடம். பானு-சூரியன். பந்தம்-கைவிளக்கு. வானம்-ஆகாயம். மறுகு-வீதி.

28. மூடிகம்-பெருச்சாளி. இளையோன்-சுப்பிரமணியர். ஆரணன்-பிரமன். எகினம்-அன்னம். கமலக்கணன்-விட்டுணு. கலுழன்-கருடன்.

29. புரந்தரன்-இந்திரன். மறி-ஆடு. அங்கி-அக்கினிதேவன். மறலி-யமன். பகடு-எருமைக்கடா. நிருதி-தென்மேற்றிசைக்கதிபதி. மகரம்-சுறாமீன். அனிலன்-வாயுதேவன். மான்-மான்வாகனம்.

30. தனதன்-குபேரன். மானம்-விமானம். யானம்-விமானம். மருத்துவர்-அசுவினிதேவர்கள்.

31. பரி-குதிரை. கரி-யானை. தாண்டுவாம் என்பது தாவுதலைக் குறித்த மீமிசை. ஈண்டிய-நெருங்கிய.

வந்திடு மரிய தேவரு மாமறை மனுவாற்
செந்தழ லோம்பு முனிவருஞ் சித்தர்மற் றெவரு
நந்திகைப் பிரம்பால் வடுப்பட வடுப்பட நண்ணி
யெய்ந்தையைப் பணிந்து நெருக்குற நடந்தன ரெங்கும். (32)

இம்பர்வந் தடுத்தோர் யாவரு மடிக்கடி யிறைஞ்ச
வம்பவிழ் கூந்த லரம்பையர் நடித்திசை வாழ்த்த
வம்பிகை பாகன் விடையுகைத் தெதிரெழுந் தருளிக்
கும்பமா முனிவர்க் கருடிருக் காட்சிமுன் கொடுத்தான். (33)

போதமே வடிவாய் வரையுறு பன்னிரு புயத்தோற்
காதரம் பெருகு மடியரிற் றலைமைய னங்கை
மேதகு தண்டு குண்டிகை தரித்தவெண் புரிநூற்
காதல்கூ ரடியர் சூழ்வரப் புகுமுனி கண்டான். (34)

காண்டலு மிருகண் களித்தன னின்றனன் கையிற்
பூண்டகுண் டிகையுந் தண்டமுஞ் சோரப் புவிமேற்
றூண்டினன் றுள்ளி யோடினன் னகைத்தனன் றுனே
மீண்டனன் பணிந்தா ளுடினன் பாடினன் வேதம். (35)

அங்கமும் புளக மரும்புற விழிப்புன லாடிச்
செங்கையுந் தலைமேற் குவித்தனன் றன்செயல் தீரத்
தூங்கமெய்ச் சச்சி தானந்த வாரிதி தோய்ந்தான்
புங்கவன் கருணை யிருந்தவா றென்னெனப் புகன்றான். (36)

நேயமுங் களிப்பு மீக்கொள விழுந்தன னிலத்திற்
றூயகை யிரண்டு மங்கமுந் தோய்தரத் தொழுதான்
வாயுரை தளர மேனிகம் பித்திட வாழ்த்திச்
சேயொளிச் சடிலத் தகத்திய னுங்கிவை செய்வான். (37)

---

33. இம்பர்-இவ்வுலகு. வம்பு-வாசனை. இசை-புகழ்.

34. வரை-மலை. பன்னிருபுயத்தோன்-சுப்பிரமணியன். ஆதரம்-அன்பு. அங்கை-உள்ளங்கை.

35. சோர்தர-நெகிழ.

36. புங்கவன்-சிவபெருமான்.

37. நேயம்-அன்பு. மேனி-சரீரம். கம்பித்திட-நடுங்கிட. சேய்-செம்மை.

வேறு.

திரைமடுத் துதவ வல்லோன் செய்தவ வலியால் வெற்பிற்
கரையனை மனைவி யோடு மாங்குற வழைத்த பின்னர்
நிரை நிரை சதம்பத் தாக நீடுதூ ணிறுவி மேரு
வரையெனத் திருக்கல் யாண மண்டபஞ் சமைத்தான் மன்னோ. (38)

தவளவெண் சாந்து பூசிச் சதுர்முக னெனவு ளத்தாற்
றிவளொளி பரப்ப வல்ல சித்திரம் பொறித்துச் செய்ய
பவளமு முத்தும் பொன்னிற் பதித்திரு நாலு பாலுங்
கவளயா னையிற்செய் பாவை கட்டினன் கால்க டோறும். (39)

சந்திர காந்தத் தாலுந் தபனகாந் தப்பட் டாலும்
பந்திபந் தியவாய் வான கம்பலம் விசித்துப் பாங்கர்க்
கந்தியுங் கரும்புந் தாற்றுக் கதலியும் வீக்கி மாவி
னந்தளிர்த் தோர ணங்க ளமைத்தனன் றிசைக ளியாவும். (40)

சுரருல குரிஞ்சு மேற்றுத் துகிற்கொடி நிறுவி யெங்கும்
விரைகமழ் நான நீவி வியன்மணித் தூபம் வைத்து
மரகத மயில்வாய் நான்ற வாளரச் சுடிகை செய்ய
வரதன மனைய தூக்கு விளக்குமு மமைத்தான் மன்னோ, (41)

வித்துரு மங்கோ மேத மேதகும் பதும ராக
நித்திலம் வயிரம் பச்சை நீண்டபொன் ஞுணிற் கோத்த

38. திரை-கடல். மடுத்துதவ-உண்டுஉமிழ. வெற்பிற்கரையன்-மலையரசன். சதம்பத்து-ஆயிரம்.

39. சதுர்முகன்-பிரமன். பொறித்து-எழுதி. பால்-பக்கம். கவளம்-மதம். யானையின்-யானைபோல.

40. சந்திரகாந்தப்பட்டு-வெண்பட்டு. தபநகாந்தப்பட்டு-செம்பட்டு. கம்பலம்-மேற்கட்டி. விசித்து-கட்டி. பாங்கர்-பக்கம். கந்தி-கமுகு. தாற்றுக்கதலி-குலைவாழை. வீக்கி-கட்டி.

41. சுரருலகு-தேவருலகு. உரிஞ்சுதல்-தடவுதல். ஏற்றுத்துகிற்கொடி-ரிஷபமெழுதிய சீலைக்கொடி. நிறுவி-நாட்டி. விரை-வாசனை. நானம்-கஸ்தூரி. நீவி-தடவி. நான்ற-தொங்கிய. சுடிகை-உச்சி. அரதனம்-இரத்தினம்.

கத்திகை கற்ப கப்பூங் கண்ணிபூஞ் செருக்கு மாலை
கொத்தலர் சரங்க ளாலு மண்டபங் கோடித்தானே. (42)

புண்ணிய னுமையை வேட்கும் வேள்விக்குப் பொருந்து மாறு
கண்ணிய கலப்பை யான பொருள்களுங் கணத்திற் கண்டான்
திண்ணிய தவப்பே றென்று முற்றவர் சிந்தை கூர
வெண்ணிய வண்ண மெல்லா மெய்துத லருமை யாமோ. (43)

வண்டமிழ் முனிவ னுங்கே மானத தீர்த்த மொன்று
கண்டனன் கங்கை யாதிக் கடவுண் மெய்த் தீர்த்தம் வைகுங்
குண்டிகை யமுதம் பூரித் தயனிருங் கூலத் தன்பா
லெண்டிசை பரசுந் தூய விலிங்கமொன் றினைத்தா பித்தான். (44)

திருக்கலி யாண நாத னெனத்திரு நாமஞ் சூட்டி
யருத்திகூர் வேள்வி காண்பா னருச்சனை புரிந்து பாண்டி
விருத்தமா நகரில் வாழும விமலமெய் யடியா ருள்ளக்
கருத்தினை முடிக்கு முக்கட் கடவுளென் றேத்திச் சொல்வான். (45)

அடியவ ருய்ய நாயேன் வாழ்ந்திட வமுதை வேட்ட
கடிமண மதனை யிந்நாட் காணுமா றருள்வா யென்னப்
பொடியணி தவள மேனிப் புண்ணியன் முறுவல் கூர்ந்து
நெடியவான் பவள வேணி துளக்கினன் நேர்ந்தா னன்றே. (46)

மூவுல கோரும் போற்ற முரசொடு சின்ன மார்ப்ப
நாவினுக் கரசி கேள்வ னன்மணச் சடங்கி யற்றப்

42. வித்துருமம்-பவளம், நித்திலம்-முத்து. நாண்-கயிறு. கத்திகை-பூமாலை. கண்ணி-மாலை செருக்குமாலை-கட்டிமாலை. கோடித்தான்-அலங்கரித்தான்.

43. வேட்கும்-கலியாணஞ்செய்யும். கண்ணிய-கருதிய. கலப்பை-உபகரணம்.

44. மானததீர்த்தம்-பிரமலோகதீர்த்தம். அமுதம்-நீர். கூலம்-கரை.

46. அமுதை-உமாதேவியை. கடி-அழகு. பொடி-திருநீறு. தவளம்-வெண்மை. வேணி-சடைமுடி. துளக்கினன்-அசைத்தனன். நேர்ந்தான்-இசைந்தான்.

பூவைமே னியனும் யாரும் பொருந்துகுற் றேவல் செய்யத்
தேவியு மெம்பி ரானுந் திருமணக் கோலங் கொண்டார். (47)

உரியமங் கலநாண் பூட்டி யுமைகரம் பற்றி யெம்மான்
விரிசுடர்த் தபநற் சூழ்ந்து வெண்பொரி சிதறி யோம்பி
வரிவிழிக் களபக் கொங்கை வல்லிதாட் கமலஞ் சேப்ப
வரியபூஞ் சிலைமே லேற்றி யருந்ததி நோக்கு வித்தான். (48)

வான்மழை யென்ன விண்ணோர் மாமலர் மாரி பெய்யத்
தேன்மழை யெனயாழ் வல்லோர் செவ்வழி யிசைகள் பாடக்
கான்மழைக் கரிய கூந்தற் கயல்விழிக் களபக் கொங்கைப்
பான்மழை யனைய தீஞ்சொ லரம்பையர் பலரு மாட. (49)

மூலமு மாதி யாய வானவர் வணங்கி யேத்த
மூலமா மறைநூல் வல்ல முனிக்குழா மாசி கூறச்
சீலமெய்த் தவப்பே றுற்ற சித்தர்பல் லாண்டி யம்பச்
சேலென மறியு முண்கட் டிருமுத லெவரும் வாழ்த்த. (50)

ஒருவருங் காணக்கிட்டா விருவரு மொருங்கு நின்ற
திருமண வாளக் கோலங் கண்டுதன் சிந்தை கூர்ந்த
பருவர லகல மேனி புளகுறப் பார்க்குந் தோறு
மிருகணுங் களித்து நின்ற முனிவனீ தெண்ணு மெல்லை. (51)

வேறு.

சூரி யன்றிகழ் பலபல கந்தமாய்த் தோன்றி
யூரி யன்றிரு மணம்புரிந் தெழுந்தரு ளழகைப்
பாரி லன்பொடு பணிந்தெதிர் காண்குவான் செலல்போல்
வாரி யிற்புகச் சிவந்தது மேற்றிசை வானம். (52)

47. நாவினுக்கரசிகேள்வன்-பிரமன். பூவைமேனியன்-விட்டுணு.

48. தபனன்-அக்கினிதேவன். வரி-நீளம். சேப்ப-சிவப்ப. சிலை-அம்மிக்கல்.

49. கான்-இயற்கைவாசனையையுடைய. மழை-மேகம்.

50. சேல்-மீன். மறியும்-திரும்பிப்பார்க்கும் உண்கண்-மைதீட்டப்பெற்ற கண். திரு-இலக்குமி.

51. பருவரல்-துன்பம்.

52. கந்தம்-பகுதி. வாரி-கடல்.

உம்ப ரோங்கிய கைலையாம் பிறங்கலை யொப்பக்
கும்ப மாமுனி தவத்தினி னுலிரு கோட்டுச்
செம்பொ றிக்கனற் சிறுவிழிப் பெருங்கைவெஞ் சீற்றக்
கம்ப மாமத வெள்ளைவா ரணமொன்று கண்டான். (53)

சிந்து ரக்கிரி முகத்தினிற் சிந்துரந் தீட்டிக்
கந்த ரத்தணி புரோசையுந் தொடர்மணிக் கலனும்
புந்தி கூர்மணிச் சூழியும் புனைந்துமீப் போர்வை
யந்தி ஞாயிறிற் கண்டையு மணிந்தலங் கரித்தான். (54)

பின்ன ருந்தமி ழகத்திய னுலகெலாம் பிறங்க
மின்னு மாமணிச் சிவிகையொன் றுங்குற விதியாப்
பொன்னி னுண்மலர்த் தாரினன் மண்ணுதல் புரிந்தா
னுன்ன ருந்தவ முடையவர்க் கரியவை யுளவோ. (55)

வள்ள லாரடி பணிந்துலா வருகுவான் வாழ்த்தி
வெள்ளை யானையின் பிடர்மிசை யெழுந்தருள் வித்தான்
கள்ள விழ்ந்ததார்க் கச்சணி முலையிளங் கரும்பை
யெள்ள ருஞ்சிவி கையிலெழுந் தருளுமா றிசைத்தான். (56)

கண்டம் வெண்கல நரம்பத டளைகொளைங் கருவி
கொண்ட பற்பல முழக்கமு மோருருக் கொள்ளா
வெண்டி சாமுகங் களுநெருங் குறப்படர்ந் தேறி
யண்ட கோளமும் வெடிபட வெழுந்ததை யன்றே. (57)

உகங்க டோறும்வந் துதித்திடுந் தபனர்க ளொருங்கே
முகங்கொள் கையக ரோரண வட்டில்கண் முதலாச்

53. பிறங்கல்-மலை. கோடு-கொம்பு. கம்பம்-நடுக்கம். கண்டான்-நிருமித்தான்.

54. சிந்துரம்-யானை. கந்தரம்-கழுத்து புரோசை-கழுத்தணிகயிறு. சூழி-முகபடாம். மீ-மேல். ஞாயிறின்-ஞாயிறுபோல.

55. விதியா-விதித்து. தார்-மாலை. மண்ணுதல்-அலங்கரித்தல்.

56. வருகுவான்-வருதற்பொருட்டு. கள்-தேன். அவிழ்ந்த-சொரிந்த. யெள்ளரும்-இகழ்தலில்லாத.

57. கண்டம்-இங்கேகண்டத்தொலி. நரம்பு-தந்திக்கம்பி. அதள்-தோல். கொள்ளா-கொண்டு. படர்ந்து-சென்று. எழுந்ததை யென்ற விடத்து ஐஅசை.

சகம்பொ ருந்தல்போற் பந்தமா யிர்நிரை தயங்க
விகங்கு லாமதித் தீபமா யிரநிரை யிலங்கும். (58)

தூப மாயிர மாயிரந் துகிற்கொடி நிரைவெந்
தாப நீக்கிடுங் கவிகையோ ராயிரந் தழைப்ப
யூப வேள்வியார் முதற்புவி யோர்கள்மா லுதர
நாப னுதிவிண் ணவர்புறஞ் சூழ்ந்தனர் நடப்ப. (59)

கந்த ரக்குழ லரம்பையர் வாழ்த்திடக் கமலச்
செந்தி ருப்பனி மலைமகள் பின்வரச் செழுநீர்
நந்தி நாயகன் புகழ்ந்திடப் பழம்பதி நகர்சூழ்
வந்து கோபுர வாயிலி லிருந்தனன் வள்ளல். (60)

சென்னி சாய்த்துநின் றிடுமிமை யாசலத் தேனைப்
பன்னி செங்கையெம் போருகத் தேந்திப்பின் படர
மன்னுஞ்செந்தமிழ் முனிபுயக் கைலைமால் வரைமேற்
பொன்னின் வார்சடை யரனைக்கொண் டாலயம் புகுந்தான். (61)

மந்தி ரத்துமா மண்டபத் தடலரி வரிக்காற்
பந்தி கூர்மணிப் பீடத்தி லுமையிடப் பாகத்
தெந்தை யாரெழுந் தருளிவீற் றிருக்குமா றியற்றி
முந்து றப்பணிந் திடுமேனை யாளொடு முனிவன். (62)

மறையு ரைத்திடு முயிர்க்குயி ராமிரு வரைப்பன்
முறைப ணிந்துகை கூப்பிய வகத்திய முனிவன்

58. தபனர்கள்-சூரியர்கள். அகல்-தகழி. வட்டில்-தீவர்த்தி. பந்தம்-கைவிளக்கு. நிரை-வரிசை. தயங்க-பிரகாசிக்க. இகம்-இம்மைக்குரிய போகம்.

59. கவிகை-குடை. யூபம்-யாகப்பசுவைக்கட்டுந்தறி. மாலுதரநாபன்-விட்டுனு வயற்றிலுள்ள நாபியிற்றோன்றிய பிரமன்.

60. கந்தரம்-மேகம். திரு-இலக்குமி. பனிமலை-இமயமலை. செழுநீர்-செழித்த சிவகுணதிசயங்களை.

61. இமயாசலத்தேன்-உமாதேவி. ஐ-அசை. பன்னி-மனைவியாகிய லோபாமுத்திரை. அம்போருகம்-தாமரை. படர-செல்ல.

62. மந்திரம்-கோயில். அரி-சிங்கம். வரி-கீளம். பந்தி-வரிசை.

பிறைய ணிந்தசெஞ் சடைப்பிரான் றிருவருள் பெருகி
நிறையு மாமுக மண்டலம் பார்த்திவை நிகழ்த்தும். (63)

அடர்ந்த தில்லையங் காட்டொரு புலியா லினுக்காய்
நடம்பு ரிந்தனை யந்நடந் தரிசிக்க நாங்க
டொடர்ந்த காதலுற் றனமென வகத்தியன் றுதிப்ப
மடந்தை பாகனூர் நன்றெனப் பவளவாய் மலரும். (64)

வாமு றுந்தமிழ் முனிவவிவ் வச்சிர வனத்தை
யுரவு நீர்க்கட லுலகமின் றெண்முத லுயர்ந்தோர்
விரவு தக்கிண சிதம்பர மெனப்பெயர் விளம்பிப்
பரவி யேத்துக வென்றருளண்ணறன் பணியால். (65)

அநகன் வாழ்திரு விருப்பினுக் கீசதிக் கதனிற்
றிநக ரக்கதிர் தரவியற் றியசிவ ஞானக்
கனக மன்றிடை யிட்டபொற் பீடத்துக் கனலு
மனது ருத்திடு முயலகன் முதுகின்மேல் வள்ளல். (66)

யாவை யுந்தருந் திசைமுகன் றுளவொத் தறுப்ப
மாவை வைத்தபொன் மார்பினன் முழவங்கை கறங்கத்
தேவ வீணைவல் லவரிசைத் திடப்பனிச் சிமையப்
பூவை பார்த்திட வானந்த தாண்டவம் புரிந்தான். (67)

உம்பர் கற்பக மலர்சொரிந் திடவுயிர்க் குயிரா
மெம்பி ரானரு ளானந்த நடஞ்செயு மெல்லைக்
கம்பி தத்துடன் பணிந்துமேற் குவித்தகை யினனாய்
நம்ப னெதிர் பதஞ்சலி நின்றிவை நவிற்றும். (68)

வேறு.

காமனை வென்ற கடவுளே நெற்றிக் கண்ணனே புரந்திட வேண்டு
நாமகள் கோனு முகுந்தனு மறியா நாதனே புரந்திட வேண்டுஞ்

---

64. புலி-வியாக்கிரபாதர். அரவு-பதஞ்சலி.
65. தக்கிணம்-தெற்கு.
66. தினகரன்-சூரியன். உருத்திடும்-கோபித்திடும்.
67. திசைமுகன்-பிரமன். மா-இலக்குமி. சிமயம்-மலை. பூவை-உமாதேவியார்.
68 கம்பிதம்-நடுக்கம். நம்பன்-சிவபெருமான்.

சாமமு மிருக்கு முதலிய வேதத் தலைவனே புரந்திட வேண்டும்
பூமகள் விளங்கும புனவையம் பதிவாழ் புண்ணியா புரந்திட வேண்டும்.
(69)

திக்களு மரவும் புனைந்தருந் டேவ தேவனே புரந்திட வேண்டு
மங்கையிற் பரசு மரிணமுந் தரித்த வத்தனே புரந்திட வேண்டுங்
கங்கைதன் றலைவா கச்சணி முலையாள் கணவனே புரந்திட வேண்டும்
புங்கவர் பரவும் புனவையம் பதிவாழ் புண்ணியா புரந்திட வேண்டும்.
(70)

மாதவர்க் கருள்வான் வடநிழ லமர்ந்த வள்ளலே புரந்திட வேண்டு
மேதமி லுயிரை யீன்றளித் தொடுக்கு மெந்தையே புரந்திட வேண்டு
நீதமார் மாயை மூன்றையுங் கடந்த நித்தனே புரந்திட வேண்டும்
பூதநா தாந்தப் புனவையம் பதிவாழ் புண்ணியா புரந்திட வேண்டும்.(71)

அரியநோய் வறுமை யாதியால் வருந்தா தண்ணலே புரந்திட வேண்டு
மருநரு களிக்கு நெறிகளிற் புகுதா வாறெமைப் புரந்திட வேண்டு [டும்
மிருவினைப் பிறவிக் கடலிடை யழுந்தா தெடுத்தெமைப் புரந்திட வேண்
பொருவரும் பாண்டிப் புனவையம் பதிவாழ் புண்ணியா புரந்திட வேண்
[டும். (72)

ஆதியா யுலகிற் கர்த்தமாய் நடுவா மண்ணலே புரந்திட வேண்டுஞ்
சோதிகூ ரனந்த மிரவியிற் சிறந்த சோதியே புரந்திட வேண்டும்
மாதிர மெட்டும் புவனங்கள் யாவும் வகுத்துவைத் தொழித்திட வல்ல
பூதநா யகனே புனவையம் பதிவாழ் புண்ணியா புரந்திட வேண்டும்.(73)

தெருள்சரா சரத்திற் சகலர்தாம் பூசை செய்திடத் திருவுள மகிழா
விருமையு ஞான வாழ்க்கையு மளிக்கு மீசனே புரந்திட வேண்டு

69. புரந்திட-காத்திட நாமகள்கோன்-பிரமன். முகுந்தன்-விட்டுணு. பூமகள்-இலக்குமி.

70. பரசு-மழு. அரிணம்-மான்.

71. மாதவர்-சனகர்முதலிய நால்வர். நீதம்-நீதி. மாயைமூன்று-சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்பன. கன்மத்திற் கேற்றவாறு மயக்கலில் நீதமார்மாயை யெனப்பட்டது.

72. பொருவரும்-ஒப்பில்லாத.

73. மாதிரம்-திக்கு. வகுத்து-தோற்றுவித்து. வைத்து-காத்து. ஒழித்திடல்-ஒடுக்குதல்.

மருவமா யுருவா யருவுரு வாய்மை லாமிரு திறத்தவர்க் கருளே
புரியுமெய்ப் பொருளே புனவையம் பதிவாழ் புண்ணியா புரந்திட வேண்
[டும். (74)

ஆகம சுருதி செழ்புறு களிம்பொப் பாமெண வறைந்திடு மலத்தான்
மோகமா முயிர்கள் செயுமிரு வினையின் முறைதெரிந் தவ்வினை முற்றத்
தாகமா மின்பத் துன்பங்க ளருந்தத் தனுவொடு காணமெய்ப் புவன
போகமு மளிக்கும் புனவையும் பதிவாழ் புண்ணியா புரந்திட வேண்டும்.
(75)

சாற்றுமா ருறு தத்துவங் கடந்த தனிப்பெரும் பொருளுமாய்த் தனது
கூற்றுறுஞ் சத்தி யோர்பெரு வடிவுங் குணங்களும் புவனமுந் திருவுந்
தோற்றும்வான் படையுங் கலன்களு மாகத் தோன்றியைந் தொழிலி
[னைச் சுருதி
போற்றிட நடத்தும் புனவையம் பதிவாழ் புண்ணியா புரந்திட வேண்
[டும். (76)

இவ்வகை துதித்த பதஞ்சலி வணங்கி யிறைவனை யித்தமி ழெட்டுஞ்
செவ்விதிற் புகலு மடியவர் வேண்டுஞ் சித்திதந் தருளெனச் செப்ப
வவ்வழி நின்ற வகத்தியன் முதலோ ரமரர்க ளியாவரு மத்தன்
றிவ்விய நடங்கண் டிறைஞ்சியுள் ளடங்காச் சிவானந்த வாரிதி தினைத்
[தார். (77)

மூவுல கேத்தக் கற்புறு முலோபா முத்திரை கேள்வனு மூய்யச்
சேவடி தூக்கித் திருநடம் புரிந்த சிவன்பதஞ் சலிமுக நோக்கி
யாவரா யினுமித் தாண்டவங் கண்டோ ரெண்ணிய சித்திபெய் துகவென்
றோவரு வரந்தந் தரியமா விலிங்கத் துள்ளுறக் கரந்தன னுருவம். (78)

74. சகலர்-சகலவருக்கத்து உயிர். மகிழா-மகிழ்ந்து. இருதிறத்தவர்-விஞ்ஞானகலர் பிரளயாகலர். அருவமாய் நின்றருளுதற்குரியர்விஞ்ஞானகலர், உருவாயும் அருவுருவாயும் நின்றருளுதற்குரியர் பிரளயாகலர்.

75. முற்ற-முடிய.

76. ஆறுறு-முப்பத்தாறு, படை-சூலமுதலிய ஆயுதம். கலன்-ஆபரணம்.

77. தமிழெட்டும்-தோத்திரச்செய்யுளெட்டும்.

78. ஓவரு-கெடாத. கரந்தனன்-மறைந்தனன்.

வேறு.

கதிபெ றுந்தமி ழகத்திய ஞலயங் கடந்து
துதித ரும்பதஞ் சலிமுத லோர்புடை சூழப்
பதிதொ முஞ்சிவ கங்கையா தியபுனல் பத்தும்
விதியி ஞடிநன் னெறிகளு முடித்துடன் மீண்டான். (79)

வந்து மந்திர மெய்தியோர் கோட்டுவா ரணத்தைக்
கந்த வேடனைப் பரசியுட் புகுந்துகை கூப்பி
யிந்தி ரன்பணிந் தேத்திய மாவிலிங் கத்தைச்
சிந்தை கூர்தரும் விதிமுறை யருச்சனை செய்தான். (80)

முன்னி றைஞ்சிநின் றேத்திமேற் கச்சணி முலையா
டன்னை யன்பொடு பூசனை புரிந்தரு டழைப்ப
மின்னு மான்முதற் றேவர்மா தவர்கண்மற் றெவர்க்குந்
தன்ன லஞ்சுவைப் பாலன மளிப்பக்கா தலித்தான். (81)

பூத லத்தினு விண்ணினும் போகபூ மியினு
மோத ருந்திறத் தறுசுவை நால்வகை யுண்டி
யாதும் யாவரு மோருழி யயின்றிட வளித்தான்
மேத குந்தவப் பெருமையை யாவரே விரிப்பார். (82)

கற்றை வார்சடை யண்ணறன் காட்சியாற் கலசத்
துற்ற மாமுனி விருந்தினு விருமையு மொருங்கே
பெற்ற தேவரு முனிவரு மியாவரும் பிரியா
தற்றை நாளிர வமர்ந்தன ரந்நகர் தன்னில். (83)

அரவ யாநதிக் கரைதனிற் சிவகங்கைக் கங்கி
வரமு றுந்திசை யாமொரு பகழியின் வரைப்பிற்

79. பதி-தலம்.

80. ஓர்கோட்டுவாரணம்-விநாயகர்.

81. மால்-விட்டுணு. கன்னல்-சருக்கரை. அனம்-அன்னம்.

82. அறுசுவை-உவர்ப்பு, உறைப்பு, கசப்பு, தித்திப்பு, துவர்ப்பு, புளிப்பு என்பன. நால்வகையுண்டி-உண்பன, தின்பன, நக்குவன, குடிப்பன என்பவை. உழி-இடம். அயின்றிட-அருந்த.

பரமெ னுஞ்சிவப் பிரதிட்டை செய்தடி பகச
விரவி கும்பச னிடுசிவ கும்பமொத் தெழுந்தான். (84)

என்று திக்குமு னெழுந்துதங் குறைமுடித் திறைஞ்சி
நின்ற மாதவன் றேவரு முனிவரு நெருங்கச்
சென்று கட்செவி நதிமருங் காஞ்சிவ கோட்ட
மொன்று செய்தனன் சிற்பர நூன்மர புளியே. (85)

கிருத காடிநி மானநா லேந்தெனக் கெழுமு
முருவி னுள்ளுறும் வள்ளலைத் தமிழ்முனி யுன்னிப்
பொருவி லாலயத் தன்பொடுந் தாபனம் புரிந்து
திருவி னீடிய பூசையும் விதிமுறை செய்தான். (86)

நிறையும் பேரருள் புரிந்திடு மெந்தைசன் னிதியி
னறையும் வேள்வியி லச்சுவ மேதமீ ரைந்து
மறையி னுற்செய்து மாதவ ராசியும் வானி
னுறையும் விண்ணவ ருதவிய வரங்களு முற்றான். (87)

உன்னு மத்திரி மேலுமுற் காதனோ டோதா
வென்னும் வேள்வியி னிருத்துகட் கின்மொழி யியம்பித்
தன்னி கர்த்தவர் தத்தமக் குரியதக் கிணையாப்
பொன்னு மாடையுங் கொடுத்தன னல்லவி புரிந்தான். (88)

மற்றை மாதவர் தேவரைத் தனித்தனி வாழ்த்திக்
கொற்ற மாமவ ருலகுறத் தரும்விடை கொடுத்து
முற்று மன்புடை மனையுடன் செந்தமிழ் முனிவன்
பெற்ற வூர்தியைப் பணிந்தக லாவிடை பெற்றான். (89)

---

84. பகழி-அம்பு. வரைப்பு-எல்லை. இரவி-சூரியன். கும்பசன்-கும்பத்திற்றோன்றியவன்.

85. என்று-சூரியன். கோட்டம்-கோயில். உளி-இன்னுருபு.

86. கிருதம்-நெய். காடிநி-கடினம். மான-ஒப்ப. நாலேந்து-சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசுவரம், உருத்திரன், விட்டுணு, பிரமன் என்னும் நவபேதம். கெழுமும்-தோன்றும். பொரு-ஒப்பு.

87. அச்சுவமேதம்-அசுவமேதயாகம். ஆசி-ஆசீர்வாதம்.

88. அத்திரி, உற்காதன், ஓதா என்பவர் வேள்விசெய்துவைக்கும் ருத்துக்களாவார். தக்கிணை-தக்ஷிணை.

89. கொற்றம்-வெற்றி. பெற்றவூர்தி-சிவபெருமான்.

மதித ருஞ்சடை யெம்பிரான் றிருவருள் வாரிக்
கதிபெ ருந்திரை வசத்தினு லடைந்திடுங்கலச
முதிய மாதவ னசும்பரு தொழுகிய முகிரோய்
பொதிய வெற்பினிற் காதலி யுடன்குடி புகுந்தான். (90)

அகத்தியச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 599.

## 14-வது அங்காரகச் சருக்கம்.

புங்க நைமிச முனிவிர்காள் கேட்பவர் புகல்வோர்க்
கெங்கு மங்களந் தருமகத் தியன்செய லென்னு
வங்க னன்பதம் பணிந்துபூ மகன்வர மடைந்த
துங்க மெய்க்கதை கேளுமி னெனச்சொலுஞ் சூதன். (1)

வேறு.

மரைத்தடம் புடைசூழ் நைமிசத் தமர்ந்த
மாதவர் பன்முறை வாழ்த்திக்
கரைத்தலை யனுகாக் கடல்பொரு மன்பாற்
கைகுவித் திருந்தனர் கேட்ப
நிரைத்தபன் மேடைப் பழம்பதி யெய்தி
நிலமக னிறைஞ்சிய நிலைமை
யுரைத்திடுஞ் சூதன் சதுர்முகன் வகுப்ப
வோங்கிய வுலகமே லொருநாள். (2)

அனைத்தையு முணர்ந்த வறிவனோ ரைய
மகற்றுவா னாரத முனிவன்
றனைப்புக லெனப்போய்ச் சார்ந்தடி தாழ்ந்து
தமியனேன் விளம்பும்விண் ணப்ப
மெனைத்தையு மையந் திரிபற வறிந்தோ
னீயலா லில்லையீங் கிதனுல்

---

90. வாரிக்கதிபெருந்திரை-கடலின் வேகத்தைப்பெறும் அலை. அசும்பு-இடையறு தொழுகுதல்.

1. பூமகன்-பூமிபுத்திரனாகிய செவ்வாய்.

2. மரைத்தடம்-தாமரைத்தடாகம். கரைத்தலை-கரையிடம். அதாவது பூமி. கடல் பொரும்-கடலையொக்கும். நிலமகன்-செவ்வாய். உரைத்திடும்-முற்றுச்சொல்.

வணத்தினுந் தலத்தும் புனலினு முயர்ந்த
மலையினுஞ் சிறந்ததை வகுப்பாய். (3)

நானில மடந்தை சுதனிவை வினவ நாரத னுரைத்திடு மறிவால்
வானில முழுதும் பயின்றிடு மாண்பால் வண்மலை புவிபுனன் மற்றை
மேனிலை யுலகிற் சிறந்தது புவியின் மேவின திருப்பழம் பதியே
யானவத் தலமெவ் விடத்துள் தென்னி லறைகுதுங் கேண்மினென்
[றியம்பும். (4)

அப்பதி மதுரைக் கிந்திர திசையி னாழியின் மருங்கதா மதன்பேர்
செப்பினும் பண்ணுட் டிரிகர ணத்தாற் செய்திடும் பவமெலாந் தீரு
மொப்பரும் புத்தி முத்தியுந் தருமாங் கோமகுமா விலிங்கமொன் றுறையு
மெப்பதி களினு மடுக்கிய வுலகீ ரேழினு மதற்கிணை யிலையால். (5)

காலமோர் மூன்று நித்தியமாமக் கடவுடன் பெருமையைக் கரிய
மாலயன் முதலோ ரறிந்திடா ரெண்ணின் மற்றெமால் வகுத்திட லாமே
ஞாலமு முயிர்க ளியாவையு முய்ய நயந்தருள் செயுமலை மங்கை
யேலவார் கூந்தற் கச்சணி முலையா ளெனப்பெய ரெய்திவீற் றிருக்கும்.

உவமைவே றில்லா வருட்சிவ கங்கை யோதிம னிந்திர தீர்த்தந்
தவனசந் திரபுட் கரணிசக் கரதீர்த் தம்மிலக் குமிதடந் தீர்த்தஞ்
சிவன்மகி ழுரக நதிகலி யாண தீர்த்தநீள் வாருண தீர்த்தம்
பவமடுந் திசைகள் பத்திலித் தீர்த்தம் பத்தினுக் கிணையெவர் பகர்வார்.(7)

இத்திறம் பெறுமிந் திரநக ரடுத்தை யிருபுன லாடியெம் மானைப்
பத்தியி னிறைஞ்சி வருகநீ யென்னப் பகருநா ரதனடி பணிந்து [வாய்
சித்திர மணித்தெண் டிரைத்துகி லுடுத்த சேயிழை சேயெனுஞ் செவ்
புத்தியு முத்தி யனைத்தையு மளிக்கும் புரந்தர புரியகம் புகுந்தான். (8)

---

3. அறிவன்-செவ்வாய்.
4. நானிலம்-பூமி. சுதன்-புத்திரன்.
5. இந்திரதிசை-கிழக்கு. ஆழி-கடல். புத்தி-போகம்.
6. ஆமே-ஆமோ. ஞாலம் உலகம். மலைமங்கை-உமாதேவியார். ஏலம்-மயிர்ச்சாந்து. வார்-நீண்ட.
7. ஓதிமன்-பிரமன். தவனன்-சூரியன். உரகம்-சர்ப்பம். வாருணம்-வருணம். திசைகள்பத்து-எட்டுத்திக்கும் மேலுங்கீழும்.
8. இந்திரநகர்-திருப்புனவாயில். ஐயிருபுனல்-பத்துத்தீர்த்தம். சித்திரமணி-அழகான ரெத்தினம். திரை-கடல். சேயிழை-பூமி.

பரிவுடன் வந்த பார்மகன் றீர்த்தம் பத்தினும் விதிமுறை படியா
வரியவெண் பூதி கண்டிகை மாலே யணிந்துதன் குறைமுடித் தைய
னெரிமணிக் கனக மந்திரத் துயர்ந்த வேழ்நிலேக் கோபுரத் தெதிர்போ
யுரியதன் னன்னே மார்பினிற் றவழ்வ தொத்துவீழ்ந் திறைஞ்சியுட்
[புகுந்தான். (9)

தந்திமா முகனேக் கந்தனேப் பாசித் தாணுவின் சன்னிதி யெய்தி
வந்தனே புரிந்து மந்திர விதியால் மஞ்சனங் கவ்விய மாட்டிப்
புந்திகூர் துகில்சந் தனம்பணி யணியாப் போனக முதனிவே தித்தே
யந்தமி றூப தீபமுங் கொடுத்தன் பாற்றிரு நீற்றுக்காப் பணிந்து. (10)

முன்னுறத் தாழ்ந்து மனஞ்சிவ னுருவை முன்னவா யவன்புகழ்மொழியப்
பொன்னுடன் முழுதும் புளகெழ விழிநீர் பொழிதரச் செய்யவம் புயப்பூத்
தன்னிரு கையுங் குவித்துமெய் கோட்டித் தாளிணே தோய்தர நடந்து
மன்னுமா விலிங்க மூர்த்தியை முக்கால் வலம்வந்து வணங்கினன் வாழ்த்
[தும். (11)

வேறு.

சேடுறு மகண்டா நந்த சின்மய சிவமுஞ் சேர்ந்து
வீடரு மரத்தின் காழ்ப்பின் விளங்கிய சத்தி யும்பார்
நீடுபல் லுயிரு மாயை மலவினே நிலேயுந் தேர்வார்
நாடிய நமச்சி வாய நமநம நமச்சி வாய. (12)

அடிப்படும் வினேப ழுப்ப விதித்துமே லவைக ளுண்டு
முடித்திடப் புரந்தி ளேப்பு நீங்கிட முறையொ டுக்கித்
தடுத்ததன் பின்னர் மேலாந் தன்னருள் பதிக்குந் தன்மை
நடித்திடு நமச்சி வாய நமநம நமச்சி வாய. (13)

---

9. பரிவு-அன்பு. பார்மகன்-செவ்வாய். எரி-சுடர். மந்திரம்-கோயில்.

10. மஞ்சனம்-நீர். கவ்வியம்-பஞ்சகவ்வியம். போனகம்-அன்னம்.

11. மூன்ன-நினேக்க. பொன்னுடல்-சிவந்த வுடல். அம்புயப்பூ-தாமரைப்பூ. கோட்டி-வளேத்து.

12. சேடு-பெருமை. வீடரு-விட்டுப்பிரியாத. காழ்ப்பு-வயிரம். இன்-உவமஉருபு.

13. பழுப்ப-முதிர. விதித்து-சிருட்டித்து. புரந்து-காத்து. ஒடுக்கி-சங்கரித்து. தடுத்து-மறைத்து. நடித்திடும்-நிருத்தனம்புரியும்.

சென்னியு முகனும் மார்பு மூந்தியுந் திருத்தாள் மற்று
முன்னிய வதன் மைந்து முற்றிய சாதம் வாமர்
தன்னிக ரகோர மேதற் புருடமீ சானர் தாமா
நன்னிலை நமச்சி வாய நமநம நமச்சி வாய. (14)

புலிகளும் வானு மற்றப் புவனமும் புகழும் வேதத்
செவிபுகப் புகல காரந் திகழுகா ரம்ம கார
மவிருறும் விந்து நாத மாமென வன்ப ரெல்லா
நவிறரு நமச்சி வாய நமநம நமச்சி வாய. (15)

படங்கிள ராவும் வேங்கைப் பாதனும் போற்றக் கங்கைத்
தடந்தரு முடியுந் தூய வதனமுந் தரும்பொற் றோளு
மிடந்திகழ் வயினுந் தாளு மேற்குமைந் தெழுத்தே யாக
நடஞ்செயு நமச்சி வாய நமநம நமச்சி வாய. (16)

வயமலி துடியும் வீசும் வண்கையு மபய மென்று
மியறரு கீரழு மங்கை யேந்திய வங்கி யோடு
முயலக னூர்ந்து மேற்கு முறையிலெந் தெழுத்தா மென்ன
நயனுறு நமச்சி வாய நமநம நமச்சி வாய. (17)

செனிதமாந் துடியு மியாவுந் திதித்திடு மபய மும்பார்
தனிவிளைப் பொழிக்குந் தீயுந் தகைந்திட மிதித்த தாளும்

14. சாதம்-சத்தியோசாதம். தாமாம்-தாமேயாகும். ஈசானம் சிரசாகவும், தற்புருடம் முகமாகவும், அகோரம் மார்பாகவும், வாமம் குய்யமாகவும், சத்தியோஜாதம் காலாதியாகவுமென எதிர் நிரனிறையாகக் கொள்க. வதனமைந்து-ஈசான முதலிய முகமைந்து. ஐந்து மந்திரங்களும், ஐந்துறுப்புக்களாகவும் ஐந்து முகங்களாகவும் அமைந்திருக்கின்றன என்பதாம்.

16. அரா-பதஞ்சலி. வேங்கை-வியாக்கிரபாதர். ஏற்குமைந் தெழுத்தேயாக-முடியகரம், முகம்வகரம், தோள் சிகரம், வயிறு மகரம், திருவடி நகரமாகக்கொள்க.

17. ஏற்குமுறையிலெந்தெழுத்தாமென்ன-துடி சிகரம், வீசுகை வகரம். அபயகரம் யகரம், அக்கினியேந்திய கை நகரம், முயலகனை மிதிக்குந்திருவடி மகரமாகக்கொள்க.

புனிதவீ டளிப்பான் வீசு பொற்பத மிவையா மென்ன
நனிதிகழ் நமச்சி வாய நமநம நமச்சி வாய. (18)

மலரயன் பங்கு மரித மாதவன் பங்கு மன்னு
மூலகின் யொடுக்கு நாதற் குரியதோர் பங்கு மாக
விலகிய விலிங்கந் தானு மெண்ணிலேர் தெழுத்தா மென்ன
நலனுறு நமச்சி வாய நமநம நமச்சி வாய. (19)

எண்ணிலா வுயிர்க் குள்ளத் திருளினுக் கிரவி போலும்
புண்ணிய வருணூல் வேத நூலொடு புராண முன்னுக்
கண்ணிய வனந்த கோடி கலைக்கெலா மூல மாக
நண்ணிய நமச்சி வாய நமநம நமச்சி வாய. (20)

தொன்மையா மட்டசித்தி துலங்குமட் டாங்க யோக
மின்மனத் துதித்தி டுங்கா மியம்விரும் பினர்க ளெட்டா
வுண்மரா தீதம் வேட்டோ ருறழ்ந்துறந் துச்ச ரிக்க
நன்மைகூர் நமச்சி வாய நமநம நமச்சி வாய. (21)

வேறு.

என்று போற்றிய வெல்லையி னெய்வழி யெழுந்து
நின்றி லங்கிய கனலிபோ னிமலதன் னுடனே
மின்ற யங்குசெஞ் சடையினன் மழவிடை வெள்ளிக்
குன்றின் மேலெழுந் தனன்குசன் கண்டுகண் குளிர்ந்தான். (22)

ஆங்கெ ழுந்தரு ளெம்பிரான் கருணைநீ ராடிப்
பாங்கு நின்றசெந் தீவணன் மதிமுகம் பார்த்து
வாங்கு தெண்டிரைக் கடலமு தெனுந்திரு வாக்கா
லீங்கு வேண்டிய வரம்புக றருவமென் றிசைத்தான். (23)

18. செனிதம்-சிருட்டி. துடி-உடுக்கு. தகைந்திட-மறைக்க. புனிதம்-பரிசுத்தம்.

20. கலை-நூல்.

21. மின்மனம்-நிலைபெறுதமனம். வேட்டோர்-விரும்பினோர். உறழ்தல்-கலத்தல். உறப்பு-செறிவு.

22. செந்தீவணன்-செவ்வாய். மதிமுகம்-மதிபோலுமுகம். வாங்கு-வளைந்த.

23. கனலி-அக்கினி. மழவிடை-இளமையான ரிஷபம். குசன்-செவ்வாய்.

அனக னேயெனக் குரியவா ரத்திவ ணனுகிக்
கனேகு ரற்புனன் மூழ்கினின் சன்னிதி கண்டு
மனது வந்துனே வழிபடு வோரெனும் வாரீ
இனமு நல்குதல் வேண்டுமென் றிறைஞ்சினன் செவ்வாய். (24)

தரணி பாலனன் பாலடி தாழ்ந்தனன் வேண்டும்
வரமு வந்தருள் வள்ளலோர் காலினன் வளியாற்
பொருதெ ழுந்திரைப் புனலிடை மறைகுதல் போலக்
கருணை யெல்லையா கியவிலிங் கத்திடைக் கரந்தான். (25)

ஞானக் கண்ணினுங் காணரு நாதனை யேனை
மானக் கண்ணினுற் கண்டருள் பெற்றபூ மைந்தன்
தானக் கண்ணனு ரணன்பணி சிவனடி தாழ்ந்து
பானற் கண்ணியைப் பணிந்தனன் விடை கொடு படர்ந்தான். (26)

அங்காரகச் சருக்கம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 625.

## 15-வது திரிபுரச் சருக்கம்.

தேவர் சூழ்தரத் தன்னுல கெய்திய செவ்வாய்
யாவ ருங்கரங் குவித்திட வினிதுவீற் றிருந்தான்
மேவ லார்தொழத் திரிபுரம் புரந்திடும் வெற்றி
மூவர் தங்கதை புகலுவன் கேளுமின் முனிவீர். (க)

புனவை நாதனை திலமகன் போற்றிய புராணம்
வினவு நைமிச முனிவர்கள் பணிந்தனர் வேண்டக்
கனக வில்லியை யசுரர்மூ வரும்பணி காதை
மனம கிழ்ந்தருள் சூதன்வாய் மலர்ந்தனன் வகுக்கும். (2)

---

24. கனேகுரல்-சத்திக்குமொலி.

25. இனன்-சூரியன். வளியால்பொருதெழுந்திரைப்புனல்-காற்றால் போர்செய்துண்டான அலையினையுடைய கடல்.

26. மானம்-குற்றம். தானக்கண்ணன்-தானமாகக்கொடுத்த கண்ணையுடைய விட்டுணு. ஆரணன்-பிரமன். பானல்-கருங்குவளை.

1. மேவலார்-பகைவர்.

2. கனகவில்லி-மேருமலையை வில்லாகவுடைய சிவன்.

அலகின் மெய்த்தவம் புரிந்திடு முனிவிர்கா ளடுந்தீக்
கொலைமு தற்படு மைவகைத் தொழிலுமீக் கொண்ட
பலவு யிர்க்குலந் தழைந்திட நன்னெறி பரிக்கு
முலகர் யாவரு மொடுங்கிட முன்னமோ ருகத்தில். (3)

மங்குல் வெள்ளிடி வடவையங் கனல்விட மானப்
பொங்கு மால்விராம் புருடன்முக் குற்றமே போல
வங்கி யாதியா மூவரு மாமென மூவர்
தங்கு வன்றொழ வுதித்தனர் நிசாசரத் தலைவர். (4)

மூவர் தம்மினு மழிவுறு வரம்பெற முற்று
மூவ ருங்குணங் கடந்தவர்க் காண்குவான் முன்னி
மூவ கைப்புலன் களுமொரு வழிப்படு முறையே
மூவ ரும்புகுந் தோருழி யருந்தவ முயன்றார். (5)

உண்டி நித்திரை யாதிய வுடற்குண மொழிந்தார்
மண்டு காமமே யாதிய மனத்திற மறந்தார்
விண்ட கோடைவெவ் வியகன லகத்துமேற் சீதங்
கொண்ட காலையிற் றண்புன லினுங்குடி கொண்டார் (6)

வரைச லிப்பினும் வரைசுமந் தெண்டிசை வளைந்த
தரைச லிப்பினுந் தரைசுமந் திடுந்தட நாக
நிரைச லிப்பினும் பற்றற நீத்தவர் நிகழ்த்து
முரைச லிப்பினு முளஞ்சலி யாத்தவ முற்றார். (7)

3. கொலைமுதல் ஐவகைத்தொழில்-கொலை, களவு, கள், காமம், குருத்துரோகமெனபன. மீ-மேல். பரிக்கும்-தாங்கும். உலகர்-உயர்ந் தோர்.

4. மங்குல்-மேகம். வெள்ளிடி-மழைக்குரிமையில்லாத இடி. மான-போல. மால்விராம்-மயக்கஞ்செய்யும். முக்குற்றம்-காமம், வெகுளி, மயக்கம். அங்கியாதியாமூவர்-அக்கினி, யமன், நிருதி. நிசா சரர்-அசுரர்.

5. மூவர்-பிரம விட்டுணு உருத்திரர். மூவரும்-கெடுதலில்லாத. குணங்கடந்தவர்-சிவபெருமான். மூவகைப்புலன்-மனம் வாக்குக் காயங் களுக்குரிய அறிவு.

7. வரை-மலை. தரை-பூமி. நாகம்-பாம்பு. உரை-சொல்.

எண்ணி லாப்பெருந் தவம்பல புரிதல்கண் டிரங்கித்
தண்ண ளிக்குறை யுள்ளெனு மிளமதிச் சடையான்
வண்ண மால்விடை யேறின னவர்கண்முன் வந்தான்
கண்ணு மூவருங் கண்டனர் மூவிரு கண்ணால். (8)

கண்க ளித்தனர் மெய்ம்மயிர் பொடித்தனர் கடவுள்
பண்க ளித்தபொற் கழலடி பன்முறை பணியா
விண்க ளித்திடு மறைகொடு துதித்திட விமல
னெண்க ளித்திடும் வரமெவை வேண்டிய வென்றான். (9)

அத்த னேயுன தடியிணைத் தாமரை யயராப்
பத்தி வேண்டுமெம் மூவரா லேனைப்பண் ணவரா
லெத்தி றத்தரா லிரும்படை யெண்ணிரண் டிரண்டா
னித்த லும்மழி யாதுவாழ் நிலைமையும் வேண்டும். (10)

அரும்பு மானில மந்தர சுவர்க்கநாட் டடுக்கி
னிரும்பு வெள்ளிபொன் மதிலுடைத் தாய்வள மெவையுந்
தரும்பொன் மாமணி மாடவீ திகள்பல தாங்கி
விரும்பு றுந்திசைச் சென்றுமீள் முப்புரம் வேண்டும். (11)

எமக்கு வேண்டிய விவையெனு மொருவரோ டிருவர்
தமக்கு நல்வர முதவிய சங்கரன் றணவா
வமைக்கு லஞ்செறி கைலைவெற் படுத்தன னசுரர்
நமக்கி லக்கிலை யெனச்செருக் கொண்டனர் நடந்தார். (12)

தடுத்தி டாவர மெய்திய வசுரர்க டலைவர்
வடுத்த ருங்கனல் விழிநிசி சரர்படை வகைநான்

8. குறை-குற்றம்; அதாவது கறுப்பு. கண்ணும்-கருதும்.

9. பண்களித்த-பண்ணுக்குமகிழ்ந்த. விண்-தேவர். எண்-எண்ணம்.

10. இரும்படை-பெரிய ஆயுதம்.

11. அரும்பு-தோன்றுகின்ற. மாநிலம்-பூமி. அந்தரம்-ஆகாயம். புரம்-நகரம்.

12. தணவா-கெடாத. அமை-மூங்கில். குலம்-கூட்டம். இலக்கு-லக்ஷியமுடையார். செரு-போர்செய்யும் வலிமை.

கெடுத்த பூந்துகிற் றிரையெறி கடற்றிசை யெட்டு
முடுத்த மாநிலப் பரப்பைநேர் திரிபுர முற்றூர். (13)

எண்டி சாமுகங் களிற்றமை யிறைஞ்சிடா தெதிர்த்த
வண்டர் மன்பதை யுரகர்மன் னவர்தமை யடர்த்து
மண்டும் வெங்கொலைத் தானைபோ யவருயிர் பதைப்பான்
கண்ட கஞ்செய மூவரு மரசுசெய் காலை. (14)

வேறு.

துண்ணெனத் திரிபுரத் தசுரர் சூழ்ந்திடு
மெண்ணறுங் கடுங்கொலைக் கினைந்து மாழ்கிய
பண்ணவர் முதலினோர் படர்ந்து பாற்கட
னண்ணினர் நாரண னளின பாதமே. (15)

செந்திரு மார்பனே சரணந் தேமல
ருந்தியங் கடவுளே சரண மொப்பிலா
வந்தமில் கருணையாய் சரணம் யாவர்க்குந்
தந்தைதன் றந்தையே சரண நீயென்றூர். (16)

என்றுவன் முறைதுதித் திறைஞ்சித் தன்னெதிர்
நின்றவர் மேல்விழி நிரைப ரப்புமால்
வென்றிகொ டேவர்காள் விரைவி னுங்களுக்
கொன்றிய விடுக்கணென் னுரைமி னென்றனன். (17)

வெஞ்சிலைத் திரிபுர வேந்தர் வன்படை
வஞ்சகக் கொலையினால் வருந்தி நின்பதந்

---

13. வடு-குற்றம். நிசிசரர்-அசுரர். படைவகைநான்கு-தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்பன. பூந்துகிற்றிரை-அழகிய ஆடைபோலும் அலை.

14. எண்டிசாமுகம்-எட்டுத்திக்கு. அண்டர்-தேவர். மன்பதை-மக்கட்பரப்பு. உரகர்-கீழுலகத்தவர். அடர்த்து-போர்செய்து. மண்டும்-நெருங்குகின்ற. தானை-படை. கண்டகம்-தடை.

15. துண்ணென-விரைவாக. இனைந்து-வருந்தி. பண்ணவர்-தேவர். படர்ந்து-சென்று. நளினம்-தாமரை.

16. செந்திரு-அழகிய இலக்குமி. தேமலருந்தி-தேன்சொரியும் மலர்போலும் உந்தி. யாவர்க்குந்தந்தை-பிரமன்.

17. நிரை-கருணையின் ஒழுங்கு. பரப்பும்-பார்க்கும். மால்-விட்டுணு. ஒன்றிய-பொருந்திய.

தஞ்சமென் றடுத்தனந் தாம ரைக்கணு
வஞ்சவென் றெமைத்தடுத் தாளுவா யென்றார். (18)

அப்பொழு தஞ்சலென் றபய நல்கியே
மைப்புய லனையமால் வனச வாய்மலர்ந்
திப்பொழு தியம்புவ னெம்ம னோர்களால்
வெப்புறு மசுரர்தாம் வேறற் பாலரோ. (19)

இகல்புரி திரிபுரத் தில்லந் தோறுநம்
பகவன தருச்சனை பண்ணும் பான்மையாற்
சகமுழு தெய்தினுஞ் சமர மென்றுபோய்ப்
புகலுவ தரிதொரு புந்தி கேண்மினோ. (20)

ஆங்கவர்க் கொலுந்திற மறிவன் யாவரு
மீங்கினி துறையுமி னியான்பு குந்தர
னோங்குபத் தியைக்கெடுத் துறுவ னென்றுமால்
பாங்குறு புத்தர்தம் படிவங் கொண்டனன். (21)

வேறு.

தேரு மாறிலாத் தேரர்த முருக்கொளுந் திருமா
லேரு லாமுடன் மூடிப்பைம் பீலிகை யேந்தி
நேர லாரெதிர் காணினும் பணிந்துபின் நிற்ப
யாரு மற்புத முறத்திரி புரத்தெல்லை யடைந்தான். (22)

ஆதி யாகிய மாயைகட் காதியா மாதி
யேத மற்றதோர் திவ்விய வாவியு மிருபாற்
சீத வார்தடஞ் சோலையு மதனிடைச் சிறந்த
போதி நீழலுங் கண்டன னவண்குடி புகுந்தான். (23)

---

18. சிலை-வில்.

19. மைப்புயல்-கரியமேகம். வனசவாய்-தாமரைபோலும் வாய். வெப்பு-கொடுமை. வேறற்பாலரோ-வெல்லுந்தன்மையரோ.

20. இகல்-போர். இல்லம்-வீடு. சமரம்-போர்.

22. தேரர்-பௌத்தர். ஏர்-அழகு. பைம்பீலிகை-பசியமயிற்றோகை. நேரலார்-பகைவர்.

23. ஆதிமூன்றனுள்முன்னைய இரண்டும் முதன்மை; பின்னையது விட்டுணு. வாவி-தடாகம். போதி-அரசமரம். கண்டனன்-உண்டுபண்ணினன்.

கிட்டை கூடின னிருத்தலிற் போகமே நேர்ந்து
கிட்டி ஞார்தமக் கிகபலன் கொடுத்தலிற் கீழ்நீ
ரிட்ட தூண்டில்போற் புறந்தரு தலிற்பலிக் கிசைமைக்
குட்டி காத்திடு மிழிஞர்போற் பலகுணங் கொண்டான். (24)

வெள்ள வாரிகண் டெதிர்புகுந் தடங்கடன் மீன்போற்
றள்ள ருஞ்சுடர்த் தழன்முகத் தெய்திடுஞ் சலபப்
புள்ளு மாமென வொருவர்பின் னொருவராய்ப் புரமூன்
றுள்ளு றைந்திடு நிருதரெல் லாரும்வந் துற்றார். (25)

நென்ன லிற்றைநாண் மறுபக லுறுசெய னிகழ்த்தி
யுன்னு மாயையாற் பற்பல திறமெடுத் துரைத்துச்
சொன்ன வாறவர் கனவினு நனவினுந் தோற்றிப்
பன்னும் வெங்கொலை யசுரரைத் தன்வசப் படுத்தான். (26)

உந்த மர்க்குநித் தியவுயி ரெவனா னொருவன்
வந்த தெங்ஙன மசேதனன் பூசையான் மறுமை
யெந்த வாறெய்து மிவையெலா மித்தையென் றியம்பிச்
சிந்தி யாப்புலைப் பிடகநூன் முறைமைபோ தித்தான். (27)

அவனு ரைத்தசி னேந்திர தந்திரத் தாழ்ந்து
கவலு றுத்துதங் கடைப்பிடி யாவையுங் கடவா
திவரு முப்புர வேந்தர்கண் மூவரு மென்றுஞ்
சிவன டித்துணை யேதுணை யென்றுசிந் தித்தார். (28)

முதிரு மாயைகூர் மாயவன் மெய்யென மொழிந்த
மதுர வாக்கினாற் பூசைதா னஞ்செய மறந்தா

24. நேர்ந்து-வேண்டி. கீழ்நீர்-நீரின்கீழ். புறந்தருதல்-பேணுதல். பலிக்கு-கொல்லுதற்கு. இசை-பொருந்திய. மைக்குட்டி-ஆட்டுக்குட்டி. இழிஞர்-சண்டாளர்.

25. வாரி-மிகுதி. சலபம்-விட்டில். புள்-பறவை. நிருதர்-அசுரர்.

26. நென்னல்-முதல்நாள்.

27. அசேதனன்-அறிவில்லாதவன். மித்தை-பொய். சிந்தியா-சிந்திக்கக்கூடாத. புலை-கீழ்.

28. சினேந்திரதந்திரம்-புத்தாகமம். கவலுறுத்து-கவலையடைந்து. கடைப்பிடி-உறுதி. இவரும்-செல்லும்.

ரதிரும் வார்கழ லசுரர்கண் மூவரு மன்றிப்
பதித ராயினர் திரிபுரத் தசுரர்கள் பலரும். (29)

இவ்வ ணம்புரிந் தயற்பதி புகுதுவா னெனமீள்
மைவ ணத்தினன் விதிமுத லோர்வந்து வணங்கச்
செய்வ ணர்ந்தெளிந் துயர்கயி லையங்கிரி சேர்ந்தாங்
கைவ ணத்தினன் கோயில்கண் டிறைஞ்சின னடுத்தான். (30)

தோர ணஞ்செறி கோபுரம் புகுந்துகை தொழுத
நார ணன்றிரு நந்திநா யகனெதிர் நண்ணி
வார ணத்துரி யான்றெரி சனம்பெற வந்தேம்
பூர ணன்பதத் துரைமினென் றிறைஞ்சினன் புகன்றான். (31)

வந்த மாதவன் புகறல்கேட் டருளிய வாயி
னந்தி நாயக னுலயத் தினுள்ளுற நடந்து
யெந்தை யெம்பிரான் றிருவடி பணிந்தெழுந் திறைஞ்சிச்
செந்த ளிர்க்கையால் வாய்மலர் புதைத்திவை செப்பும். (32)

ஓது முன்னரே யரிமுத லோர்வர லுணர்ந்த
நாத னுர்விழிக் கடையினு லழையென நந்தி
மேத கும்பணி தலைக்கொடு பணிந்துபோய் மீட்டு
மாதி யாதியோ ரொடுதிரு முன்புவந் தடுத்தான். (33)

காத்தி ருந்ததந் துயர்கெடச் சன்னிதி கண்ட
நேத்தி ரம்புனை மாதவன் முதலியோர் நெருங்கி
வேத்தி ரப்படை யாளித னேவலால் வீழ்ந்து
தோத்தி ரத்துட னெழுந்தெழுந் திறைஞ்சினர் துதித்தார். (34)

29. பதிதர்-சண்டாளர்.

30. அயன்பதி-பிரமலோகம். மைவணத்தினன்-விட்டுணு. விதி-பிரமன். ஐவணம்-பஞ்சவர்னம்.

31. வாரணத்துரி-யானைத்தோல். பதம்-சமயம்.

32. மாதவன்-விட்டுணு. செந்தளிர்க்கை-அழகிய தளிர்போலுங் கை. புதைத்து-மூடி.

33. ஆதியாதியோர்-விட்டுணுமுதலியோர்.

34. புனை-அணியும். வேத்திரம்-பிரம்பு.

மருவு மாறனை வருகெனப் பவளவாய் மலர்ந்து
சுருதி நாதனை நோக்குபு திருமுடி துளக்கித்
தருவி னீழல்வா ழிந்திரற் கின்னகை தந்து
பெருகும் வானவர் தொழுந் தொறு மகிழ்ந்தனன் பெம்மான். (35)

அருள்வி ழிக்கடை பரப்பிய வண்ணலே யபயம்
பெருகு மைந்தொழி னடஞ்செயும் பிஞ்ஞகா வபயஞ்
சுருதி யாயிரங் கண்ணருஞ் சோதியே யபய
மிருமை கூர்மனத் தன்பருக் கெளியனே யபயம். (36)

ஆதி வேதத்தின் முடிவிடை யானவா வபயம்
பூத காரண மாகிய புண்ணியா வபயங்
காத லால்விட முண்டருள் கண்டனே யபயம்
பாதி வெண்பிறை பரித்தருள் பரமனே யபயம். (37)

அடியர் தம்பிழை பொறுத்தரு ளனாதியே யபய
மடியர் மெய்த்துயர் தீர்த்தரு ளண்ணலே யபய
மடியர் வேண்டிய தருளரு ளாழியா யபய
மடிய ரேவலுக் கேவலா ளானவா வபயம். (38)

எனவு மாலயன் முதலினோர் பணிந்தன ரேத்த
மனம கிழ்ந்திவ ணெய்திய தென்னென மலர்ந்த
வனகன் மால்விழிக் குறிப்பறிந் திறைஞ்சுமா லன்பாற்
றனது வாய்புதைத் தணிமுடி சாய்த்திவை சாற்றும். (39)

ஆற ணிந்தரு ளண்ணலே சுவர்க்கம்விண் ணகிலம்
வேறு பற்பல வுலகிடை யுயிரெலாம் விளியாச்
சூறை மாருதத் துட்படு சருகெனச் சுழலு
மாறு செய்கொலைத் திரிபுர மழிப்பதெம் வரமே. (40)

---

35. மாறனை-மால்தனை. சுருதிநாதன்-பிரமன். நோக்குபு-நோக்கி. துளக்கி-அசைத்து. தரு-கற்பகம். இன்னகை-புன்சிரிப்பு. வானவர்-தேவர்.

36. இருமை-புத்திமுத்தி.

37. பூதகாரணம்-உயிர்களுக்குமுதல். பரித்தல்-தாங்கல்.

38. அருளாழி-கிருபாசமுத்திரம்.

39. அனகன்-சிவபெருமான். மால்-பெருமை. மால்-விட்டுணு.

40. ஆறு-கங்கை. விளியா-கெடாத. மாருதம்-காற்று.

எறிசமர்க்கடு மந்திரந் தாதிடங் கால
மறித றன்வலி யறிதல்வெம் பகைவலி யறித
லுறுது ணைத்திற மறிந்திலட் டூறறிந் தொழிவிற்
பெறுவ தெண்ணிடா தடுகவிக் கணமெனப் பெம்மான். (41)

நயன வாணியா னன்றென வுருளியென் ஞரு
மயன் விதிப்பதற் காதியா மிருவினை யுடைவின்
பயனு ணர்ந்தருள் பரமனு மூலகினைப் பரிப்பான்
வயமு றுஞ்சமர் செய்குவா னெண்ணினன் மதித்தான். (42)

வேறு.

பாரிரதம் வாசிமறை பரிதிமதி சில்லி
காரசனி மின்னுடுக் கணங்களலங் காரஞ்
சாரதி யயன்பணி குணந்தனிப் பிநாக
மேருவரி யங்கிகணை மேயபிறர் தானை. (43)

ஏலும்வகை வந்தடி யிறைஞ்சவெதிர் வெம்போர்க்
கோலமொ டெழுந்தணு சதாசிவர்கை கூப்ப
மேலருள் கொழித்திடும் விழிக்கடை சிவக்குஞ்
சீலமுட னேறினன் விடைக்கொடிகொ டேரின். (44)

எத்திசையு மெவ்வுலகு மெய்திவரு தெய்வச்
சித்திர நெடுங்கொடிய தேர்கள்பல வெள்ள
மத்தமத வாரியிரண் டாயிர மருப்பி
னத்தியயி ராவண மனந்தநிரை வெள்ளம். (45)

---

41. எறிசமர்க்கடு மந்திரம்-ஆயுதங்களையெறியும் போருக்கடுத்த ஆலோசனை. ஒழிவில்-முடிவில்.

42. நயனவாணியால்-கண்சமுக்ஞையாகிய சொல்லால். விதிப்பது-சிருட்டிப்பது. அடைவு-முறை. பரிப்பான்-தாங்குதற்பொருட்டு. வயம்-வெற்றி.

43. பார்-பூமி வாசி-குதிரை. பரிதிமதி-சூரியன்சந்திரன். சில்லி-தேருருள். கார்-மேகம். அசனி-இடி. மின்-மின்னல். உடுக்கணங்கள்-நக்ஷத்திரக்கூட்டங்கள். அயன்-பிரமன். பணி-ஆதிசேடன். குணம்-நாணி. பிநாகம்-வில்லு. வரி-கடல். அங்கி-அக்கினி. தானை-சேனை.

44. விடைக்கொடி-இடபக்கொடி.

45. சித்திரம்-அழகு. கொடிய-கொடியையுடைய. மத்தமதம்-களிப்புடைய மதம். வாரி-கடல். மருப்பு-கொம்பு. அத்தி-யானை. வெள்ளம்-அநேகம்.

தேவண்சுதை விலாழிய பசுஞ்செவி மிடைந்த
பண்செறி மனோகதிய பரிகள்பல வெள்ள
மண்சலில மங்கிவளி வானையும் வகுக்கு
மெண்சிறிய பூதநிரை யெண்ணில்பல வெள்ளம். (46)

இந்தவகை யெண்டிசையு மெண்ணிடம மின்றி
வந்தணி நெருங்கவெழு வாரிமுர சதிர
முந்தமர் செயுங்கொடிய முப்புர மிலக்காய்
நந்திமு னடப்பவுமை நாயக னடந்தான். (47)

கண்ணுதல் வரும்பரி சறிந்துகடி தோடு
மெண்ணரிய சாரண ரிறைஞ்சின ரியம்ப
விண்ணவரு மஞ்சுதள வெள்ளமதை வெம்போர்ப்
புண்ணமைக வென்றசுரர் மூவர்கள் பணித்தார். (48)

கொற்றவர் பணித்தலை கொளுங்கொடிய வேக
வொற்றர்தரு மாமுர சொலிக்குமிடி கேளாச்
சுற்றுகட லேழுமெதிர் தொக்கெழுவ தென்ன
மற்றசுரர் வெம்படை யதர்த்தெதிரு மன்றே. (49)

வாசிகரி தேர்வயவர் மாறுசெய் பதாதி
வீசுதிரை வாரிபுவி வெற்பிடமு மற்றைத்
தேசுபெறு பாதலம்விண் சேர்புவன மெங்கு
மூசிருடி ரண்டுவரு மாறுகள மொய்த்தார். (50)

வேறு.

மிக்க காரிரு ணிகர்த்தெழு மெய்யினர் செந்தீத்
தொக்க வெஞ்சுடர்ச் சிகையின ரிருகவு டோறும்

---

46. சுதை-பால். விலாழிய-வாய் நுரையையுடைய. பசுமை-செவ்வி. மிடைந்த-நெருங்கிய. பண்-சேணம். கதிய-கதியையுடைய. பரி-குதிரை. சலிலம்-நீர். அங்கி-அக்கினி. வளி-காற்று. வான்-ஆகாயம். எண்-மதிப்பு.

47. எண்-எள். எழுவாரி-எழுகடல். முந்து-முற்பட்டு.

48. கண்ணுதல்-நெற்றிக்கண்ணனுகிய சிவபெருமான். சாரணர்-ஒற்றர். தளம்-படை. பண்-தகுதி. பணித்தார்-கட்டளையிட்டார்.

50. வாசி-குதிரை. கரி-யானை. வயவர்-வலியுடையோர். பதாதி-காலாள். மூசுதல்-நெருங்கல். களம்-போர்க்களம். மொய்த்தார்-நெருங்

புக்க ழுந்திய வெண்பிறை யெயிற்றினர் பொருப்புப்
பக்க லாமெனக் காதள வுறும்பகு வாயர். (51)

இடிக்கும் வெங்குரன் முழக்கின ரெதிர்வரும் யமனு
நடுக்கு காய்கொலைத் தொழிலினர் விலங்குபுள் ணரர்மீ
ணடுக்கி வைத்தபுன் சுடலையே ரகட்டின ராகக்
குடிக்கு மாமதுக் களியொடு மெழுங்கடுங் கோபர். (52)

பிண்டி பாலங்கப் பணமெழு மழுப்படை பிறங்குந்
தண்டு வச்சிர முசுண்டிகை சக்கரஞ் சூல
மண்டு வார்சிலை கைக்கணை வேலடு வாள்கைக்
கொண்டெ ழுந்தனர் மறைந்தவெண் டிசையுண்ட கோளம். (53)

எப்பு றத்தினு மெய்திய தானைவந் தெய்த
வொப்பு ரத்தினுக் கொருவரி லாவிரண் டொருவர்
முப்பு ரத்தினு மெழுந்தன ரிறைசமர் முன்னி
வெப்பு றத்தலை விதியினை யாவரே வெல்வார். (54)

பணையி யம்பின பாய்பரி கலித்தன பணைத்த
விணைம ருப்பிகற் கரியின மொலித்தன விரதத்
துணைகொ ளச்சக டார்த்தன வசுரர்க டொகுதி
பிணைம திக்குமேல் விண்டதண் டக்கொடும் பித்தி. (55)

---

51. காரிருள்-கரிய இருள். சிகை-உரோமம். கவுள்-கன்னம். எயிறு-பல். பொருப்பு-மலை. பக்கல்-குகை. பகுவாயர்-பிளந்தவாயர்.

52. குரல்-ஒலி. நடுக்கு-நடுங்கு. இது வலித்தல் விகாரம். காய் கொலை-வருத்துங்கொலை. விலங்கு-மிருகம். புள்-பறவை. நரர்-மனிதர். மீன்-மச்சம். புன்-கீழான. சுடலை-மயானம். அகடு-வயிறு. களி-களிப்பு.

53. பிண்டிபாலம்-எறியும் ஆயுதம். கப்பணம்-கைவேல். எழு-வளைதடி. மழுப்படை-மழுவாயுதம். தண்டு-தண்டாயுதம். முசுண்டி-படைக்கலம். கைமுசுண்டி யென மாறுக. மண்டுவார் சிலை-நெருங்கி நீண்ட வில். கணை-அம்பு, அடுவாள்-கொல்லும் வாள்.

54. ஒப்புரத்தினுக்கு-உவமைவலிமைக்கு. இரண்டொருவர்-மூவர். இறை-சிவபெருமான். முன்னி-கருதி. வெப்பு-துன்பம்

55. பணை-முரசு. பரி-குதிரை. கலித்தன-கனைத்தன. பணைத்த-பருத்த. இணைமருப்பு-இரண்டுகொம்பு. இகல்-வலி. கரி-யானை. பிணை-மான்போலுங்களங்கம். கொடும்பித்தி-வளையுஞ்சுவர். விண்ட தென்பதனை பித்தியொடுங் கூட்டி சுவர் வெடித்ததெனக் கொள்க.

யானை வாம்பரி விலாழியின் பெருக்கையு மியானைத்
தான மாநதிப் புனலையுஞ் சுருட்டுவெண் டரங்க
வான கங்கையி னகம்படிந் தெழுங்கொடி வழுங்குஞ்
சோனை தன்னையுஞ் சுவற்றுவ தவர்பரித் தூளி. (56)

காற்றி னுங்கொடு விடத்தினுங் கனலினுங் கடியர்
பாற்றி னஞ்சுழன் முத்தலைச் சூலவேற் படைய
ரூற்றி ருந்தமும் மதக்கரி யினஞ்சிங்க மொன்றை
யேற்றெ திர்ந்திடு மாறுபோ லரன்முகத் தெதிர்ந்தார். (57)

எதிரு நாலிரு தானையு மெதிரெதி ரெதிர
வதிரும் போர்புரி மூவருங் குறியிலக் காக
முதிரு மேருவை வளைத்திடாக் குணத்தொனி முடித்தோன்
கதிர்கொள் மாதவச் சரமதைத் தொடுக்குமக் காலை. (58)

சுற்று தானைதேர் சாரதி சாபநாண் சுடுந்தீ
யுற்ற சாயக மற்றைய வங்கமா மும்பர்
வெற்றி நம்மன வெனத்தனித் தனியெணு மிகுதி
சற்றறிந்தன னகைத்தன னெழுந்ததுத் தரமே. (59)

ஊழி வெங்கனல் படர்ந்துவிண் புக்கொரு வடிவாய்ப்
பாழி யம்புயத் தசுரர்தம் படையுமுப் பதியும்
பூழி செய்தலு மூவரு முய்ந்தனர் போற்று
மேழை பங்கனுஞ் சிவன்செய லறிபவ ரெவரே. (60)

56. வாம்பரி-தாவுங் குதிரை. விலாழி-குதிரைவாய் நுரையும், யானைக்கை உமிழ் நீரும். தானம்-மதம். தரங்க-அலையினுடைய. வான-ஆகாயத்திலுள்ள. அகம்-இடம். சோனை-விடாமழை. சுவற்றுவது-சுவறப்பண்ணுவது.

57. கடியர்-விரைவுடையர். பாற்று-உரியது.

58. நாலிருதானையும்-நால்வகையான இருபக்கத்துச் சேனைகளும்.

59. சாபம்-வில். சாயகம்-அம்பு. நம்மன-நம்மதென. மிகுதி-குறை. உத்தரம்-ஊழித்தீ.

60. பாழி-அகலம். அம்-அழகு. முப்பதி-முப்புரம். பூழி-புழுதி. உய்ந்தனர்-பிழைத்தனர். ஏழை-உமை.

இன்ன வாறுகண் டிறைஞ்சிய விஸ்மயவ ரெவர்க்கு
மன்னு கட்கடை வழங்குபு வாசவன் மலரோன்
மின்னு மாமணி மாறொழ விடைநல்கி விடைமேற்
பொன்னின் வார்கழற் புண்ணியன் கைலைபோய்ப் புகுந்தான். (61)

ஈங்க விந்தமுப் புரத்தெஞ்சு மொருவரோ டிருவ
ரோங்கு நம்பிரான் பூசனை நன்னெறி யொழிந்து
பாங்கி ருந்ததீக் கணத்தவர் பழக்கத்தாற் பலித்த
தீங்கு நீங்குமா றெண்ணினர் திகைத்தனர் சென்றார். (62)

சென்று பார்க்கவற் பணிந்தவன் வருகெனச் செப்ப
நின்ற மூவரு மிறைவனை மறந்தபுன் னிருதர்க்
கொன்று வீழ்த்திடா தவருட னுறைந்த வெங்குற்ற
மின்று தீருநன் னெறிபுக லெனப்புக ரியம்பும். (63)

வேறு.

கொலைமுதற் புரிவோர் நன்றி கொன்றுளோர் நம்பி னோரை
யலைசெய்வோர் பாதா ரத்தி லன்புளோர் பவத்தை முன்னூற்
கலைகளாற் கழுவாய் நேடிக் காணலாம் வேறு வேறு
மலைவுறுஞ் சிவத்து ரோக மற்றொரு நெறியிற் போகா. (64)

கறையலைப் படிந்தோர் பின்னர் நீரினுற் கழுவு மாபோ
லிறைவனைப் பிழைத்த பாவ மிறைவனர்ச் சனையிற் றீரு
முறைமையி னசுர வேந்தர் மூவரு மன்பாற் கேண்மி
னுறைதரு முலகுக் கெல்லா முயர்ந்தது கரும பூமி. (65)

அன்னபூ தலத்தின் மேலா மருந்தமிழ்ப் பாண்டி நாட்டிற்
பன்னுசீர் பெறும்பன் னூன்கு பதியுள வவற்றின் மிக்க

61. இமையவர்-தேவர். கட்கடை-கடைக்கண் ணோக்கம்-வழங்குபு-வழங்கி. வாசவன்-இந்திரன். மலரோன்-பிரமன். விடை-உத்தரவு. விடை-இடபம்.

62. அவிந்த-கெட்ட. எஞ்சும்-கெடாத. பாங்கு-பக்கம்.

63. பார்க்கவன்-சுக்கிரன். நிருதர்-இராக்ஷதரை. புகர்-சுக்கிரன்.

64. அலை-துன்பம். பவம்-பாவம். கழுவாய்-தீர்க்கும்வழி. நேடி-நாடி.

65. கறையலை-கருங்கடல். உறைதரும்-வசித்தற்குரிய.

தென்னிலத் தவரும் போற்று மியல்பின தெக்கா லத்து
மன்னுவ தமல ஞான வனமுக மதன்பேர் மன்னோ. (66)

ஏமப் பதியின் கண்மா விலிங்கமென் றொருபேர் தாங்கி
யண்ணல்வீற் றிருக்கும் வண்மை யனந்தனும் புகறற் கெட்டா
கண்ணினுற் காண்பான் சென்றார் கண்டவர் கண்டு பூசை
பண்ணினு ரவரே வேண்டும் பதம்பெறு வார்க டிண்ணம். (67)

அத்தலத் தின்னே யெய்தி யருச்சனை புரிமி னன்பர்
கைத்தல நெல்லி யன்ன கச்சணி முலையாள் பாகன்
வித்தர பவமு நீக்கி வீடுமே லருளு மீதே
புத்தியென் றனுப்ப வாசான் பொன்னடி பணிந்து போந்தார். (68)

சிதன்பணி தலைமேற் கொண்ட திரிபுரத் தலைவர் செல்கா
வதம்பல கடந்து வந்து வனமுக மிறைஞ்சிப் புக்கற்
புதம்பெறு சிவகங் கைத்தீம் புனல்முறை படிந்து மேற்சந்
ததம்புக லஞ்செ ழுத்துச் சரித்துநீ றக்கஞ் சாத்தி. (69)

நித்திய பூசை முற்றி நிமலனு ராத னைக்காஞ்
சித்திகூர் மஞ்ச னாதி திரவியங் கொண்டு போந்து
பத்தியோ டண்ணல் கோயிற் பருமணி முன்றி லெய்தி
முத்திசேர் நந்தி நாதன் முன்பணிந் தெழுந்துட் புக்கார். (70)

தந்தியைப் பூசித் தேற்குந் தனிவரம் பெற்றெம் மானை
முந்தையா கமமு ரைத்த முறையுளி யபிடே கித்து
மந்திரத் தருச்சித் தன்ன வகைகனி பால்பா னீய
மந்தமாய் நிவே தனஞ்செய் தவிர்தூப தீப நல்கி. (71)

66. சீர்-சிறப்பு. பன்னூன்கு-பதினான்கு.

67. அனந்தன்-ஆதிசேடன்.

68. இன்னே-இப்பொழுதே. வித்தரம்-வித்தாரமென்பதன் றிரிபு. வித்தாரம்-மிகுதி. பவம்-பாவம், அல்லது பிறவியெனினுமாம்.

69. சிதன்-சுக்கிரன். காவதம்-காதம். அதாவது நாலு கூப்பிடு தூரம். அக்கம்-உருத்திராக்கம். சாத்தி-அணிந்து.

70. சித்திகூர்-மகிழ்ச்சிமிக்க. மஞ்சனம்-நீர். முன்றில்-முற்றம்.

71. முறையுளி-முறையின். பானீயம்-நீர். அவிர்-விளங்குகின்ற.

திருநீற்றுக் காப்புச் சாத்திச் சேவித்துச் செங்கை கூப்பி
வருமூவர் புனவை வாழும் வள்ளலை வலம்வர் தேத்திக்
கருநீல நயனித் தம்பொற் கச்சணி முலையா டன்னை
யொருவாத வன்பாற் பூசித் தும்பர்கோன் முன்னர் வந்தார். (72)

உள்ளமு முடலும் வாக்கு மொருவழிப் படமுன் னின்றே
யள்ளிலைச் சூல லேற்கை யசுரர்க டலைவர் செங்கண்
வெள்ளநீ ரருவி மார்பு விந்தியா சலத்திற் றாழ
வள்ளலை யெண்ணில் வேத வாணியாற் போற்ற லுற்றார். (73)

கடவுளே போற்றி யால கண்டனே போற்றி மாலா
மிடபனே போற்றி பெற்ற வெந்தையே போற்றி ஞான
நடனனே போற்றி யார்க்கு நாதனே போற்றி மூன்று
தடமதி றடிந்து காத்த தாணுவே போற்றி போற்றி. (74)

அப்பணி பவள வேணி யண்ணலே போற்றி போற்றி
மைப்பக டுரித்த ணிந்த வள்ளலே போற்றி போற்றி
திப்பிய வருள்சேர் தேவ தேவனே போற்றி போற்றி
முப்புரந் தடிந்து காத்த முத்தனே போற்றி போற்றி. (75)

ஏவரு மறைக ளியாவு மேத்தருங் குணங்க ளெல்லா
நாவினால் வணங்கி வாழ்த்தி நாயகன் கருணை யெய்தித்
தாவரும் பாவ நீங்கித் தயித்தியர் தலைவ ரான
மூவரு மிறைசா மீப முத்தியும் பெற்றார் மன்னோ. (76)

திரிபுரச் சருக்கம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 701.

---

## 16-வது திரிமூர்த்திச் சருக்கம்.

அடற்புவ னத்து வேட்கை யனைத்தையு மாங்கே நல்கும்
கடைப்பிடி தவறு மூவர் காதைகேட் டெய்தோ மூவர்

---

72. ஒருவாத-கெடாத. உம்பர்கோன்-சிவபெருமான்.

73. அள்-கூர்மை. இலை-தளம். மார்புவிந்தியாசலம்-மார்பாகிய விந்தமலை. வாணி-வாக்கு.

74. மாலாமிடபன்-விட்டுணுவாகிய இடபத்தையுடையவன். தடமதில்-பெரியமதில். தடிந்து-கெடுத்து.

75. அப்பு-கங்கை. வேணி-சடை. மைப்பகடு-கரிய யானை.

76. தாவரும்-கெடுதற்கரிய. தயித்தியர்-அசுரர். மன்னோ-அசை.

நடத்துமுத் தொழிலும் பெற்ற நற்கதை நவிலு கென்னத்
தொடக்கறு முனிவர் போற்றித் தொழுதலுஞ் சூதன் சொல்வான். (1)

வேறு.

தொகுத்துமுன் பகர்ந்த மூர்த்திகண் மூவர்
தோமின்முத் தொழில்பெறு காதை
வகுத்தரு ளென்று நைமிச முனிவர்
வணங்கின ரன்பொடு கேட்பப்
பகுத்தினி துரைக்குஞ் சூதனு நந்தி
பதமல ரெண்ணினன் பகர்வான்
முகைத்திரு மலரோன் முதலவர்க் கெல்லா
மூலமாஞ் சதாசிவ மூர்த்தி. (2)

மாயையு மலமுங் கருமமுங் கடந்து
வாக்கொடு மனத்தினுக் கெட்டாத்
தூயதோர் சச்சி தானந்த விபுவாய்ச்
சொல்லருந் தற்பர சோதி
காயமு முறுப்பும் படைகளு மற்றைக்
கலன்களுஞ் சரித்திடு முலகுந்
தாயசெல் வமுந்தன் சத்தியே யாகத்
தழைத்தெழுஞ் சதாசிவ மூர்த்தி. (3)

பாசமு மூயிரு மனாதியா கையினாற்
பழுத்திடு மிருவினைப் பலத்தா
னூசிலாச் சிருட்டி முதற்றொழில் புரிவா
னயன்முத லோர்தமை யருளி
யேசற நடத்தி முடிவில்யா வையுந்தன்
னிடத்தினி லொடுக்கியோ ருருவாய்
மாசக னடனம் புரிந்துதென் புனவை
வாழுமா விலிங்கத்து மறைந்தான். (4)

---

1. அடல்-வெற்றி. வேட்கை-விருப்பம். தொடக்கு-கட்டு.

2. மூவர்-பிரம விட்டுணு ருத்திரர். தோம்-குற்றம். முகைத்திரு மலரோன்-முகையோடு கூடிய அழகிய தாமரையில் வசிக்கும் பிரமன்.

3. விபு-வியாபகம். தழைத்தெழும்-வளர்ந்து தோன்றும்.

4. பழுத்திடும்-பக்குவமான. ஆசு-குற்றம். புரிவான்-செய்தற் பொருட்டு. அயன்-பிரமன். ஏசு,மாசு-குற்றம். புனவை-திருப்புனவாயில்.

பற்பல கால மகன்றதம் பின்னர்ப்
பக்குவ மாம்வினைப் பயத்தாற்
கற்பனைக் கடங்கா வைந்தொழில் புரிவான்
கச்சணி முலையவ ளோடுந்
தற்பரஞ் சுடராஞ் சதாசிவ மூர்த்தி
தழைத்திடும் புனவையர் தலத்தி
லுற்பவ மகற்று மாவிலிங் கத்தி
லுதித்தனன் முன்னமோ ருகத்தில். (5)

கருணையே வடிவா யெழுந்தரு ளெம்மான்
கச்சணி முலையவ டன்பாற்
பொருவிலா வேத நாதனை முன்னர்ப்
பூமகளுடன் வரப் புரிந்தான்
வருமதன் பின்ன ருருத்திரீ யுடனே
மாலவன் பிறந்திட வகுத்தா
னுரிமையா லதன்பி னுதித்திடச் செய்தா
னுருத்திரன் பாமயி லுடனே. (6)

முத்திறத் துதித்த மூவிரு வோரு
மும்முறை வணங்கிமூ வெட்டுக்
கைத்தலங் குவித்துப் போற்றிமுன் னிற்பக்
கரைதிரை நுரைப்பெருங் கடலாம்
வித்தகக் கருணை பெருகுமூ வைந்து
விழிபரப் பியசிவ பெருமான்
சத்திய லோக விதியரி யரனைத்
தனித்தனி யழைத்திவை சாற்றும். (7)

சராசர மிவற்றின் றனுகர ணாதி
சகலலோ கமும்விதி தருக
விராவுமிவ் வுலக மனைத்தையும் பிறழா
வித்தக வரியளித் திடுக

---

5. உற்பவம்-பிறவி.

6. பொருவு-உவமை. வேதநாதன்-பிரமன். பூமகள்-இலக்குமி மாலவன்-விட்டுணு. பாமயில் சரசுவதி.

7. முத்திறம்-மூவகை. மூவிருவோர்-பிரமன் முதலிய மூவரும் இலக்குமி முதலிய மூவருமாம். கரை-ஒலிக்கும். திரை-அலை. விதி-பிரமன். அரி-விட்டுணு. அரன்-உருத்திரன்.

வராவணி மோலி யுருத்திர னிவற்றை
றழித்தழித் திடுகவென் றருளிக்
குராமலர்க் கூந்தன் மகளிர்மூ வருக்குங்
கோதிலா மணஞ்செயக் குறித்தான். (8)

வாணிநான் முகற்கு மனைவியாம் வணாநன்
மணம்புரிந் ததன்பின்மா தவற்கு
நாணிறை பூமான் காதலி யாக
நன்மணம் புரிந்துருத் திரியை
வேணிநா யகற்குப் பாரியாய் நல்கும்
வேள்விசெய் தருளினன் விரைப்பூம்
பாணியீ ரைந்து முடிகளோ ரைந்தும்
படைத்தரு ளொருவனும் பரமன். (9)

இவ்வகை யியற்று மகிலகா ரணனு
மெந்தையைத் தந்திரத் தியல்பாற்
செவ்விதிற் பூசை முனம்புரிந் தெழுந்து
திசைமுக னிறைதிரு வருளாற்
கௌவைகூ ருயிர்கட் கிருவினைக் கீடாய்க்
கதிக்குமெண் பத்துநான் கிலக்கப்
பௌவயோ னிகளு முலகமு மேலாம்
பூதங்களும் விதிமுறை படைத்தான். (10)

வேறு.

மலர்த லைப்புவ னாதிக ளனைத்தும்
வகுத்து நோக்கிய மண்பொது தந்தை
யுலக மாதுட னிறைவனை வணங்கி
யுளத்தி லன்பினுல் விடைகொடு செல்வான்

---

8. சரம்-தேவர்முதல் நீர்வாழீறுணவுயிர்கள். அசரம்-கொடி செடி மரமுதலியன. விராவும்-விரியும். வித்தகம்-நன்மை. அளித்தல்-காத்தல். அரா-பாம்பு. மோலி-முடி. குராமலர்-ஓர்வகை மலர்.

9. வாணி-சரசுவதி. நான்முகன்-பிரமன். மாதவன்-விட்டுணு. நாண்-நாணம். பூமான்-பூமகளாகிய இலக்குமி. வேணிநாயகன்-சடையையுடைய உருத்திரன். விரைப்பூம்பாணி-வாசனையுடைய பூப்போலுங்கை.

10. தந்திரம்-ஆகமம். திசைமுகன்-பிரமன். கௌவை-துன்பம் கூர்-மிகுதி. கதிக்கும்-பெருக்கும். பௌவம்-பிறவி.

குலவு மோதிமந் தூண்டிவிண் புகுந்து
குறித்த சத்திய லோகமுற் றென்று
மலகி லாததன் றொழில்புரிந் திமையோ
ரனைவ ருந்தொழ வகமகிழ்ந் திருந்தான். (11)

ஓதி மத்தினன் றணந்தபின் னந்த
வுருத்தி ராணியோ டுருத்திரன் பதுமப்
போதி மத்தடம் படிந்தருச் சித்துப்
புனவை யெம்பிரான் பொன்னரு ளெய்தி
வீதி மத்தெறி கடல்விட மிடற்றோன்
விடைகொண் டாங்கொரு விடைமிசை யெய்தி
யாதி மற்றவன் கணந்தொழ நடந்தே
யழிவி லாவட கைலைபுக் கமர்ந்தான். (12)

இருவ ருந்தம புவனமெய் தியபி
னெண்ணி றேவர்கள் யாவர்க்கு மிறையா
மொருவ னைப்பரை பங்கனைப் புனவை
யோங்கி வாழுமா லிங்கமா னவனைத்
திருவி ரும்பிய திகிரியோ னருணாற்
றிறத்தி னாலருச் சனைமுறை புரிந்தே
யருணெ டுங்குறிக் குரியதென் மேற்கி
லாய தீர்த்தமொன் றாழியா லமைத்தான். (13)

அத்த டங்கரை தனிற்றழை சிறைப்புள்
ளரசு யர்த்தமா லவன்றவ முயலச்
சித்தி கூருந்தன் பெயரிலீ சான
திசையி லிந்திரை தீர்த்தமொன் றமைத்து

---

11. மலர்தலை-விரிந்த இடம். மண்பொதுத் தந்தை-உலகத்துக்கு பொதுத் தந்தையாகிய பிரமன். உலகமாது-பார்ப்பதி. ஓதிமம்-அன்னம். தூண்டி-செலுத்தி. அலகு-அளவு. இமையோர்-தேவர்.

12. ஓதிமம்-அன்னம். தணந்தபின்-சென்றபின். பதுமப்போது-தாமரைப்பூ. இமம்-குளிர். வீதிமத்து-விசாலமான மத்து. எறி-வீசப்பட்ட. விடை-உத்தரவு. விடை-இடபம். ஆதி-உருத்திரன்.

13. தம-தம்முடைய. பரை-உமாதேவியார். திரு-இலக்குமி. திகிரியோன்-சக்கரத்தையுடைய விட்டுணு. அருணெடுங்குறி-மகாலிங்கம். ஆழி-சக்கரம்.

நித்தனைக் குறித் தத்தடங் கரையி
னெடுந்த வஞ்செயர் நிலையிலெவ் வுயிர்க்கும்
புத்தி முத்திக டருஞ்சதா சிவனும்
புனவை மேவுமா விலிங்கத்துட் புகுந்தான். (14)

அற்றை நாண்முத லம்புய மாதோ
டாழி மாதவ னுகம விதியான்
மற்றை வான்புவி தமக்கெலா முதலாம்
வனமு கத்துறை வள்ளன்முன் னெய்தி
முற்ற ருச்சனை புரிந்துமூன் றெழுத்தை
முன்பு பெற்றவஞ் செழுத்தினை யோதி
யுற்ற வுண்டிநித் திரைமுதற் குணங்க
ளொழிந்து செய்வதோர் தவமுளங் கொண்டான். (15)

மனமு தற்கர ணங்களும் பொறியும்
வருங்கு ணங்களு மொருவ ழிப்படாத்
தனையி யூந்துதற் பரம்பொரு டானுய்ச்
சரிக்கும் வாயுவுஞ் சரித்திடா வண்ண
மனலொ ரஞ்சிடை யஞ்சிடா நாப்ப
ணமர்ந்து மெய்த்தவ மாற்றின னங்கே
நினையுங் காலந்திக் கெண்ணில னேனு
நீத்த னன்பதி னுயிர வருடம். (16)

நீற்று மேனியன் கண்டிகை மாலை
நிறைந்த மொயம்பின னுந்திரு நெடுமா
லாற்ற ருங்கன லாற்றின னுற்று
மருந்த வாங்கியிற் காற்றல னுகிப்

14. தழைசிறை-செழிப்பாகிய இறகு. புள்ளரசு-கருடன். அது கருடக்கொடியை உணர்த்திற்று. உயர்த்த-உயர்த்திய. மாலவன்-விட்டுணு இந்திரை-இலக்குமி. புத்தி-போகம்

15. அம்புயமாது-இலக்குமி. மாதவன்-விட்டுணு. மூன்றெழுத்து-பிரணவமும் பீசாக்கரமிரண்டும்.

16. படா-செல்ல. அனலொரஞ்சு-பஞ்சாக்கினி. அதாவது, நான்கு பக்கங்களிலும் அக்கினியை வைத்துச்சூரியனைப்பார்த்தல். நாப்பண்-நடு. திக்கு-பற்றுக்கோடு. இப்பொருள்கோளை திக்குவேறில்லைத் திருவுள் ழியல்லாது" என்னும் அருணகிரி யந்தாதியாலறிக.

போற்று மாவணித் திங்களிற் றிங்கள்
    பொருந்து மோணநாட் பொருந்திய நாளிற்
ருேற்றி னொளிளம் பரிதியா யிரத்தின்
    சோதி யோர்வடி வாம்பரஞ் சோதி. (17)

எங்க ளம்மையோ டுயர்ந்தமா விலிங்கத்
    தெழுஞ்ச தாசிவ னிடப வாகனமே
லங்கு வந்துசெந் திருநெடு மாலே
    யமுத வாக்கினால் வருகென வருளி
யிங்கு நின்றவத் தாலுள மகிழ்ந்தே
    மினிது வேண்டுவ தெவ்வர மென்னும்
புங்க வாசகங் கேட்டலு முடலம்
    புளகு றப்பணிந் தெழுந்தரி போற்றும். (18)

வேத மூலமே விண்ணவ ரரசே
    விரும்பு ஞானிக ளகத்தெழும் விளக்கே
மாது பாகனே வடவரை வளைத்து
    வழங்கு முப்புர வசுரரைப் பொடித்தோ
யாதி நாதனே யந்தக வசுர
    னாவி யங்கம்வே றுக்கிய வையா
பூத மாதிநா தாந்தமென் றுலகம்
    புகலு மெண்ணிலாப் புவனநா யகனே. (19)

பலவு கத்தினு மெம்மனோர் தம்மைப்
    படைத்த ளித்தொடுக் கிடும்பழம் பொருளே
கலைம திததொடை புனைநதிச் சடையாய்
    கால காலனே கண்ணுத லுடையா
யலகி லாவுயிர்க் குயிரதா யுண்ணின்
    றாட்டுவித் தந்த நாட்டியம் பார்க்குந்
தலைவ னேதனித் தொருகிளி காணத்
    தாண்ட வஞ்செய வேண்டிய முதலே. (20)

---

17. மொய்ம்பு-தோள். ஆவணித்திங்கள்-ஆவணிமாதம். திங்கள்-சந்திரன்.

18. புங்கவாசகம்-உயர்ந்தவாக்கு. அரி-விட்டுணு.

19. வடவரை-மேருமலை. வழங்குமுப்புரம்-உலாவுமுப்புரம். அந்தக-சங்காரத்தைச்செய்பவனே.

20. தொடை-மாலை. நுதல்-நெற்றி. ஒருகிளி-ஒப்பற்ற சிவகாமி யம்மையார்.

கணத்தி லாயிரம் புவனமுண் டாக்கிக்
 கணத்த ளித்தொடுக் குங்கண நாதர்
பணத்து முன்னெயிற் றடுவிடத் துத்திப்
 பார்தண் மாலிகை வேய்ந்தவெம் பரனே
குணித்த புத்தியு முத்தியு முயிர்க்குக்
 கொடுக்கு மண்ணலே யென்றுகை கூப்பித்
துணைத்தி ருப்பதம் பன்முறை வணங்கித்
 துதித்த மாறெழு தொருமொழி சொல்லும். (21)

அன்ப ரெவ்வரங் கேட்பினுங் கொடுத்த
 லத்தன் மாலையென் றறிதலா லடியே
னுன்ப தத்தினி லுரைத்திடும் வரமொன்
 றுளது நின்னையெவ் வுலகுளோர் யாரும்
பொன்ப ணித்திரு மஞ்சன திகளாற்
 பூசை செய்வது போலமெய்ப் பூசை
யென்றி றத்தினுஞ் செய்திட வேண்டு
 மென்று மெந்தைநின் றிருவுள மென்னே. (22)

அரிய மால்வரங் கேட்டலு மெளிதா
 யருளி யம்புய மாதொடு மரிநீ
தெரியும் வைகுந்த மெய்துக வென்னச்
 செய்ய வாய்மலர்ந் தருளிய தேவன்
விரியும் வானைவிட் டருட்குறி புகுந்தான்
 விடைகொண் டோர்புளின் மேற்கொள நெடுமால்
பரிவு கூர்தர நடந்தனன் பரம
 பதம்பு குந்துவிண் பரவவீற் றிருந்தான். (23)

திரிமூர்த்திச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 724.

---

21. பணம்-படம். எயிறு-பல். அடுவிடம்-கொலைசெயும் விடம். துத்தி-படப்பொறி. பார்தள்-பாம்பு. குணித்த-கருதிய. புத்தி-போகம். துணை-இரண்டு.

22. மாலை-இயல்பு. என்திறத்தினும்-என்னிடத்தினும். அதாவது உன்னை எல்லாரும் பூசிப்பதுபோல என்னையும் பூசிக்கவேண்டுமென்று வேண்டியதாம்.

23: புள்-கருடன். பரிவுகூர்தர-அன்பு மிகுதிப்பட. பரமபதம்-வைகுந்தம். விண்-தேவர்.

# 17-வது நாகநதிச் சருக்கம்.

மூன்று லோகமுந் துதிசெயுஞ் செயல்கள்
மூன்று மாற்றிடு மூர்த்திகண் மூவர்
தோன்று மிக்கதை யெழுதுவோர் கேட்போர்
சொல்லு வோர்பவத் துரிசறுத் துய்வார்
நான்ற செஞ்சடைக் கடவுளை நாடி
நாக நந்நதி வருங்கதை நயனம்
போன்ற மெய்க்கதை யெனத்தவ முனிவர்
புகழ்ந்து சொல்லெனச் சூதனும் புகலும். (1)

வேறு.

வேட்ட மெய்த்தவ முனிவிர்கா ளித்தல மேன்மை
கேட்ட டங்குமோ வாயினு மொருகதை கேண்மின்
றாட்ட ளஞ்செழுங் குவளையான் பாண்டியன் றமிழ்சேர்
நாட்டி லுள்ளது பேரையூ ரென்றொரு நகரம். (2)

அகலி டந்தொழ முன்னமோ ருகத்திமை யவரை
யிகலில் வென்றருள் சவுந்தர பாண்டிய னென்பான்
பகலு மெல்லியுஞ் சங்கரன் பணிசெயும் பணியான்
புகல்சி வத்தலம் பணிகுவா னத்தலம் புகுந்தான். (3)

புக்க வன்றொழ வானந்த தாண்டவம் புரிந்தான்
தக்க பூதங்கள் குணலையிட் டிணையடி தாழ
மிக்க மாலயன் றுதிசெய வன்பரை வீட்டில்
வைக்கு மெய்யரு ணமலூ ரம்பல வாணன். (4)

ஆடு மெல்லைகண் டகமகிழ் பாண்டிய னயன்மா
றேடும் வச்சிர வனத்திறை வனைத்துதி செய்ய

---

1. செயல்கள்மூன்று-சிருட்டிதிதிசங்காரம். துரிசு-துன்பம். நான்ற-தொங்கிய.

2. வேட்ட-விருப்பமிக்க. தாள்-தண்டு. தளம்-இதழ். பேரையூ ரென்பது புதுக்கோட்டைச் சமஸ்தானத்திலுள்ளது.

3. அகலிடம்-பூமியிலுள்ளார். இகல்-போர். எல்லியும்-இராத் திரியும்.

4. குணலையிட்டு-வீராவேசத்தால் கொக்கரித்து. இணை-இரண்டு. நாமலூர்-பேரையூர்.

நீ மன்பினாற் கேட்டருள் வாசுகி நிருபன்
மாடு நின்றவன் றன்பதம் பணிந்தனன் வாழ்த்தும். (5)

வள்ள லேகடஞ் செய்தெமை வாழ்விக்கு மருந்தே
யுள்ளு மன்பர்க ளுள்ளுறை யும்பரா யகனே
தெள்ளு தண்டமிழ்ப் பழம்பதி பணிகுவான் செல்வே
னெள்ளு மாபுன னதிவடி வாகியென் றிரந்தான். (6)

அரவின் வாசகங் கேட்டலுங் காசிமுன் னான
தரணி சேர்தலத் தெய்தினு மீண்டுஞ்சந் ததமும்
பரவு மப்பதி வாழ்வ மாதலாற் பணிநீ
விரைவி னெய்துக வென்வரங் கொடுத்தனன் விமலன். (7)

வேண்டு மாறுமெய் வரம்பெறு வாசுகி வேந்தன்
தீண்ட வஞ்செயும் பேரையூர்ப் பரனடி தாழ்ந்து
மூண்ட வன்பொடு மைமுக மாயிர முகமாய்ப்
பூண்ட கங்கையி னதிவடி வாய்ப்புறம் போந்தான். (8)

மோக வெண்ணகைப் பவளவாய்க் கச்சணி முலையாள்
பாகன் வாழ்வன முகமுக நோக்குபு படரு
நாக நன்னதி வாரிநீள் கடலின்மே னடந்த
தாக மம்புகழ் பழம்பதிக் கருகுதெற் காக. (9)

காம மாதிமும் மதஞ்சொரிந் திங்கழுக் காறும்
நாம வெங்கரம் வீசியுட் கரணங்க ணான்காந்
தார்ம வன்கருந் தரணிநா லுடன்வரை சரிக்கும்
வீம மார்க மெனுங்களி றெற்றிடும் வெள்ளம். (10)

---

5. வாசுகிநிருபன்-ஆதிசேடன். மாடு-தன்னிடம்.

6. எள்ளுமாபுனல்-தள்ளும் பெரியநீர்.

7. பரவும்-துதிக்கும். பணி-ஆதிசேடனே.

8. மூண்ட-மிகுந்த.

9. நகை-பல். முகம்-இடம். நோக்குபு-நோக்கி. படரும்-செல்லும். வாரி-மிகுதி. கடலின்மேல்-கடலைநோக்கி.

10. காமமாதி-காமம் வெகுளி மயக்கம். அழுக்காறு-பொறாமை. நாம-பயம். உட்கரணம்நான்கு-மனம் புத்தி சித்தம் அகங்காரம். தார்ம-பெரிய. வன்தரணிநால்-வலியபூமி நான்கு. அவையாவன, பாலை நெய்தல், மருதம், முல்லையென்பன. கரும்வரை-குறிஞ்சி. வீமம்-பயங்கரம். அகம்-நானெனுமகங்காரம். களிறு-யானை. எற்றிடும்-எறிந்திடும்.

வறுமை செல்வமாம் பணைகளு மிவைதர வளரு
முறுதி யின்பொடு துன்பெனும் பலன்களு முற்ற
புறணி யோடக வயிரமும் பெறுமரம் போலும்
பிறவி வேரறுத் தெறியுமா லந்நதிப் பெருக்கம். (11)

இரவு டன்பக லினுமிரு ளகக்குகை யெய்திக்
கரவு பொய்கொலை வேடருக் காகர மாகித்
தரணி மேலுறுந் தீயமண் முதலபுன் சமய
வரைத டிந்துநுண் பொடிபடுத் தெரியு மவ்வாரி. (12)

இழித ரத்தலை யிரங்குமெண் கதனையு மெறிந்து
பழியு றுங்கொலைப் புலைகடங் குழுவையும் படுத்து
மொழிப டும்பிணி முகங்களைப் பறந்திட முறித்து
வழிய லைப்பவர் குறும்பினை யலைக்குமவ் வாரி. (13)

சிறைவி ரும்பிய தொழுவினை வழுவறச் சிதைத்து
முறைக டந்தவர் வண்டர்சந் ததிகளை முனிந்து
துறைத ணந்தகள் ளுகந்தவம் பலர்தமைச் சுழித்து
நிறையுங் கண்டக வனத்தினைக் கலக்குமந் நீத்தம். (14)

வடுவ டுக்குமா வினையிற முனிந்துகை வலவர்
முடிய வெட்டுதீங் காய்கமு கங்களை முனிந்து
நெடிதெ ழுந்துயர் காமரு தத்தினை நீந்திக்
கொடிய கால்புகுந் தணைதகர்த் தெழுநதிக் கொழுந்து. (15)

11. பணை-கொம்பு. புறணி-பொறுக்கு. அகம் மனம்.

12. அகக்குகை-மனக்குகை. கரவு-களவு. ஆகரம்-உறைவிடம். அமண்-சமணசமயம்.

13. இழிதர-துன்பஞ்செய்ய. தலை-அதிகாரத்தோடு. இரங்கும்-சத்திக்கும். எண்கு-கரடி. குழு-கூட்டம். படுத்து-கொன்று. மொழி-சொல். பிணிமுகம்-பறவைப்பொது. வழியலைப்பவர்-வழிப்பறிசெய்பவர். அலைக்கும்-கெடுக்கும்.

14. சிறை-காவல். தொழு-கள்வன். வண்டர்-துட்டர். முனிந்து-கோபித்து. துறைதணந்த-முறைகடந்த. கண்டகவனம்-வச்சிரவனம். அம்பலர்-பழியுடையோர்.

15. வடு-இளங்காய். மா-மாமரம். இற-கெட. வலவர்-வல்லவர். தீம்-இனிய. கா-சோலை. மருதம்-வயல். கால்-வாய்க்கால்.

ஏர்கொள் பூமிக்க ணகத்தின் கவடெலா மெற்றி
யார்க லிப்புறத் துறைதரு பங்கம தகற்றிப்
பார்க லந்ததோர் பிறவியி னெய்தலைப் படர்ந்து
சேர்க டற்பொரு மீனம தெறியுமந் நீத்தம். (16)

மான வெற்படுத் துண்டிநித் திரைமுதன் மறந்து
தான கங்குளிர்ந் தூர்வன விதமுறச் சரித்துள்
ளான வைம்புலன் கடிந்தடுத் தவர்பவ மகற்றி
ஞான மாதவர் போன்றது நாகநன் னதியே. (17)

சங்க மேற்கொண்டு விரும்பினர்க் கமுதமாய்ச் சனனத்
துங்க வேதனை மாறனைக் கடந்தன்பிற் றுணைத்தாட்
பங்க யந்தொழா தவரையும் பணிகொண்டு பணிக்கு
நங்கை பாகனை யொத்தது நாகநன் னதியே. (18)

வார ணங்கர மெடுத்தெதி ரோலிட வந்து
பார ணங்ககம் படிந்துபல் லுயிரையும் பரித்துப்
பேர ணிந்தசங் காழிகைக் கொண்டிடும் பெட்பா
னார ணற்கிணை யானது நாகநன் னதியே. (19)

தாவி லாச்சரா சரங்களைத் தோற்றிடுந் தகவாற்
பூவின் மேல்வரு முகங்களுண் குறுதலாற் புலவோர்

---

16. ஏர்-அழகு. நாகம்-புன்னை. கவடு-கிளை. ஆர்கலி-கடல். பங்கம்-சேறு. பார்-பூமி. பிறவியின்-சகோதரம்போல. நெய்தல்-கடல். படர்ந்து-சென்று. சேர்-சந்தித்து. பொரு-பொருந்திய.

17. மானவெற்படுத்து-பெரியமலையையடுத்து. அகம்-மனம், உள். ஊர்வன இதமுறச்சரித்து-மெல்ல நடந்து. ஐம்புலன்-சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தமெனும் விடயங்கள் ஐந்து, நிலங்கள் ஐந்து. கடிந்து-கெடுத்து, கடந்து. பவம்-பிறவி, பாவம்.

18. சங்கம்-கல்விச்சங்கம், ஊதுசங்கம். அமுதம்-தேவருணவு, இனிமை. சனனத்துங்கவேதனை-சிருட்டியைச்செய்யும் பெரிய பிரமனை, பிறவியாகிய பெரிய துன்பத்தை. மால்தனை-விட்டுணுவை, மயக்கத்தை. நங்கைபாகன்-சிவபெருமான்.

19. வாரணம்-யானை, கடல். கரம்-கை, அலை. பாரணங்கு-இலக்குமி, பூதேவி. அகம்-மார்பு, இடம். பரித்து-காத்து. சங்காழிகைக் கொண்டிடுதல்-சங்குசக்கரத்தைக் கையிற்கொள்ளுதல், சங்கையுடைய சமுத்திரம் ஏற்றுக்கொள்ளுதல். பெட்பு-பெருமை.

யாவ ரும்புகழ் பழைமையாற் கலைமக ளடுத்த
நாவி னன்றனை யொத்தது நாகநன் னதியே. (20)

உயர்ந்த கோட்டுநா கததின்மே லுதிததலா லுலகிற்
சயந்த னைத்தரு மாணபினு லுடலெலாந் தழைப்ப
வியந்த கண்மலர் மேவலாற் கடல்புகும் விருப்பால்
நயந்த விந்திர னொத்தது நாகநன் னதியே. (21)

நாக மாநதி வருதல்கண் டருள்பழ நகர்வா
ழேக நாயகன் மாவிலிங கத்தினின் றெழுந்தே
ஏக தந்தன்மா கணததரு மேழுபா ராரும்
மாக முந்தொழ வன்னதித் தடங்கரை வந்தான். (22)

வழிக்கு றுந்துணை யாய்விபு வாய்ப்பல மறையின்
மொழிக்கு மெட்டிடா மூலமாம் பழம்பதி முதல்வன்
பழிக்க ரும்புன லாடுவா னுடரும் பணிலஞ்
சுழிக்கு நாகநன் னதியிடை யுமையொடுந் தோய்ந்தான். (23)

வரங்க ணல்குவான் சூழ்கிய பழம்பதி வாண
னிரங்கு தெண்டிரை நதிவிரும் பியவரு மெல்லாஞ்
சுரந்த ளித்துடன் மீண்டுல கினையுகந் தோறுங்
கரந்து பெற்றிடு மிலிங்கத்தில் வந்துருக் கரந்தான். (24)

ஆதி யாமுயிர்த் தொகைக்கெலா நடித்தறி வளிக்கும்
காத னார்முனம் படிந்தெழு நாகநன் னதியில்

---

20. தாவிலா-கெடாத. தோற்றிடுதல்-சிருட்டித்தல், உண்டுபண்ணுதல். பூ-தாமரைப்பூ, பூமி. நான்குமுகம்-நான்குமுகம், நான்குபுறம். புலவோர்-தேவர், கவிஞர். கலைமகளடுத்த நாவினன்-பிரமன்.

21. நாகம்-தேவலோகம், பாம்பு. சயந்தனை-சயந்தனென்னும் புதல்வனை, வெற்றியை. கண்மலர்-கண்ணாகிய மலர், தேன்பொருந்திய மலர். கடல்புகும் விருப்பு-இந்திரன் அசுரனுக்கஞ்சிக் கடலிலொழித்தல், நதிகடலை நோக்கிச் செல்லுதல்.

22. ஏகதந்தன்-விநாயகன். பார்-உலகம். மாகம்-ஆகாயம். இது தேவலோகத்துள்ளாரைக் குறித்தது.

23. பணிலம்-சங்கு.

24. இரங்கு-ஒலிக்கும். கரந்துபெற்றிடும்-ஒடுக்கித்தோற்றுவித்திடும் கரந்தான்-மறைந்தான்.

ழேத கும்புக ழிந்திரா தியரெனும் விண்ணோர்
மாத வஞ்செறி வசிட்டனு தியரெலாம் வந்தார். (25)

வந்த வானவர் முனிவரர் விதிமுறை வணங்கிப்
புந்தி யன்பொடு தோய்ந்தெழுந் தாலயம் புக்கா
ரெந்தை பொன்னடி பணிந்துபெற் றனர்வா மெவையுஞ்
சிந்தை செய்தம வுலகினை யவரவர் சேர்ந்தார். (26)

சென்று மூழ்கிடின் மூழ்குவ மெனச்சிந்தை செய்யிற்
றன்று மந்நதிப் படிந்தெழு முலவைமெய் தோயி
னன்றெ லாந்தரு நாகநன் னதிபணி நலத்தா
லென்று மப்பதிக் குவமைவே றிலையிலை யிலையால். (27)

இன்ன வாறினி துரைக்கவுங் கேட்கவு மிவண்யா
முன்னு றுந்தவ மென்றருள் சூதனு முனிவீர்
பன்னு மிக்கதை முன்புநந் நந்தியம் பகவான்
மன்னு மன்பினுற் சனற்குமா ரற்குவாய் மலர்ந்தான். (28)

நாகநதிச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 752.

## 18-வது செளந்தரபாண்டியச் சருக்கம்.

தொழுது கேட்குமச் சனற்குமா ரனுமினஞ் சொல்க
பழவ னம்பதிக் காதையொன் றெனநந்தி பகர்ந்த
கெழுமு சுந்தர பாண்டியன் பெறுஞ்செயல் கேண்மின்
வழுவி லாமுனி வீரெனுங் காதைநூல் வல்லோன். (1)

வேறு.

மாதவ முனிவீர் கேண்மின் வரம்பெறு சனற்கு மார
ளுதிமால் போற்று மண்ண லாலயங் காவல் பூண்ட

25. நடித்து-இயங்கும்படிசெய்து.
26. தம-தம்முடைய.
27. உலவை-காற்று. பணி-பணியும்.
1. கெழுமு-செல்வநிறைந்த.

நாதனே சிலாதன் மைந்தா நந்திநா யகனே யென்று
மேதக வேத்தி முன்ன மெய்க்கதை வினவி னானே. (2)

அடல்பெறும் பூதசேனைக் காசெனு நந்தி யெந்தாய்
தடமதின் மதுரை காக்குஞ் சௌந்தர பாண்டி யன்றான்
படரொளித் துவாத சாந்தப் பதிமுத்திப் பதியாய் வேதன்
கடையுக நான்கு மூன்று கண்டதாக கூடற் பேர்த்தாய். (3)

சிவமேயோ ரறுபானென்கு திருவிளை யாட லென்னு
முவமையி னடனஞ் செய்ய வோங்குதென் மதுரை நீங்கிப்
புவனியில் வனமு கம்போய்ப் புகுந்ததென் புனவைக் கோர்பாற்
பவமக றன்பேர் தன்னாற் பட்டண மமைத்த தென்கொல். (4)

சிகரகோ புரங்கள் சூழுந் திருப்புன வாயி றன்னின்
மகபதி முதலோ ரேத்து மாவிலிங் கத்தின் பாங்கர்த்
தகைமைகூர் பலவி லிங்கந் தாபித்துத் தந்தி ரத்தா
லகமகிழ்ந்தன்பாற் பூசித் தானியந் தோறும் போற்றி. (5)

சவுந்தர பாண்டி யன்பட் டணமெய்தித் தனது செங்கோ
னவந்தரு பேத மான நானில முழுது மோச்சித்
தவம்பெற வாழ்ந்த தென்கொல் சார்ந்தவ ரவிச்சை யெல்லாங்
கவர்ந்தரு ணந்தி நாத கருணைசெய் யெனத்து தித்தான். (6)

வேறு.

எனக்கிவை பகுத்தினி தியம்பு கென்றவட்
சனற்குமா ரப்பெயர்த் தாப தன்றொழ
மனக்கனி வொடுதிரு வாய்ம லர்ந்தன
னனக்கனக் கைலையெந் நந்தி நாயகன். (7)

ஏடவிழ் கமலத்தோ னீன்றதோன் றன்முனை
மாடலம் பிகைபதிக் கன்ப னாகிமெய்ந்

---

2. மால்-விட்டுணு.

3. அடல்-வலிமை. மூன்றும்-மூன்றுகாலத்தும்.

5. ஆனியம்-நாள்.

6. அவிச்சை-அஞ்ஞானம்.

7. என்றவட் என்பதை என்று அவண் எனப்பிரிக்க. தாபதன் - முனிவன். நல்நக்கன்-நன்மையைத் தருகின்ற சிவபிரான்.

நாடிமன் பதைக்கரு ணல்கி வாழ்ந்தனன்
கூடலம் பதிதொழுங் கூனற் பாண்டியன். (8)

எறிகடற் புவிபுரந் திருக்கு மெல்லையிற்
பறிதலைப் பங்கியர் பாயு டுக்கைய
ருறிபுகு கரகத்த ருயிர்க ளோதுநூ
லறிமனச் செருக்கறா வமணர் தோன்றினார். (9)

ஆங்குறு மளவிலா வமணர் பாண்டியன்
பாங்குபோய்ப் பாங்கிலாப் பிடகப் பாழ்நெறித்
தீங்கெனுந் தேறலைச் செவிப்பு கட்டலும்
வாங்கருங் குணத்தனுன் மத்த னாயினான். (10)

பத்தியி லலகைகோட் பட்ட மாந்தரிற்
குத்திரம் வழுதிசெங் கோன்ம றத்தலான்
மெய்த்திருத் தொண்டரை வெருக்கொ ளத்துரந்
தத்தல முழுதுங்கா ரமண்ம லிந்ததே. (11)

இக்கடுங் காரம ணிருள்க டிந்திடத்
திக்குநீ யலதிலை யென்று செப்பிநின்
றக்கமா லிகையடி யார்க ளாலவாய்ச்
சொக்கரைப் பணிந்துகை தொழுதுள் வைகினார். (12)

மற்றிவர் வருந்தினர் வாழு மெல்லையி
லுற்றன ருமையமு தூட்ட வாய்மலர்ந்

8. தோன்றால்-தோன்றலாகிய சனற்குமாரனே. ஆடலம்பிகை பதி-நடனம்புரியுஞ்சிவபெருமான். மன்பதை-மக்கட்டொகுதி.

9. பறிதலைப்பங்கியர்-தலையிலுள்ள புறமயிரைப்பிடுங்குபவர். உடுக்கை-உடை. கரகம்-கலயம். உயிர்களோதுநூல்-பசுநூல். செருக்கு-மயக்கம்.

10. பாங்கு-பக்கம். பாங்கு-முறை. தேறல்-கள். வாங்கரும்-கெடுதலில்லாத. உன்மத்தம்-மயக்கம்.

11. அலகை-பேய். .கோட்பட்ட-பிடிக்கப்பட்ட. மாந்தரின்-மாந்தர்போல. குத்திரம்-சீக்கிரம். வழுதி-பாண்டியன். வெரு-அச்சம். கார்-இருள்.

12. கடிந்திட-நீக்க. திக்கு-ஆதரவு. அக்கம்-உருத்திராக்கம்.

தற்றமில் செந்தமி ழார ணஞ்சொலப்
பெற்றருள் சம்பந்தப் பிள்ளை யாரரோ. (13)

தெள்ளிசைத் தமிழ்புனை சென்னி நாட்டினின்
றெள்ளரு மடியர்பாங் கெய்த வெய்திய
வள்ளலாம் வைதிக வார ணப்பெயர்ப்
பிள்ளையா ராலவாய்ப் பிரானைப் போற்றுவான். (14)

பரித்தவெண் டாளவான் பந்த ரீழலில்
வரித்தமுத் தணிநர வாக னத்துமீ
தருட்குழாத் தொடுமெழுந் தருளும் வீதிவாய்த்
திருத்தகு நித்திலச் சின்ன மார்த்தவே. (15)

நாரணி பணிபர சமய கோளரி
பேர்ரு ளொழுகடற் பெருக்கம் வைதிக
வாரண மெழுந்ததென் வாய்மை கேட்டலுங்
காரமண் குண்டர்கள் கலக்க மெய்தினர். (16)

செய்தவ முறுகிலாச் சிதடச் சிந்தருங்
கைதவன் காண்வரக் கடிது சுற்றினர்
வைதிக வாரண வள்ள லாரைவா
னெய்திய பரிதிசூ ழிருட்கு ழாத்தினே. (17)

சூரவராம் வள்ளலார் கூனற் பாண்டிய
னரனடி மறந்ததீங் ககற்றி யுய்ந்திட
விரகிலா வமணரை வென்று போக்கினர்
பாவுமெய்க் கலையறு பத்து நாலினால். (18)

ஒழுக்கறி யாதபா யுடைய ரூர்ப்புறக்
கழுக்கடை யேறிய காலைச் சாணைவா

---

13. எல்லை-சமயம்.

14. போற்றுவான்-இது வினையெச்சம். சென்னிநாடு-சோழநாடு. வாரணம்-யானை.

15. பரித்த-தாங்கிய. தாளம்-முத்து. வரித்த-நெருங்கிய. நரவாகனம்-சிவிகை. நித்திலம்-முத்து.

17. சிதடச்சிந்தர்-அறிவில்லாத குள்ளர். கைதவன்-பாண்டியன். காண்வர-காணும்படி. பரிதி-சூரியன்.

18. விரகு-அறிவு.

யிழுக்கறக் கழுவிய மணிய தாமென
விழுக்கவு ரியன்புவி விளக்க முற்றதே. (19)

வேறு.

அருகர் வன்பிணித் துவக்குவிட் டெழுஞ்சிவ னடியார்
கருணை கூர்மது ரேசனைப் பணிந்திரு கையாற்
சுருதி மன்னிய காழியர் தலைவரைத் தொழுது
பொருவி லாச்சிவ புண்ணிய நெறிமுறை புரிந்தார். (20)

பரவ மண்டடிந் தருடிரு ஞானசம் பந்தர்
வரம விந்தசெங் கைத்திரு நீற்றினால் வழுதி
விரவு மெய்க்கொடுங் கூனிமிர்ந் தணிபெறு வேனி
லரசு போறலாற் சௌந்தர பாண்டிய னானன். (21)

அற்றை நாண்முதற் சொக்கலிங் கத்திடத் தசையா
துற்ற பத்தியாற் பணிவிடை பலபுரிந் தொன்னார்ச்
செற்று வென்றிகொள் சௌந்தர பாண்டியன் றீக்கை
பெற்ற வன்பருக் கன்பினு லனந்தரப் பெற்றான். (22)

மான வேற்படைச் சௌந்தர வழுதிக்கு மதுரைத்
தீன ரட்சகர் சிவபத்தி மகிமைபோ தித்து
ஞான தீக்கையும் புரிந்தெழுத் தஞ்சையு நயந்தார்
பான லந்தடக் காழிவாழ் ஞானசம் பந்தர். (23)

தணந்தி டாச்சிவ னடியவர் யாவர்க்குந் தலைமைக்
குணங்கொள் பாண்டியன் பணிந்தகை யச்சிமேற் குவித்து
வணங்கி வாழ்த்திமுன் னிற்றலுங் கறந்துபொன் வள்ளத்
தணங்க ளித்தபா லருந்திய பிள்ளையா ரருளும். (24)

---

19. விழு-பெருமை. கவுரியன்-பாண்டியன்.
20. துவக்கு-கட்டு. பொருவு-ஒப்பு,
21. வேனில்-கோடைகாலத்து. அரசு-அரசமரம்.
22. ஒன்னார்-பகைவரை. செற்று-கொன்று. அனம்-அன்னம்.
23. பானல்-கருங்குவளை-பானலந்தடமென்பதை, பால் நலந்தடமெனப்பிரித்து, பால் உண்ணும் நலம்பொருந்திய தடமெனக் கொள்ளினுமாம். தடம்-தடாகம்.

வருக சென்னிதன் மருகமா மதித்திரு மருமா
னிருநி லத்திலிம் மதுரையிற் கடுகள வேனு
மொருவர் செய்பவம் புண்ணிய மேருவொத் தோங்கிப்
பெருகு மித்தலத் தாஞற்றினை நீபெரும் பிழையே. (25)

மாசு லாவமண் மயக்கினா லாலவாய் வள்ளல்
பூசை நீத்தனை யஞ்செழுத தயர்த்தனைப் பொருவி
னேச வன்பர்தன் புறவிருந் தனையிந்த நெறியாற்
பேச ருங்கொடுஞ் சிவத்துரோ கத்தினைப் பெற்றாய். (26)

துளக்கு மிப்பவ நீக்குமா றொருதலஞ் சொல்வோம்
வளர்க்கும் பைந்தமிழ்ப் பாண்டிய கேண்மதி மறைநூல்
கிளக்கு மப்பதி மெய்ப்புகழ் மதுரையின் கீழ்பா
லளக்கர் மேற்றிசை யோசனை யாறுகா லளவே. (27)

சித்தி யாவையு நினைக்குமுன் றருமென் றுந் தீராக்
குத்தி ரப்பவ மனைத்தையும் போக்குமெங் கோமா
னுத்த மச்சிவ தலத்தினி லுத்தமோத் தமமாம்
பத்த ராய்த்திரு மாலயன் பணிபழம் பதியே. (28)

திருந்து சீர்ச்சிவ கங்கையா தியதச தீர்த்த
மருங்கு சுற்றமா விலிங்கமொன் றனாதியாய் வைகும்
பெரும்ப திக்கயிந் திரதிக்கில் வகுக்கநின் பேரா
லிருஞ்ச வுந்தர பாண்டிய பட்டண மெனவே. (29)

ஆண்டு வேண்டிய நியதியோ டிறைகழு வாண்டு
மீண்டு மானியந் தொறும்பழம் பதிபுகுந் திதயம்
பூண்ட வன்பினால் மாவிலிங் கத்தினைப் போற்றி
மூண்ட மெய்ப்பணி செய்கவிவ் வருடமோர் மூன்றில். (30)

---

25. சென்னி-சோழன். மருக-மருமகனே மதித்திருமருமான்-சந்திரகுலத்து உதித்தவனே. உஞற்றினை-செய்தனை.

26. பொருவு-ஒப்பு.

27. துளக்கும்-நடுக்கும். கேண்மதி-கேட்பாயாக. அளக்கர்-கடல். ஆறுகால்-ஆறேகால்.

29. தசம்-பத்து. மருங்கு-பக்கம். ஐந்திரதிக்கு-கிழக்குத்திக்கு.

30. ஆனியம்-நாள். இதயம்-மனம். பூண்ட-பொருந்திய. மூண்ட-மிகுந்த.

பண்டி யீரொழு பதியினு மிகத்தொடு பாமு
மீண்டு முத்தியுந் தரும்பதி ஞலிலிங் கமுமுன்
பூண்ட வவ்வவர் பேரினுற் ருபிதம் புரிநீ
யாண்ட நம்பழம் பதிமகா லிலிங்கத்தி னருகே. (31)

நேச மோடுபன் ஞன்குரு வாகிய நிமலன்
பூசை யாகம விதிமுறை செய்தனை போற்றிற்
பேச ரும்பவந் தணர்ந்துநல் வரமெலாம் பெறுவை
யாசி லப்பதி பேருக வெனவிடை யளித்தார். (32)

விடைய ளித்தருள் வைதிக முதல்வரை வேந்தன்
புடவி தோய்தரப் பணிந்தெழுந் தன்புடன் போற்றி
யுடன கன்றன னிரதமேற் கொண்டன னொழியாப்
படைம ருங்குறச் சென்றடைந் தனன்பழம் பதியே. (33)

பாழி யம்புயச் சௌந்தர பாண்டியன் பரமன்
வாழு மாநகர்க் கைந்திரி யாகநீள் வாரி
சூழு மெல்லையிற் கண்டனன் பன்மணி தொக்க
பேழை யாமெனப் பட்டண மொன்றுதன் பெயரால். (34)

அகழு டுத்தபொன் னிஞ்சியும் வான்முக டளக்குஞ்
சிகர கோபுர வாயிலு மேடையுந் தெற்றி
மகர தோரண வீதியு மண்டப மற்றும்
பகர்செய் கம்மியர் நூல்விதி விதியெனப் படைத்தான். (35)

இருநி திக்குலங் களுமணி யாடைமற் றெவையுந்
தருச வுந்தர பாண்டிய னத்தலந் தன்னில்

---

32. தணர்ந்து-நீங்கி. ஆசு-குற்றம். பேருக-செல்க.

33. வைதிகமுதல்வர்-திருஞானசம்பந்தர். புடவி-பூமி. படை-சேனை.

34. பாழி-பலம். ஐந்திரி-கிழக்கு. வாரி-கடல். தொக்க-அடங்கிய. பேழை-பெட்டி.

35. உடுத்த-சூழ்ந்த. இஞ்சி-மதில். தெற்றி-திண்ணை. மகரதோரணம்-மகரவடிவாகவியற்றியதோரணம். கம்மியர்-கம்மாளர். விதிமுறை. விதி-பிரமன்.

வருட மூன்றுற வைகுவோன் வைகலும் வழுதி
பொருவி லாவிர தத்தொடும் வனமுகம் புகுவான். (36)

சென்று தெய்விகச் சிவகெங்கை யாகிய தீர்த்தத்
தொன்று மன்பினுற் படிந்தெழுந் தஞ்சையு மோதி
வென்றி கூர்திரு நீறக்க மணிந்தெங்கும் விபுவாய்
நின்ற வண்ணலை நினைந்துமந் திரம்புகு நிருபன். (37)

பாச வல்வினை நூறிய ஞானசம் பந்த
தேசி கன்றிரு வாய்மலர்ந் தருளிய திறத்தான்
மாசி லாவொரு மாவிலிங் கத்திரு மருங்கும்
பேசு மாகம விதிமுறை யிலிங்கந்தா பித்தான். (38)

சொக்க லிங்கமுன் னுந்திருப் பேரொடு தோன்று
மிக்க லிங்கத்தை விதிமுறை பூசித்து மிளிர்தெய்
வக்க லிங்கமார் கச்சணி முலையிள மடந்தை
பக்க லிங்கத்தை யருச்சனை புரிந்தனன் பணியும். (39)

பூண்ட கச்சணி முலையவள் சன்னிதி புகுந்து
வேண்டு மன்பொடு விதிமுறை பூசித்து மேன்மே
லீண்டு மெய்த்திருப் பணிசெய்து செய்குவ னிறைக்குக்
காண்ட குஞ்சுடர் மகுடகுண் டலமுதற் கலனே. (40)

சோள சாருமா முலையுமைக் கினியபொற் றேரும்
வாளு லாமணி மகுடமுஞ் சுட்டியும் வயிரக்
கோள கைத்திருக் கடகமுங் காஞ்சியுங் குளிர்பூந்
தாள ணிந்திடு மணிகளுந் தரும்வைகைத் தலைவன். (41)

---

36. இருநிதி-பெருந்திரவியம். வைகுவோன்-வசிப்போனாகி. வைகலும்-நாள்தோறும்

37. மந்திரம்-கோயில்.

38. நூறிய-கெட. இது செய்யியவென்னெச்சம்.

39. மிளிர்-பிரகாசிக்கின்ற. தெய்வக்கலிங்கம்-தெய்வத் தன்மை வாய்ந்தசிலை. கச்சு-ரவிக்கை.

40. ஈண்டு-இவ்வண்ணம். காண்டகும்-பார்க்கத்தகுந்த. கலன்-ஆபரணம்.

41. சோளசாரு-கச்சணிந்த. இது வடமொழிச்சொல். வாள்-ஒளி. கோளகை-கவசம். கடகம்-கைவளை. காஞ்சி-எண்கோவைமணி. தாள்-கால். வைகைத்தலைவன்-பாண்டியன்.

மூவர்க்கு மூலமா மெம்பிரான் முன்னர்க்
கிளைக்கு மன்பினால் வருமடி யவர்க்கெலாங் கேண்மை
விளைக்கு மன்னமுஞ் சொன்னமும் பூமியு மேலாய்த்
திளைக்கு மெண்ணிரு தானமும் வரவரச் செய்யும். (42)

இவ்வ ணந்தினந் தொறும்பிரான் பூசனை யியற்றிச்
செய்வ ணத்திருப் பணிபல தானமுஞ் செய்து
மைவ ணக்கடற் கரைத்திருப் பட்டினம் வைகுங்
கைவ ணத்தினி லாண்டொரு மூன்றையுங் கழித்தான். (43)

பருவ மொன்பதோ டொன்பது நீத்தபின் பரமன்
கருணை யாற்பெரும் பவக்களங் கினைப்புறங் கண்டான்
பொருமி ராகுவாய் விட்டெழு முழுமதி போன்றான்
வருச வுந்தர பாண்டிய னந்தமிழ் மன்னன். (44)

எய்த ரும்பல வரமெலா மெய்தின னிருகண்
பெய்த ரும்புனன் மூழ்கினன் களித்தனன் பெம்மான்
மெய்த ரும்பதம் பிரிதரா விடைகொடு மீண்டான்
கைத வன்கடம் பாடவிக் கூடலைக் கலந்தான். (45)

ஈண்டி வேண்டிய விந்திர போகமுற் றெண்ணி
லாண்டு நீத்தபி னாலவாய் வெள்ளியம் பலத்துத்
தாண்ட வம்புரி வோனரு ளாற்சவுந் தரனும்
பாண்டி யன்புகுந் தனனழி யாச்சிவ பதமே. (46)

சௌந்தரபாண்டியச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 798.

---

42. மூவர்-பிரமவிட்டுணுருத்திரர். கேண்மை-நட்பு. திளைக்கும்-அனுபவிக்கும். எண்ணிரு-பதினாறு.

43. கைவணம்-கைநொடிப்பொழுது.

44. பருவம்-முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில், கார், கூதிர் என இரண்டிரண்டு மாதங்களாக வருடத்துக் காறுபருவம். களங்கினை-குற்றத்தை. புறங்கண்டான்-நீங்கப்பெற்றான். பொரும்-போர்செய்யும்.

45. கைதவன்-பாண்டியன். அடவி-வனம்.

46. ஈண்டி-பொருந்தி.

# 19-வது தீர்த்தச் சருக்கம்.

திருந்து நைமிச முனிவிர்காள் நந்திமுன் செப்பப்
பொருந்து மிக்கதை வினவிய நான்முகன் புதல்வன்
விரும்பு தீர்த்தமீ ரைந்தினுந் தோயுமேல் வையுமேல்
வரும்ப லன்களும் மருளென நந்திவாய் மலர்ந்தான். (1)

வேறு.

தினமகிழ்ந் துரைக்குந் தோறுந் தெவிட்டிடாக் காதைச் சூதன்
புனவைசூழ் தீர்த்தம் பத்திற் பொருந்திய விசேட காலத்
தெனவர்மூழ் கினும்வந் தெய்து மெய்தரும் பலமிற் றென்ன
வனகனு நந்திமுன்ன மருளிய வாறு சொல்லும். (2)

மேவுவை காசித் திங்கள் விளங்கிய விசாக நாளில்
யாவரெவ் வாற்றி னாலு மிந்திர தீர்த்த மூழ்கிற்
றூவரும் பரியின் மேதஞ் சதப்பத்தத் தக்கோ ரிந்தப்
பூவுல கிறைஞ்சச் செய்த புண்ணியம் பெறுவ ரம்மா. (3)

மேதகு விருச்சி கத்தில் விளங்கிய சகட நாளிற்
பேதைய ரெளியோ ரேனும் பிரமதீர்த் தத்து மூழ்கின்
மாதவஞ் செயவல் லோர்க்கும் வரலருங் காமி யங்கள்
காதலுள் ளங்கை நெல்லிக் கனியெனப் பெறுவர் திண்ணம். (4)

எக்குலத் தோருஞ் சிங்கத் தேய் திரு வோண நாளிற்
சக்கர தீர்த்த மாடித் தாணுவைக் கமலப் போதாற்
புக்கருச் சித்தி றைஞ்சிற் புரவலர் போகந் துய்த்துச்
செக்கர்வான் கங்கை வேணிச் சிவனடி நீழல் சேர்வார். (5)

---

1. நான்முகன்புதல்வன்-சனற்குமாரமுனிவன். எல்லை-காலம்.
2. எனவர்-எத்தன்மையர். அனகன்-கடவுள்.
3. தூவரும்-கெடாத. பரியின்மேதம்-அசுவமேதம். சதப்பத்து-ஆயிரம்.
4. விருச்சிகம்-கார்த்திகைமாதம். சகடம்-உரோகணி.
5. சிங்கம்-ஆவணிமாதம். எய்-பொருந்திய. புரவலர்-அரசர். துய்த்து-அநுபவித்து.

டீழூர்கழி யாதி வாரம் வைகறை யெழுந்தியா ரேனும்
பார்கெழு மிரவி தீர்த்தம் படிந்துதங் குறைநி ரப்பி
யேர்கொடம் பிதிர்ப்பொ ருட்டா லெட்புன லிறைப்ப ரேலன்
னோர்குலப் பிதிர்க்க ளெல்லா முமாபதி பதவி சேர்வார். (6)

வருந்திருப் புனலில் வெள்ளி வாரத்திற் படிந்தே மின்னார்
பொருந்துகன் கணேச னம்மை புணைவநா யகனை வந்தித்
தருந்துதி செய்வ ராயி னருந்ததி யனைய ராவார்
பெருந்துயர் மம்மர் நீங்கிப் பெறுவர்நன் மக்கட் பேறே. (7)

கிருத்திகைத் திங்கட் டிங்கட் கிழமையிற் றிங்கட் டீர்த்தத்
தருத்தியின் மூழ்கி யவ்வா யண்ணலை யிமைய மாதை
யொருத்தல்வேற் கரனை வாழ்த்தி லுறுபிணி யனைத்து நீங்கு
மிருத்துவும் பிறப்பு மெய்தா வீடரும் வீடு மெய்தும். (8)

போரிடுந் தரங்க நாகப் புண்ணிய நதியி லெண்ணில்
தேரொடுந் தோன்று மாசித் திங்களிற் பருகா வாரிப்
பாரிடிந் தற்று வீழ்பா தவமெனப் படிந்தா னேனும்
நேரிடும் பாவம யாவு நீத்துவெண் கைலை சேரும். (9)

எழுந்தவான் கன்னித் திங்க ளிரவியோ டெய்து நாளிற்
செழும்புனல் வருண தீர்த்தஞ் சென்றுதா னொருவன் றோயிற்
கொழுந்தலை முறைமூ வேழிற் கூடிய பிதிரர் தம்மை
விழும்பவங் கடத்தி விண்ணோர் வேண்டுபே ரின்ப மேவும். (10)

---

6. வைகறை-விடியுங்காலம். கெழும்-பிரகாசிக்கும். ஏர்-அழகு. குறைநிரப்பி-நித்தியக்கடன் பூர்த்திசெய்து.

7. பதவி-உலகு. திரு-இலக்குமி. மின்னார்-பெண்கள். மம்மர்-மயக்கம்.

8. கிருத்திகைத்திங்கள்-கார்த்திகைமாதம். திங்கட்டீர்த்தம்-சந்திரதீர்த்தம். அருத்தி-ஆசை. ஒருத்தல்-யானைமுகத்தையுடைய விநாயகர். வேற்கரனை என்ற சொற்கு முன்னிற்றலால் விநாயகரெனக்கோடற்பாற்று. மிருத்து-மரணம். வீடரும்-விடுதலில்லாத.

9. போரிடும்-மோதுகின்ற. தரங்கம்-அலை. எண்ணில்-விசாரமில்லாத. தேர்-உரோகணி. பருகாவாரி-உண்ணக்கூடாத கடல் சூழ்ந்த. பார்-பூமி. பாதவம்-மரம். தவறிவீழ்ந்தானேனும் என்றபடி.

10. கன்னி-புரட்டாசி. திங்களிரவியோடெய்துநாள்-அமாவாசை தினம். கொழும்-செழித்த. விழும்பவம்-கொல்லும்பாவம்.

மூதுரைத் தமிழ்நூற் கும்ப முனிவன்கல் யாண தீர்த்தத்
தாதிரை நாளின் மூழ்கு மாயின்மற் றியாவ னேனு
மேதகு மட்டில் வன்மை விருந்தோம்பல் விளங்கு ஞானக்
காதலர்ப் பேறு வாய்க்குங் கற்பின்மங் கையினை யெய்தும். (11)

வருந்திங்க டோறுந் திங்கள் வாரத்தில் யாவ னேனும்
பொருஞ்சிவ கங்கை மூழ்கிற் புண்ணிய வடிவ னவன்
றிருந்திய வைக றோறுஞ் சிவகெங்கை படியி னன்னோன்
பெரும்புக ழீச னல்லா லெம்மனோர் பேசற் பாற்றோ. (12)

அத்தலத் தெல்லை யின்க ணான்குளப் படியி னீரு
முத்தம தீர்த்த மாகு முனக்குநா முரைத்த தீர்த்தம்
பத்தினு மொருவன் மூழ்கிற் பாரிடை யவனே சீவன்
முத்தனும் பின்னர் யாங்கை முகிழ்த்திடு மூர்த்தி யோனும். (13)

அளப்பருஞ் சுபமா யாரு மபீட்டமாய்ப் படிப்போர் கேட்போ
ருளத்தெணும் வரங்க ளியாவு முறுவரிக் காதை தன்னை
தனக்கம லீத்தோன் மைந்தா தாழ்வற வுரைத்தோ மின்னும்
வளப்பழம் பதியின் மேலா மகிமையொன் றுளது கேணமோ. (14)

தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 812.

## 20-வது × ஆகண்டல விநாயகச் சருக்கம்.

திருக்கற நம்பா லன்பு செய்திடுஞ் சனற்கு மார
வொருப்படு மனத்தாற் கேட்க வும்பர்கோன் முதலி யோர்பான்
மருப்பினன் வனமு கத்தெம் மானையர்ச் சித்த மேன்மை
விருப்புற மொழிவ னென்றான் வேத்திர மேந்தி நின்றான். (1)

வேறு.

வனத்தினி லுயர்ந்த நைமிசா ரண்ய
மாதவர் வினவலுஞ் சூதன்

11. அட்டில்வன்மை-சமயல்செய்தற்றிறம். காதலர்-மக்கள்.

12. திங்கள்-மாதம். வைகல்-நாள்.

13. ஆன்-பசு. முகிழ்த்திடும்-குவித்திடும்.

× ஆகண்டலன்-இந்திரன்.

1. திருக்கு-வஞ்சம். பால்-இயல்பு. மரு-வாசனை. வேத்திரம்-பிரம்பு.

சனற்குமா ரற்கு நந்தியெம் பெருமான்
　　றகவுற வருளுமா றருளு
மனத்தினை யனைய வரம்பையர் நடிப்ப
　　வைந்தரு நீழல்வாழ் புனிதன்
சினத்தொடு மதவேள் கணைமழை சொரியத்
　　திலோத்தமை மேன்மனஞ் சென்றான். (2)

மனஞ்செல மற்றோர் வழிச்செலா தனங்கன்
　　வாளியின் வசப்படு மகவான்
கனஞ்செறி கூந்தற் றிலோத்தமை கமலக்
　　கைமலர் பற்றின னடந்தா
னினங்களும் படையு மேவல்செய் வோரு
　　மின்றியவ் வேந்திழை யுடனே
நனந்தலை யுலகிற் புகுந்தனன் கண்டா
　　னனியுயர் நிடதமால் வரையே. (3)

பொங்கிய சோலைப் புறங்கெழு மிருளாற்
　　பொருந்தக்கெழுமணி விளக்காற்
குங்கும சாந்த மமைதலாற் சொரியுங்
　　குருமல ரமளியின் குணத்தா
லெங்கணுந் துவர்க்காய் நாகவல் லியுஞ்சே
　　ரியல்பினு னின்பமே விளைக்கு
மங்கண்மா நிலத்திற் றிருமண வறையொப்
　　பானது நிடதமால் வரையே. (4)

---

2. அனம்-அன்னம். ஐந்தரு-அரிச்சந்தனம், கற்பகதரு, சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன. புனிதன்-இந்திரன். மதவேள்-மன்மதன்.

3. அனங்கன்-மன்மதன். வாளி-அம்பு. மகவான்-இந்திரன். கனம்-மேகம். நனந்தலை-நடு. நனி-மிக.

4. அங்கண்-அழகிய இடப்பரப்பையுடைய மலைக்கு கெழுமிருள்-மிகுந்த இருள். மணி-இரத்தினம். விளக்கு-பிரகாசம். குங்குமம்-ஓர் மரம். சாந்தம்-குளிர்ச்சி. அமளி-மிகுதி. துவர்-பவளம். காய்-மரத்தின்காய். நாகவல்லி-வெற்றிலைக்கொடி. மணவறைக்கு கெழுமிருள்-பெரிய யானை. மணிவிளக்கு-அட்டமங்கலத்தொன்று. குங்குமம்-செஞ்சாந்து. சாந்தம்-சந்தனம். அமளி-மெத்தை. துவர்க்காய்-பாக்கு. நாகவல்லி-வெற்றிலை. நிலம்-பூமி. மணவறை-கலியாணமண்டபம்.

ஆங்குட னுதித்துத் தனித்தனி கலந்த
வன்புற வின்பமர் வதனுற்
றீங்கனி யமுதந் தருதலா லரக்கர்
சில்லர்மன் னயர்துய ரிலதா
லோங்கிய சுகத்தின் மொழியலால் வேறே
ருத்தர மின்மையா லுடுத்த
பூங்கட லுலகிற் போகபூ மியினைப்
போன்றது நிடதமால் வரையே. (5)

சூழ்வரு சிகர நாஞ்சிலாற் சிற்பர்
தோமறச் செயுந்தொழின் முற்றி
யூழ்வரப் படுத்த தனையபா றையினு
லோங்குவா னளவிய நிலையால்
வீழ்வரை முத்தின் குவையினம் விரிக்கும்
வெண்ணிலாக் கற்றையால் விளங்கு
மேழ்வரை யனைய நிலாமணி மேடை
யென்னலா நிடதமால் வரையே. (6)

மணஞ்செயுங் களபப் பிடியினல் வழங்கு
மாமையான் மலர்கொடு தொடுக்குங்
குணங்கொளுஞ் சரத்தா னெடியவான் கங்கைக்
கும்பமோர் மருங்குறுந் திறத்தாற்
கணம்பெறு மணியா லாங்குபூண் சேமக்
கலத்தினுன் மாரனை யொருவ
ரணங்கொடு போற்றும் பூசைமண் டபமொப்
பானது நிடதமால் வரையே. (7)

---

5. அமுதம்-இனிமை,பால். சில்லர்-வேடர். சுகம்-கிளி, இன்பம்.

6. சிகரநாஞ்சில்-சிகரமாகிய மதிலுறுப்பு, சிகரம்போலும் மதிலுறுப்பு. தோம்-குற்றம். ஊழ்-முறை. வரை-மூங்கில். கற்றை-கூட்டம். வரை-மலை.

7. மண்டபத்துக்கு, மணம்-கலியாணம். களபம்-கலவைச்சாந்து. பிடி-கைப்பிடி. மாமை-அழகு மலர்-பூ. குணம்-நாணி. சரம்-அம்பு, கங்கைக்கும்பம்-நீர்க்குடம். கணம்பெறுமணி-தேவகணங்களாலவப்பெறு மணி. சேமக்கலம்-அழுக்குமணியாகிய சேகண்டி. மலைக்கு, மணம்-வாசனை. களபம்-யானைக்குட்டி. பிடி-பெண்யானை. மாமை-பெரியமேகம். மலர்-பூ. குணம்-பண்பு சரம்-நீர். கங்கைக்கும்பம்-ஆகாயத்தின் கண்ணதாகிய கும்பராசி. கணம்பெறுமணி-இரத்தினக்கூட்டம். சேமக்கலம்-மூங்கில் முதலிய எறிமணி. மாரன்-மன்மதன். அணங்கு-ஆசை.

அறைபடு வயினின் மூளேதெழு காந்த
ளங்கியா யிடையுறு தனின்
முறைமுறை வீழு மளியினம் புகையாய்
முதுமறை யருவியின் முழக்காய்
நிறைதரு வினத்து நறுமலர் பொழிதே
னெய்யதாய்ப் பருவமா நிகழ்த்து
மிறையெனு மதவேள் வேள்வியஞ் சாலை
யென்னலா நிடதமால் வரையே. (8)

காரின முழங்கத் தோகைக ணடிப்பக்
காந்தளந் தீபிகை கவின
வாரவெண் மதிய மணிபெற நிழற்ற
வலர்ந்தபூம் பாளேக ளசைய
நேரிசைக் கிள்ளை நின்றெதிர் துதிப்ப
நித்தலு மகிழ்ந்துவீற் றிருக்கு
மாரனுத் தான மண்டபம் போலு
மன்னிய நிடதமால் வரையே. (9)

மிதுனபுட் குலத்தாற் பிடிதனக் கெட்டா
வேயினை யொசிக்கும்வெங் கரியான்
மதுமழைக் கொதுங்கும் பெடையினைச் சிறகான்
மறைத்திடு மாங்குயின் மாண்பா
லதிரிடி முழக்கிற் கஞ்சிய பேட்டை
யணைத்திடு புறவின தன்பான்
முதுமுனி வோர்க்கு மங்கையர் வேட்கை
மூட்டுமந் நிடதமால் வரையே. (10)

பரிந்தவிந் நிடத மால்வரைக் கொருபாற்
பானுவின் கதிர்புகா தடர்ந்த

---

8. வயின்-நடுஇடம். அங்கி-அக்கினி. அளியினம்-வண்டுக்கூட்டம். தரு-மரம் பருவம்-பக்குவம்.

9. கார்-மேகம். தோகை-மயில். கவின-அழகுசெய்ய. நிழற்ற-நிழலைச்செய்ய. மதி-சந்திரனையுங்குடையையுங்குறிக்கும். கிள்ளை-கிளி, பெண். ஆத்தான மண்டபம்-கொலுமண்டபம்.

10. மிதுனம்-இரண்டின் புணர்ச்சி. புள்-பறவை. பிடி-பெண்யானை. வேய்-மூங்கில். ஒசிக்கும்-ஒடிக்கும். பெடை-பறவைப் பெண். பேடு-பறவைப்பெண். புறவு-புறா.

செருந்திபுன் னாகஞ் சந்தனங் கடம்பு
செண்பகந் தமரகதை தேமா
குருந்துகோங் கசோக மகிழ்சுர புன்னை
கூவிளந் தேக்கத்தி கொன்றை
பொருந்திய சோலைத் தாழ்வரை புகுந்தான்
புரந்தரன் றிலோத்தமை யுடனே. (11)

எல்லியும் பகலுந் தெரிகராச் சோலை
யிடையுயர் மாகதம் விளிம்பு
புல்லிய குவளைப் போதலர் சுனையிற்
புடைகமழ் மருமணந் தரும்புங்
குல்லைமா துளசெவ் வந்திமந் தாரங்
குங்குமம் வலம்புரி கொழுந்து
மல்லிகை முல்லை மயிலைசூழ் குளிர்ந்த
மாதவி மண்டபத் தமர்ந்தான். (12)

செந்தமிழ்க் கிளியின் மொழியவள் கேட்குந்
திலோத்தமை மொழியவன் கேட்கு
முந்துற நடிக்கு மயிலியல் பார்க்கு
முகிணகை யியலிவன் பார்க்குஞ்
சந்தனச் சோலை நறுமணம் வேண்டுந்
தாழ்குழன் மணமிவன் வேண்டு
மந்தமா ருதந்தன் றாளிணை வருட
மகபதி மங்கைதான் வருடும். (13)

ஆங்கவ டனது மார்பினிற் சாய
வணைத்தணி கச்சினை நெகிழ்த்துக்
கோங்கரும் பனைய குவிமுலை வருடிக்
கொவ்வையங் கனியமு தருந்தி

---

11. பரிந்த-விரும்புதற்குரிய. பானுவின்கதிர்-சூரியனொளி. தாழ்வரை-மலையடிவாரம்.

12. எல்லி-இரவு. புல்லிய-பொருந்திய. புடை-பக்கம். குல்லை-துளசி. வலம்புரி-நந்தியாவட்டம். மயிலை-இருவாட்சி. மாதவிமண்டபம்-பூஞ்சோலை நடுவிலுள்ள மண்டபம். மரகதம்-இங்கேபச்சைரத்னம் போன்ற இலை. விளிம்பு-பக்கம்.

13. முகிணகை-புன்சிரிப்பு.

யோங்குயி ரொன்று போலிரு வோர்க்கு
முடலுமொன் றெனக் கலந்தான்
வாங்குதெண் டிரைசூழ் கரைபடா வின்ப
வாரிதி மூழ்கினன் மகிழ்ந்தான். (14)

இவ்வண மிருக்கும் பொழுதிலோர் காளை
யிருடியும் பன்னியு மிருண்ட
மைவண நெடுமான் மைந்தனுக் காளா
மாலையுங் காலையும் வனத்தி
லுய்வணம் வேண்டிக் கண்டவ ரகல
வொழிவற திருவுரு மருவக்
கைவண மிதுவென் றறிந்துதன் றவத்தாற்
கருதுமன் பதையுருக் கரந்தார். (15)

வன்புலிப் போத்துப் புலிப்பிணை யென்ன
வடிவெடுத் திருவரு மருவி
யின்பமுற் றுங்காங் கியங்குவார் தெய்வத்
தியல்பினு லவவிடத் தெய்த
முன்புறக் கண்டா ணடுங்கினள் பயந்தாள்
முறையிட்டா ளிருவர்மெய் முழுதுந்
தன்படை விழிநீர் சொரிந்தனள் கொழுநற்
றழுவிய வோர்திலோத் தமையே. (16)

கொடியெனத் துவண்டா ணெட்டுயிர்ப் பெறிந்தாள்
குலைந்துசெங் கைவிர னெரித்தாள்
பிடிநடை தளர்ந்தாள் செயுந்தொழின் மறந்தாள்
பித்தரிற் றனதுள மருண்டாள்
வெடிபடு மொழியா லபயநீ யென்றாள்
வெருண்டனள் விருத்திரா சுரனைப்

14. கொவவைக்கனி-கொவ்வைக்கனிபோலுஞ் சிவந்தவாய்.

15. காளை-பதினாறுவயதுக்குட்பட்டவன். பன்னி-மனைவி. நெடுமால் மைந்தன்-மன்மதன். உய்வணம்-பிழைக்கும் வண்ணம். கைவணம்-ஒழுகும் வண்ணம். மன்பதை-மக்கள்.

16. போத்து-ஆண். பிணை-பெண். படைவிழி-ஆயுதம்போலுங் கண்.

பொடிபடுத் தியவாட் புரந்தர வல்லை
புரந்தருள் புரந்தரு ளென்றான். (17)

அஞ்சிய் வின்சொல் வஞ்சியீ துரைப்ப
வண்டர்கோன் மூண்டவெஞ் சினநதாந்
செஞ்சிலைப் புருவ மீச்செல வேர்வை
சிந்திடக் கட்கடை சிவப்ப
நெஞ்சகங் கொதிப்ப முறுகிய நகையி
னெருப்பெழ முத்தணி நிரையால்
விஞ்சிய பவள வாயித ழதுக்கி
விண்ணிடி யென்னவாய் விட்டான். (18)

மருப்பொலி வாகை வயிரவா ளங்கை
வாங்கினன் புலிகண்மாண் பறியான்
பருப்பதங் குலுங்கத் தந்திமேற் சிங்கம்
பாய்வது போலெதிர் பாய்ந்தான்
வெருக்கொளத் தடிந்தான் புலியுரு மடிந்து
விதிமுறை யோவென வீறிட்
டருட்படு மிருடி யிருடிபன் னியுமா
வனிமேல் வீழ்தல்கண் டயர்ந்தான். (19)

பாரப்பன வடிவங் காண்டலும் புனிதன்
பயந்தன னடுங்கின னந்தோ
வேர்ப்புகழ் மாய்ந்தோந் திலோத்தமை யேனு
மென்செய்வோ மந்தணன் கொலையுங்
கூர்ப்படை நயனங் கொண்டபெண் கொலையுங்
கொண்டன நீயினிக் கோதாய்

**17.** பிடி-பெண்யானை. பித்தரின்-பித்தர்போல. புரந்தர-இந்திரனே. வல்லை-விரைவில்.

18. வஞ்சி-திலோத்தமை. சிலை-வில். மீ-மேல். முறுகியநகை-கோபத்தோடுகூடிய சிரிப்பு. முத்தணிநிரை-முத்துப்போலும் பல்லின் அழகான வரிசை. விஞ்சிய-மேலான. இதழ்-உதடு. அதுக்கி-நெருக்கி.

19. மரு-வாசனை. பொலி-அழகு வாகை-மாலை. வயிரவாள்-வச்சிராயுதம். தந்தி-யானை. வெரு-அச்சம். தடிந்தான்-அடித்தான். அயர்ந்தான்-தளர்ந்தான்.

சீர்ப்பன வன்ம்போய்ப் புகுகவென் றெழிந்துச்
சென்றன னனையன்மேற் றிசையில். (20)

## வேறு.

புண்ணிய மேற்றிசை புகுந்தான், பண்ணவ ரனையவொன் பதின்ம
ரெண்ணரு மிலஞ்சியி னீழற், கண்ணமர் முனிவரைக் கண்டான். (21)

பாருறப் பணிந்தனன் பகர்வான், சாருமென் குலஞ்செயுந் தவத்தா
னேருற வமர்ந்தரு ணீவிர், யாரெனக் கருளுமி னென்றான். (22)

கிருதிறை வருகுவை கேண்மோ, கருணைசெய் மறைமுனி கபில
னருளிய மதலையர் யாமென், றிருவரோ டெழுவரு மிசைத்தார். (23)

மயலொடு மிவண்வரு மகவா, னியலிரு டியைமனை வியினைச்
செயலரும் வெங்கொலை செய்தா, யுயர்பழி பாவமு முற்றாய். (24)

மாசிவை கழுவிடும் வகையாம், பேசுதும் விண்ணவர் பெருமான்
றேசுறு வழுதியர் திருநாட், டாசிலோர் தலமுள தன்றே. (25)

தொழுந்திரு வருட்கடற் றுறையாம், பழம்பதி யென்றொரு பதியாங்
கெழுந்தவர் வீற்றினி திருக்குங், கொழுஞ்சுடர்ப் பரம்பொருட் குறியே.

உருப்படு முன்னமோ ருகத்தில், வரப்பெறும் வேறொரு மகவான்
திருப்பழம் பதிவளர் சிவனை, யருச்சனை புரிந்தவ னருளால். (27)

சுந்தர வகலிகை துவக்காற், சிந்தைசெய் கோதமன் சீறித்
தந்தவெஞ் சாபமுந் தணந்தே, யைந்தரு நாடெய்தி யமர்ந்தான். (28)

---

20. பார்ப்பனவடிவம்-இருடிவடிவம். புனிதன்-இந்திரன். வார்-அழகு. பனவனம்-பனங்காட்டூர்.

21. பண்ணவர்-தேவர். இலஞ்சி-மகிழமரம்.

23. கிருது-யாகம்.

25. வழுதியர்-பாண்டியர்.

26 எழுந்தவர்-மேலான தவமுடையார். பரம்பொருட்குறி-இலிங்கம்.

27. உருப்படும்-சீர்ப்படும்.

28. துவக்கு-சரீரம். கோதமன்-கௌதமன். தணந்து-நீங்கி.

புரந்தர நீயுமிப் பொழுதே, வரந்தரு வனமுக மருவிப்
பரம்பரன் றனைமுறை பரசி, னொருங்குறு கொலைவினை நீங்கும். (29)

தீம்பழி நீங்கியிந் திரனின், பூம்பதி யெய்திவிண் போகந்
தாம்புசித் துறைகுவை சசிதன், காம்புறழ் தோளிணை கலந்தே. (30)

ஓவற நடநின துட்ளிப், பூவல ரிலஞ்சிபின் புகயாங்
கேவலம் வேண்டிவிண் கெழுமு, மாவன முகமெய்த வருவோம். (31)

முனிவர ரிவ்வண மொழியப், புனிதனங் கவருடன் புகப்பு
வனிதனிற் பதின்மரும் வந்தார், கனிதரு வனமுகங் கண்டார். (32)

எல்லைகண் டிறைஞ்சின ரிவரில், வெல்லுமைம் பொறித்தவ மேலோ
ரல்லலி னல்வரோ டைவர், சொல்லருஞ் சிவகெங்கை தோய்ந்தார். (33)

முனிவரோன் பதின்மரு முத்தன், புனிதமந் திரமுறை புக்கார்
கனிகொடந் தியைமுரு கனைமுன், றுனியற வணங்கினர் துதித்தார். (34)

முக்கண னுமைதனை முனிவோர், புக்கருச் சனைமுறை புரிந்தே
யக்கணி சிவணய லங்கி, திக்கினில் வந்தணி செய்வார். (35)

தருமமீ தெனமகிழ் தன்னைப், பெருமையோ டினிதுதா பித்தா
ருமறை யங்கமோ ராறு, முரிமையி னுரைமுனி வோர்கள். (36)

இவ்வகை புரியுமு னிருவ, ரைவகை யொருதொழி லாதி
சைவநல் வேதியர் தாமேல், மெய்வகை வீடுற வேண்டி. (37)

---

29. பரசில்-வழிபடில்.

30. சசி-இந்திராணி. காம்பு-மூங்கில். உறழ்-ஒத்த

31. ஓவற-வருந்தாது. கேவலம்-மோக்ஷம். விண்கெழுமு-ஆகாயத்தைப்பொருந்தும்.

33. அல்லல்-துன்பம்.

34. முத்தன்-சிவபெருமான். புனிதமந்திரம்-பரிசுத்தமான கோயில். கனிகொள்-மாதுளம்பழத்தைக் கைியில்வைத்திருக்கும். தந்தி-கணபதி. துனி-துன்பம்.

35. அக்கு-உருத்திராக்கம். அணிசெய்வார்-கூடினர்.

36. மகிழ்-மகிழமரம்.

37. ஐவகையொருதொழில்-ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலென்பன.

பித்தனை வணங்குபு கெடுரா, ளத்தலத் திருந்தன ரவரை
யுத்தம முனிவர்கண் டுவந்தார், பத்தியி னெதிரெதிர் பணிந்தார். (38)

கைகெழு மலைதவிர் கடல்போன், மொய்குறு முகைமகிழ் மூலத்
துய்தவ மிருந்தவ முளுற்றி, வைகினர் பதினொரு வருமே. (39)

முனிவர் ரொடுவன முகத்தி, லினிதெய்து நான்மருப் பிபத்தோன்
றுனியற விதிமுறை தோய்ந்தான், பனிபடு தீர்த்தமோர்பத்தும். (40)

சாதனம் பூதிமெய் தரித்துக், கோதையோர் பாகர்தங் கோயின்
மேதகு மணிமுடி மேற்கைப், போதினைக் கூப்பினன் புகுந்தான். (41)

வேறு.

முன்ன ரைங்கர் மூர்த்திதன் பூசனை முடித்துச்
சென்னி தாழ்ந்திமை யோர்பணி தேவர்க டேவே
யுன்னை யாகண்ட லப்பிள்ளை யென்றுல குரைப்ப
மன்னு நல்வரந் தந்தரு ளென்னவந் தித்தான். (42)

நாம நாண்மலர் தரித்தபின் முருகனை நளினத்
தேம லர்க்கரங் கொண்டருச் சனைமுறை செய்து
கோம ளத்திரு மாவிலிங் கத்துருக் கொண்ட
சோம வேணியைப் பூசித்து மரபுளி துதித்தான். (43)

அய்ய னர்ச்சனை யாற்றிய வனந்தர மருள்கூர்
தையல் கச்சணி முலையவள் சன்னிதி சார்ந்து
துய்ய வாகம விதிப்படி பூசனை தொடங்கி
யுய்யு மர்ச்சனை செய்தனன் மாமழை யூர்தி. (44)

---

38. வணங்குபு-வணங்கி.

39. கைகெழும்-கையெனத்தோன்றும். மொய்குறும்-நிறைந்த. மகிழ்மூலம்-மகிழமரத்தடி. உளுற்றி-செய்து. பதினொருவர்-முனிவர் ஒன்பதின்மரும் ஆதிசைவரிருவரும். அலைதவிர்கடல்-அலையொழிந்து நிச்சப்தமானகடல்.

40. நான்மருப்பிபத்தோன்-நான்குகொம்புள்ளயானையினையுடைய இந்திரன். துனி-துன்பம். பனி-குளிர்ச்சி.

43. நாமம் ஆகண்டலப்பிள்ளையார் என்னும் பெயருடன். நாண் மலர்-அன்றலர்ந்தமலர். நளினம்-தாமரை. தேம்-தேன். சோமவேணி-சந்திரனைத்தரித்திருக்குஞ்சடை. மரபுளி-முறையின்.

44. அனந்தரம்-பின்னர். மழையூர்தி-மேகவாகனனாகியஇந்திரன்.

துரிய விப்பழம் பதிதழைத் திடவுக் கோறு
மரிய யன்றெழு ளர்ந்தருள் பெரியநா யகர்த
முரிமை யாதலி னன்றிரு நாமமு மெவரும்
பெரிய நாயகி யென்றுரைத் தேத்துவான் பின்னும். (45)

வேறு.

சச்சிதா நந்த வகண்டபூ ரணமாந
தற்பரஞ் சோதியைத் தகையா
நிச்சயித் தருவ மருவுரு வுருவாய்
நிறுத்தியாங் கருவுரு வுருவ
நச்சுறு மவரார் சிருட்டியா தியவா
நடத்தினை கடைக்கணி னடத்தி
வச்சிர வனம்வாழ் பெரியநா யகிநின்
மலரடித் துணைமனத் துணையே. (46)

நயநதரு பரையா யாதியா யிச்சை
ஞானமாய்க் கிரியையாய் நம்பற்
கியங்குறு மேனி யணிபடைக் கலமற்
றெவையுமாய் மூவகை யாகத்
தயங்குமான் மாவின் வாழ்க்கைமேன் முத்தி
தமக்குமோர் காரண மாகி
வயங்குறு புனவைப் பெரியநா யகிநின்
மலரடித் துணைமனத் துணையே. (47)

வீழ்கினும் புவியின் முத்தலைச் சூல
வேற்படை மறலிதன் றூதர்
தாழ்கயி றதனால் விசித்தனர் கொடுபோய்த்
தண்டினுற் புடைத்தெதிர் தள்ள
வாழ்கினு நாகி லரம்பையர் நடிப்ப
வைந்தரு நிழலரி யணைமேல்
வாழ்கினும் புனவைப் பெரியநா யகிநின்
மலரடித் துணைமனத் துணையே. (48)

---

45. துரியம்-சுத்தநிலை. உரிமை-நாயகி.

46. தகையா-தடுத்து. ஆங்கு-அதுபோல். அருவுரு-சதாசிவர். உரு-பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுவரன். நச்சுறும்-விரும்பும். நடம்-நடனம்.

47. மூவகையான்மா-விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்.

48. வீழ்கினும்-மரணமடையினும். மறலி-யமன். விசித்தனர்-கட்டினவராகி. ஆழ்கினும்-மூழ்கினும், அரியணை-சிங்காசனம்.

ஏரிந்திடும் பசியாற் குன்மமா தியவா
மின்னலா லிதவகி தங்க
டெரிந்திடா வாசர் கள்வராற் பகைஞர்
செய்கையாற் கொடுங்கொழி லென்றும்
புரிந்திடு முயிரா லலகைவே தாள
பூதங்க ளாகிய புணர்ப்பால்
வருந்தினும் புனவைப் பெரியநா யகிநின்
மலரடித் துணைமனத் துணையே. (49)

இனத்தினுஞ் சிறந்தோ ரெம்மருங் கினும்வர்
தெய்திய நாட்டினுங் கோட்டுக்
கனத்தினு மிருண்ட வரையினும் வேலைக்
கரையினுந் திரையினு வரையாச்
சினத்தினுங் கொடிய வெயிலினு நீங்காத்
தீங்குறு வேங்கைக ளோங்கும்
வனத்தினும் புனவைப் பெரியநா யகிநின்
மலரடித் துணைமனத் துணையே. (50)

இத்திறம் பரசு மெல்லையி லெம்மா
னிறைவிதன் னருளினாற் பிரம
கத்தியு நீங்கிக் கோள்விடு மதிய
மாமென விலங்கிய மகவான்
வித்தகஞ் சேர்மெய் யன்பினால் வணங்கி
விடையவன் பால்விடை கொண்டு
கைத்தலங் குவித்துக் களிறுகைத் தெழுந்தான்
கற்பக வனங்குடி புகுந்தான். (51)

ஆகண்டல விநாயகச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 863.

---

49. அலகை-பசாசு. வேதாளம்-பசாசின்பேதம்.

50. இனம்-சுற்றம். கோடு-மலையினுச்சி. கனம்-மேகம். வரை-மலை. வேலை-கடல். வரையாச்சினம்-அளவில்லாத கோபம். வேங்கை-புலி.

51. கோள்-இராகு கொள்ளுதல். வித்தகம்-ஞானம். களிறு-யானை. உகைத்து-செலுத்தி.

# 21-வது விநாயகச் சருக்கம்.

இந்திரன் சரிதை யீதென முனிவ
னிமயமா னிடத்தவ தரித்த
தந்திமா முகத்துத் தந்தைதன் றந்தை
தாதவிழ் தாமரைப் பாதம்
வந்தனை புரிந்து வான்புவி போற்ற
வரம்பெறுங் காதையை யாதி
நந்திபோ லன்பாற் புகல்கென முனிவர்
நயந்தினி துரைத்திடுஞ் சூதன். (1)

வேறு.

அடலர வணிந்தரு ளானை யேத்தியன்
புடனெடு வரம்பெறு மொருகொம் பெம்பிரான்
கடகரி முகத்தாக் கனைவெல் காதையைக்
கெடலரு மருந்தவ முனிவிர் கேண்மினோ. (2)

பொருதெழு தாரகன் புரியுந் தீங்கெலாந்
திருவடி வணங்குபு தேவர் கூறலு
மருள்விழி சுரந்தணி யானை மாமுக
னிருநிலந் துதிசெய வெய்தி னானரோ. (3)

இறைவளர் வனமுக மிறைஞ்சி யாகம
முறைசிவ கங்கையின் மூழ்கி வெண்பொடி
நிறைதரு கண்டிகை புனைந்து நின்மல
னறைமலர்க் கோயிலை வணங்கி நண்ணினான். (4)

கண்ணுதன் மூர்த்தியைக் கண்டு கைதொழு
தண்ணறன் பூசனைக் காக மஞ்சொலு

---

1. இமயமான்-பார்வதி. தாதவிழ்-பூந்தாது விரியப்பெற்ற.
2. அடல்-வலிமை. கடகரிமுகத்தாக்கன்-யானைமுகத்தையுடைய அசுரன்.
3. பொருது-போர்செய்து. வணங்குபு-வணங்கி.
4. நறை-தேன்.

டெண்ணரும் பொருளெலாந் தருக வீங்கெனப்
பண்ணவர் தமைவிழி யாற்ப ணித்தனன். (5)

தேவர்தங் கணங்களுஞ் சிவக ணங்களு
மியாவரு மிருமருங் கேவல் செய்திட
மூவர்முன் னவனருச் சனைமு டித்தலுந்
தாவரும் விடையின்மேற் காட்சி தந்தனன். (6)

விடந்தரு கண்டனை விடையிற் காண்டலுங்
கடந்திகழ் மாமுகன் களிப்பு மீக்கொள
மடந்தவிர் சாமமா மறையும் பாடினன்
குடந்தமுற் றுணர்ந்தக் கூத்து மாடினன். (7)

கரங்குவித் திறைஞ்சிய காலைக் கைகளா
லரந்தைதீர் தரவெடுத் தணைத்த வெம்பிரான்
விரைந்தினி தியம்புக மைந்த வேண்டிய
வரந்தரு குவமென வாய்ம லர்ந்தனன். (8)

எந்தைநின் றுண்மல ரிணைமற வாவரந்
தந்திட வேண்டுமித் தலத்து னைத்தொழ
வந்தவர் தம்பகை மாற்றி வாழ்வுற
நந்திடா நல்வர நல்க வேண்டுமால், (9)

பாருக வந்தரப் பரப்பி னோர்விழி
நீருக வெண்டிசை நிலையில் வாழ்பவர்
சீருக வெங்கொலை செய்யுங் கைதவத்
தாரகற் கொலும்வரந் தருதல் வேண்டுமால், (10)

என்றலு மவ்வர மிறைவ னல்குபு
பொன்றிக ழருட்குறி புகுதல் மேயினு
ம

5. பண்ணவர்-தேவர்.

7. கடம்-மதம். மா-யானை. குடந்தம்-நான்குவிரலையுமடக்கிப்பெருவிரலை நெஞ்சில் நிறுத்தல்.

8. அரந்தை-துன்பம்.

10. பாருக-பூவுலகோரழியவும். விழிநீருக-கண்ணீர்சொரிய. உக-கெட. கைதவன்-கீழ்மகன்.

னன்றவன் றிருவடி வணங்கி யைங்கரன்
வென்றிகொள் தாரகன் மேனடந்தனன். (11)

தானவர் தானையுந் தான நாட்டினர்
சேனையின் வெள்ளமுஞ் சென்றெ திர்த்தன
வானவர் வார்சிலை வாங்க வான்கணைச்
சோனையைப் போர்த்தது துன்ன லார்படை. (12)

வேறு.

திருகுஞ்சின வசுரத்திரள் சிறக்கடல் போலப்
பெருகும்படை முரியச்சுரர் பெருமானெதி ரேறிப்
பொருகுஞ்சர நடவிக்கணை பொழியத்தகு வோர்வெற்
பருகுங்கட லகடும்புக லானார்பலர் போனார். (13)

தறுகட்படை முதுகிட்டுடை தரவெட்டிரு திசையு
மறுகக்கொலை புரிதாரகன் வடவைக்கன லென்னக்
குறுகிச்சிலை நெடுநாணொலி கொண்டான்மக பதிமற்
றெறிகைப்படை வானோர்புற மிட்டாரமர் விட்டார். (14)

சிலைகொண்டெழு புயலோபல திசைகொண்டெழு வெற்போ
கொலைகொண்டெழு விடமோபடு கொலைகொண்டெழு கூற்றோ
வலைகொண்டெழு கடலோவென வமர்மேல்வரும் வெண்பற்
கலைகொண்டெழு பேழ்வாயரக் கன்னாயகற் கண்டான். (15)

கண்டோனடி தாழாதெதிர் கைகொட்டிய தட்டித்
திண்டேர்மிசை நின்றோன்விதி திருமான்முத லெவருந்

---

11. நல்குபு-கொடுத்து.

12. தானவர்-அசுரர். தானம்-தேவலோகம். வார்சிலை-நீண்ட வில். வாங்க-வளைக்க. சோனை-விடாமழை. துன்னலார்-பகைவர்.

13. திருகும்-மாறுபடும். சுரர்பெருமான்-இந்திரன். பொரு குஞ்சரம்-போர்புரியும் யானை. நடவி-நடத்தி. தகுவோர்-அசுரர்கள். வெற்பருகும்-மலைப்பக்கத்தும். கடலகடும்-கடல் நடுவினும்.

14. தறுகட்படை-அஞ்சாமையையுடைய சேனை. எட்டிருதிசை-பத்துத்திசை. மறுக-சுழல.

15. சிலை-வானவில். புயல்-மேகம். கலை-சந்திரன். பேழ்வாய்-பிளந்தவாய். நாயகன்-விநாயகர்.

தண்டாதருள் கடவுட்கணை தாவாதுதொ டுத்தான்
விண்டாரணி பணியைங்கரன் வேல்கொண்டுபொ டித்தான். (16)

முன்மாயவன் முதலாயவர் முற்றுங்களி கூரப்
பன்மாயை தடிந்தாள்கண பதிசக்கர மொன்றாற்
புன்மாயை தருந்தீநெறி புரிதாரக னென்பான்
வன்மாயை தொடுக்குங்கணை வரிவிற்கரம் வீழ்த்தான். (17)

நகமுட்டிய சிறையொப்பென நவில்கைத்தல மற்று
மகமுற்றெழு மொருகைத்தல முசலங்கொடு விசிறச்
சகமுற்றுயிர் தழையத்தழை செவியைங்கர னங்கை
யகமுற்றிடு வாளாலட லவுணன்கை யறுத்தான். (18)

விண்மீனுதி ரத்தாரகன் வெள்ளேறிது வென்னக்
கண்மீதழல் சொரியக்கள முறியக்கன மழுவாற்
பண்மீதருள் வைக்குங்கண பதிவெட்டலு மறுகி
மண்மீதுவி ழுந்தான்மலர் மழைதேவர் பொழிந்தார். (19)

விதிமால்மக பதிமற்றுள விண்ணோர்கள் வணங்கக்
கதிகூர்சிவ கணமும்முனி கணமுந்துதி செய்ய
வதிராழியு டுக்கும்புவி யணியாகிய புனவைப்
பதிவாழ்தரு சிவனைக்கண பதிவந்து பணிந்தான். (20)

விடைமேல்வரு தன்றந்தையை விடைகொண்டு வணங்கிப்
புடைமேவிய வானோரொடு பூதப்படை சூழத்

---

16. விதி-பிரமன். தண்டாது-நீங்காது. தாவாது-விடாது.

17. பன்மாயைதடிந்து-பலமாயையினைக் கெடுத்து. ஆள்-ஆட்கொள்ளும். வரிவிற்கரம்-வரி பொருந்திய வில்லையேந்திய கை.

18. நகம்-மலை. முட்டிய-முட்டுப்பாடுற்ற. இப்பொருள் கோளை, "முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கு மூர்த்தி யென்னப்பட்டானை" என வரும் சிதம்பரத்துத் தேவாரத்தானறிக. சிறை-சிறகு. முசலம்-உலக்கை.

19. வெள்ளேறிதுவென்ன விண்மீனுதிரத்தாரகன் கண்மீதழல் சொரிய எனக் கூட்டுக. வெள்ளேறு-வெள்ளிய இடபம். விண்மீன்-வானத்திலுள்ள நக்ஷத்திரங்கள். களம்-கண்டம். பண்மீது-இசை பாடுவோர் மீது. இவர்மீதருள் வைத்தலை, "அளப்பிலை கீதஞ் சொன்னார்க் கடிகடாமருளுமாறே, என வரும் தேவாரத்தானறிக.

தடமேருவி னொருபாலிர சதவெற்பத னருகே
யிடமார்தன தகமெய்தின னிபமாமுக வெந்தை. (21)

பிரியாவிடை பெற்றேத்திய பிரமாதிகள் யாரு
முரியாரொடு தமதூர்புக வுலவாவர முதவி
யரியாசன மீதன்பொட டமர்ந்தானுமை யருளுங்
கரியானன வெம்மான்மறை கற்குந்தவ முனிவீர். (22)

முடிமேற்கண பதிபாதமு டித்தெண்ணமு டிப்பார்
படிமேலெவர் களுமக்கண பதிதென்பழம் பதியா
னடிபூசனை செய்தாற்றின னகமெண்ணிய தென்றாற்
கொடிசேரிடை பாகன்செயல் கூறற்கெளி தாமே. (23)

விநாயகச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 886.

## 22-வது வசிட்டாதியர் வந்தனைச் சருக்கம்.

பாரப்பிர ணவமேவடி வாகிப்பணி மூலா
தாரத்துறை யிறைவந்தனை தனையன்பொடு கேட்கும்
வாரத்தவ முனிவர்க்குவ சிட்டாதியர் மனதன்
பூரப்பெரி யவன்பாகனை வழிபட்டது ரைக்கும். (1)

வேறு.

வளம்பயில் கைலைக் காவல் வாய்ந்தரு ணந்தி யெம்மான்
விளம்புமிக் காதை நீதி வினவிய சனற்கு மார
னுளங்களி கூர்ந்து நந்தி தேவனே யுனது வாக்கா
மளம்புகா வமுதுண் டின்னுந் தெவிட்டிலே னடிய னென்றான். (2)

வேறு.

என்றடி வணங்கி யின்னு மிறைபழம் பதியின் மேன்மை
நன்றருளென்ன வுந்தி நான்முகன் மகவே கேளென்

---

21. இரசதவெற்பு-வெள்ளிமலை. இபம்-யானை.
22. உலவா-கெடாத. கரி-யானை. ஆனனம்-முகம்.
23. கொடிசேரிடை-உமாதேவியார்.
1. பாரம்-முடிவு. பணி-கீழ். வாரம்-அன்பு.
2. அளம்-கடல்.

றன்றுவேத் திர்த்த டக்கை யையன்வாய் மலரும் காதை
யொன்றுள தருந்த வத்தீர் கேண்மினென் றுரைக்குஞ் சூதன். (3)

கருதுமைம் புலனை வென்று கரணநான் கையு மடக்கி
யிருநெறி யடைத்து மூலத் திபமுகன் பாதம் போற்றி
யொருமுனை புகுந்து சென்றம் போருகப் பொகுட்டி னுங்கே
வருபரஞ் சுடரை யேத்தும் வசிட்டனை முதலி யோர்கள். (4)

எண்டகுந் தவமியற்றி யேழுல கிறைஞ்ச வாழுந்
தண்டக வனத்து மேனுட் சதுர்மறை தெரித்தோ னெய்தக்
கண்டனை யெதிரே செல்லுங் கன்றெனு நடந்து பாத
மண்டல முறப்ப ணிந்த வனைக்கொடாச் சிரமம் புக்கார். (5)

வாசநற் புதுநீ ராட்டி மலரடி புனைந்து தூய
வாசனத் திருத்தி யாண்டைக் காயபூ சனைக ளாற்றி
நேசமிக் குளத்தா நந்த நிறைதர முகமன் பல்காற்
பேசலுற் றிருக்கை நல்கப் பெற்றன ரமர்ந்த பின்னர். (6)

முத்திதேர் வசிட்ட னாதி முனிவரர் வாய்பு தைத்துப்
பத்தியி னிறைஞ்சி விண்ணப் பஞ்செய்வார் பரம னன்பர்க்
கெத்தலத் தெளிதி னல்கு மெண்ணிய தென்றா யென்ன
நத்தணி மாலாம் வாத ராயண னுடிச் சொல்லும். (7)

எம்பிரா னன்பர்க் கெல்லா மிருமைவீ டெளிதி னல்கச்
சம்புவாழ் கின்ற பாண்டித் தலம்பதி னைன்க வற்றுட்
பம்பபூஞ் சோலை சூழும் பழம்பதி மகிமை யெம்மா
லும்பரா லேனை யோரா லுரைப்பதற் கடங்கா தென்றான். (8)

எனவவன முகத்தின் மேன்மை யியம்பலுங் களிசி றந்து
மனமகிழ் வசிட்ட னாதி மாதவர் யாரு மின்னே

---

3 உந்தி-விட்டுணுவின் உந்தியிற்றோன்றிய.

4. இருநெறி-உசுவாசம் நிசுவாசம். மூலம்-மூலாதாரம். ஒருமுனை-சுழுமுனை. அம்போருகம்-தாமரை.

5. எண்தகும்-மதிக்கத்தகும். சதுர்மறை தெரித்தோன்-வேதவியாசன். அனை-தாய்.

7. நத்து-சங்கு. வாதராயணன்-வியாசன்.

8. பம்புதல்-நெருங்கல்.

பனவர்மா மறைமு ழங்கும் பழம்பதி புகுவா னெண்ணி
வினவருந் தவத்தா னாங்கோர் விரிமணி விமானங் கண்டார். (9)

குரகதம் பூண்ட வெய்யோன் கொடிஞ்சியந் தேரி னோங்குஞ்
சரகதி மானத் தேறித் தபோதனர் வானா றாக
நரகதி பயங்க ளைந்து நண்ணியோர்க் கிருமை நல்கிப்
பரகதி யளிக்கு மீசன் பழம்பதி நோக்கிச் சென்றார். (10)

விரைவொடு முதக்கி னின்றும் யாமிய முகமா யெய்தி
வரைமணி மாட வீதி வனமுகங் கண்டி றைஞ்சி
யுரைசெயந் நகர்க்குப் பாத யோசனை யுதீசி யெல்லைப்
புரைதவ ரிறுத்து நின்றார் புண்ணியன் விடைமேற் போந்தான். (11)

பசுங்கொடி படாத் தோன்றும் பவளவெற் பென்ன வெம்மான்
விசும்பிடைத் தோன்றக் கண்டார் விம்மினா ருளமுங் கண்ணு
மசும்பிருந் தொழுக லுற்றா ரார்த்தன ரகத்தா னந்தந்
தசும்புநீர் நிறைத லொத்தார் தலைமிசைக் கரமு கிழ்த்தார். (12)

வீழ்ந்தன ரெழுந்தார் சாம வேதமே பாடி யாடிச்
சூழ்ந்தனர் புளக முற்றார் துள்ளினார் மயிர்பொ டித்தார்
வாழ்ந்தன மென்றார் வாய்ச்சொன் மறந்தனர் தமைம றந்தா
ராழ்ந்தநோய்க் கடல்க டந்தா ரருட்கரை யேறி நின்றார். (13)

எம்பிரான் காட்சி நல்கி யிலிங்கத்து மறைந்த வெல்லை
யைம்புல னடக்குந் தூயோ ராசைநான் கினாமா சில்லாச்

9. பனவர்-பிராமணர். வினவரும்-சொல்லுதற்கரிய.

10. குரகதம்-குதிரை. கொடிஞ்சி-தேர்மொட்டு. சரம்-வாயு. மானம்-விமானம். ஆறு-வழி. நரகு அதிபயம் களைந்து-நரகவேதனையையும் அதனாலுறும் மிக்க அச்சத்தையுங் கெடுத்து. அதிபயம் என்பன வடசொல், புணர்ச்சியும் அது.

11. உதக்கு-வடக்கு. யாமியம்-தெற்கு. வரை-மூங்கில். பாதம்-கால். உதீசி-வடக்கு. புரை-உயர்ச்சி. இறுத்து-தங்கி. புண்ணியன்-சிவபெருமான்.

12. அசும்ப-இடையறாதொழுக. இருந்தொழுகலுற்றார்-உட்கார்ந்து எழுந்து நடக்கலுற்றார். தசும்பு-குடம்.

செம்பொனூர் வாயி னொன்கு சேர்நிகே தனமி யற்றி
வம்பவிழ் கடுக்கை சூடு மாலிங்கந் தாபித் தாரால். (14)

கரதல மடுத்த நெல்லிக் கனியெனக் காண லுற்ற
வரதனை யருச்சித் தேத்தி வனமுக நகர மெய்தும்
விரதிய ருலக மன்பு மிகுஞ்சிவ கங்கை யாழ்
யரதன மனைய கண்டி யணிந்துநீ றணிந்தா ரன்றே. (15)

வேறு.

அஞ்செழுத் தோதின ரயலே, மஞ்சுறை கோபுர வாயிற்
றஞ்சமென் றிறைஞ்சினர் தவத்தா, லெஞ்சிய பவமகற் றிடுவார். (16)

மந்திர மதனக வாயி, னந்தியைப் பணிந்தரு ணல்க
வெந்தைநந் தியினிடை யிறைஞ்சி, யந்தணர் சன்னிதி யடுத்தார். (17)

கறைமிடற் றிறைவனைக் காணூஉ, முறைமுறை பணிந்தெழு முனிவர்
மறைபுக லாகம மரபா, னிறைமலர் சாத்தவு நினைந்தார். (18)

ஈரிசை மைந்தரை யிறைஞ்சிச், சூரிய பூசனை தொடங்கி
யாரிய னருச்சனை யாற்றிப், பாரியைப் பரசினர் பணிந்தார். (19)

வலமுறச் சூழ்ந்துமுன் வணங்கிப், பலமுறை வாழ்த்திமெய்ப் பதமேழ்
குலமுற மெய்க்களி கொண்டா, ரலமுறு மனத்துய ரகன்றார். (20)

வள்ளறன் பூசனை வாய்த்த, தெள்ளருந் தவப்பல மென்று
ருள்ளுறு மாமனத் துவகை, கொள்ளுமன் பால்விடை கொண்டார். (21)

14. ஆசை-திசை. ஆசு-குற்றம். நிகேதனம்-கோயில். வம்பு-வாசனை. அவிழ்-வீசும். கடுக்கை-கொன்றை.

15. அரதனம்-இரத்தினம்.

16. மஞ்சு-மேகம். எஞ்சிய-வரப்போகும். பவம்-பிறவி.

17. மந்திரம்-கோயில். எந்தைநந்தி-ரிஷபம். அந்தணர்-அறக் கடவுள்.

19. ஈரிசை மைந்தர்-விநாயகர் சுப்பிரமணியர்.

20. குலம்-இனம். அலம்-சுழற்சி.

21. எள்ளரும்-இகழ்தலில்லாத.

முதுமறை வசிட்டனை முதலோர், சதுர்முகன் வழிவரு தவத்தோர்
கதுமென விரையருள் காட்சிப், புதுமைகள் புகனயலப் போந்தார். (22)

வண்டமிழ் நகரெல்லை வணங்கித், தண்டக மால்வனஞ் சார்ந்தார்
முண்டகன வழிவரு முனிவ, ரெண்டரு தவங்களசெய திருந்தார். (23)

செழுஞ்சடை முடிநந்தி கெரிந்திப, பழமபதி மகிமையைப் பகரக்
கொழுந்தவம புரிசனற குமரன, ரெழுங்கதை வினவினன சொல்லும.

அயாவற வருளகதை யமுதை, யயாசெவி வாய்மடுக்க நயப்பேசன
றுயாமி லபபதி தொழுவான், பெயாகுவ னந்தியெம பெருமா (25)

என்றலும விடையவ னீயக, துன்றிய முனிகணஞ் சூழச
சென்றனன வெள்ளியஞ் சிகரக், குனறுறை தருசனற குமரன. (26)

நதிபதி சூழபுவி நாட்பட், பதிகளி லுறைதவர் பரவப்
பொதியமெம பெழுதிசை போவான், கதிதரு பழமபதி கண்டான் (27)

தவமென்று பணிந்தெழு தன்று, னிவாகினற வனமுக[illegible]மயகிப்
பவபங்க மகலுறப் படிந்தான, சிவகங்கை முதலிய தீரத்தம. (28)

மண்ணிய முடிமுதல வடிவிற, புண்ணியன் வெணபொடி பூசி
யண்ணிய கணடிகை யணியா, வெணணிய நியதிசெய தெழுந்தான. (29)

ஏகனை நெஞ்சகத தெண்ணி, யோகையோ டாலய முற்றுற்
ஞகணை மால்புகழ் நாலே, யூரகம மோரவடி வானோன். (30)

வாயிலி னந்தியை வணங்கித், தாயசன் னிதியெதிர் தொழுது
பாய்மத கரிபதம பரவிச, சேயடி பணிந்தனன் செம்மல. (31)

---

22. கதுமென-விரைவாக.
23. முணடகன்-பிரமன். எணதரு-மதிப்பைத்தரும்.
24. வினவினன்-கேட்டவன்.
27. பதி-தலம். நாப்பண-நடு. பரவ-போற்ற.
28. இவர்கின்ற-நெருங்குகின்ற. பவபங்கம-பிறவியாகிய சேறு.
29. மணணிய-கழுவிய. அண்ணிய-பொருந்திய. அணியா-அணிந்து.
30. ஓகை-உவகை. நாகணை-பாம்பைப்படுக்கையாகவுடைய.
31. பாய்மதகரி-விநாயகர். செம்மல்-பெருமையிற்சிறந்தோன்.

மூவருந் தொழமுன முளைத்த, தேவனை யெதிர்தெரி சித்தான்
றாவரு விழிமலர் தம்மாற், பூவண மேனியைப் பொதிந்தான். (32)

இருதிசை தொழவெழு மிமையர், தருதிரு மயிலிடை தழுவப்
பரிதியி னொளிர்தரு பரனைச், சுருதிகொ டிறைஞ்சினன் றுதித்தான்.

படர்ந்திடுந் தனதிரு பார்வைக், கடங்கருந் திருவடி வழகை
யிடந்தரு மனத்தினு மெழுதித், தடங்கரங் குவித்ததி சயித்தான். (34)

காரணி களத்தான் கருணை, வாரிதி மூழ்கிய மறையோ
ரூரியன் கைலையி லதிகம், பாரிலிப் பதியெனப் பகரும். (35)

பத்தியி னலதொரு பரிசா, லித்தலத் தொருகண மிருந்தோர்
முத்தியு மடைந்தனர் முனமெண், சித்தியும் பெறுகுவர் திண்ணம். (36)

தெரிந்திவை புகன்றபின் சிவன்பாற், பரிந்துவிஞ் ஞாபனம் பண்ணு
மருந்தவ னுளமறிந் தருளி, யிருந்தவம் புரிந்தவ ணிருந்தான். (37)

வேறு.

நந்தி நாயக னருள்கதை யீதைநா னுவா
லந்த ணீருமக் குரைத்தலா லுய்ந்தன னடியே
னிந்த மெய்க்கதை வினவலா லுய்ந்தனி ரிவணே
யுந்து மெய்ப்பலம் பெற்றன மிருதிறத் தோரும். (38)

அனகன் வாழ்தலக் காதைக ளாவின மவற்றுள்
வினவு மேழிரு தலச்சிறப் பாவின்பால் வெள்ளங்
கனவி னுஞ்சிவ னன்பருு மாமுனிக் கணங்காள்
புனவை மான்மியம் பாலிடை யெழுந்தநெய் போலும். (39)

---

32. தாவரு-கெடாத. பூவணமேனி-அழகேவடிவாகிய திருமேனி.
33. இருதிசை-வடதிசை தென்றிசை. பரிதியின்-சூரியன்போல.
34. படர்ந்திடும்-விரிந்திடும். இடந்தரு-விரிவான.
35. கார்-கருமை. இதுவிடத்தைக்குறித்தது. களம்-கண்டம்.
37. அருந்தவன்-சனற்குமாரன். உளமறிந்து-சிவபெருமான்றிருவுளமறிந்து. இருந்தவம்-மேலானதவம். அவண்-அவ்விடத்து.
38. அந்தணீர்-முனிவர்களே. உந்தும்-மேலான.
39 அனகன்-சிவபெருமான்.

பத்தி யாற்பிற பரிசினுற் கேட்பவர் படிப்போர்
சித்தி கூர்கதை யெழுதுவோர் சிந்தனை செய்வோ
ரித்தி றத்தவர்க் குபசரிப் போர்மனத் தெண்ணும்
புத்தி முத்தியுங் கரதலா மலகமே போலும். (40)

முற்று மிக்கதை யருளிய சூதனை முனிவர்
சுற்றும் வார்சடை யண்ணனீ யெனப்பல துதித்தார்
பற்று மன்பொடு பூசனை புரிந்தனர் பணிந்தார்
மற்று மெய்த்தவ மாற்றிவீற் றிருந்தனர் மாதோ. (41)

மன்னர் மன்னவன் மன்னுசெங் கோலென்றும் வாழ்க
பொன்னி னல்வளம் பெருகமும் மாரியும் பொழிக
தென்னர் செந்தமிழ் நாடெல கெவற்றினுஞ் சிறக்க
தன்னை யொத்ததென் பழம்பதி சந்ததந் தழைக. (42)

வசிட்டாதியர் வந்தனைச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 928.

---

## திருப்புனவாயிற் றல புராணம்

முற்றிற்று.

---

சுபம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 26 | ராசன்றனே | ராசன்றனே |
| 8 | 2 | லோரக்கெல்லாம் | லோர்க்கெல்லாம் |
| 13 | 25 | திரை | திறை |
| 25 | 23 | இந்திர | இந்திர |
| ,, | ,, | சிவனுக | சிவனுக் |
| ,, | 27 | ஓர் பரவை | ஓர் பறவை |
| 29 | 16 | றுறிசற | றுரிசற |
| 34 | 34 | எட்பக | 25. எட்பக |
| 36 | 8 | காண்டலுந் | காண்டலுங் |
| 42 | 33 | கிளைப்ப | 59. கிளைப்ப |
| 46 | 30 | எண்கழிக்கும் | எண்களிக்கும் |
| 48 | 32 | போதநாயகன் | போதிநாயகன் |
| 51 | 29 | 24. கிலம் | 25. கிலம் |
| 55 | 24 | செரம்பர் | கொரம்பர் |
| 60 | 24 | சரண | சரணங |
| 61 | 3 | சரணம் | சரண |
| 65 | 14 | வாழ்விழ | வாள் விழ |
| 72 | 14 | அணங்கனு | அணங்களு |
| 84 | 31 | ஒன்பானுறள் | ஒன்பானுறம் |
| 88 | 33 | ஒன்றிய | ஒன்றிய |
| ,, | ,, | ஒருவழிப்பட்ட | ஒருவழிப்பட்ட |
| 91 | 31 | சூளிகை | சூழிகை |
| 95 | 6 | உறைத்த | உரைத்த |
| ,, | 7 | ளிறைதத | ளிரைத்த |
| 103 | 15 | கித்திர | சித்திர |
| 106 | 22 | தாரின் | தாரார் |
| 108 | 24 | மோலி | 60. மோலி |
| 118 | 29 | 30 | 29. |
| ,, | ,, | மானம் | 30 மானம் |
| 121 | 29 | உமாதேவியை | உமாதேவியை |
| 124 | 13 | யெம்போருக | யம்போருக |
| ,, | 26 | வயற்றி | வயிற்றி |
| 126 | 3 | புரந்திட | புரந்திட |
| 132 | 4 | துயர்நத | துயர்நத |
| 133 | 30 | 22 | 23 |
| ,, | 32 | 23 | 22 |
| 138 | 25 | கிற்றிறை | கிற்றிரை |
| 164 | 14 | மெயத்திரு | மெய்த்திரு |
| 169 | 4 | கெஙகை | கெங்கை |
| 172 | 24 | 7 | 6 |
| ,, | ,, | திரு | 7. திரு |

உ

சிவமயம்.

# தேவகோட்டை

## சிவாகமசித்தாந்த பரிபாலன சங்கத்து வெளியீடுகள்.

| | |
|---|---|
| சிவார்ச்சனா சந்திரிகை நாகரம். | ரூ. 1 0 0 |
| ( இது, ஆத்மார்த்த பூஜையை நன்கு விளக்குவது ) | |
| ஷை தமிழ் மொழிபெயர்ப்பு | ரூ. 1 8 0 |
| அஷ்டப்பிரகரணம் நாகரம். | ரூ. 2 8 0 |
| ( இதில், தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், இரத்தினத்திரயம், நாத காரிகை. போககாரிகை, மோக்ஷகாரிகை, பரமோக்ஷ நிராஸகாரிகை என எட்டு நூல்களுள்ளன.) | |
| ஷை தமிழ் மொழிபெயர்ப்பு. | ரூ. 3 0 0 |
| மதங்கபாரமேஸ்வர ஆகமம் ஞானபாதம் மூலம் நாகரம். | ரூ. 1 0 0 |
| சைவபூஷணம் கிரந்த மூலமும் தமிழ் வியாக்யானமும். | ரூ. 1 0 0 |
| சம்புபூஜாவிதி கிரந்தம். | ரூ. 0 6 0 |
| சைவசித்தாந்த பரிபாஷை நாகரம். | ரூ. 0 8 0 |
| ஷை தமிழ் மொழிபெயர்ப்பு. | ரூ. 0 8 0 |
| மிருகேந்திரவிருத்தி தீபிகை நாகரம். | ரூ. 5 0 0 |

தபாற் செலவு வேறு.

இங்ஙனம்,

காரியதரிசி,

சிவாகம சங்கம்,

தேவகோட்டை.